வெளியீடு 03-03-2000 Issued 03-03-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மே 7, 1999 - தொகுதி 79 - எண் 2

Friday, 7th May, 1999—Volume 79 - No. 2

பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V2'l,31'N99
N99.79.2.
221196

60 — 2001

**7-5-1999**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 215-252 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பதினான்காம் பட்டியல்) | 252-284 |
| **2. தன்னிலை விளக்கம்—** | |
| தஞ்சை விவசாயிகளிடமிருந்து ஈரப்பத நெல் கொள்முதல் செய்வது குறித்துத் தெரிவித்த கருத்துக்கு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் விளக்கம் | 285-286 |
| **3. அறிக்கை அளித்தல்—** | |
| பொது நிறுவனங்கள் குழு | 286 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999 | 286-287 |
| (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999 | 287-288 |
| (இ) தமிழ்நாடு ஹேக்னி வாடகை வண்டிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1999 | 288 |
| (ஈ) ஊதியம் வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1999 | 289 |
| **5. விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| தொழில் கல்லூரிகளில் கிராமப்புற மாணவர்கள் என்ற வகையில் இட ஒதுக்கீடு உரிமை பெறத் தகுதியுடையவர் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரின் அறிக்கை | 289-290 |

பக்கங்கள்

6. **மானியக் கோரிக்கைகள், 1999–2000, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| (அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை<br>(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை<br>(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் | 291-395 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 291, 296, 302-303, 310, 311, 323, 324-328 |
| திரு. சி. ஞானசேகரன் | 352-355, 356 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 370-371 |
| திரு. குத்தாலம் பி. கல்யாணம் | 329-335 |
| * திரு. கே. சுப்பராயன் | 294, 299, 305, 335-343 |
| * திரு. வ. அன்பழகன் | 343-349 |
| திரு. ஐ. கணேசன் | 291,292,297, 303, 349-355, 356, 358 |
| திரு. பொ. முருகேசன் | 359-362 |
| திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் | 362-369 |
| திரு. அ.லெ. சுப்பிரமணியன் | 371-376 |
| * திரு. டி. மணி | 295, 299-300, 306, 376-380 |
| திரு. லா. சந்தானம் | 380-387 |
| டாக்டர் அ. செல்லக்குமார் | 387-395 |

7. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— 396


221196

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 24, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 மே 7, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்"

குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும், தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்.

### 1. வினாக்கள்-விடைகள்

#### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 661, திரு. செங்கை சிவம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**661—**

**துணை மின் நிலையம் அமைத்தல்**

***14384—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பார்—

(அ) சென்னை வியாசர்பாடியில் தொழில் வளாகத்தில் புதிய் துணை மின் நிலையம் (110 கே.வி.) அமைக்கும் பணி நடைபெறுகிறதா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எந்நிலையில் உள்ளது?

[1999 மே 7

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாசர்பாடி Industrial Estate-இல் 110 KV Sub Station அமைக்கவில்லை என்றாலும்கூட, 33/11 KV Sub Station அமைக்கப்படுமா? அப்படி அமைத்தால், அதிலே என்னென்ன facilities வருகின்றன என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாசர்பாடி தொழிற்பேட்டைக்கு அருகில் 2.5 கிலோமீட்டர் தொலைவில் வியாசர்பாடியிலே ஒரு 110 Kilovolt துணை மின் நிலையமும், செம்பியத்தில் மற்றொரு 110 Kilovolt துணை மின் நிலையமும் தற்போது இயங்கி வருகின்றன. இருந்தாலும், தொழிற்பேட்டையிலே சீரான மின்சாரம் கிடைத்திடவும், புதிய தொழில் இணைப்புகள் வழங்கிட ஏதுவாகவும், ஒரு புதிய 33/11 Kilovolt துணை மின் நிலையத்தை வியாசர்பாடி தொழிற்பேட்டை வளாகத்தில் அமைப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கான Estimates எல்லாம் இன்றையதினம் மின் வாரியத்தாலே தயார் செய்யப்பட்டு, இந்த ஆண்டிலே பணிகளை எடுத்துக்கொள்வதற்கான வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 662, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**662—**

### அரசு மருத்துவமனையில் காசநோய்ப் பிரிவு

***16665—திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் காசநோய்ப் பிரிவு ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1999 மே 7]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. நயினா முகமது, இருக்கையில் இல்லை.

வினா எண் 663, திரு. ப. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**663—**

### சரகப் போக்குவரத்துக் கிளை அலுவலகம்

***21930—திரு. ப. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையில் சரகப் போக்குவரத்துக் கிளை அலுவலகம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை, பேராவூரணி சரகத்திலே கிட்டத்தட்ட 50 ஆயிரம் வாகனங்கள், இரண்டு சக்கர, நான்கு சக்கர வாகனங்கள் எல்லாம் இருக்கின்றன. வாகனங்களைப் பதிவு செய்வதற்காக தஞ்சாவூர் செல்ல வேண்டியிருப்பதால் பொதுமக்களே அலுவலகக் கட்டடத்தை இனாமாகத் தர இருக்கிறார்கள். அந்த அளவிலே அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, பட்டுக்கோட்டையில் ஒரு வட்டாரப் போக்குவரத்து கிளை அலுவலகம் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[1999 மே 7

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 12 இடங்களில் இதுபோன்ற வட்டாரப் போக்குவரத்து துணை அலுவலகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு, நிதி நிலைமையின் காரணமாக, புதியதாக எதுவும் உருவாக்க முடியவில்லை. வருங்காலங்களில், இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 664, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**664—**

**நகரப் பேருந்து இயக்குதல்**

***22514—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியிலிருந்து இடையர்தவணை வழியாக வீ.கே. புதூருக்கு ஒரு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் அங்கே பொதுமக்களுடைய சிறிய கோரிக்கையைக்கூட நிறைவேற்ற முடியாத ஒரு நிலையில் இருக்கிறது. மொத்தம் உள்ள 875 பேருந்துகளில் 183 பேருந்துகள், உதிரி பாகங்கள் இல்லாமல் பணிமனையிலே முடங்கிக் கிடக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. மொத்தம் தினசரி இயக்கப்பட வேண்டிய கிலோமீட்டர் மூன்று இலட்சத்து . . .



1999 மே 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய மூலக் கேள்விக்கும், இந்தத் துணை வினாவிற்கும் என்ன பொருத்தம் இருக்கிறது?

**திரு. கே. ரவி அருணன்:** பேருந்துகள் பழுதடைந்திருப்பதால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால்தான், பேருந்து நிச்சயமாக விட முடியாது என்று அவர் பதில் சொல்லப் போகிறார். மூலக் கேள்வியைப் பொறுத்துத்தான் நீங்கள் துணை வினா கேட்க வேண்டும்.

**திரு. கே. ரவி அருணன்:** தினசரி இயக்கப்பட வேண்டிய......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா விவரங்களையும் எடுத்துக்கொண்டு வந்து, இதை ஒரு சாக்காக வைத்து, இத்தனை bus நிற்கிறது, போகிறது என்றால் எப்படி?

**திரு. கே. ரவி அருணன்:** தினசரி இயக்கப்பட வேண்டிய பேருந்துகளை இயக்குவதிலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்புறம் இந்தப் பேருந்தை எப்படிப் புதிதாக விடுவார்?

**திரு. கே. ரவி அருணன்:** தினசரி இயக்கப்பட்டு வந்த பேருந்துகளையே இயக்க முடியாத நிலையில் திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகம் இருக்கிறது. ஆகவே, பழுதடைந்த பேருந்துகளை பழுது நீக்கம் செய்யவும், மக்களுடைய சிறிய கோரிக்கைகளை நிறைவேற்றவும், அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இப்போது ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்துகளைச் சரியான முறையிலே ஓட்டுவதற்காகத்தான் அரசு பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. விரைவிலே அது சரி செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது சரி செய்யப்பட்ட பிறகு, புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடுவதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

[1999 மே 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 665, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**665—**

**பாலங்கள் ஆக்கிரமிப்பு**

***6022—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிக்கரணை கழிவு வெளிப் பகுதியில் தண்ணீரை வெளியேற்றும் மூன்று பாலங்களில் இரண்டு பாலங்கள் ஆக்கிரமிப்பாளர்களால் அடைக்கப்பட்டிருப்பதும் அதனால் மழைக்காலத்தில் பாதிப்பு ஏற்படுவதும் அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது ?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேற்படி இடத்தில் உள்ள மூன்று பாலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் யாவும் அகற்றப்பட்டு மழைநீர் தடையின்றிச் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் வருகிறபோதுகூட அதைப் பார்வையிட்டுவிட்டுத்தான் அவைக்கு வந்திருக்கிறேன். இன்னும் ஒரு பாலத்திற்கு பக்கத்திலே இருக்கிற ஆக்கிரமிப்பை சரியான முறையில் அப்புறப்படுத்தாத காரணத்தால், அது மீண்டும் அடைபடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள அதையும் அகற்றுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்த ஒரு ஆக்கிரமிப்பில் ஒரு சிறிய ஓலைக் கொட்டகை இருந்தது. அது அகற்றப்பட்டுவிட்டது. இப்போது மீண்டும் அந்த ஓலைக்



1999 மே 7]

கொட்டகை போடப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 666, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**666—**

**தார்ச் சாலையைப் புதுப்பித்தல்**

***18234—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி - சேலம் மெயின் ரோடு, சந்திரம்மாகடை பிரிவிலிருந்து புக்கம்பட்டி வரையுள்ள தார்ச் சாலையை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்படும் சாலையைப் புதுப்பிக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை மூலமாக சாலைகள் அமைப்பதற்காக, நிதி ஒதுக்கப்படுகிறது. மாவட்ட வாரியாக நிதிகள் ஒதுக்கப்படுகிற போது, கோட்டங்களுக்கு சமமாகப் பிரிக்கப்படுவதில்லை என்ற ஒரு குறைபாடு இருக்கிறது. அதிலும், குறிப்பாக திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி கோட்டத்திற்கு சென்ற ஆண்டு நிதி ஒதுக்குவதிலே குறைவாக ஒதுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டதை, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி இருக்கிறேன். இந்த ஆண்டு அந்த குறை நீக்கப்பட்டு நிதியை ஒதுக்குவதற்கான முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1999 மே 7

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மாதிரிப் பாகுபாடு எதுவும் காட்டுவதில்லை. சாலைகளினுடைய நீளம், சில கோட்டங்களிலே அதிகமாக இருக்கிறது. சில கோட்டங்களிலே குறைவாகவும் இருக்கிறது. அந்தச் சாலைகளினுடைய நீளத்திற்கு தக்கபடி, நிதி ஆதாரத்திற்குத் தக்கபடி முறையாக நிதி ஒதுக்கப்படுகிறது. பணிகள் நடைபெறுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க, வினா எண்கள் 667 மற்றும் 668 ஒத்திவைக்கப்படுகின்றன.

வினா எண் 669, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**நெல் கொள்முதல் மையம்**

**669—**

***15879—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையில் நெல் கொள்முதல் மையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு ஆண்டும் காவிரிப் பாசனப் பகுதிகளான தஞ்சாவூர், நாகை, திருவாரூர், கடலூர், புதுக்கோட்டை, திருச்சி, பெரம்பலூர், கரூர் ஆகிய மாவட்டங்களில் அரசு ஆணைப்படி நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்படுகின்றது. காவிரிப் பாசனம் அல்லாத பிற மாவட்டங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பது பற்றி, அந்தந்த மாவட்டங்களில் உள்ள நெல் விளைச்சலைப் பொறுத்தும், அரசு கொள்கை முடிவின்படியும் முடிவு எடுக்கப்படும். அப்படி எடுக்கப்படுகின்ற காரணத்தால், புதியதாக அங்கு நிரந்தரமாகக் கட்டடத்தைக் கட்டி, திறப்பது தேவையில்லாதது என்று அரசு கருதுகிறது.



1999 மே 7]

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காவிரிப் பாசனப் பகுதியில் மட்டும் அரசு நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்து செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில், தாமிரபாணி, சிற்றாறு போன்ற பாசனப் பகுதிகளிலே விளைகின்ற நெல்லையும் அரசு கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏகபோகக் கொள்முதல் திட்டம் என்பது, இதுவரை கடைப்பிடிக்கப்பட்ட கொள்கை, காவிரிப் பாசனப் பகுதியிலே மட்டும்தான் அது கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. போன ஆண்டு, குறுவைப் பருவத்திலேயும், சம்பாப் பருவத்திலேயும், வெளியிலே வியாபாரிகள் யாரும், விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை வாங்காத காரணத்தால், அரசு இடைநிகழ்வுச் செலவையும் தந்து, மாவட்ட தாலுகா Godown-களில் - நுகர்வோர் வாணிபக் கழக Godown-களில் வந்து தருகின்றவர்களிடமிருந்தும், மற்றும் மாவட்டங்கள் முழுவதும் 300-க்கும் மேற்பட்ட நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறந்தும், அரசு கொள்முதல் செய்திருக்கிறது. விவசாயிகள் விற்பனை செய்வதற்கு ஏதுவாக இருந்தால், அவர்களை அனுமதித்தும், விற்காதபோது ஆதரவு விலையைத் தந்தும் அரசு வாங்குவதைத்தான் அரசு இதுவரை கொள்கையாக எடுத்திருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலும் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதிக விளைச்சல் இருந்தால் நுகர்வோர் வாணிபக் கழகம் அதை நிச்சயமாகக் கொள்முதல் செய்துகொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் பெரியார் பாசனப் பகுதியில் கிட்டத்தட்ட 15,000 ஏக்கரில் நெல் விவசாயம் செய்யப்படுகிறது. அங்கே அறுவடை செய்கிறபோது விவசாயிகள் அந்தப் பகுதியிலே நெல் வியாபாரிகளிடம் மட்டுமே நெல்லை விற்கவேண்டிய சூழ்நிலை எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் நிரந்தரமாக ஒரு நெல் கொள்முதல் Center-ஐ ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிப்படையாக ஒரு உண்மையை நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் பாசனப் பகுதிகளிலே, அரசுக்குத் தேவையானபோதெல்லாம் ஆதரவு விலையைப் பெற்றுக் கொண்டு, அந்த நெல்லை நமக்குத் தருகிறார்கள். இராமநாதபுரம், திருநெல்வேலி, தேனி மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயப் பெருமக்கள், அரசு ஆதரவு விலையைவிடக் கூடுதலாக வருகின்றபோது முழுமையாக, ஒரு மூட்டைகூட அரசுக்குத் தருவதில்லை. வெளியிலே விற்கத்தான் அவர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். வியாபாரிகள் யாரும் வாங்கவில்லை என்றால் நாங்கள் வாங்கிக் கொள்வோம் நிச்சயமாக. கடந்த கால வரலாறே அதை உண்மை என்று சொல்லும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய தென் மாவட்டங்களிலே தாமிரபரணி பாசனம் மூலமாகத்தான் நெல் விளைகிறது. அதிகமாக விளையும்போது, விவசாயிகளிடத்தில் தேங்கி இருக்கக்கூடிய நெல்லை அரசே கொள்முதல் செய்து, காவிரிப் பாசனப் பகுதியிலே கொடுக்கக்கூடிய ஊக்கத் தொகையை அந்த விவசாயிகளுக்கும் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏகபோகக் கொள்முதல் திட்டம் காவிரிப் படுகையிலே மட்டும்தான் இதுவரை அமல்படுத்தப்பட்டிருக்கிறது. அதேகூட ஒவ்வொரு ஆண்டும் 20-க்கும் மேற்பட்ட விவசாயிகள் அல்லது விவசாயச் சங்கங்கள், எங்களுக்கு அப்படி ஏகபோகக் கொள்முதல் திட்டம் அமலபடுத்தக் கூடாது. இணைக் கொள்முதலதான் அமல்படுத்தப்பட வேண்டும் எனறு நீதிமன்றத்திலே வழக்குப் போடுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் நாம் அதைச் சந்தித்து, அதிலே வெற்றி பெற்றுத்தான், நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டி இருக்கிறது. நெல் வியாபாரிகள் குறைவாக வாங்குகின்ற நிலை இருக்கும் வேளைகளில் அரசு நிர்ணயித்த விலைக்கு நிச்சயம் இந்த அரசு கொள்முதல் செய்துகொள்ளும். வண்டிச் சத்தமாக தஞ்சை மாவட்டப் பகுதிகளுக்குக் கூடுதல் தொகையாக, இடைநிகழ்வுச் செலவாக 50 ரூபாய் என்றால், மற்ற





மாவட்டங்களிலே இணைக் கொள்முதல் அமல்படுத்தப்படுகின்ற இடத்திலே, விவசாயிகளுக்கு 15 ரூபாய் கூடுதலாகத் தந்து, வண்டிச் சத்தமாகத் தந்துதான் கொள்முதல் செய்து கொண்டு இருக்கிறோம். அதிகமாக விளைச்சல் இருக்கின்ற இடத்தில் எல்லாம் நிச்சயமாக நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 670, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**670—**

### கொள்முதல் தானியங்களைப் பாதுகாத்தல்

***20688—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கொள்முதல் செய்யப்படும் தானியங்கள் சரியான பாதுகாப்பின்றி அழிவதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கொள்முதல் செய்யப்படும் தானியங்கள் அனைத்தும், விஞ்ஞான முறைப்படி சேமிப்புக் கிடங்குகளிலும் மற்றும் திறந்தவெளி சேமிப்புக் கிடங்குகளிலும் சேமித்து வைக்கப்பட்டு, பாதுகாப்புடன் வைக்கப்படுகின்றன.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஞ்ஞான முறைப்படி எத்தனை சேமிப்புக் கிடங்குகள் தமிழ்நாட்டில் உள்ளன? எந்தெந்த தானியங்கள் சேமித்து வைக்கப்படுகின்றன? மழை, இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் நேரத்தில் திறந்தவெளி சேமிப்புக் கிடங்குகளில் எந்தெந்த வகையில் சேமிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குக் கிடங்குகள் என்று எடுத்துக்கொண்டால் 6 இலட்சத்து 10 ஆயிரம் tonnes வைத்துக்கொள்கிற அளவிற்குக் கிடங்குகள் இருக்கின்றன. அதேபோல,

Warehousing Corporation-க்கு 6 இலட்சம் tonnes வைக்கக்கூடிய அளவிற்கு இருக்கிறது. இதிலே அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், வியாபாரிகள் வாங்காதபோது, 1997-98 ஆம் ஆண்டு பருவத்திலே கிட்டத்தட்ட சம்பா, குறுவை ஆகிய இரண்டு பருவங்களிலும் 18 இலட்சம் tonnes 6 மாத காலத்திலே கொள்முதல் செய்ய வேண்டியிருந்த காரணத்தினால், அப்படி கொள்முதல் செய்யப்பட்டு, கிடங்குகள் தனியார் இடத்திலும் வாடகைக்குப் பெறப்பட்டு வைக்கப்பட்டது போக, மீதம் இருக்கின்ற 100-க்கும் மேற்பட்ட இடங்களிலே திறந்தவெளிக் கிடங்கிலே வைக்கப்பட்டு இருக்கிறது. அது தார்ப்பாய் போட்டு மூடப்பட்டிருக்கிறது. அடியிலே கட்டைகள் அடுக்கப்பட்டு ஈரம் வராமல் காக்கப்பட்டது. இருந்தாலும், தொடர்ந்து மழை பெய்கின்றபோது கொஞ்சம் நெல் முளைத்து அதெல்லாம் பத்திரிகையிலேகூட வந்திருக்கிறது. அப்படி எவ்வளவு சேதம் ஆகும் என்று நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே கணக்கிட்டுப் பார்த்தபோது, 10 சதவிகிதம் அளவிற்கு நெல் சேதம் ஆகும் என்று கணக்கிடப்பட்டது. ஆனால், ஓராண்டு காலத்திற்குள் முழுமையாக அரைத்த காரணத்தினால், 3 சதவிகிதம்தான் கறுப்பு அரிசியாக கிட்டத்தட்ட 18½ இலட்சம் tonnes நெல்லை அரைத்தபோது வெறும் 50,000 tonnes மட்டும்தான் கறுப்பு அரிசியாக இருந்தது. அதையும பொது விநியோகத் திட்டத்திலே வழங்கக் கூடாது, தனியே ஏலம் விட்டு விற்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி, அதுவும் பொது விநியோகத் திட்டத்திலே வழங்கப்படாமல், தனியே வைக்கப்பட்டு ஏலமாக விற்கப்பட்டிருக்கிறது. கொள்முதல் செய்யப்பட்ட நெல்லும், அரிசியும் கையிருப்பாக 7,84,641 tonnes இன்றைக்கு தமிழ்நாடு அரசிலே இருக்கிறது. இப்போதுகூட இந்தப் பருவத்திலே கொள்முதல் செய்யப்பட்டது, கிட்டத்தட்ட 10,35,000 tonnes கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதிலே இந்த Ground stock என்று சொல்லப்படுவது 1,00,000 tonnes என்ற அளவிலேதான் Ground stock ஆக இருக்கிறது. மற்ற அத்தனை நெல்லும் பிற மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தொடர்ந்து மழை பெய்கின்றபோது ஏற்படுகின்ற சிறு சேதத்தைத் தவிர்க்க இயலாது.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களிலேயிருந்து நாம் கொள்முதல் செய்யும்





அரிசி, ஆந்திரா, பஞ்சாப், அரியானாவிலேயிருந்து இறக்குமதி செய்யக்கூடிய அரிசி நல்ல நிறமாகவும், எந்தவிதமான வாசனையும் இல்லாமல் இங்கே நுகர்வோருக்குக் கிடைக்கிறது. ஆனால் தமிழ்நாட்டிலே கொள்முதல் செய்யக்கூடிய அரிசி மட்டும் மிக மோசமான நாற்றத்தோடும் மற்றும் பல வண்ணக் colour-களிலே இங்கே கிடைக்கிறது. இந்த அவையிலே நான் இரண்டுமுறை அரிசியைக் காட்டியிருக்கிறேன். இதற்குக் காரணம், விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்யும்போது ஈரப்பதம் மிக அதிகமாக இருப்பதுதான் அதனால்தான் இந்த நாற்றமும், colour மாற்றமும் ஏற்படுகிறது. இதைத் தடுக்க இவ்வளவு ஈரப்பதம் இருக்கக்கூடிய நெல்லை நாம் கொள்முதல் செய்யும்போது விவசாயிகளுக்கு ஒரு சிறப்பு ஊதியத்தைக் கொடுத்து கொள்முதல் செய்தால் இந்த நாற்றம் தவிர்க்கப்படுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குச் சிறப்பு ஊதியம் தந்துவிட்டாலே நாற்றம் வராமல் போகாது. தஞ்சை மாவட்ட விவசாயிகளிடத்தில், அதிகமாக மழை பெய்கின்ற நேரத்தில் ஈர நெல்லை வியாபாரிகள் வாங்குவதில்லை. தற்போது, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், விவசாயச் சங்கப் பிரதிநிதிகளெல்லாம் விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்ற நோக்கத்தில், விவசாயிகளிடமிருக்கின்ற ஈர நெல்லை வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இதுவரை நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே கடைபிடிக்கப்பட்டு வந்த முறையான 18 சதவிகிதம் ஈரப்பதம் இருக்கின்ற நெல்லை மட்டும் பெற்று, அதற்கு மேல் ஈரப்பதம் உள்ள நெல்லை வாங்கக் கூடாது என்றிருந்த விதியை மாற்றி, பல பேர்களுடைய கோரிக்கையை ஏற்று, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 25 சதவிகிதம் வரை ஈரப்பதம் இருந்தாலும் சரி, விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொல்லி, அதிலும் ஏற்கெனவே தரக்கட்டுப்பாட்டு வெட்டு என்று சொன்னால் 15 ரூபாய் என்று இருந்தது அதையும் 5 ரூபாயாகக் குறைத்து, தரக்கட்டுப்பாட்டு வெட்டு 5 ரூபாய் என்று மட்டுமே குறைத்து கொள்முதல் செய்யச் சொன்னார்கள். அப்படித்தான் கொள்முதல் செய்யப்பட்டது. அதிகமான மழை பெய்கின்றபோது, இந்த மாதிரி கறுப்பு அரிசி வருவது தவிர்க்க இயலாதது. மேலும், நெல்லை வாங்கவில்லையென்றால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். வாங்கினால், பொது விநியோகத் திட்டத்திலே அரிசி கறுப்பாக இருக்கிறது. அதனால்தான் வெளியிலே ஏலம் விட்டு விற்கச் சொன்னார்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இங்கே, ஆந்திராவிலிருந்து வருகின்ற அரிசி, மற்ற மாநிலங்களிலேயிருந்து வருகின்ற

[1999 மே 7

அரிசியெல்லாம் நன்றாக இருக்கிறது என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட தமிழ்நாடு அரசு 13-5-1996-லே பொறுப்பேற்ற பிறகு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நான்காவது முறையாகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, இதுவரை 3 இலட்சம் tonnes மட்டும்தான் வெளி மாநிலங்களிலேயிருந்து கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. மற்ற அத்தனையும் இங்கு உள்ளூரிலேதான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள், தனியார்கள் நல்ல நெல்லாக மட்டும் வாங்கி அரைத்து அனுப்புகிறார்கள் ஆனால், நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வருகின்றபோது, 25 சதவிகிதம் ஈரப்பதம் உள்ள நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டியதிருக்கிறது. அரசுக் கிட்டங்கியிலே வந்து விற்க வருகின்ற விவசாயிகள், அதை நல்ல முறையிலே உலர்த்தி நன்றாகக் கொண்டு வந்து தருவதும் இல்லை. அதை வாங்கவில்லை என்றால், விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதனால்தான், தருகின்ற நெல்லை அப்படியே வாங்கிக்கொள்கின்றபோது சிறு சிறு பிரச்சினைகள் வரத்தான் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குவிண்டால் நெல்லுக்கு 69 கிலோ அரிசி என்பது அகில இந்திய அளவிலே நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடிய இலக்கு. வெளி மாநிலங்களிலும் அதே கணக்குத்தான். ஆந்திரா, ஒரிஸ்ஸா, பஞ்சாப் போன்ற மாநிலங்களிலும் ஒரு குவிண்டால் நெல்லுக்கு 69 கிலோ அரிசி என்று இருக்கிறது. நமது தமிழ்நாட்டிலும் இதே நிலையைக் கடைப்பிடிக்கிறார்கள். அந்த விகிதாச்சாரத்தை, இந்தச் சேக்கா முறை போடுவதன் மூலமாக அதிகப்படியான எடை கூடுகிறது என்ற காரணத்திற்காக 2 முறை சேக்கா, 3 முறை சேக்கா என்ற நிலை எல்லாம் தனியார் ஆலைகளிலே இருப்பதாகத் தகவல் கிடைக்கிறது. அதைக் கட்டுப்படுத்தி இன்னும் சதவிகிதத்தைக் குறைத்து 65 கிலோ என்று நாம் கேட்போமேயானால் தரமான அரிசி கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்; இதை அகில இந்திய அளவிலே பேசி ஒரு இறுதிகட்ட முடிவினை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-30

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே நாம் நெல் கொள்முதல் செய்வதுபோல், ஆந்திர மாநில அரசு கொள்முதல் செய்வதில்லை. மத்தியில் இருக்கிற F.C.I. தான் ஆந்திர மாநிலத்திலே கொள்முதல் செய்கின்றது.



1999 மே 7]

தமிழ்நாட்டிலே நாம் கொள்முதல் செய்கிறபோது தரமான நெல்லை மட்டுமே விவசாயிகளிடமிருந்து வாங்குவோம் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதுபோல் 69 சதவிகிதம் அல்லது 65 சதவிகிதம் எப்படிப்பட்ட அரிசியாக வேண்டுமானாலும் எடுக்க முடியும். விவசாயிகள் தருகின்ற நெல்லை அப்படியே வாங்குகின்ற காரணத்தால் 69 சதவிகிதம் என்று வருவது இல்லை. இன்றைக்கு அதைக்கூட ஒரு சதவிகிதம் குறைத்து, 68 சதவிகிதம் தந்தால் போதும் என்று,. வெளியிலே இருக்கின்ற மில்களுக்கு அரைக்கக் கொடுக்கின்றபோது அவர்களுக்கு 100 கிலோ நெல்லை அரைத்தால்,—ஒரேயொரு முறை அவியல் போட்டு அரைத்தால், 64 சதவிகிதம், 63 சதவிகிதம் அரிசி கிடைக்கும். இரண்டு முறை அவியல் போடுகின்றபோதுதான் அதிலே 68 சதவிகிதம் அரிசி கிடைக்கும். இதிலே இப்போதே தமிழ்நாட்டு அரசினுடைய மானியத் தொகை நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு இந்த ஆண்டு 1,036 கோடி ரூபாய் அளவிலே இருக்கிறது. இன்னும் அரிசி குறையுமானால், இன்னும் கூடுதலாக அரசுக்குச் செலவினம் வரும். இதிலே, இப்போதே நம்மால் ஓர் ஆண்டு காலம் பெறப்படுகின்ற அரிசியைப் பார்த்தால், கிட்டத்தட்ட 25 ஆயிரம் நியாய விலைக் கடைகளிலே எங்கேயாவது ஒரு சில இடங்களில்தான் இந்த மாதிரி இருக்குமே தவிர, மொத்தமாக 90 சதவிகிதம் நல்ல அரிசியாக வழங்கப்படுகின்றது. நல்ல அரிசியாக வழங்குகின்ற காரணத்தால்தான் 65 சதவிகிதம், 70 சதவிகிதம் என்று off-take இருந்தது. இப்போது 85 சதவிகிதம் வரை அரிசி விநியோகம் செய்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. இராசமாணிக்கம்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்தவெளிக் கிடங்குகளிலே நெல்லைச் சேமித்து வைப்பதன் மூலம் 10 விழுக்காடு சேதாரம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். எனவே, சேதாரத்தைத் தவிர்ப்பதற்காக நிரந்தரமாகச் சேமிப்புக் கிடங்கைக் கட்டுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா? திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் சேமிப்பு கிடங்கு கட்டுவதற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது. இந்த ஆண்டு அதைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[1999 மே 7

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 சதவிகிதம் சேதாரம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 3 ½ சதவிகிதம்தான் சேதாரம் ஏற்பட்டது அதையும் வெளியிலே ஏலம் விட்டு அதிகமாக நஷ்டம் இல்லாத அளவிற்கு நுகர்பொருள் வாணிபக் கழகம் இன்றைக்கு நடத்தியிருக்கிறது.

கிடங்குகளைக் கட்டுவதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிலே புதியதாகத் தொடங்கப்பட்டிருக்கின்ற தாலுகாக்களில், எந்தெந்த தாலுகாகளிலே கிடங்குகள் இல்லையென்பது கணக்கெடுக்கப்பட்டு, 42 தாலுகாகளிலே இல்லையென்பது கண்டறியப்பட்டு, 42 தாலுகாகளிலும் கிடங்குகளைக் கட்டச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலே அதற்கான பணத்தைப் பெற்று, அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டுகூட 12 இடங்களிலே Godowns கட்டப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து, முழுமையாக நெல்லைப் பாதுகாப்பதற்காக திறந்தவெளிக் கிடங்குகளை 3, 4 இடங்களிலே அமைக்கச் சொல்லி. மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறர்கள். சிறப்பான பாதுகாப்போடு அதற்கான இடங்கள் எல்லாம் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. மத்திய அரசு நிறுவனமான F.C.I.-க்குச் சொந்தமான, சிதம்பரத்தில் இருக்கின்ற அவர்களின் Rice Mill-ஐக்கூட வாங்குவதற்காகச் சொல்லப்பட்டு, அவர்களும் ஒத்துக்கொண்டு, கிட்டத்தட்ட 1¼ ஏக்டேர் அளவிலே modern rice mill-லோடு இருக்கின்ற Godown-னோடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வாங்க இருக்கிறது. தொடர்ந்து தஞ்சை மாவட்டத்திலிருக்கின்ற மத்திய அரசுக்குச் சொந்தமான Godown-களையும் விலைக்குக் கேட்டிருக்கிறோம். இப்படிப் பாதுகாப்பிற்காக பல நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடத்திலும் அந்தப் பணி நிச்சயமாக இந்த ஆண்டு நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று அரசு கொள்முதல் செய்கின்ற நெல் எல்லாம் ஈரப்பதத்தோடு இருக்கின்ற காரணத்தால் மக்கிவிடுகிறது. கறுப்பாகி விடுகிறது. ஆனால் தனியார்கள் இதுபோன்று சேமித்து வைப்பதற்காக ஈரப்பதமான நெல்லை உலர்த்திப் பாதுகாப்பாக வைத்திருப்பதனால்,



1999 மே 7]

அது நல்ல விலைக்கு விற்கிறது. அதுபோன்ற நடவடிக்கைகளை உலர்த்திய நெல்லைச் சேமித்து வைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவானந்தம் அவர்கள் சொந்தமாக அரிசி ஆலை வைத்திருக்கிறார். அவருக்கு 100 மூட்டைகள் தேவையென்றால் 100 மூட்டைகள் மட்டும்தான் வாங்குவார். அதை நல்ல முறையிலே அவராலே பராமரிக்க முடியும். ஆனால், விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காக அவர்கள் உற்பத்தி செய்கின்ற நெல்லை முழுமையாகக் கொள்முதல் செய்கின்ற காலகட்டத்திலே நம்முடைய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் 23 Modern Rice Mills இருக்கின்றன. 23 Modern Rice Mills-களில் ஒரு மாதத்தினுடைய அரைவைத் திறன் 32 ஆயிரம் tonnes 40 ஆயிரம் tonnes என்ற அளவிலே இருக்கும். அதனால்தான் தனியார் மில்களில் கொடுத்து இன்றைக்கு hulling agent-ஆக நியமித்து அரைத்துக்கொண்டிருக்கிறோம், இதிலே ஈர நெல்லை வாங்கக் கூடாது என்றால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அதை வாங்கினால் ஒரு சில பாதிப்புகள் அரசுக்கு ஏற்படத்தான் செய்யும். அதனால்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தினம் 800 tonnes அரைக்கக்கூடிய அளவிற்கு புதிய நவீன ரக அரிசி ஆலையைத் தொடங்குவதற்காக உத்தரவிட்டிருக்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்திலே புனக்குளம் என்ற இடத்திலே நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான அந்த இடத்திலே 400 tonnes திறன் உள்ள அரைவை இயந்திரமும், அதேபோல பெரம்பலூர் மாவட்டத்திலே ஒரு இடமும் தேர்வு செய்யப்பட்டு, இந்த ஆண்டு பணிகள் தொடங்கப்படவிருக்கின்றன. அப்படி அந்த ஆலை தொடங்கப்படுமேயானால், கொள்முதல் செய்த அன்றே அரைக்கக்கூடிய அந்த வாய்ப்பு நிச்சயமாக நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குக் கிடைக்கும். அதுவரை கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரப்பதம் உள்ள நெல்லை வாங்குவதால்தான் இப்படிப் போன்ற மக்கலான அரிசி வருகிறது என்கிற உண்மையை இங்கே அமைச்சர்

அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி மக்கலான அரிசி எத்தனை tonnes இப்பொழுது நம்முடைய அரசின் கைவசம் இருக்கிறது? சத்துணவுக்கூடங்களுக்கெல்லாம் அனுப்பக்கூடிய அரிசியெல்லாம் இப்படி மக்கலான அரிசியாகவே போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே, சத்துணவுக் கூடங்களுக்கு அனுப்பக்கூடிய அரிசியை நல்ல அரிசியாக அனுப்புவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு கொள்முதல் செய்யப்பட்ட நெல்லினுடைய அளவு 18½ இலட்சம் tonnes. அந்த 18½ இலட்சம் tonne-களிலே அரிசியாக அரைக்கப்பட்டபோது கறுப்பு அரிசி என்று ஒதுக்கியது 50 ஆயிரம் tonnes. அந்த 50 ஆயிரம் tonne-களிலே கிட்டத்தட்ட 32 ஆயிரம் tonne-களுக்கு மேலாக ஏலம் விடப்பட்டது. இப்பொழுது மறுபடியும் ஏலத்திற்காக மறுபடி டெண்டர் கோரப்பட்டிருக்கிறது. அந்த 50 ஆயிரம் tonne-களும் முழுமையாகப் பொது ஏலத்திலே விடப்பட்டிருக்கிறது. பொது விநியோகக் கடைகளுக்கு அனுப்பப்படுவது இல்லை. மேலும் ஒவ்வொரு மாதமும் மத்திய அரசிலிருந்து 1,10,000 tonnes அரிசி நமக்குத் தருகிறார்கள். நாம் மாநிலத் தொகுப்பிலிருந்து 80 ஆயிரம் tonnes, 90 ஆயிரம் tonnes என்ற அளவிலே எடுத்து விநியோகித்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசிலிருந்து வருகின்றபோது பச்சரிசியாக, புழுங்கலரிசியாகத் தருகின்றபொழுது, பஞ்சாப் மாநிலத்திலிருந்து அரிசி வருகின்றபொழுது கொஞ்சம் மங்கலான அரிசி வருகிறது. காரணம், அங்கு மழை அதிகமாகப் பெய்து அவர்கள் கொள்முதல் செய்ததைக் கட்டாயமாக நம்முடைய தலையிலே கட்டுகிறார்கள். அதனால்தான் அந்தக் கறுப்பு அரிசி வருகிறது. அதை நாம் ஒதுக்க முடியாது. மத்திய அரசின் அரிசியை ஒதுக்க முடியாது. அதிலேயும் தேர்ந்தெடுத்து, அதிகாரிகளைப் பார்த்து ஓரளவுக்கு நல்ல அரிசியாக எடுக்க வேண்டியிருக்கிறது. மற்ற மாநிலங்களிலிருந்து அரிசி வருகின்றபொழுது அது சிறந்த அரிசியாக இருக்கிறது. ஆகவே, ஓர் ஒதுக்கீடு ஓர் இடத்திலே வருகின்றபொழுது அதைத் தவிர்க்க இயலாது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தைக் கொள்கையாக எடுத்து, நல்ல அரிசியாக சத்துணவுக் கூடங்களுக்கு அனுப்புவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் பல உறுப்பினர்கள் ஈரப்பதத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்து விவசாயிகளுக்கு எதிரான கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் கருதுகிறேன். காரணம், அங்கே குறுவை கொள்முதல் செய்யப்படுகிற காலம் என்பது, மழைக்காலங்களிலே நடைபெறுகிற சூழ்நிலை ஏற்பட்டு விடுகின்றது. ஆகவேதான், 18 சதவிகிதம் ஈரப்பதம் இருப்பதை எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலையை மாற்றி, 25 சதவிகிதம் என்ற நிலைக்கு மாற்றுவதற்கான முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும், எங்களது மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் பெருமுயற்சி எடுத்து அதை மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, விவசாயிகள் மனமகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றுவதற்குரிய முயற்சியை மேற்கொள்ளக் கூடாது. காரணம், அங்கே இருக்கிற விசேஷ சூழ்நிலைகளைக் கருத்திலே கொள்ள வேண்டும். இதர மாவட்டங்களைக் கவனத்திலேகொண்டு, இந்தக் கருத்துக்களைச் சொல்வது என்பது, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திற்குப் பொருத்தமாக அமையாது என்ற கருத்தைச் சொல்லி, அங்கே ஏகபோகக் கொள்முதல் நிலைமையை அமல்படுத்துகின்ற முறை மிகச் சிறப்பாக இருக்கிறது. இணைக் கொள்முதல் வேண்டுமென்று கேட்பதைக்கூட, எங்களது கட்சியின் சார்பிலே நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, இந்தக் கொள்முதல் நிலையத்திலே பலன் ஏற்படுகிற சூழ்நிலை, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு ஏற்படும். ஆகவே, ஈரப்பதம் என்பதைப் பிரச்சினையாக்கி, நிலையை மாற்றிவிட்டு, விவசாயிகளுக்குப் பாதகமான சூழ்நிலை ஏற்பட்டு விடாமல் அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நீங்கள் எடப்பாடி கணேசன் அவர்களிடம்தான் பேச வேண்டும். (சிரிப்பு)

வினா எண் 671, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

671—

## ஏழைகளுக்கு அடுக்குமாடி வீடுகள்

***18885—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் நகரத்தில் வீடு இல்லாத ஏழைகளுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதிக்கு உட்பட்ட திருமங்கலம் நகராட்சி என்பது, குடிசைகள் நிரம்பிய ஏழையெளிய மக்கள் வாழக்கூடிய ஒரு நகரம். இங்கே குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் அடுக்கு மாடி வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று குடிசை மாற்று வாரியத்திலுள்ள அதிகாரிகளைக் கண்டு, கேட்டபொழுது, அதற்கென்று அரசு இட ஒதுக்கீடு தந்தால் நாங்கள் அதைப் பரிந்துரை செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்களும் வட்டாட்சியர் அவர்களின் மூலமாக 6½ ஏக்கர் நிலத்தைப் பரிந்துரை செய்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரசின் விதிக்கேற்ப மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகினால், அந்த இடம் பெறப்படும். எனவே, அப்படி இடம் பெறப்படுகிற காலத்தில் திருமங்கலம் நகரத்தில் அந்த ஏழையெளிய மக்களுக்குக் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் அடுக்கு மாடி வீடுகள் கட்டித் தா அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியவாறு, திருமங்கலம் நகராட்சியிடமிருந்து அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்ட, குடிசை மாற்று வாரியத்திற்கு இடம் வழங்கியவுடன் நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்.

**திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக சேலத்தில் ஆண்டிப்பட்டி ஏரியிலே அடுக்கு மாடி வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகள் சென்ற ஆட்சியில் தவறான முறையில் கணக்கெடுக்கப்பட்டு தவறுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் சென்ற முறையேகூட கேட்டபோது—அதை விசாரித்து வீடு இல்லாதவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தேன்—ஆனால், அதை விசாரிக்காமல் அப்படியே அங்கே வீடுகள் வழங்கப்பட்டு இருக்கிற காரணத்தால், இன்றையதினம் 6 மாத காலத்தில் 50 சதவிகிதம் வீடுகளை அங்கே இருப்பவர்கள் வாடகைக்கு விட்டு விட்டார்கள். வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் கிடைக்கவில்லை. ஆகவே, உடனடியாக மீண்டும் பரிசீலனை செய்து வீடு இல்லாதவர்களுக்கு அங்கே வீடுகளை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கடந்த ஆண்டு கேட்டதைப்போல, அந்த வீடுகள் ஒதுக்கீட்டில் ஏதாவது தவறுகள் இருக்கின்றனவா என்பதைப் பார்த்து, அந்த முறைகேடுகளைக் களைய ஆவன செய்யப்படும். ஆய்வு செய்துதான் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. எனினும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மீண்டும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலத்திலே மட்டும் இந்த அடுக்குமாடி வீடுகளைக் கட்ட வேண்டுமென்று நாம் ஏற்றுக்கொண்டிருந்தாலும்கூட, இப்போது நிலப்பரப்பு என்பது, குறைந்து கொண்டே போகிறது, குறுகிக் கொண்டே வருகிறது. நிலப்பரப்பு குறுகிக் கொண்டே வருகிற இந்த காலகட்டத்தில் எங்கெங்கெல்லாம் வீடுகள் பிரச்சினை இருக்கிறதோ அங்கெல்லாம், தாலுகாவில்—நிலம் குறுகிக் கொண்டே வருகிறது, ஏனென்றால், ரோடு போட்டுத் தருகிறோம், கட்டடம் கட்டித் தருகிறோம், கடல் வேறு, தன்பக்கம் இழுத்துக்கொள்கிறது—ஆகையால், இந்த நிலப்பரப்பு குறுகி

வருகிற காலகட்டத்தில் எங்கெங்கெல்லாம் தலைநகரங்களில் வீடுகள் கட்டுவதற்கு இடம் கொடுக்கிறார்களோ, அங்கெல்லாம் அடுக்கு மாடி வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள குடிசை மாற்று வாரியத்தினுடைய திட்டப்படி மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, அந்த முறைப்படித்தான் ஹட்கோவினுடைய உதவிப்படி—ஹட்கோ 70 சதவிகிதமும், தமிழக அரசு 30 சதவிகிதமும், என்ற நிதியின் அடிப்படையில், அந்தத் திட்டத்தின்படிதான் இப்போது கட்டப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கோரிக்கை பிற்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *672,* திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**672—**

### தொழிற் பள்ளிகள் தொடங்குதல்

***16061—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) உசிலம்பட்டி தொகுதியில் தொழிற் பள்ளிகள் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) ஆம்.*

*(ஆ)* அரசாணை எண் *135,* தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் *19-9-1996*-ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின்படி, தொழிற் பயிற்சி நிலையத்தைத் தொடங்க தக்க மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தன்னுடைய பதிலில் தொழிற் கல்விக்கூடம் தொடங்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதலை அவருக்கு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, அந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி என்கிற காரணத்தால், அதை இந்த நிதியாண்டிலேயே செய்து முடிப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம், ஆளும் கட்சியாக அரசுக் கட்டிலுக்கு வருவதற்கு முன்பாகவே, தேர்தல் அறிக்கையிலே, தமிழகத்திலே எந்தெந்த பஞ்சாயத்து யூனியன்களில் I.T.I. இல்லையோ, அங்கே தொடங்கப்படும் *3* கட்டங்களிலே *3* ஆண்டுகளுக்குள்ளாக அது நிறைவேற்றப்படும் பத்திரிகையிலே இது குறித்து விளம்பரம் செய்யப்படும், பஞ்சாயத்து யூனியன்கள் இதற்காக மனுக்கள் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தோம். இதன்படி, பல பஞ்சாயத்து யூனியன்களால் மனுக்கள் அனுப்பப்பெற்று, I.T.I.-கள் தொடங்கப்பட்டு வருகின்றன. இப்போது *3*-ஆவது கட்டத்தில் இருக்கிறோம். ஆனால், உசிலம்பட்டி பஞ்சாயத்து ஒன்றியத்திடமிருந்து, இதுபோன்ற அறிவிப்பு பத்திரிகைகளில் வந்தும்கூட, அந்தப் பஞ்சாயத்து ஒன்றியத்திலேயிருந்து மனு வரவில்லை. இருந்தாலும், அது பிற்பட்ட பகுதி, முன்னேற்றப்பட வேண்டிய பகுதி என்பதை இந்த அரசு கவனத்திலே கொண்டிருக்கிறது. ஆகையால், D.R.D.A.-விருந்து, அல்லது மத்திய அரசு நிதியிலிருந்து I.T.I. தொடங்குவதற்காக மேல் நடவடிக்கை மிக, மிக விரைவாக அந்தப் பகுதியில் எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *673,* திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**673—**

### பீடித் தொழிலாளர்களுக்கு நலத் திட்டம்

***19375—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 7

(அ) தமிழகத்தில் உள்ள பீடித் தொழிலாளர்களுக்கென நலத் திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் உள்ள பீடித் தொழிலாளர்களுக்குக் கீழ்க்காணும் நலத் -திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன:-

1. குடும்ப நலம்;
2. வீட்டு வசதி;
3. குழுக் காப்பீடு; (Group Insurance)
4. டி.வி. வழங்கல்;
5. இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்;
6. மருத்துவமனைகள் மூலம் மருத்துவ வசதி;
7. கொடிய நோய் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கான உதவித் தொகை வழங்கல் மற்றும்
8. கல்விக்கான உதவித்தொகை வழங்கல்.

மேற்காணும் நலத் திட்டங்களை, பீடித் தொழிலாளர்களின் நலத் திட்டங்களுக்கென மத்திய அரசால் தனியாக அமைக்கப்பட்டுள்ள ஹைதராபாத் நல ஆணையர், மதுரை நல ஆணையர் ஆகியோரின் ஒத்துழைப்புடன், இந்த அரசு நிறைவேற்றி வருகிறது

முற்பகல் 10-05

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் எவ்வளவு பீடித் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்? அரசு வழங்குகின்ற இப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் அவர்களைச் சென்று சேருவதற்கு எடுத்துள்ள நடவடிக்கை யாது என்று கேட்கின்ற அதே வேளையில், இந்த நலத் திட்டங்கள்



1999 மே 7]

மூலம் பயன் அடைந்த தொழிலாளர்கள் எவ்வளவு பேர்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்காகப் பல்வேறு நலத் திட்டங்களை இந்த அரசு அமல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலப்பாளையத்தில் பீடித் தொழிலாளர்களுக்காக 974 வீடுகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். 3 ஆண்டுகாலமாக முடிவு பெறாமல் இருக்கிறது. அது எப்போது முடிவுபெறும் என்பதையும், அதோடு பீடித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிற பணங்குடி, திசையன்விளை, இராதாபுரம், கூடங்குளம் ஆகிய பகுதிகளில் வாழும் பீடித் தொழிலாளர்களுக்கு அரசு இலவசமாக வீடுகளைக் கட்டித் தருமா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்காக வீடுகள் கட்டித் தருகின்ற திட்டம் மேலப்பாளையத்திலும், முக்கூடலிலும் அறிவிக்கப்பெற்று, மேலப்பாளையத்தில் அந்தப் பணி சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. குறிப்பாக, முக்கூடலில் உள்ள நிலம், களிமண் நிலமாக இருப்பதாலும், அங்கு ஒதுக்கப்பட்ட தொகை குறைவாக இருந்த காரணத்தினாலும், இன்னும் வேலை, அந்தப் பணி சிறப்பாகத் தொடங்கப்படவில்லை. இருந்தாலும், இப்போது மானியமாகக் கொடுக்கப்பட்ட மத்திய அரசினுடைய தொகையும் - ஏற்கெனவே 9,000 ரூபாய் என்று இருக்கிறது - அதுவும் ஹட்கோ கடன் தொகையும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. எனவே, விரைவிலே இந்த இரண்டு இடங்களிலுமே பீடி கட்டுகின்ற, பீடி செய்கின்ற தொழிலாளர்களுக்கு அந்த வீடுகள் கட்டித் தரப்படும். அதுமட்டுமல்லாமல், தொழிலாளர்கள் அதிகமாக உள்ள வேலூர் மாவட்டத்திலேயும் ஈரோடு மாவட்டத்திலேயும் பல்வேறு இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்கெனவே உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற இடங்கள் குறித்தும், அரசு கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

[1999 மே 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்காக, சேரன்மகாதேவி தொகுதியில், முக்கூடலில் வீடுகள் கட்டுவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, அது வீடு கட்டுவதற்கு சரியான இடமாக இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த இடத்தை நானும் சென்று நேரடியாகப் பார்வையிட்டேன். கூடுதலாக ஒரு வீட்டுக்கு 2,000 ரூபாய் ஆகலாம் என்று அங்கே இருக்கின்ற பொறியாளரைக் கேட்டதற்குச் சொன்னார்கள். அதிகமாக செலவு வருகின்ற வாய்ப்பு இல்லை. எனவே, உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடு, அங்கே காசநோய் ஆஸ்பத்திரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டு வெகுநாட்கள் ஆகின்றன. மத்திய அரசுக்கு எழுதியிருப்பதாகக் கேள்வி நேரத்தின்போது சொன்னார்கள். அதுவும் எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி தொகுதியிலே, முக்கூடல் பகுதியில் 8.95 ஹெக்டேர் புறம்போக்கு நிலம், பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டது. இந்த வீடு கட்டும் திட்டத்தினால் பயன் பெறும் பீடித் தொழிலாளர்களின் எண்ணிக்கை 535. இந்தத் திட்டம், மத்திய அரசு மானியம் மற்றும் ஹட்கோ நிறுவனத்தின் கடன் உதவியுடன் மாநில அரசால் வீடு கட்டிக் கொடுப்பதாகும். இதிலே, ஒவ்வொரு வீட்டிற்கும் மத்திய அரசு மானியமாக 9,000 ரூபாய்; ஹட்கோ 13,000 ரூபாய் கொடுத்தது, அடுத்து 15,200 ரூபாய் கொடுத்தது. ஆனால், இந்தத் தொகையை வைத்துக் கட்ட முடியாத காரணத்தாலேயே, இப்போது அதை மாற்றி 21,000 ரூபாயாகக் கொடுத்திருக்கிறது; பணிகள் நடைபெறுகின்றன. காசநோய் மருத்துவமனைக்காக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதமும் மத்திய அரசுக்குச் சென்று, விரைவிலே பதில் வருவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 674, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.



999 மே 7]

674—

## நெசவாளர் குடியிருப்பு

***15644—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் கிராமப்புறத்தில் புதிய நெசவாளர் குடியிருப்பு உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். 1997-98 ஆம் ஆண்டிற்கு நெசவாளர்களுக்கு வீட்டுடன் கூடிய தறிக்கூடம் அமைக்கும் திட்டத்தின்கீழ், திருப்பூர் பகுதியைச் சேர்ந்த கோவில்வழி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கணபதிபாளையம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றிற்கு முறையே, 108, 125 தொகுப்பு வீடுகள் (மொத்தம் 233 வீடுகள்) கட்ட மத்திய, மாநில அரசுகளின் 50 விழுக்காடு மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பகுதியில் இருக்கக்கூடிய நெசவாளர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடியான ஒதுக்கீடுகளாக இது அமையவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த அந்த இரண்டு விஷயங்களையும் குறித்த காலத்திற்குள் முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு, திருப்பூர் தொகுதியினுடைய வடக்குப் பகுதியில் இருக்கக்கூடிய, நெசவாளர்கள் மையமாக இருக்கிற அந்தப் பகுதியில் காலி இடங்கள் நெசவாளர் சங்கங்களின் மூலம் தெரிவிக்கப்படுமானால், அந்த இடங்களிலே தொகுப்பு வீடுகளைக் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கு திருப்பூர், அம்மாபாளையம், காமாட்சியம்மன் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு 70 வீடுகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்

[1999 மே 7

அவர்களின் கோரிக்கையை ஏற்று நம்முடைய உறுப்பினர் அவர்கள் எந்தச் சங்கத்திற்கு வீடு கட்ட வேண்டுமென்று தெரிவிக்கின்றார்களோ, இந்த ஆண்டே அதற்கு நிதி அளிக்கக்கூடிய வாய்ப்பு அரசுக்கு இருக்கிறது. இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 675, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**675—**

**சந்தன எண்ணெய் ஆலை**

***20148—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மலைப் பகுதியிலிருக்கும் சந்தன மரங்களைக்கொண்டு பெண்ணாகரம் பகுதியில் சந்தன எண்ணெய் ஆலையைத் தொடங்கி சந்தன சோப்பு, சந்தனப் பவுடர் ஆகியவற்றை உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி மாவட்டம், மலைப் பகுதியிலிருக்கும் சந்தன மரங்களைக் கொண்டு பெண்ணாகரம் பகுதியில் சந்தன எண்ணெய் ஆலையைத் தொடங்கி சந்தன சோப்பு மற்றும் பவுடர் உற்பத்தி செய்யும் எண்ணம் அரசிடம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய உயர்ந்த கோரிக்கையான சந்தன மரங்களைவெட்டி விற்பதற்கு தமிழக அரசுக்கு உரிமை வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சருடைய அந்த நல்ல நோக்கத்தை, இன்றைய பிரதமர் மரியாதைக்குரிய அட்டல்பிகாரி வாஜ்பாய் அவர்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று, தமிழக நலனிலே அதிக அக்கறை கொண்டு, அந்த அனுமதியை வழங்கியிருக்கிறார்கள். இந்த நல்ல நேரத்திலே, சந்தன மரங்களைக் கொண்டு எண்ணெய் தயாரிக்கக்கூடிய ஆலையையும்,



1999 மே 7]

அதனை மூலப் பொருளாகக் கொண்டு, சந்தன சோப்பு, சந்தனப் பவுடர் போன்ற பொருள்களைத் தயாரிப்பதற்கு பெண்ணாகரம் பகுதியிலே ஓர் ஆலையையும் தொடங்குவதற்கு அரசு முன்வருமா? அந்தப் பகுதியிலே, சுற்றுவட்டாரத்திலே, தருமபுரி மாவட்டத்தினுடைய மலைப் பகுதிகளிலே சந்தன மரங்கள் கிடைக்கின்ற காரணத்தினாலே, அங்கே தொடங்குவது பொருத்தமாக இருக்குமென்ற அந்த அடிப்படையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே சிறப்புக் கவனம் செலுத்தி, தொடங்குவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சொன்னது போன்று ஓர் ஆலை கர்நாடக மாநிலம் பெங்களூரில், அரசின் சார்பில் கர்நாடகா சோப் அண்டு டிடெர்ஜெண்ட் கம்பெனி என்ற பெயரில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதிலே, சோப்பு, பவுடர், சென்ட், ஸ்பிரே போன்றவை தயாரிக்கப்படுகின்றன. ஆனால், கடந்த பல ஆண்டுகளாக ஏராளமான அளவு நஷ்டத்திலே மேற்படி தொழிற்சாலை இயங்கி வருவதால், கடந்த ஆண்டுகூட காவிரி ஒப்பந்தம் ஏற்பட்டபோது, மேற்படி நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற தொழிற்சாலைக்கு 20 டன் சந்தன மரங்கள் தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள் நமது தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சலுகை விலையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, நஷ்டத்தில் இயங்குகின்ற இதுபோன்ற தொழிற்சாலைகளை அரசின் சார்பில் அமைக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 676, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**676—**

**இயற்கைக் காடுகள், புல்வெளிகள் அழிவதைத் தடுத்தல்**

***21581—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மலைப் பகுதியில் இயற்கைக் காடுகளும், புல்வெளிகளும் அழிந்து வருவதாகச் சொல்லப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வினாக்களுக்கு முகாந்திரமில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகாந்திரம் இருந்த அடிப்படையிலேதான் வினா எழுப்பப்பட்டிருக்கிறது. பத்திரிகைகளிலே பரவலாக என்ன செய்திகள் வருகின்றன என்று சொன்னால், அடர்ந்த பகுதிகளில் போதுமான மழையில்லாத காரணத்தினாலே, மலைப் பகுதிகளிலே இத்தகைய இயற்கைக் காடுகள் சுருங்குவதாகவும், அதேநேரத்தில் மனித நடவடிக்கைகளாலும் அந்த இயற்கை காட்டுவளம் குறைக்கப்படுவதாகவும் செய்திகள் தொடர்ந்து வருகின்றன. அத்தகைய செய்திகளின் அடிப்படையிலேதான், நான் இந்த வினாவைத் தொடுத்தேன். எனவே, அமைச்சர் அவர்கள் அத்தகைய செய்திகளைப் பெற்று, அதன்மீது மேலும் பரிசீலித்து இயற்கை வளம், பசும்புல் தரைகளின் அளவு குறைகிறதா என்பதைப் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இயற்கைக் காடுகள் அழிந்து வருவதாகக் கூறப்படுவது சரியல்ல. நீலகிரி மாவட்டத்தில் 1985-86 மற்றும் 1995-96 ஆகிய 10 ஆண்டுகளுக்கிடையில் நிலப் பயன்பாடு பற்றிய விவரம் கீழ்வருமாறு:

வனங்கள் 1,43,200 எக்டேர் இருந்தன; இப்போது 1,43,350 எக்டேர் இருக்கின்றன. தரிசு நிலங்கள் 4,600 எக்டேர் இருந்தன, இப்போது 2,915 எக்டேர். விவசாயம் தவிர, பிற பயன்பாடுகளுக்கு உபயோகப்படும் நிலங்கள 9,250 எக்டேர்; இப்போது 8,377 எக்டேர். விவசாயம் அல்லாத மரம் வளர்ப்பு 2,093 எக்டேர் முன்பு; இப்போது 2,215 எக்டேர். இப்படி, மொத்தம் 2,54,055 எக்டேருக்குப் பதிலாக, இப்போது 2,54,381 எக்டேர் நிலப் பயன்பாடு இருக்கின்றது. இதிலிருந்து காடுகளின் பரப்பளவு 10 ஆண்டு காலத்தில் 226 எக்டேர் அதிகரித்துள்ளது. புல்வெளியின்கீழ் உள்ள பரப்பு 10 வருட காலத்தில் கொஞ்சம் குறைந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகளில் 226 எக்டேர் வனப் பகுதியின் நிலப் பரப்பு அதிகரித்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதை இன்னும் அதிகரிப்பதற்கு பெரிய வழிவகை உள்ளது. நீலகிரி மாவட்டத்தில் பல தேயிலைத் தோட்டங்கள், தனியார் தோட்டங்கள் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலப் பரப்புகளை, வனத் துறை மற்றும் வருவாய்த் துறைக்குச் சொந்தமானதை கையகப்படுத்தி வைத்து இருக்கிறார்கள். அதை முறைப்படி Re-Servey செய்தால் இன்னும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் அரசுக்குக் கிடைக்கும்; அதை வனப் பகுதியாக மாற்ற வாய்ப்பு இருக்கும். அதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மற்றும் வால்பாறை பகுதிகளில் உள்ள எஸ்டேட்டுகள் எல்லாம் அரசின் காப்புக் காடுகளை ஒட்டியேதான் அமைந்துள்ளன. ஆகவே, நீண்டகாலமாக ஆக்கிரமிப்புகள் இருக்க வாய்ப்பு உண்டு. விரைவில் ஆக்கிரமிப்புகளை நீக்கும் பணிகளை, வருவாய்த் துறையில் உள்ள நில அளவை அதிகாரிகளும் மற்றும் வனத் துறை அதிகாரிகளும் சேர்ந்து விரைவில் செய்ய முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய புவனகிரி தொகுதியிலே கடற்கரை ஓரம் வனப் பகுதி என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், அங்கு காடுகளே இல்லை. அங்கே இருககக்கூடிய மக்கள் மனைப் பட்டா வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசு அவர்களுக்கு மனைப்பட்டா வழங்குமா என்று கேட்கின்ற அதேநேரத்திலே, எனது தொகுதியில் இருக்கிற பிச்சாவரம் காடு-மாங்குரோவ் காடு இந்தியாவிலே எங்கள் பகுதியில்தான் இருக்கின்றது. அது அழிந்து வருவதாக அங்கு இருக்கிற மக்கள் எல்லாம் சொல்கிறார்கள். ஏனென்று சொன்னால், திருட்டுத்தனமாக மரங்களை வெட்டிச் செல்வது அதிகரித்து இருக்கின்றது. எனவே, அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1999 மே 7

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சாவரம் மற்றும் முத்துப்பேட்டை ஆகிய பகுதிகளில் அழிந்து வருகிற அந்தக் காடுகளைப் பாதுகாப்பதற்காக மத்திய, மாநில அரசுகள் 2 கோடி ரூபாய் அளவிலே இப்போது செலவுகள் செய்து, அந்த வனங்களையெல்லாம் பாதுகாத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பட்டா கொடுப்பதைப்பற்றித் தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரங்களை மூலப் பொருளாகக்கொண்டு நடத்தப்படுகிற சவுத் இந்தியா விஸ்கோஸ் போன்ற தொழிற்சாலைகளை இனிமேல் அவர்கள் Wood Pulp-ஐ இறக்குமதிதான் செய்துகொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தி, மரங்களைக் காப்பாற்றவும்; Wood Pulp-ஆல் ஏற்படுகின்ற அந்தக் கழிவுப் பொருட்கள் விவசாய நிலங்களை மாசுபடுத்துவதைத் தடுக்கவும் அரசு அறிவுரை வழங்குமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், ஏறத்தாழ 1½ இலட்சம் ஏக்கரில் யூக்கலிப்டஸ் போன்ற Wood Pulp-களை உற்பத்தி செய்து வருகிறது. அதன் மூலம் ஆண்டுக்கு 15 கோடியிலிருந்து 20 கோடி ரூபாய் வரை வருமானம் வருகிறது. 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையிலே அவையெல்லாம் தமிழ்நாடு அரசின் காகிதத் தொழிற்சாலைக்கும், சவுத் இந்தியா விஸ்கோஸ் போன்ற தொழிற்சாலைகளுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்தத் தொழிற்சாலைகளும் இப்போது அரசின் அறிவுரைக்கு ஏற்ப, மிக நல்ல முறையிலே கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகளை அமைத்து, இயங்கிக் கொண்டு இருக்கின்றன. ஆகவே, விவசாயத்திற்குப் பாதிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 677, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.



1999 மே 7]

**677—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

***8651—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் ஒன்றியம், சிறுமலையில் கால்நடை மருத்துவமனை அமைத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இது குறித்து செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் தொகுதியில் சிறுமலை ஒரு மலைக் கிராமமாகும். சிறுமலை புதூர், சிறுமலை பழையூர், தென்மலை, தென் குறிஞ்சி, சிறுமலையைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்கள். மலைத் தோட்ட விவசாயப் பெருமக்கள் கால்நடைகளை வைத்துத்தான் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டு வரக்கூடிய மிகப் பெரிய கிராமம் அது. மருத்துவ வசதி வேண்டி வரவேண்டுமானால், 23 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திண்டுக்கல் நகரத்திற்கு வந்துதான் அவர்களுடைய கால்நடைகளுக்கு வைத்தியம் செய்ய வேண்டிய நிலை இருக்கின்றது. தற்சமயம் அங்கே வாரத்திற்கு ஒருமுறை மருத்துவர் வந்து பார்த்துச் செல்கிறார். அதுவும், சில நேரங்களிலே அவர் வருவதில்லை. ஆயிரக்கணக்கான கால்நடைகளும், குதிரைகளும் இருக்கக்கூடிய அந்தப் பகுதிக்கு மிக அவசியத் தேவை ஒரு கால்நடை மருத்துவமனை. மேற்கூறியவற்றைக் கருத்தில்கொண்டு வருங்காலத்தில் அதை அமைத்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்தில், தாடிக்கொம்பு என்ற இடத்தில் கால்நடை மருந்தகமும், காசிப்பாளையம், பாப்பனாம்பட்டி, செட்டிநாயக்கன்பட்டி, தெப்பக்குளத்துப்பட்டி

வல்லம்பட்டி ஆகிய ஊர்களில் கால்நடைக் கிளை நிலையங்களும், மாண்புமிகு உறுப்பினர் கோருகின்ற சிறுமலையில் உள்ள சிறுமலை புதூரில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும், இதற்குரிய பார்வைக் கிளை நிலையம் சிறுமலை பழையூரிலும் தற்போது செயல்பட்டு வருகின்றன.

சிகிச்சைக்காக வரும் கால்நடைகளின் எண்ணிக்கை சிறுமலைபுதூரில் 10-ம், சிறுமலைபழையூரில் 4-ம் என்று குறைந்த அளவே வருகின்றன. மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை, கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டும், நிதிநிலையைக் கருத்தில்கொண்டும் எதிர்காலத்தில் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 678, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**678—**

### பொம்மியம்பட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை

***15620—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

*மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி வட்டாரம், பொம்மியம்பட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது குறித்து செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் வட்டம், பொம்மியம்பட்டி பகுதியினுடைய மக்களின் பிரதான தொழில் கால்நடை வளர்ப்பதுதான். அங்குள்ள நிலங்கள் விவசாயத்தைவிட கால்நடை வளர்ப்பிற்குத்தான் ஏற்றதாக உள்ளது. ஆகையால், அந்தப் பகுதியில் பெரும்பாலான மக்கள் இந்தத் தொழிலில்





ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, அந்தப் பகுதியிலே ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்குவதற்கு அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, பொம்மியம்பட்டி கிராமம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருகிறது. காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின்கீழ், காடையாம்பட்டி, காடுவள்ளி ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்களும், டேனிஷ்பேட்டை, கே.என். புதூர் ஆகிய இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. பொம்மியம்பட்டி ஊராட்சிக்கு அருகில் 5 கிலோமீட்டர் தூரத்தில், காடையாம்பட்டி கால்நடை மருந்தகமும், டேனிஷ்பேட்டை கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மேலும், தற்போது பொம்மியம்பட்டி ஊராட்சியில் பார்வை கிளை நிலையம் ஒன்று தொடங்கப்பட்டு, அந்தக் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, பொம்மியம்பட்டியில் வாரம் ஒரு முறை, செவ்வாய்க்கிழமை, ஓமலூர் நடமாடும் கால்நடை மருந்தகம் மூலமாகவும் கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் நிதிநிலையைக் கருத்தில்கொண்டும், கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டும் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 679, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**679—**

### ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளி தொடங்குதல்

***22619—திரு. க. மணிவர்மா:**

*மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவண்ணாமலை ஒன்றியம், அண்டம்பள்ளம் கிராமத்தில் ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

– இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 680, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**680—**

**ஏற்காட்டில் குடில்கள்**

***14150—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஏற்காட்டில் குடில்கள் கட்டும்போது ஏழையெளிய மக்கள் தங்க வசதியாக சிறிய அறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது பரிசீலனையில் இல்லை. நிதி ஆதாரத்தைப் பொறுத்து, பின்னர் பரிசீலிக்கப்படும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தின் மூலம் கட்டப்படும் குடில்கள் அனைத்தும் வசதிபடைத்தவர்களும், ஒருசில நடுத்தர மக்களுமே தங்கக்கூடிய அளவிற்குத்தான் உள்ளன. அவ்வளவு பெரிய வசதிபடைத்தவர்கள்தான் சுற்றுலாப் பயணிகளாகத் தங்குகிறார்கள். ஏழைகளும் சுற்றுலாத் தலத்திற்குச் சென்று தங்கக்கூடிய குடில்களை நம்முடைய அரசு கட்டிக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலகிரி மலையைப் பொறுத்தமட்டில், குறைந்த வாடகைக்கு 31 படுக்கைகள் கொண்ட குடில்கள் ஏற்கெனவே கட்டி



முடிக்கப்பட்டு, பயனடையக்கூடிய அளவிற்கு இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளே போதுமானவை என்று துறை கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் கோடை வீடு என்று அழைக்கக்கூடிய எழில்மிகு ஏற்காட்டிலே, தமிழ்நாடு சுற்றுலா மாளிகை இருக்கின்றது. அதிலே, இரண்டு படுக்கை அறைகளை நவீனப்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். தனியார்கள் நடத்துகின்ற தங்கும் விடுதிகளில் 'குடில்கள்' என்ற அடிப்படையிலே, குடும்பத்தோடு தங்கக்கூடிய வீடுகளைக் கட்டி, நல்ல வாடகைக்கு விடுகின்றார்கள். அங்கே சென்று உல்லாசப் பயணிகள் நிறைய பேர் தங்குகின்றார்கள். உலக அளவில் இருக்கக்கூடிய Sterling Resorts போன்றவை அங்கே குடில்களைக் கட்டியிருக்கின்ற காரணத்தால், அதேபோன்று சுற்றுலாத் துறையின் மூலமும் நவீனமான குடில்களை நம்முடைய இடத்திலேயே—அங்கே போதிய இடம் இருக்கின்ற காரணத்தால், அந்த இடத்திலே—ஒரு மாதிரிக்கு 5 குடில்களாவது கட்டி நாம் வாடகைக்கு விடுவோமேயானால் உல்லாசப் பயணிகளுக்கு உகந்ததாக இருக்கும் என்பதைச் சொல்லி, அதற்கு ஆவன செய்துகொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் 26.28 இலட்சம் ரூபாய் செலவில், ஏற்காடு தமிழ்நாடு ஓட்டல் வளாகத்திலேயே அதைக் கட்டுவதற்காக நிதியொதுக்கப்பட்டிருக்கிறது. முதல் தவணையாக 13.11 இலட்சம் ரூபாயும், மாநில அரசின் பங்காக 6.75 இலட்சம் ரூபாயும், மொத்தத்தில் 19.89 இலட்சம் ரூபாய் அரசால் வழங்கப்பட்டு, அப்பணிகள் பொதுப்பணித் துறையிடம் வழங்கப்பட்டு, இப்போது அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதில் எனக்கு திருப்தியாக இருக்கிறது. ஆகையினாலே கேள்வி கேட்கவில்லை. நான் முன்னால் கேட்ட கேள்விக்கு நீங்கள் சொன்ன பதில் என்னுடைய மனதைத் தைத்துவிட்டது. (சிரிப்பு) என்னுடைய அன்பு நண்பர் இந்த அவையிலே பேசும்போது, எடப்பாடி கணேசனிடம் சொல்லுங்கள் என்று சொன்னீர்கள். (மணியடிக்கப்பெற்றது)

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப் பற்றிக் கேள்வி நேரத்தில் பேசுவதா?

**திரு. ஐ. கணேசன்:** நான் சொல்லியாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது முடியாது.

**திரு. ஐ. கணேசன்:** ஏனென்றால் நான் ஒரு விவசாயி. அதை முதலிலே தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நான் கேள்வி நேரத்தை முடித்த பிறகு நீங்கள் சொல்லலாம். திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் குடில்கள் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குற்றாலத்தைப் பொறுத்தமட்டில் அங்கே விடுதிகள் கட்டப்பட்டு, அந்த விடுதிகளில் 60, 70 சதவிகிதம்தான் பயணிகள் வருகை தருகிறார்கள். எனவே, அது தேவையில்லை என்று கருதப்படுகிறது.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்
## (பதினான்காம் பட்டியல்)

1—

### தேர்வு மையம் அமைத்தல்

**வினா 14112—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூர், வானாபுரம் ஆகிய இரு ஊர்களில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் +2 தேர்வு மையம் அமைக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்;**

(அ) ஆம்.

(ஆ) தண்டராம்பட்டு தொகுதி, வானாபுரம் மேல்நிலைப்பள்ளி +2 தேர்வு மையமாகச் செயல்பட 1998-ல் தேர்வு செய்யப்பட்டது. தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூர் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய +2 தேர்வு மையம் வழங்கும் கருத்துரு அடுத்த ஆண்டு புதிய தேர்வு மையம் அமைக்கும் போது தகுதி அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

2—

### தேர்வு மையம் தொடங்குதல்

**வினா 22934—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, தச்சம்பட்டு உயர்நிலைப்பள்ளி மற்றும் க. வாளவெட்டி மாணவர்களுக்குத் தேர்வு மையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தச்சம்பட்டு மற்றும் க. வாளவெட்டி உயர்நிலைப்பள்ளிகளுக்கு இடைநிலைப்பள்ளி விடுப்பு சான்றிதழ் பொதுத் தேர்வு மையம் அமைப்பதற்குக் கருத்துரு உரிய படிவத்தில், உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அரசுத் தேர்வுகள் மண்டல துணை இயக்குநர் வழியாக பெறப்படின் தேர்வு மையமாக அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்

3—

### நோயாளிகளைத் தடுத்தல்

**வினா 14874—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 7

(அ) சென்னையில் போக்குவரத்து அதிகமாக உள்ள பகுதிகளில் தற்போது மாசு அதிகமாகி அலர்ஜி, ஆஸ்துமாவினால் அவதிப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சென்னையில் போக்குவரத்து அதிகரிப்பினால் மாசு அதிகரித்து அதனால் அலர்ஜி, ஆஸ்துமா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது உண்மை எனப் புலனாகிறது.

(ஆ) அலர்ஜி, ஆஸ்துமா நோய்களைக் குணப்படுத்த சென்னை அரசு மருத்துவமனைகளில் போதிய சாதனங்களும், மருத்துவ வசதியும் உள்ளன. அதற்கெனத் தனிப் பிரிவில் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. எனவே, இது தொடர்பாக அரசு போதிய நடவடிக்கைகள் எடுத்து செயல்பட்டு வருகின்றது.

4—

## புதிய மின்மாற்றி அமைத்தல்

**வினா 20169—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, இலுப்பூர் மற்றும் வலசை பகுதிகளில் மின் பற்றாக்குறை இருப்பதால் விளக்குகள் சரியாக எரிவதில்லை. இங்கு ஒரு புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலுப்பூர் வலசை வெட்டி கிராமத்தில் குறைந்த மின் அழுத்தம் சீர் செய்யும் பொருட்டு ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்த



1999 மே 7]

ஒரு முனை இரண்டு மின் கம்பிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் மும்முனை ஐந்து மின் கம்பிகளாக மாற்றப்பட்டு மும்முனை மின்சாரம் 1998-ல் வழங்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் உள்ள வீட்டு மின் இணைப்புகள் சம அளவில் இரண்டு முனைகளில் பிரித்து இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது அப்பகுதியில் மின் அழுத்தம் சீராக உள்ளது. ஆகவே அப்பகுதியில் புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

5—

## நீர்நிலைத் தொட்டி மோட்டாரை மாற்றுதல்

**வினா 22308—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மாரியம்மன் கோயில் ஊராட்சியில் உள்ள நீர்நிலைத் தொட்டி மோட்டாரை 15 எச்.பி.(HP) ஆக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், மாரியம்மன் கோயில் ஊராட்சியில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டிக்கு தற்சமயம் 7.5 எச்.பி. மின் பளு உள்ள மோட்டாருக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. 15 எச்.பி.(HP) மின் பளு உள்ள மோட்டாருக்கு மின் இணைப்பு வழங்கிட ஏதுவாக மின் மாற்றியின் திறன் உள்ளது. தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையரிடமிருந்து உரிய விண்ணப்பம் பெறப்பட்டால் உடனடியாகக் கூடுதல் மின் பளுவிற்கு இணைப்பு வழங்கப்படும்.

6—

## குளத்தைச் சீரமைத்தல்

**வினா 14419—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சி, சூரியகுளத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, குப்பைகளை அகற்றி, தூர்வாரி, குளத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

வேலூர் நகரம், வார்டு எண் 5, பிளாக் எண் 11, நகர அளவை எண் 513/1ஏ மற்றும் 513/5-ல் உள்ள சூரியகுளத்தின் மொத்தப் பரப்பு 9.02 ½ ஏக்கர். இதில் 434 ஆக்கிரமணங்கள் உள்ளன. குடியிருப்பு ஆக்கிரமணங்களின் மொத்தப் பரப்பு 5½ ஏக்கர். குப்பைமேடு, கால்வாய், குளம் பகுதிகளின் மொத்தப் பரப்பு 3½ ஏக்கர். ஆக்கிரமிப்புதாரர்கள் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வருகின்றனர். மேலும் பல ஆண்டுகள் நகராட்சி குப்பைகளை போட்டு நிரப்பி மேடாக்கிவிட்டதால் மீண்டும் குளமாக மாற்றுவது இயலாது. எனவே, ஆக்கிரமிப்பு பகுதிகள் போக மீதி பகுதியை தூய்மையாக வைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வேலூர் நகராட்சி ஆணையரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

7—

## நிலமற்ற ஏழைகளுக்கு இலவச விட்டுமனைப் பட்டா

**வினா 15023—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை ஒன்றியத்தைச் சேர்ந்த ஏந்தல், கல்லணை, கரிப்பூர், இசுக்குழி, காட்டேரி, நாரையூர், ஆனாந்தல், சு. ஆண்டாப்பட்டு, அரடாப்பட்டு, பவித்திரம், சு. கம்பப்பட்டு, டி. வானவெட்டி, உடையானந்தல், கன்னப்பந்தல், அழகானந்தல், கொளக்குடி, நடுப்பட்டு, முதுராமபட்டு, அண்டம்பள்ளம் ஆகிய கிராமங்களில் வாழுகின்ற நிலமற்ற ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

கிராம நத்தத்தில் காலிமனை எதுவும் இல்லாததால் வீட்டுமனை ஒப்படை செய்ய இயலாது.





8—

## விட்டுமனைப் பட்டா வழங்கல்

**வினா 19305—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தெள்ளாறு ஒன்றியம், பெரியார் நகர் மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தெள்ளாறு ஒன்றியம், பெரியார் நகரைச் சேர்ந்த 54 நபர்கள் ச.எண் 433-இல் 'சித்தேரி புறம்போக்கு' என வகைபாடு கொண்ட இடத்தில் கூரை வீடுகள் கட்டி குடியிருந்து வருகின்றனர். நீர்நிலைப் புறம்போக்கில் நில ஒப்படை வழங்க தடையாணை உள்ளதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

9—

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 19311—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தெள்ளாறு ஒன்றியம், அஸ்தினாபுரம் மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தெள்ளாறு ஒன்றியம், அஸ்தினாபுரம் மக்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலம் நீர்நிலைப் புறம்போக்கு என்ற தடை ஆணைக்குட்பட்ட நிலமாதலால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

10—

## பட்டா வழங்க வரம்பு

**வினா 22684—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வீட்டுமனைப்பட்டா கோரும் முறையீடு வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்டால் எத்தனை நாட்களில் பட்டா வழங்க வேண்டும் என்று அரசால் வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவ்வாறு குறித்த காலத்தில் பட்டா வழங்கப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

11—

## சாலையைச் சீர் செய்தல்

**வினா 9386—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, பாபநாசம் ஒன்றியம், பட்டுக்குடி, கடலூர், புத்தூர், அம்மாபள்ளி, தைக்கால் வரை சாலையைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பட்டுக்குடி ஒன்றியச்சாலை கி.மீ. 0/0 முதல் 1/6 முடிய 1.6 கி.மீ. நீளத்திற்கு தார்ச் சாலை அமைக்கும் பணி 1996-97 ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ரூ.3.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. குடிகாடு அம்மாபள்ளி



ஒன்றியச் சாலை 1996-97-ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கற்சாலையாக மாற்றப்பட்டுள்ளது.

12—

## வெள்ள நிவாரண நிதி

**வினா 10235—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 ஆம் ஆண்டுக்கான வெள்ள நிவாரண நடவடிக்கையில் சேலம் மாவட்டத்திற்கு சாலை பழுது பார்க்கும் பணிக்காக எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) சங்ககிரி, எடப்பாடி வட்டங்களுக்கு எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 1996-97 ஆம் ஆண்டு வெள்ளச் சேதங்களினால ஏற்பட்ட சாலை பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகை சேலம் மாவட்டத்திற்கு ரூ.5 இலட்சமும், நாமக்கல் மாவட்டத்திற்கு ரூ.30 இலட்சமுமாகப் பிரித்து வழங்கப்பட்டது.

(ஆ) சங்ககிரி மற்றும் எடப்பாடி வட்டங்களுக்கு சாலை பழுது பார்க்கும் பணிகளுக்காக ரூ.4,85,436-ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டது.

13—

## சமுதாயக் கூடம் அமைத்தல்

**வினா 10382—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், பாணாபுரம் கிராமம், குதிரைக்காரனூரில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒரு சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**14—**

### சாலையைச் சீரமைத்தல்

**வினா 11153—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தெக்கூர் கிராமத்தில் அரிசனத் தெரு வழியாக கிழக்கே செல்லும் சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இச்சாலை தெக்கூர் கிராமத்தை ஒரத்தநாடு செல்லம்பட்டி சாலையுடன் இணைகிறது. இச்சாலையின் நீளம் 600 மீட்டர், அகலம் 3.00 மீட்டர் உள்ளது. தற்போது சாலை மண்சாலையாக உள்ளது. மண்சாலையினை சீரமைப்பு செய்து சிகப்புக் கப்பி பரத்துவதற்கும், இரண்டு குழாய்ப் பாலம் கட்டுவதற்கும் உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சம் ஆகும். இச்சாலையை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இச்சாலையை வரும் நிதியாண்டில் 1998-99 வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் அல்லது ஜவஹர் வேலை வாய்ப்புத திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.





**15—**

### பாசன வசதி

**வினா 11156—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தும்பத்திக்கோட்டை கிராமத்தில் தும்பத்தி ஏரி குளத்தை தூர் எடுத்து பாசன வசதி செய்து தர அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தும்பத்தி ஏரிகுளம், பருத்திக்கோட்டை சிற்றூராட்சியை சேர்ந்தது. குளம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அதன் பரப்பளவு நிர்ணயம் செய்யப்படாமல் உள்ளது. நீர் வரத்து அகலம் 60 மீட்டருக்கும், நீளம் ஒரு கிலோ மீட்டருக்கும் அதிகமாக உள்ளது. இதன் ஒரு பகுதியில் 100 மீட்டர் அகலத்திற்கு தண்ணீர் உள்ளது. தற்போது உள்ள உத்தேச அளவுப்படி இந்த ஏரியை தூர் எடுப்பதற்கு ரூ.3.50 இலட்சம் தேவையாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் இவ்வேலையை எடுத்துச் செய்ய நிதி ஒதுக்கீடு இல்லாததுடன் 31.3.1998-க்குள் செய்ய முடியாத நிலையில் ஏரியில் தண்ணீர் உள்ளது. எனவே முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டில் 1998-99-ல் வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் ஏரிகுளம் தூர் எடுப்பதற்கு நிதி ஒதுக்கீடு பெற்று ஆழப்படுத்தி பாசன வசதி மேற்கொள்ளப்படும்.

**16—**

### வாய்க்காலில் பாலம் அமைத்தல்

**வினா 11276—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், காசவளநாடு புதூரிலிருந்து கண்டிதம்பட்டு செல்லும் சாலையில் குறுக்கே வடிகால் வாய்க்காலில் பாலம் அமைக்க அரசு முன் வருமா?

[1999 மே 7

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், காசவளநாடு புதூர்-கண்டிதம்பட்டு செல்லும் சாலையின் குறுக்கே வடிகால் வாய்க்காலில் 1996-97-ஆம் ஆண்டு பத்தாவது நிதிக்குழு திட்டத்தில் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் தரைமட்டக் குழாய்ப்பாலம் கட்டப்பட்டு பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**17—**

**பள்ளிக்கூடத்திற்குத் தண்ணீர் வசதி**

**வினா 11874—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, தொறவலூர் ஊராட்சி வாரணாசி பாளையம் பள்ளிக்கூடத்திற்கு தண்ணீர் வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தண்ணீர் வசதி செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் தொகுதி, தொறவலூர் ஊராட்சி, வாரணாசிபாளையம் பள்ளிக்கூடத்திற்கு, தற்சமயம் தனியார் கிணற்றிலிருந்து குடிநீர் அளிக்கப்பட்டு வருகிறது.

**18—**

**திருமண மண்டபம் கட்டுதல்**

**வினா 14013—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 7]

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் கடலூர் கிராமம் கனககிரி ஊராட்சி மற்றும் கண்ணந்தேரி கிராமத்தில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் தற்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கான திருமண மண்டபம் கட்டுவது கிடையாது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் தொகை ரூ.35.00 இலட்சத்தில் மேற்படி சட்டமன்ற உறுப்பினர் விரும்பினால் அதற்குரிய கருத்துருவினை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி நடைமுறைப்படுத்தப்படும்.

**19—**

**தடுப்புச் சுவர் அமைத்தல்**

**வினா 14484—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் 33-ஆவது வட்டம், மரக்கடை சுந்தப்பமுதலி தெரு, நல்லான்பட்டரை பெரிய தெரு இணைக்கும் கானாறு பாலம் பழுதடைந்து உள்ளதாலும், தடுப்புச் சுவர் இல்லாததாலும் நிறைய விபத்துக்கள் ஏற்பட்டது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு தடுப்புச் சுவர் அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சியில் 33-ஆவது வட்டம் மரக்கடை சுந்தப்பமுதலி தெரு மற்றும் நல்லான்பட்டரை பெரிய தெரு இணைக்கும்

[1999 மே 7

கானாறு பாலத்தைப் பழுதுபார்க்க ரூ. 17,000-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. நகராட்சியின் நிதிநிலை பற்றாக்குறை காரணமாக பொதுநிதிப் பணிகள் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மேலும் வரும் நிதியாண்டில் நகராட்சியால் இப்பணி செய்து முடிக்கப்படும்.

**20—**

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா 14764—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பார்க்கல்லூர் 14-ஆவது வார்டில் பேருந்து நிறுத்துமிடத்திலிருந்து கசுவிரெட்டிப்பட்டி பள்ளி வரை தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பார்க்கல்லூர் 14-ஆவது வார்டில் பேருந்து நிறுத்துமிடத்திலிருந்து கசுவிரெட்டிப்பட்டி பள்ளி வரை தார்ச் சாலை அமைக்கும் பணி தாரமங்கலம் பேரூராட்சி மூலம் ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

**21—**

### அலுவலர்கள் நிர்ணயம்

**வினா 18159—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மாநில திட்டக் குழுவின் அறிக்கையின்படி மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளும், அவற்றின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை ஒருங்கிணைக்கும் துறை அலுவலர்கள் யார் என்பதையும் நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?



1999 மே 7]

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 257-ன்படி அட்டவணை 4-ல் குறிப்பிட்டுள்ள 29 இனங்களின்மீது மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன. அரசு ஆணைகளின்படி சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஒருங்கிணைக்கும் அலுவலர்களாக இருப்பார்கள்.

*(ஆ)* எனவே, இது குறித்து தனி ஆணைகள் வெளியிட அவசியமில்லை.

**22—**

### தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்

**வினா 19010—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், காரங்குடா கிராமத்திற்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**23—**

### பேருந்து நிலையம் அமைத்தல்

**வினா 19231—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மே 7

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சியில் நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சியில் போதிய இடவசதி இல்லாததினால் நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்து செயற்குறிப்பு ஏதுமில்லை.

**24—**

**வணிக வளாகம் அமைத்தல்**

**வினா 19558—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டியில் வணிக வளாகம் அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பேரூராட்சிக்குச் சொந்தமான இடத்தில் அடித்தளம் மற்றும் மேல் தளத்தில் 12 கடைகள் கொண்ட வணிக வளாகம் கட்டடம் கட்ட அம்மாவட்ட வளர்ச்சி முகமை மூலம் ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய வளர்ச்சி முகமை திட்ட அலுவலரிடம் கோரப்பட்டு மேற்படி திட்டம் செயல்படுத்துவது தொடர்பான செயற்குறிப்பு தருமபுரி மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.



1999 மே 7]

**25—**

**சித்த மருத்துவமனை எண்ணிக்கை**

**வினா 19637—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எத்தனை ஊராட்சி ஒன்றியத்தில் சித்த மருத்துவமனை உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 384 ஊராட்சி ஒன்றியங்களில் 176 ஊராட்சி ஒன்றியங்களில் சித்த மருத்துவமனைகள் உள்ளன.

**26—**

**நவீன கழிப்பிட வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம்**

**வினா 19955—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் நவீன கழிப்பிட வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மண்டலம், பாப்பாரப்பட்டி பேரூராட்சிக்குச் சொந்தமான இடத்தில் ஏற்கெனவே பேருந்துகள் நிறுத்துமிடம் உள்ளது. அங்கு அதிக பரப்பளவு கொண்ட இடவசதி இல்லாததால் தற்போது நவீன கழிப்பிட வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

27—

### வண்டிப்பாலம் கட்டுதல்

**வினா 21779—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பின்னையூர் ஊராட்சியில் சிறுச்சாகுவர் எதிரில் ஆற்றைக் கடந்து செல்ல ஒரு வண்டிப்பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவோணம் ஊராட்சி ஒன்றியம், பின்னையூர் ஊராட்சியில் தற்போது ஆற்றைக் கடக்க இரண்டு பாலங்கள் உள்ளதால் மேற்படி பாலம் அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழவில்லை. மேலும் தற்போது உள்ள பாலங்களே போக்குவரத்துக்குப் போதுமானதாக உள்ளன.

28—

### வாய்க்காலில் சிறு பாலம் கட்டுதல்

**வினா 21790—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ஏனாதிகரம்பை கிராமத்தில் மாயம்பெருமாள் கோவில் சாலையின் குறுக்கே சி.எம்.பி. வாய்க்காலில் சிறு பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், ஏனாதிகரம்பை கிராமத்தில் மாயம்பெருமாள் கோவில் சாலையின் குறுக்கே சி.எம்.பி. வாய்க்காலில் ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் 1996-97-ஆம் ஆண்டு பத்தாவது நிதிக்குழு



மானிய வேலையில் சிறுபாலம் எடுத்துக் கொள்ளப்பட்டு பணி முடிவுற்றது.

29—

### குளம் வெட்டுதல்

**வினா 21870—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம ஒன்றியம், பனிகொண்டான்விடுதி கிராமத்தில் ஆற்றங்கரை அருகில் ஆதிதிராவிடர் தெருவிற்கு அருகில் பள்ளமான இடத்தில் குளம் ஒன்று வெட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை –

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

30—

### ஏழைக் குடிசைகளுக்கு மின் இணைப்பு

**வினா 21880—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 1998-99-ஆம் ஆண்டில் எத்தனை குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) எடப்பாடி தொகுதியில் எத்தனை ஏழைக் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

[1999 மே 7

(அ) சேலம் மாவட்டத்தில் 1998-99-ஆம் ஆண்டில் மொத்தமுள்ள 1,972 குடிசைகளில் 1,131 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. எஞ்சிய 841 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட உள்ளது.

(ஆ) எடப்பாடி தொகுதியில் இதுவரை 122 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது. 99 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படவுள்ளது.

**31—**

**சாலை செப்பனிடல்**

**வினா 22373—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், கல்விராயன்பேட்டை கிராமம், வடக்குத் தெருச் சாலை பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், கல்விராயன்பேட்டை கிராமம், வடக்குத் தெருவிற்கு, சாலை, ஊராட்சி நிதி மூலம் ரூ.10,000 மதிப்பீட்டில் செப்பனிடப்பட்டு பணி முடிக்கப்பட்டது.

**32—**

**இலவச மின்சாரம்**

**வினா 22449—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 7]

(அ) தமிழக ஊராட்சிகளுக்குக் குடிநீர் வசதி செய்ய இலவச மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**33—**

**குடிநீர்த் தொட்டி அமைத்தல்**

**வினா 23590—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் தொகுதி, கோயம்பேடு நியூகாலனி பகுதியில் குடிநீர் இல்லாமல் பொதுமக்கள் அவதியுறுவதால் அங்கு ஒரு தண்ணீர்த் தொட்டி வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சுமார் 150 குடிசைகளைக் கொண்ட வில்லிவாக்கம் தொகுதி, கோயம்பேடு நியூகாலனி பகுதியில் ஏற்கெனவே மூன்று தொட்டிகள் நிறுவப்பட்டு, தினசரி லாரி மூலம் 9,000 லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், கோடைக் காலத்தின் குடிநீர்த் தேவை அதிகரிப்பினைக் கருத்தில் கொண்டு, மேலும் ஒரு குடிநீர்த்தொட்டி நிறுவ ஆவன செய்யப்பட்டு ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் மொத்தம் 4 தொட்டிகளில் தினசரி 12,000 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்ய ஆவன செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த 4 தொட்டிகளிலும் கோடைக் காலத்தில் தினசரி இருமுறை குடிநீர் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

34—

### நீர்ப்பாசன ஒதுக்கீடு

**வினா 21322—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் தென்னை பயிரிடும் விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசனம் செய்வதற்கு, எத்தனை பேர் விண்ணப்பித்து இருந்தார்கள்?

(ஆ) எத்தனை பேருக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 37 விவசாயிகள் விண்ணப்பித்திருந்தார்கள்.

(ஆ) 26 விவசாயிகள் பயன் பெற்றனர். ஏனைய 11 விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்துக்கொள்ளவில்லை.

35—

### நீர் இறைவைத் திட்டம்

**வினா 15719—திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, ஏனாதிபதியில் நீர் இறைவைத் திட்டம் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இத்திட்டம் குறித்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலனை செய்யும் பணியை கண்காணிப்புப் பொறியாளர், (திட்ட உருவாக்க வட்டம்) திருச்சி, மேற்கொண்டுள்ளார். மதிப்பீடு அரசுக்கு வந்ததும் நிதிநிலைமைக்கேற்ப திட்டம் அனுமதிக்கப்படும்.



36—

### ஊற்று நீரைச் சாகுபடிக்குப் பயன்படுத்துதல்

**வினா 17285—திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் வடரெங்கம் என்ற ஊரில் கொள்ளிடத்தில் உள்ள ஊற்று நீரை இறைவை இயந்திரங்களின் மூலமாக எடுத்து தெற்குராஜன் வாய்க்கால் மூலமாக சீர்காழி வட்டத்தில் உள்ள கார் சாகுபடிக்கு பயன்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

இத்திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

37—

### ஏரியில் தூர் எடுத்தல்

**வினா 19565—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பாரூர் ஏரியில் தூர் எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்த ஏரியில் தூர் ஏதும் படியவில்லை. எனவே ஏரியில் தூரினை அகற்றும் பணி மேற்கொள்ள தற்போது அவசியம் இல்லை. மேலும் நெடுங்கல் அணைக்கட்டு பாரூர் பெரிய ஏரி மற்றும் அதன் பாசன வாய்க்கால்களை உலக வங்கி நிதி உதவியுடன் புனரமைப்பு மற்றும் நவீனப்படுத்துதல் பணிகளை மேற்கொள்ள ரூ. 271.00 இலட்சங்கள் மதிப்பளவில் அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

38—

### வாய்க்கால் செப்பனிடல்

**வினா 19580—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மாப்பிள்ளை நாயக்கன்பட்டி ஊராட்சி, கீழ மாப்பிள்ளை நாயக்கன்பட்டி வாய்க்கால், மாப்பிள்ளை நாயக்கன்பட்டி வாய்க்கால், மாப்பிள்ளை நாயக்கன்பட்டியிலிருந்து புது ஏரிக்குச் செல்லும் வாய்க்காலைச் செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மாப்பிள்ளை நாய்க்கன்பட்டி வண்ணான்குடி ஏரியிலிருந்து புது ஏரிக்குச் செல்லும் கீழ மாப்பிள்ளை நாயக்கன்பட்டி வாய்க்கால், வல்லுண்டான்பட்டு கிராம மாமுண்டி ஏரியின் நீர்ப் பிடிப்புப் பகுதியினைச் சேர்ந்தது. மாப்பிள்ளை நாயக்கன்பட்டியிலிருந்து புது ஏரிக்குச் செல்லும் வாய்க்காலை எதிர்வரும் அடைப்புக்கால இறுதியில் செப்பனிட்டுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**39—**

### வாய்க்கால் செப்பனிடல்

**வினா 21795—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஓரத்தநாடு வட்டம், சங்கரனார் குடிகாடு கிராமத்திலுள்ள ராஜா மடம் 1 ஆம் நம்பர் வாய்க்கால் மூன்று சறுக்கை உடைந்து விட்டதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

இப்பணி வரும் அடைப்புக்காலத்தில் (1999-2000 ஆண்டில்) முன்னுரிமை அடிப்படையில் செப்பனிட்டுத் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**40—**

### ஆறு தூர் எடுத்தல்

**வினா 22291—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தஞ்சாவூர் மாவட்டம், ஓரத்தநாடு வட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், நசுவினி ஆறு பின்னையூரிலிருந்து கறம்பயம் வரை தூர் எடுத்துச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஓரத்தநாடு வட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நசுவினி ஆறு (மேல்புறமுள்ள காட்டாறு) பின்னையூரிலிருந்து கறம்பயம் பகுதி வரை ரூ. 35.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 1998-99 ஆம் ஆண்டில் தூர் வாரும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**41—**

### வாய்க்கால்களைத் தூர் எடுத்துச் செப்பனிடுதல்

**வினா 22298—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஓரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரம்-உஞ்சியவிடுதி வாய்க்கால் மற்றும் அம்மன்குடி-கலிராயன்விடுதி அக்கரை வட்டம் மெயின் வாய்க்காலையும் தூர் எடுத்துச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஓரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரம் வாய்க்காலான அலிவலம் பிரதான வாய்க்கால் தொலைகல் 0/00-0/7036 வரை 1998-99 தூர் வாரும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. உஞ்சியவிடுதி அம்மன்குடி கலிராயன் விடுதி, அக்கரை வட்டம், பிரதான வாய்க்கால் தொலைகல் 0/0-0/8300 வரை சென்ற ஆண்டு (1997-98) தூர் வாரும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொலைகல் 0/8300-0/9000 வரையில் உள்ள பகுதி தூர் வாரும் பணி வரும் நிதியாண்டில் செய்யப்பட உள்ளது.

**42—**

### பேருந்து ஊழியர்களுக்குச் சம்பளம், ஓய்வூதியம்

**வினா 21615—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 7

(அ) அரசுப் பேருந்து ஊழியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாகச் சம்பளமும், ஓய்வூதியமும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் உதவி மேலாளர்கள் மற்றும் அப்பதவிக்கு மேல் நிலையில் உள்ள அலுவலர்களுக்கு அரசாங்க ஊழியர்களுக்கு இணையாக சம்பள விகிதம் வழங்கப்படுகிறது. உதவி மேலாளர் தரத்திற்குக் கீழே உள்ள தொழில் நுணுக்க/நிர்வாகப் பணியாளர்கள் ஆகியோருக்கு ஊதிய ஒப்பந்தத்தின் கீழ் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழிலாளர் நல ஆணையர்/நிர்வாகம்/தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கிடையே தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12(3)-இன் கீழ் ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்படுகிறது. எனவே, இப்பணியாளர்களுக்கு மத்திய அரசு சம்பள விகிதத்தில் சம்பளம் வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**43—**

## போக்குவரத்து ஊழியர்களுக்குச் சலுகைகள்

**வினா 21618—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்தில் பணிபுரியும் மேலதிகாரிகளுக்கு வழங்கும் அரசுச் சலுகைகளை அனைத்துப் போக்குவரத்து ஊழியர்களுக்கும் (என்ஜிஓ) வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் உதவி மேலாளர்கள் மற்றும் அப்பதவிக்கு மேல் நிலையிலுள்ள அலுவலர்களுக்கு அரசாங்க ஊழியர்களுக்கு இணையாக சம்பள விகிதம் வழங்கப்படுகிறது. உதவி மேலாளர் தரத்திற்குக் கீழே உள்ள தொழில் நுணுக்க/நிர்வாகப் பணியாளர்கள் ஆகியோருக்கு ஊதிய ஒப்பந்தத்தின்கீழ் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழிலாளர் நல



1999 மே 7]

ஆணையர்/நிர்வாகம்/தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கிடையே தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12(3)-இன் கீழ் ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்படுகிறது. சலுகைகளைப் பொறுத்தவரையில் ஒப்பந்தத்தில் பேசி முடிவெடுக்கப்படுகிறது.

(ஆ) இவ்வினா எழாது.

**44—**

## நகரப் பேருந்து இயக்குதல்

**வினா 21762—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதிக்கு சேலத்திலிருந்து மகுடஞ்சாவடி ஒன்றியம், அ.புதூர் வரை வந்துகொண்டிருந்த நகரப் பேருந்து எண் 30-ஐ மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

குறிப்பிட்ட வழித்தடத்தில் மகுடஞ்சாவடிக்கும், அழகப்பம்பாளையம் புதூருக்கும் இடையில் அகல இரயில் பாதை ஒன்றுள்ளது. இது அதிக போக்குவரத்துமிக்கதென்பதால் அடிக்கடி ரெயில் கேட் மூடப்படுகிறது. இதன்காரணமாக நிர்ணயிக்கப்பட்ட நேரங்களை கடைபிடிக்க முடிவதில்லை. மேலும் அழகப்பம்பாளையம் புதூருக்கு இயக்கப்படும் நடைகளில் பயணிகள் போக்குவரத்தும் குறைவாக உள்ளது. தவிரவும் எடப்பாடி-சித்தர்கோவில் (வழி) அழகப்பம்பாளையம்புதூர், இளம்பிள்ளை தடத்தில் இயக்கப்படும் தடம் எண் 5 மற்றும் 5பி-யின் மூலம் அழகப்பம்பாளையம் புதூருக்கு தினசரி 18 நடைகள் பேருந்து வசதியுள்ளது. அதன்மூலம் இளம்பிள்ளைக்கு வந்துவிட்டால் சேலம் வர 5 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் இயக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட காரணங்களால் தற்போது சேலம்-அழகப்பம்பாளையம்புதூர் தடத்தில் பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.

**45—**

## வாகன விபத்தைக் கட்டுப்படுத்துதல்

**வினா 22057—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மே 7

தமிழ்நாட்டில் நாள்தோறும் ஏற்படும் வாகன விபத்தைக் கட்டுப்படுத்த அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் சாலை விபத்து தடுக்கும் பொருட்டு கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன:—

(1) மோட்டார் வாகன விதிகளின்படி ஓட்டுநர் உரிமம் வழங்குவது கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

(2) மாநில மற்றும் மாவட்ட அளவில் சாலைப் பாதுகாப்புக் குழுவின் முடிவுகள் விரைந்து செயல்படுத்தப்படுகின்றன.

(3) முக்கியமான சாலைச் சந்திப்புகளில் தானியங்கி சிக்னல் அமைக்கப்படுகிறது.

(4) போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க ஒரு சில சாலைகள் ஒரு வழிப்பாதையாக அறிவிக்கப்படுகின்றன.

(5) தேவையான இடங்களில் நான்கு வழிப்பாதை மற்றும் தடுப்பு வேலிகள் அமைக்கப்படுகின்றன.

(6) அதிக வேகம், அதிக சுமை, வாகனங்களை அனுமதிக்கு உட்படாத இடத்தில் நிறுத்துதல், குடி போதையில் வாகனங்களை ஓட்டுதல் போன்றவைகள் சோதனைக்குட்படுத்தப்படுகின்றன.

(7) ஆபத்தான மற்றும் தீங்கு விளைவிக்கத்தக்க பொருட்களை எடுத்துச் செல்லும் வாகன ஓட்டுநர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(8) சாலைப் பாதுகாப்பு வாரம் மூலம் பொதுமக்கள் மத்தியில் சாலைப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

(9) சாலைப் பாதுகாப்புத் தொடர்பான குழு விவாதங்கள் அடங்கிய செய்திகள் வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் ஒலி மற்றும் ஒளிபரப்பப்படுகின்றன.

(10) சாலைப் பாதுகாப்புத் தொடர்பான வாசகங்கள் செய்தித் தாள்களின் மூலம் வரவேற்கப்படுகின்றன. அதில் சிறந்த வாசகங்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன.



1999 மே 7]

(11) தினசரி நாளிதழ்களில் சாலைப் பாதுகாப்புத் தொடர்பான விளம்பரங்கள் மற்றும் செய்திகள் பல்வேறு பதிப்பாளர்கள் மூலம் வெளியிடப்படுகின்றன.

(12) சாலைப் பாதுகாப்புத் தொடர்பாக நடமாடும் வேன்கள் மூலம் சாலைச் சந்திப்புகளில் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்படுகிறது.

(13) முக்கியமான சாலைச் சந்திப்புகளில் சாலைப் பாதுகாப்பு விளம்பரப் பலகைகள், போக்குவரத்து அடையாளக் குறிகள் கடைப்பிடிக்கப்பட வேண்டியது, கடைப்பிடிக்கக்கூடாதது தொடர்பாக விளம்பரம் செய்தல்.

(14) பொது இடங்களில் சாலைப் பாதுகாப்புத் தொடர்பான கண்காட்சிகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், செய்தித் திரைப்படங்கள் முதலியன மேற்கொள்ளுதல்.

(15) பெட்ரோல் நிலையங்கள் மற்றும் சரியான சாலைச் சந்திப்புகளில் சாலைப் பாதுகாப்புத் தொடர்பான வாசகங்களை எழுதி வைத்தல்.

(16) பாதசாரிகள், பள்ளிச் சிறுவர்கள், வாகன ஓட்டுநர்கள் ஆகியோர்களுக்கு சாலைப் பாதுகாப்புத் தொடர்பான பிரசுரங்கள் மற்றும் சிறு கையேடுகள் வழங்குதல்.

(17) ஓட்டுநர்களுக்கு மருத்துவச் சோதனைகள், இலவச கண் சிகிச்சை முகாம் மற்றும் இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்குதல்.

(18) தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகள், பிரதான சாலைகள் இவற்றில் சாலைக் குறியீடுகள் அமைத்தல்.

(19) அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிபவர்கள் சாலைப் பாதுகாப்புத் தொடர்பான அட்டைகளை அணிந்திருத்தல்.

(20) விபத்துக்களில்லாமல் வாகனம் ஓட்டிய ஓட்டுநர்களுக்கு சிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் ஊக்கத்தொகைகள் வழங்குதல்.

(21) பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு, சாலைப் போக்குவரத்து விதிகளை அறிவதற்கான சிறப்புப் பயிற்சிகள் அளித்தல்.

(22) வல்லுநர்கள் மூலம் சாலைப் பாதுகாப்புத் தொடர்பான சொற்பொழிவுகள் அதைத் தொடர்ந்து திரைப்படங்கள் வெளியிட்டு பள்ளி மாணவர்கள் மத்தியில் நடத்துதல்.

(23) நடைமுறை போக்குவரத்துக் கல்வி, காவல் துறை மற்றும் தன்னார்வ அமைப்புகள் மூலம் சைக்கிள் ஓட்டுநர்கள் மற்றும் பாதசாரிகளிடையே பிரச்சாரம் செய்தல்.

(24) விபத்தின் புள்ளிவிவரங்களைச் சேகரித்து மக்களுக்குத் தெரியப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

(25) 13-2-1999 அன்று ஏற்பட்ட ஊதிய ஒப்பந்தத்தில், 10 ஆண்டு காலம் விபத்தில்லாமல் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்குத் தொடர்ந்து விபத்தில்லாமல் பணிபுரிந்த ஒவ்வொரு 10 ஆண்டு காலத்திற்கும் ஒரு சிறப்பு ஊதிய உயர்வு வழங்கப்படும் என முடிவு எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**46—**

## இலவச உணவு

**வினா 22758—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கர்நாடகத்தில் உள்ள தர்மஸ்தலா, ஆந்திராவில் உள்ள திருப்பதி ஆகிய கோயில்களில் தரிசனத்திற்கு வரும் பக்தர்களுக்கு இலவச உணவு வழங்குவது போல பழனி முருகன் கோயிலிலும் மதியம் இலவச உணவு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் உச்சிகால அன்னதானக் கட்டளை என்ற திட்டம் 15-9-1998 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்கட்டளையில் உபயதாரர்களிடமிருந்து ரூ. 25,000 பெறப்பட்டு முதலீடு செய்யப்பட்டு உபயதாரர்கள் விரும்பும் (வருடத்திற்கு) ஒரு நாளில் உச்சிகால பூஜையை முடித்துவிட்டு வெளிவரும் பக்தர்களில் 200 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி அன்னதானத் திட்டத்தினை தினந்தோறும் செயல்படுத்தும் பொருட்டு பழனி திருக்கோயில் நிர்வாகம்



முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. மேலும், உச்சிகால பிரசாதக் கட்டளை என்றதொரு திட்டமும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு உபயதாரர்களிடமிருந்து ரூ. 10,000 பெற்று முதலீடு செய்து அதிலிருந்து வரும் வட்டியில் அவர்கள் விரும்பும் ஒரு நாளில் (வருடந்தோறும்) உச்சிகால பூஜைக்குப் பின் சுமார் 600 பக்தர்களுக்கு ஏதாவது ஒரு பிரசாதம் (சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, வெண் பொங்கல், தயிர்சாதம்) வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பிற மாநிலங்களின் திருக்கோயில்களைப் போன்று பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலிலும் மதியம் இலவச உணவு ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது.

**47—**

## நியாய விலைக் கடைகளில் தவறுகள் போக்குதல்

**வினா 20437—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டில் தமிழகம் மற்றும் சேலம் மாவட்டம் முழுவதும் முறையே எத்தனை நியாய விலைக் கடைகளில் தவறுகள் நடப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

(ஆ) அந்தத் தவறுகளைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டில் தமிழகம் முழுவதும் துறை அலுவலர்களால் 1,61,609 ஆய்வுகள் நியாய விலைக் கடைகளில் மேற்சொள்ளப்பட்டும், 16,532 ஆய்வுகள் சிறப்புப் பறக்கும் படை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டும், ஆக மொத்தம் 1,78,141 ஆய்வுகளில் தவறு நடந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, சேலம் மாவட்டத்தில் மட்டும் துறை அலுவலர்களால் 762 ஆய்வுகளும், சிறப்புப் பறக்கும் படை அலுவலர்களால் 26 ஆய்வுகளும் ஆக மொத்தம் நியாய விலைக் கடைகளில் 788 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தவறுகள் நடந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

[1999 மே 7

(ஆ) கூட்டுறவு நியாய விலைக் கடைகளை ஆய்வு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள பணியாளர்கள்/அலுவலர்கட்கு மாதந்தோறும் ஆய்வு செய்யப்பட வேண்டிய கூட்டுறவு நியாய விலைக் கடைகள் எண்ணிக்கை தொடர்பாக ஒரு குறிப்பிட்ட இலக்கு நிர்ணயம் செய்து, அதன்படி மாதந்தோறும் ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறை அலுவலர்களுடன் வருவாய்த் துறை அலுவலர்கள் மற்றும் தொழிலாளர் துறை அலுவலர்களும் கூட்டுறவு நியாய விலைக் கடைகளை திடீர் ஆய்வு செய்து வருகின்றனர்.

கூட்டுறவு நியாய விலைக் கடைகளை ஆய்வு செய்யும்போது, கண்டுபிடிக்கப்பட்ட தவறுகளுக்காக கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இது தவறு செய்யும் கூட்டுறவு நியாய விலைக்கடை பணியாளர்கள் மத்தியில் அச்சுறுத்தல் ஏற்பட்டு, தொடர்ந்துத் தவறுகள் நிகழாவண்ணம் இருக்க உதவுகிறது. இருப்பினும், தொடர்ந்துத் தவறுகள் புரியும் பணியாளர்கள்மீது கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன 1997-98 ஆம் ஆண்டில் கடுமையான முறைகேடுகள் புரிந்தமைக்காக 46 பணியாளர்கள் நிரந்தரப் பணிநீக்கமும், 1,032 பணியாளர்கள் தற்காலிகப் பணிநீக்கத்திலும் வைக்கப்பட்டனர். இதுதவிர, முறைகேடுகளுக்குத் தகுந்தாற்போல் அபராதமும், இரட்டிப்புக் கட்டண அபராதமும் வசூல் செய்யப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் 1997-98-ல் முறைகேடுகளுக்காக 52 பேர் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டனர். மேலும், ஆய்வின்போது காணப்பட்ட முறைகேடுகளுக்காக ரூ. 4.47 இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

**48—**

### அமுதம் அங்காடி அமைத்தல்

**வினா 20492—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், பனிகொண்டான் விடுதி கிராமத்தில் ஓர் அமுதம் அங்காடி அமைத்துத் தர அரசு முன்வருமா?



1999 மே 7]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், ராஜாளிவிடுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 6 அங்காடிகள் இயங்கி வருகின்றன. அக்கடைகளில் பனிகொண்டான்விடுதி என்ற அங்காடியும் ஒன்று. ஆனால், இந்த அங்காடி பனிகொண்டான்விடுதியிலிருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மேலஊரணிபுரம் கிராமத்தில் மொத்தம் 367 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பனிகொண்டான்விடுதியில் 137 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு நிர்ணயித்துள்ள விதிமுறைகளின்படி ஒரு பகுதிநேரக் கடை திறக்கக் குறைந்தது 200 குடும்ப அட்டைகளாவது இருக்க வேண்டும். ஆனால் பனிகொண்டான் விடுதியில் வெறும் 137 குடும்ப அட்டைகளே உள்ள நிலையில் அக்கிராமத்திற்குத் தனியாக ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க வாய்ப்புகள் இல்லை.

**49—**

### நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா 20501—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், ஊ. குமாரமங்கலம் ஊராட்சியிலுள்ள பாழிக்கடையில் புதிதாக நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், காளிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகாளிப்பட்டி என்ற நியாயவிலைக் கடையை நடத்தி வருகிறது. காளிப்பட்டி நியாயவிலைக் கடைக்கு பாழிக்கடை என்ற கிராமப் பகுதியும் இணைக்கப்பட்டுள்ளது. பாழிக்கடைப் பகுதிக்கும், தற்போது நியாயவிலைக் கடை அமைந்துள்ள காளிப்பட்டிக்கும்

இடையே 0.5 கிலோ மீட்டர் தூரமே உள்ளது. பாழிக்கடையில் மொத்தம் 70 குடும்ப அட்டைகளே உள்ளன. அரசு விதிகளின்படி பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்கக் குறைந்தது 200 குடும்ப அட்டைகளும் 2 கிலோ மீட்டருக்குக் குறையாத தூரத்திலும் அமைந்திருக்க வேண்டும். இவ்விரண்டு வரையறைகளும் நிறைவு பெறாத நிலையில், பாழிக்கடையில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்கச் சாத்தியமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**50—**

**அமுதம் அங்காடிக்குச் சொந்தக் கட்டடம்**

**வினா 20580—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, செங்கமங்கலம் கிராமத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அமுதம் அங்காடிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் மற்றும் பேராவூரணி ஒன்றியத்தைச் சேர்ந்த மொத்தம் ஆறு கிராமங்களில் 1998-99 ஆம் ஆண்டிற்கான வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் நியாயவிலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன. செங்கமங்கலம் கிராம நியாயவிலைக் கடைக்கு இந்த நிதியாண்டில் கட்டடம் கட்டும் செயல் திட்டம் ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. தன்னிலை விளக்கம்

**தஞ்சை விவசாயிகளிடமிருந்து ஈரப்பத நெல் கொள்முதல் செய்வது குறித்துத் தெரிவித்த கருத்துக்கு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் விளக்கம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்கள், தஞ்சை மாவட்ட உறுப்பினர்களுக்குத் தன்னிலை விளக்கம் அளிப்பார்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக நன்றி. தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் என்னுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் கூறிக்கொள்வது, கணேசன் என்ற முறையிலே, தனிப்பட்ட முறையிலே கூறிக்கொள்வது, நாங்கள் விவசாயிகளுக்காகப் பாடுபடக்கூடிய பாட்டாளிகள். கணேசன் ஒரு நடுத்தர விவசாயக் குடும்பத்திலே பிறந்தவன். ஒரு ஏழை, ஒரு நெல்மணியை உற்பத்திச் செய்ய எவ்வளவு கஷ்டப்படுகிறான், எத்தனை நாட்கள் களத்துமேட்டிலே படுத்திருக்கின்றான், காவல் காக்கின்றான் என்பது என்னைப் போன்ற விவசாயிகளுக்குத்தான் தெரியும். ஆகையாலே விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய அந்த விலையை எவ்வளவு ஈரப்பதம் இருந்தாலும், நம்முடைய முதல்வர் அவர்கள் மிகவும் பெருமனதோடு, விவசாயிகளிடத்திலே நெல் 25 சதவிகிதம் ஈரப்பதமாக இருந்தாலும் கொள்முதல் செயயுங்கள் என்று மிகத் தாராள மனதோடு சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நானும், விவசாயிகள் அத்தனை பேரும் இந்த அரசையும், முதலமைச்சரையும் பாராட்டுகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம்தான் சொல்லிவிட்டீர்களே, அப்புறம் என்ன இருக்கிறது?

**திரு. ஐ. கணேசன்:** ஆனால், (குறுக்கீடு) சும்மா இருங்கள், சீரியஸாக இருக்கும்போது சிரிப்புக் காட்டாதீர்கள். ஆனால் அதே விவசாயி என்னுடைய பகுதியில் நெல்லை அறுக்கும்போது, மழையால் அனைத்து நெல்லும் அடித்துச் செல்லக்கூடிய நிலையிலே இருந்தது. அதை எடுத்துக்கொண்டு வந்து வீட்டிலே போட்டு நானும் எனது மனைவிகளும், குழந்தைகளும் (பலத்த சிரிப்பு) மனைவியும் — எனக்கு ஒரே ஒரு மனைவிதான், சைடில் இல்லை. (சிரிப்பு) நானும் எனது மனைவியும், குழந்தைகளும் — அதை எத்தனை நாள் உலர்த்தி, எப்படிப்

[திரு. ஐ. கணேசன்] [1999 மே 7

பதப்படுத்தினோம் என்பது எனக்குத்தான் தெரியும். அதை விற்பதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டோம் என்பது எனக்குத் தெரியும். ஆகையால்தான் நான் சொன்னேன். விவசாயிகளிடமிருந்து ஈரப்பதத்திலே வாங்கக்கூடிய நெல்லை நவீன முறைப்படி, விதியை மதியால் வெல்வதைப் போல, — வெளியே எரிகிறது, உள்ளே இங்கே குளு குளுவென்று இருக்கிறது — அதைப்போல ஈரப்பதம் உள்ள நெல்லை மின்சார உதவியோடு ஹீட்டர்களை வைத்து அந்த ஈரப்பதத்தை உலர்த்தக்கூடிய நவீன வசதி கொண்ட கிடங்குகளை தமிழக அரசு கட்ட வேண்டும் என்ற ஆர்வத்திலே பலமுறை நான் சொல்லியிருக்கிறேன். ஆகையாலே, தயவுசெய்து விவசாயிகளுக்கு எதிரான கருத்தை நான் சொல்லவில்லை என்பதை இந்த அவையிலே மிகத் தெளிவாகத் தெரிவித்து, அமர்கிறேன்.

## 3. அறிக்கை அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. ஆ. நடராசன், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்.

***திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 83 முதல் 86 வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1999 மே 7] [திரு. கோ.சி. மணி]

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருதத) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) தமிழ்நாடு ஹேக்னி வாடகை வண்டிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஹேக்னி வாடகை வண்டிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஹேக்னி வாடகை வண்டிகள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





### (ஈ) ஊதியம் வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. விதி 110-ன்கீழ் அறிக்கை

### தொழிற் கல்லூரிகளில் கிராமப்புற மாணவர்கள் என்ற வகையில் இட ஒதுக்கீடு உரிமை பெறத் தகுதியுடையவர் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு கல்வியமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள பொறியியல், மருத்துவம் முதலான தொழிற் கல்லூரிகளில் (Professional Colleges) மாணவர் தகுதியின் வரிசையிலும், இட ஒதுக்கீடு அடிப்படையிலும், மாணவர்கள் சேர்க்கப்படும்போது, கிராமப்புறப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் இடம்பெறுவது கடினமாக உள்ளதைக் கண்ட அரசு 12-5-1997 நாளிட்ட (Professional Colleges) உயர்கல்வி ஆணை எண் 261-ன்படி மாநிலத்திலுள்ள தொழிற்கல்லூரிகளுக்கான மொத்த இடங்களில் 15 சதவிகிதம் கிராமப் பஞ்சாயத்துகளில் இடம் பெறறுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் ப்ளஸ்-1, ப்ளஸ்-2 இரண்டாண்டுகள் படித்துத் தேர்ச்சி பெற்ற கிராமப்புற மாணவர்களுக்கு ஒதுக்கப்படும் என்று அறிவித்தது.

அதன்படிச் செயற்படுத்தியதில் கிராமப் பஞ்சாயத்துக்களில் இடம்பெற்றுள்ள மாணவர் படிப்புக் கட்டணம் செலுத்திப் பயிலும் அனைத்து வசதிகளும் கொண்ட பள்ளிகளின் மாணவர்களும் இடம்பெற்றனர். அம்மாணவர்கள் நகரச் சூழலில் உள்ள பள்ளி மாணவர்களுடன் சமநிலையில் போட்டியிடும் தகுதியுடையவர்கள்.

அதைக் குறித்துச் சுட்டிக்காட்டி வந்த புகார்களையும், பொதுமக்கள் வேண்டுகோளையும் அரசு ஆராய்ந்து பார்த்து, 'கிராமப்புற மாணவர்கள்' என்னும் உரிமை பெறத் தகுதியுள்ள மாணவர்கள் பயிலும் பள்ளிகளாக ஏற்கப்படக் கூடியவை எவை எனத் தீர்மானித்துள்ளது.

அனைத்துத் தொழிற் கல்லூரிகளிலும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த இடங்களுள் கிராமப்புற மாணவர்களுக்கென அரசு ஒதுக்கீடு செய்துள்ள 15 விழுக்காடு இடங்களில் சேருவதற்குத் தமிழகத்தில் கிராமப்புறங்களில் நடைபெறுகிற அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், அரசு உதவி பெற்று நடைபெறுகின்ற மேல்நிலைப் பள்ளிகளிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகளிலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிர்மரபினர் பள்ளிகளிலும், வனத் துறையின் கீழுள்ள பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களே உரிமை பெற்றவராவர். கிராமப்புறங்களில் நடைபெறுவதாயினும் பயிற்றுக் கட்டணம் வசூலிக்கும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் இந்த உரிமை பெறமாட்டார்கள்.



## 6. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 2 - மாநில ஆயத் தீர்வைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999-2000 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 2 - மாநில ஆயத் தீர்வைத் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 14,76,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2743, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆயத் தீர்வையை ஏய்க்கும் பணியில் பல மதுபானக் கடையினர் ஈடுபட்டுள்ளதால், அதைத் தடுக்க சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றினை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,76,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1825, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், எட்டிக்கோட்டைமேடு என்ற பகுதியில் கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பதையும், வெளியூர்களுக்குக் கொண்டு செல்வதையும் தடை செய்ய

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,76,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3052, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மதுபானக் கடைகளை ஏலம் விடும்பொழுதே மதுபானக் கடைகளுக்கருகிலேயே பார் அமைக்க அனுமதி வழங்குவதையும் சேர்த்தே பொது ஏலம் விடவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,76,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4014, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,76,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3152, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு முழுவதும் கள்ளச்சாராயத்தை ஒழிக்க தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,76,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2249, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கள்ளச்சாராயத்தை ஒழிக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,76,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4397, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

முற்பகல் 10-35

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,76,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3036, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,76,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 449, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கள்ளச்சாராய விற்பனையைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,76,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3836, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்தில் உள்ள அனைத்து மதுபான சில்லரை விற்பனைக் கடைகளில் 'பார்' வைத்திருப்பதை உடன் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,76,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3640, திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 101, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"மதுபானக் கடைகளில் போலி மதுபானங்கள் விற்பனை செய்தவதைத் தடுக்க அரசு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,76,61,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3141, திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்தில் பெருகிவரும் கள்ளச்சாராயத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2ஆம் எண் மாநியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,76,61,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 79, திரு. ஆர்.ஆர். சேரகன்.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,76,61,000ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1299, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,76,61,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3748, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தென்காசி, செங்கோட்டை பகுதிகளில் உள்ள மதுக்கடைகளில் அனுமதியின்றி 'பார்' நடத்துவதைத் தடுக்கக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,76,61,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**(ஆ) கோரிக்கை எண் 15—காவல்துறை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15-காவல் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காவல்துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.802,13,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2769, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் ஒரு போக்குவரத்துக் காவல் நிலையம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1885, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியத்தில் உள்ள கல்லூரல்காடு என்ற பகுதியில் கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பனைக்கு வெளியூர்களுக்கு அனுப்பப்படுவதைத் தடுத்து நிறுத்த அங்குள்ள புறக்காவல் நிலையத்தை நிரந்தக் காவல் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3072, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் போக்குவரத்துக் காவல் துறை பிரிவு ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4020, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டு தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3232, திரு ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதால் அங்கு புதிதாக ஒரு போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2291, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம், பவானி நகரில் உள்ள அருள்மிகு சங்கமேஸ்வரர் ஆலயத்துக்கு, தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவதால், அங்கு ஒரு புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1496, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆண்டிமடம் தொகுதி, வல்லம் காவல் நிலையத்திற்கு ஒரு புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2923, திரு. ந. கருப்பண்ண உடையார்.



*** திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, சோழவரம் பேரூராட்சியில் ஒரு காவல் நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 527, திரு. கே. சுப்பராயன்.

*** திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருப்பூரில் மக்கள் தொகை அதிகரித்து வருவதாலும், வகுப்பு மோதல் பதற்றம் நிலவுவதாலும் அங்கு சிறப்புக் காவல் படைப் பிரிவு ஒன்றை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2822, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட பரவாக்கோட்டை, களப்பாள் ஆகிய காவல் நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3114, திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், நித்திரவிளை காவல் நிலையத்திலுள்ள காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2493*, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்திலுள்ள அனைத்துக் காவலர்களுக்கும் வீட்டுவசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1283*, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருக்கோவிலூர் நகரப் பேருந்து நிலையத்தில் பெருகிவரும் குற்றங்களைக் கட்டுப்படுத்த அங்கு காவல் நிலையச் சாவடி ஒன்று அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3760*, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தென்காசியிலுள்ள புதிய பேருந்து நிலையம் அருகே ஒரு புதிய காவல் நிலையம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1778*, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேருந்து நிலையத்தில் ஒரு புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4212*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேராவூரணி தொகுதி, பேராவூரணியில் உள்ள பேருந்து நிலையத்தில் ஒரு புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2714*, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியில் தோட்டிகோடு புறக்காவல் நிலையத்தினைச் செயல்படச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2861*, திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தேனி மாவட்டம், தேனி ஒன்றியம், அம்பாசமுத்திரம் ஊராட்சியில் ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4101, திரு. வி. அய்யலுசாமி.

**திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கோவில்பட்டி தொகுதி, குருவிகுளத்தில் ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3979, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி, கல்லிடைக்குறிச்சி, பத்தமடை முக்கூடல், பாப்பாக்குடி ஆகிய ஊர்களில் உள்ள காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.802,13,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**(இ) கோரிக்கை எண் 16-தீயணைப்புப் பணிகள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16-தீயணைப்புப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.61,80,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு



வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2764, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேலூர் மாவட்டத்தில் உள்ள தீயணைப்பு நிலையங்களுக்குக் கூடுதல் வாகனங்களை வாங்கி நிரந்தரக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றி 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1893, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3074, திரு. நா. பெரியசாமி.

***திரு நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"பெருந்துறையில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4021, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3240, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதியதாக தீயணைப்பு நிலையம் அமைக்க ஒரு தீயணைப்பு நிலையத்திற்கும், மற்றொரு தீயணைப்பு நிலையத்திற்கும் 25 கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்பதை மாற்றி 15 கிலோ மீட்டர் இடைவெளியே போதும் என அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2299, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஆப்பக்கூடல், அம்மாப்பேட்டை ஒன்றியம், ஓலகடம் ஆகியவற்றில் புதிய தீயணைப்பு நிலையங்கள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1493, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆண்டிமடத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2960, திரு. ந. கருப்பண்ண உடையார்.

• **திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில், சுவாமிமலை பேரூராட்சியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 532, திரு. கே. சுப்பராயன்.

• **திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2815, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவாரூர் மாவட்டம், பெருகவாழ்ந்தானில் சுற்றுப் புறத்தில் உள்ள சமார் 50 கிராமங்களிலுள்ள ஒரு இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் புதிய தீயணைப்பு நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3112, திரு. டி. மணி.

*** திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குமரி மாவட்டம், பளுகல் பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2505, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓமலூர் தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1282, திரு. சு. சிவராஜ்.



**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் பகண்டை கூட்டுச் சாலையில் புதிய தீயணைப்பு நிலையம் ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3765, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் ஒவ்வொரு சீசன் காலத்திலும் தண்ணீரில் மூழ்கி இறப்பது வாடிக்கையாக இருப்பதினால், தடாகத்தில் அருகே நீரில் மூழ்கி காப்பாற்றக்கூடிய ஆற்றல் பெற்ற தீயணைப்பு வீரர்களைத் தயார் நிலையில் வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1776, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம் ராதாபுரத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4234, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2715, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டத் தீயணைப்பு நிலையங்களில் மெக்கானிக் பதவியிடங்களை நிரப்பு வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2864. திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தேனி நகராட்சியில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4092, திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கோவில்பட்டி தொகுதி, எட்டையாபுரத்தில், தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3967 திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

"சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவியில் இயங்கி வரு தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுத் அங்கு பணியாற்றும் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 385. திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே,

"புவனகிரி தொகுதியில் உள்ள சேத்தியாதோப்பு மற்று பரங்கிப்பேட்டை தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தர அலுவல கட்டடம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக் நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 460 திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

"தண்டராம்பட்டு தொகுதி, சு. வாலவெட்டி கிராமத்தில் புதி தீயணைப்பு நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித் 'விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறே

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையி கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,80,45,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில ஆயத் தீர்வைத் துறை, காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை ஆகிய துறைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றிலே, தமிழிலே உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையிலே படித்தாகக் கருதி சட்டமன்றப் பேரவைக் குறிப்பேட்டில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்ற அரிய கருத்துகளின் அடிப்படையில், பதிலுரையிலே, அவற்றிற்கு நான் விளக்கம் அளிக்க கடமைப்பட்டிருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்தை திரு. சி. ஞானசேகரன் அவர்கள் தொடங்கி வைப்பார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயத் தீர்வைத் துறை, காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற நல்ல வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10 நிமிடங்கள் கொடுக்கப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் மிக முக்கியமான கருத்துகள் எல்லாம பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால்தான் 2 நாட்கள் வைத்திருக்கிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** இரண்டு நாட்கள் வைத்திருந்தாலும்கூட எங்களுக்குப் போதாது. அதனால் கொஞ்சம் அதிகமாக நேரம் வேண்டும்.

---

@ 397 முதல் 527 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II, மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் தீர்ப்பு சொல்லிவிட்டார் என்றால், அதற்குப் பிறகு நீங்கள் பேசிக்கொண்டே இருக்கக்கூடாது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-30 மணி வரை இன்றைக்கு இருக்கிறது. முதல்வர் பதிலுரை இன்றைக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எனக்குத் தெரியும். அதை நீங்கல் எனக்குச் சொல்லித் தர வேண்டாம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினுடைய கொள்கைக் குறிப்பிலே கூறுகிறபோது 26-ஆவது பக்கத்தில்... "1999 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து ஈரோட்டை தலைமையிடமாகக் கொண்டு தனியாக ஒரு காவல் துறைத் தலைவர் செயல்பட்டு வருகிறார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சந்தனக் கடத்தல் வீரப்பன் மற்றும் அவனது குழுவினரைப் பிடித்திட தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் எப்பொழுதுமே சட்டமன்றம் நடக்கின்றபோது பல துறைகளைச் சார்ந்த ஆசிரியர்கள், வனத் துறையைச் சார்ந்தவர்கள் எல்லாம் உண்ணாவிரதம் இருந்து எப்படி முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க வேண்டும் என்று கருதுகிறார்களோ அப்படி மாமுலாக சட்டமன்றம் நடக்கின்ற போதெல்லாம் வீரப்பன் சில பேரைக் கடத்திக் கொண்டுபோய் வைத்துக்கொண்டு, பிணையக்கைதிகளாக வைத்துக்கொண்டு சில கோரிக்கைகளை அரசுக்கு வைத்து பணம் பறிப்பதற்கோ, வேறு சில கோரிக்கைகளுக்கோ செயல்படுவது எப்போதுமே தொடர்ந்து வரக்கூடிய ஒன்றாகும். *(மணியடிக்கப்பெற்றது)*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தங்களுடைய தேவையான கோரிக்கைகளுக்காக உண்ணாவிரதம் இருக்கின்ற ஆசிரியர்கள், அலுவலாளர்கள், இவர்களை எல்லாம் வீரப்பனோடு நமது மாண்புமிகு உறுபபினர் சேர்த்தது சரியா என்பதை அவரே உணர்ந்து பார்க்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் நடக்கிறபோது கவனத்தை ஈர்ப்பதற்காக அவர்கள் அப்படி முறைப்படி செய்கிறார்கள். ஆனால் கவனத்தை ஈர்க்கக் கூடாதவர், எப்போதுமே சிறையில் தொடர்ந்து அடைக்கப்பட வேண்டியவர் அல்லது சுட்டுத் தள்ளப்பட வேண்டியவர், அவ்வப்போது மக்களை

கடத்திக் கொண்டுபோய், வனத் துறையைச் சேர்ந்தவர்களையோ, காவல் துறையைச் சேர்ந்தவர்களையோ வைத்துக்கொண்டு சட்டமன்றம் நடக்கின்ற போதெல்லாம வீரப்பனுடைய செய்தி எப்படியோ வரக்கூடிய ஒரு நிலை வந்துவிடுகிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். ஆசிரியர்களை, நியாயமான கோரிக்கைகளை வைப்பவர்களை, நான் நிச்சயமாகப் பாராட்டுகிறேன். ஆனால் கவனத்தை ஈர்ப்பதென்பதை வீரப்பன் வேறு வகையிலே செய்து கொண்டிருப்பதை இந்த அரசு எப்படி அனுமதித்துக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

வீரப்பனைப்பற்றி கடந்த கால ஆட்சியிலே நாங்கள் பேசியபோது, 'வீரப்பன் தமிழக எல்லையிலிருந்தால் என்றோ பிடித்திருப்போம்' என்று முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். பிறகு அந்த ஆட்சி போய் இந்த ஆட்சி வந்த பிறகு நிச்சயமாக வீரப்பன் பிடிபடுவான் என்று இருந்தோம். இந்த ஆட்சி வந்த பிறகு 1996-லே நாங்கள் கேள்வி எழுப்பியபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இல்லாத காரணத்தாலே நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 'வீரப்பன் தமிழக எல்லையில் இல்லை' என்று இந்த அவையிலே அறிவித்தார்கள். ஆனால், வீரப்பன், வனத் துறை ஊழியர்கள் பழனி, அபிமன்யு, மகாதேவன் என்ற மூன்று பேரை கடந்த மாதம் 25 ஆம் தேதி பிடித்துக் கொண்டுபோய், 12-வது நாளாக அங்கே வைத்துக் கொண்டிருக்கிறான். இப்படி வைத்துக் கொண்டிருக்கும்போது, அவர்களை வீரப்பன்தான் கடத்தினானா, அல்லது வேறு யாராவது கடத்தினார்களா என்று அதற்கான ஆய்வு நடைபெறுவதாகச் சொன்னார்கள். ஆனால், என்னைப் பொறுத்த அளவில், இதில் காவல் துறை நிச்சயமாக செயலிழந்துவிட்டது என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-45*

சுமார் 854 கோடி ரூபாயைச் செலவிட்டு, காவல் துறையை நாம் செப்பனிட்டுக் கொண்டிருக்கிறோம். இவ்வளவு கோடி ரூபாயை செலவிட்டு, 800 பேரைக் கொண்ட அதிரடிப் படையினர் அங்கே போய் அவனைப் பிடிப்பதற்காக முகாம் இட்டிருக்கிறார்கள். அப்படிப் போகிறபோது, நம்முடைய டிஜிபி.-யும் போகிறார். வீரப்பனைப் பிடிப்பது மிகவும் சிரமம், என்று அங்கே அவர் பேட்டியளிக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட நேற்று இங்கே சொல்கிறபோது, 'அங்கே



மழை பெய்கிறது; அடர்ந்த காடு' என்ற ஒரு பதிலைச் சொல்லி, 'அதனால் பிடிப்பது கொஞ்சம் சிரமமாக இருக்கின்றது.' என்று சொன்னார்கள். காவல் துறையினர் மழை பெய்தால் மழை பெய்கிறது என்கிறார்கள்; இல்லாவிட்டால், வெயில் அடித்தால், வெயில் அடிக்கிறது என்று சொல்வார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அவர்களுக்கு இருக்கிற கடமையை அவர்கள் முழுவதுமாக ஏற்றுக் கொண்டு, அவர்கள் செய்து முடித்து-அங்கே வீரப்பனை-ஒரு சாதாரண வீரப்பன், இந்த அரசுக்கு சவால் விட்டுக்கொண்டிருக்கிறான் என்று சொன்னால், எவ்வளவு நாளைக்கு நாம் அதை அனுமதிக்கப் போகிறோம்? ஒருவேளை இந்த அரசுக்கு அவனைப் பிடிக்க முடியவில்லை என்று சொன்னால், எங்களால் முடியவில்லை என்று மத்திய அரசுக்கு எழுதி, இராணுவத்தை உடனடியாக நீங்கள் கொண்டு வந்து, வீரப்பனைப் பிடித்தால்தான், இந்த அரசினுடைய மானம் காப்பாற்றப்படும். தமிழக மக்களும் இந்த அரசின் மீது நம்பிக்கை வைப்பார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்களால் முடியவில்லை என்பதையாவது சொல்லி, இராணுவத்தையாவது அழைத்து வந்து—நீங்கள் அங்கே இருக்கக்கூடிய காட்டுவாசிகளை முதலிலே வெளியேற்றிவிட்டு, அவனைப் பிடித்துவிட்டு பிறகு வேண்டுமானால் காட்டுவாசிகளைக் குடியேற்றிவிடலாம். அங்கே, அதற்காக ஒரு வழி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வீரப்பனைப் பொறுத்த அளவில், ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அதேபோல் உள் துறைச் செயலாளர் போன்றவர்களுக்கெல்லாம், சட்டப் பேராசிரியர் கிருஷ்ணசாமி அவர்கள் ஒரு கடிதத்தை 10-6-1998-லே எழுதியிருந்தார்கள் என்று கருதுகிறேன். முதலமைச்சருக்கும் அனுப்பி இருக்கிறார்கள். வீரப்பனுடைய செயல்பாடுகள் என்ன என்பதை அவர் 11 நாட்கள் வீரப்பனிடம் பிணைக் கைதியாக மாட்டிக்கொண்டிருந்தவர்; அவனுடைய செயல்பாடுகளையெல்லாம் இந்த அரசுக்குத் தெரிவித்திருக்கிறார். உள் துறைச் செயலாளர் போன்றவர்களும், டி.ஜி.பி. போன்றவர்களும் — அவருடைய கடிதம் பல பக்கங்களைக் கொண்டது. அவன் அந்த இடத்திலே கொரில்லா war-fare-ஐ சில பேரை வைத்து, அங்கே முகாமை நடத்திக் கொண்டிருக்கிறான் என்று சொல்கிறார்கள். அதுபோல, இராசாமி என்கிற கிருஷ்ணமூர்த்தி என்கிற ஒரு விடுதலைப் புலி அங்கே கூட இருந்து கொண்டு, விடுதலைப் புலி இயக்கம் உள்ளே அங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் சொல்கிறார்கள். யார் யாரை அவன் கடத்தப் போகிறான் என்ற ஒரு பெரிய பட்டியலை

வைத்து, பேராசிரியர் கிருஷ்ணசாமி அவர்கள்-அவன், முதலிலே ஜெயலலிதாவைக் கடத்தப் போவதாகவும், பிறகு, தேவகவுடா, கருப்பையா மூப்பனார், வட்டல் நாகராஜ், ராஜ்குமார், செங்கோட்டையன், ரஜினிகாந்த் போன்றவர்களையும், அதேபோல், எம்.பி.-க்கள், எம்.எல்.ஏ-க்களையும் கடத்தப்போவதாகவும், கடைசியில் என்னுடைய பெயரையும் அதிலே சேர்த்து, he mentioned the name of Mr. C. Gnanasekaran, who spoke in the Tamil Nadu Assembly என்று என்னையும் கடத்துவதாக-ஞானசேகரனையும் கடத்துவதாக-சொன்னதாக தெரிவித்து, இந்த அரசுக்கு சட்டப் பேராசிரியர் கிருஷ்ணசாமி அவர்கள் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். எனக்கும் அனுப்பியிருக்கிறார்கள். நானும் முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மனுவைக் கொடுத்து, முதலமைச்சரிடமிருந்து பதில் எனக்கு வந்து 'Q' Branch-இடமிருந்து 'இதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது' என்ற ஒரு பதில்தான் வந்ததேயொழிய வேறொன்றுமில்லை. இப்படி இன்று வேண்டுமானால், பழனி, அபிமன்யூ போன்றவர்களை பிடித்து வைத்திருப்பவர்கள், நாளைக்கு ஏன் ஒரு காவல்துறை அதிகாரி ஒரு டி.ஜி.பி.-யையோ, அல்லது ஒரு ஐ.ஜி-யையோ, ஒரு அமைச்சரையோ ஓர் எம்.எல்.ஏ. அல்லது எம்.பி.-யையோ பிடித்து வைத்துக்கொண்டு வீரப்பன் ஆட்டம் காட்ட மாட்டான் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? ஆகவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இரும்புக் கரம் கொண்டு நீங்கள் வீரப்பனை உடனடியாகச் சுட்டுத் தள்ளி-உயிரோடோ அல்லது சுட்டுத் தள்ளியோ உடனடியாகக் கொண்டுவந்து நிறுத்துவதற்கு, டி.ஜி.பி.-க்கு ஒரு வாரம் அல்லது ஒரு மாதம் அவகாசம் கொடுங்கள். இல்லையென்று சொன்னால், டி.ஜி.பி.-க்களுக்கு அங்கே போனவர்களில் நேற்று அலெக்சாண்டர் வந்து விட்டார். இப்போது அங்கே போய் யார் தேடுவார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இப்படி இருக்கிறபோது, நமக்கு நம்பிக்கை அற்றுப் போய்விடுகிறது என்பதை முதல்வர் அவர்களுக்கு எடுத்துக் கொடுத்து நிச்சயமாக வீரப்பனைப் பிடிப்பதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள்? உடனடியாக அங்கு மாட்டிக் கொண்டிருக்கக்கூடிய 3 பேர்களுடைய உயிர்களையும் காப்பாற்றி, அவர்களுடைய வீட்டிலே அவர்களை ஒப்படைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது சாராயம்; மதுவிலக்குக் கொள்கையை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். முதலில் 1996 ஆம் ஆண்டு வந்தவுடனே மாமூல் கொடுப்பது- இரண்டு மாமுல் கொடுத்து சாராயம் விலை ஏறிவிட்டது என்று சொன்னபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்



கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, அன்று இருந்த மதுவிலக்குப் பிரிவை எடுத்து விட்டார்கள். பிறகு, மீண்டும் மதுவிலக்குப் பிரிவைக் கொண்டு வந்தார்கள். மீண்டும் மதுவிலக்குப் பிரிவைக் கொண்டுவந்தும்கூட, சாராய விலையேற்றம்தான் டபுள் மாமூல் கொடுத்து, இப்போது விலைதான் ஏறிக்கொண்டிருக்கிறது. சூளகிரியிலே நடந்த சம்பவத்தில் 60 பேர் இறந்து விட்டார்கள். அங்கே போய் நாங்கள் விசாரித்தபோது, 5 ரூபாய் விற்றிருந்த ஒரு கிளாஸ் சாராயம் 10 ரூபாய் என்றெல்லாம் விலைபோக ஆரம்பித்தது; அதனால்தான் ஸ்பிரிட் எல்லாம் கலந்து விற்கிறார்கள் என்றார்கள். டபுள் மாமூல் கொடுக்க வேண்டிய ஒரு நிலைமை வருகிறது.

Enforcement Wing-ஐ நாம் வைத்திருப்பதனாலே ஒரு பலனும் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. ஆங்காங்கே இருக்கக்கூடிய local Police-க்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் முழு அதிகாரத்தைத் தந்து-ஏனென்றால்—டபுள் மாமுல்—இரண்டு பேர்களும் அவர்கள் மீது இவர்கள் பழி போடுகிறார்கள்; இவர்கள் மீது அவர்கள் பழி போடுகிறார்கள். இப்படி இரண்டு பேர்களுமே சரியாக சாராயத்தைக் கட்டுப்படுத்தவில்லை என்பதுதான் யதார்த்தமான உண்மை. ஆகவே, அந்தந்த போலீஸை ஏன் என்றால், போலீஸ் துறையிலே 4 சப்-இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். சப்-இன்ஸ்பெக்டர்களிலே 2 பேர் Law and order, 2 பேர் Crime-இல் இருக்கிறார்கள்.

முற்பகல் 10-50

இப்படி இருக்கின்றபோது, அவர்களுக்கேகூட நீங்கள் முழுமையான அதிகாரத்தைத் தந்து அந்தந்த எல்லைக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், ஒரு காலத்திலே ஜெயலலிதா ஆட்சியிலே ஏதாவது ஓர் எல்லைக்குள் சாராயம் கண்டுபிடிக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட சப்-இன்ஸ்பெக்டரை சஸ்பெண்ட் செய்வார்கள். காட்பாடியிலே லட்சுமணன் என்கிற ஒரு சப்-இன்ஸ்பெக்டர் அப்போது சஸ்பெண்ட் செய்யப்பட்டார். அதே போல அங்கிருந்த ஒரு வி.ஏ.ஓ-வும் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். எனவே, அது போன்ற ஒரு நிலையை நீங்கள் கொண்டு வர வேண்டும். காவல் துறை அதிகாரிகளுக்கு சம்பளத்தை நீங்கள் அதிகப்படுத்தி கொடுங்கள். அவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸாக இப்போது 50 ரூபாயைக் கொடுத்துகொண்டு இருக்கிறீர்கள். அது போதாது. ரிஸ்க் அலவன்ஸை அவர்களுக்கு 500 ரூபாயாகக் கொடுங்கள். உணவுப்படியாக இப்போது 50 ரூபாய் கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். அந்த உணவுப்படி போதாது. 100 ரூபாய் கொடுங்கள். அவர்களுக்கு எல்லா சலுகைகளையும் கொடுங்கள். அதே நேரத்தில் அவர்களிடம் கடுமையாக வேலையையும்

வாங்க வேண்டும். இந்த முறை நல்ல முறை என்று நிச்சயமாக நான் கருதுகிறேன். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், ஓர் எல்லைக்குள் சாராயம் பிடிபட்டால், பிடபிள்யு. என்பது இல்லையென்று சொன்னால், லோக்கல் சப்-இன்ஸ்பெக்டருக்கு அந்தப் பொறுப்பு வந்துவிடும். அப்படி வருகிறபோது, அங்கு சாராயம் இருக்குமானால், "நீ சஸ்பெண்ட் செய்யப்படுவாய்" என்கிறபடி ஒரு கடுமையான உத்தரவைப்போட்டு நான்கு பேரை சஸ்பெண்ட் செய்தால்தான், தமிழகத்திலே ஓரளவிற்கு இதில் ஒரு பய உணர்வு இருக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படி இல்லாததால்தான் விஷச் சாராயம் எல்லாம் வந்து கொண்டு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

ரௌடி ராஜ்யங்கள். ஆங்காங்கே, பல இடங்களிலே நகரங்களிலும் மற்ற இடங்களிலும் அரசியல் சாயம் பூசிக்கொண்டு சிலபேர் ரௌடிகளாக மாறி அவர்கள் இன்றைக்கு காவல் துறையையே தங்கள் கட்டுக்குள் வைத்துக்கொண்டு, அவர்கள் சொல்கிறபடிதான் காவல் துறை நடக்க வேண்டுமென்ற மாதிரி ஒரு நியதியை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதனை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். சில இடங்களிலே சில நேரங்களில் எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்படுவதேயில்லை. இல்லையென்றால், அந்தக் கூட்டம் யார் மீது எப்.ஐ.ஆர். போடு என்று சொல்கிறதோ, அவர்கள் மீதுதான் எப்.ஐ.ஆர். போடுகிறார்கள். இதில், அவர்கள் எந்த அரசியல் கட்சியை சார்ந்தவர்களாக இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு கடுமையான நடவடிக்கை எடுத்து, அவர்களை எல்லாம் அரசியலிலிருந்து அப்பாற்பட்டு காவல் துறையை விடுவிக்க வேண்டும். காவல் துறையைச் சுதந்திரமாகச் செயல்பட விடுவேன் என்று சொன்ன முதலமைச்சர் அவர்கள், இது போன்ற ரௌடிகள் ராஜ்யத்திலிருந்து காவல் துறையைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி காப்பாற்றினால்தான் தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

லஞ்சம். இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னாலே, லஞ்சத்தை நாம் கட்டுப்படுத்த முடியும் என்று எண்ணினோம். ஜெயலலிதா காலத்திலிருந்த லஞ்சம் அப்படியேதான் தொடர்ந்து கீழ்மட்டத்திலே பல இடங்களில் இருந்துகொண்டு இருக்கிறது என்பதுதான் உண்மையான நிலையாகும். இப்போது, ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்குப் போனாலோ அல்லது தாலுகா அலுவலகத்திற்குப் போனாலோ, அல்லது Sales Tax அலுவலகத்திற்குப் போனாலோ அல்லது பிற அலுவலகங்களுக்குப் போனாலோ, எல்லா அலுவலகங்களிலும் இன்று லஞ்சம் இல்லாமல், எந்த ஒரு வேலையும்



நடக்கவில்லை. லஞ்சம்தான் குறிக்கோளாக இருந்துகொண்டு, அடிப்படையாக இருந்துகொண்டு எல்லா காரியங்களையும் நிறைவேற்ற இருந்து கொண்டு இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. மேல்மட்டத்தில் மட்டும் நாம் லஞ்சத்தைத் தடுத்துவிட்டோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னால் அது போதாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள் துறை மற்றும் பல துறைகளையெல்லாம் வைத்திருக்கிறார்கள். நாம் விஜிலென்ஸ் வைத்திருக்கிறோம். ஆனால், அந்த விஜிலென்ஸ் துறையே மற்றவர்களிடமிருந்து மாமுலை வாங்கிக்கொண்டு லஞ்சத்தைப் பற்றி கவனிக்காமல் விட்டுவிடுகிறார்கள். ஆகவே, லஞ்சத்தை முழுமையாக கீழ்மட்டத்திலும் தடுத்து நிறுத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிதி நிறுவனங்கள் - இந்த ஆட்சி வந்தவுடன் ஏமாற்றிக் கொண்டிருந்த ஏமாற்றுக்காரர்களையெல்லாம் பிடித்து உள்ளே போட்டது. அவர்களுடைய சொத்துக்களையெல்லாம் பறிமுதல் செய்தோம். ஸ்பெஷல் கோர்ட் எல்லாம்கூட போட்டு, அதற்கான உத்தரவுகள் வந்தன. ஆனால், அந்தச் சொத்துக்கள் முடக்கப்பட்டுவிட்ட காரணத்தினால், பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் அவர்களுடைய பணத்தையெல்லாம் பெற முடியாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். வழக்குகள் சீக்கிரம் முடிக்கப்பட்டு அவர்களுக்கு தண்டனையும் வழங்கப்படாததால் இன்னும்கூட பல இடங்களிலே, போலி செக்குகளைக் கொடுத்து ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். நேற்றுகூட வேலூரில் நிதி நிறுவனம் நடத்திய இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுபோல பல இடங்களிலே நடந்து கொண்டிருக்கின்ற நிலை இருக்கிறது. பலபேர் பெரிய ரௌடிகளாக மாறுவதற்கு, இந்த நிதி நிறுவனங்களும் ஒரு காரணம். ஆங்காங்கே வேலை இல்லாதவன் நிதி நிறுவனங்களை ஆரம்பித்து விடுகிறான். என்னடா செய்கிறாய் என்று கேட்டால் பைனான்ஸ் கம்பெனி வைத்திருக்கிறேன் என்று சொல்கிறான். இப்படி பைனான்ஸ் கம்பெனிகளை நடத்திக்கொண்டு அவர்களே ரௌடிகளாக மாறி, அந்து வட்டிக்கு பணத்தை விட்டு, அந்தப் பணத்தை யாராவது ஒரு நாளைக்கு திருப்பிக் கொடுக்காவிட்டாலும்கூட, அவர்களை இழுத்துவந்து, உதைத்து, இன்று எல்லாவற்றையும் குட்டிச்சுவராக்கிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்த பைனான்ஸ் கம்பெனிகளைப பொறுத்தவரையில் அதனை வரைமுறைப்படுத்துவதற்கு அனுமதி இல்லாத பைனான்ஸ் கம்பெனி நாட்டிலே நடக்கக்கூடாது என்ற நிலையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல குங்குமம் போன்ற பத்திரிகைகள் எல்லாம் தீபாவளி போன்ற சமயங்களில் பல பரிசு பொருட்களையெல்லாம் அறிவித்தார்கள். உயர் நீதிமன்றம் உத்தரவுபடி அது நிறுத்தப்பட்டு விட்டது. ஆனால், பணம் செலுத்தியவர்களுக்கு—அது போல பல பத்திரிகைகள் தீபாவளி பரிசு என்று அறிவித்ததையெல்லாம் அப்படியே முடங்கிப் போய் இருக்கிறது. அதையும் நீங்கள் உடனடியாக, உரியவர்களுக்குரிய பணம் போய்ச் சேருவதற்குரிய நடவடிக்கைக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல சில கோரிக்கைகளையும் வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். காவல் துறைக்கு என்று வருகிறபோது, 98 சப்-இன்ஸ்பெக்டர்களை, ஏற்கெனவே கடந்த கால ஆட்சியிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விடுபட்டுப் போயிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு இது குறித்து கேள்வி கேட்டபோது நிச்சயமாக மழை பொழியும்; இடி இடிக்காது என்று சொன்னார்கள். ஏனோ அவர்கள்மீது மழை இன்னமும் பொழியாமல் இருக்கிறது. கோடைக்கால மழையாக மாறி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த 98 பேருக்கும் வாழ்வளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல 376 காவலர்கள் போன ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் விடுபட்டுப் போனவர்கள் இருக்கிறார்கள். அதிலே மற்றவர்கள் எல்லாம் வேலைக்கு போய் மீதி 329 பேர் இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் காவலர்களை பணிக்கு அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற கால ஆட்சியிலே சப்-இன்ஸ்பெக்டராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் முதலில் டி.எஸ்.பி., ஆர்மட் போலீஸ், பிறகு Law and order என்று அவர்கள் வந்தார்கள். அப்படித்தான் அவர்களுக்கு பணி உத்தரவு செய்யப்பட்டது. ஆனால் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கக் கூடிய காவல் துறையினர் உடனடியாக அவர்கள் law and order அவர்களுக்கு ஆர்டர் போய்விடுகிற காரணத்தினாலே, முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மூன்று அடுக்குகளான பின்னால்தான law and order வருகிற காரணத்தினாலே பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். ஆகவே, அதைச் சீர்படுத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோயம்புத்தூர் வெடிகுண்டு சமீபத்தில் . . .

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ம. அப்துல் லத்தீப். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், பேரவைத் தலைவர்,



10 நிமிடங்கள் என்றுதான் சொன்னார். நீங்கள் மூன்று நிமிடங்கள் அதிகமாகப் பேசியிருக்கிறீர்கள். திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தில் பேசுவதற்கு கொஞ்சம் அவகாசம் வேண்டும். ஆனால், 10 நிமிடங்களில் முடிக்க வேண்டும் என்று உறுப்பினர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மானியத்தில் கொஞ்சம் விரிவாகப் பேசினால்தான் பேசுவதற்கு நியாயம் கிடைக்கும். இருந்தாலும் 10 நிமிடங்களில் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன்.

பொதுவாக காவல் துறை, ஒட்டுமொத்தமாக மக்கள் நம்பிக்கையைப் பெற்று இருக்க வேண்டும். காவல் துறை என்றால், அந்தத் துறை நாட்டுக்கு இன்றியமையாத துறை என்பதை ஏறக்குறைய எல்லா தரப்பு மக்களும் ஒத்துக்கொள்ள வேண்டும்.

அதற்கு மாறாக, காவல் துறை என்றால் மக்களால் ஏளனம் செய்யக் கூடிய ஒரு துறையாக மாறியிருப்பது மிகவும் வேதனைக்குரியது. நான் விரிவாகப் பேசுவதற்கும் நேரம் இல்லாத காரணத்தால் முதலில் ஓரிரு கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வைக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஆலங்காயத்தில் கடந்த ஆண்டு தீயணைப்பு நிலையம் ஒன்றை இந்த அரசு அனுமதித்தது காவல் துறையினர் அங்கே பணியாற்றுகிறார்கள். ஆனால் தீயணைப்பு வண்டியை நிறுத்துவதற்கோ அல்லது காவல் துறை அதிகாரிகள், அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் உட்கார்ந்து பணியாற்றுவதற்கோ ஒரு கட்டடமும் இல்லாமல் ஓர் இடமும் இல்லாமல் தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். மரத்தடியில் வண்டி நிற்கிறது. அதே மரத்தடியில் அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளும் உட்கார்ந்துகொண்டு இருக்கிறார்கள். எனவே, அதுகுறித்து துறையினர், நடவடிக்கை எடுத்து அதற்குரிய கட்டடத்தை, தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

பேராணம்பட்டு தொகுதியில் மாதனூர் ஒரு ஊராட்சி ஒன்றியத் தலைநகர், அதிலே ஆச்சரியம் என்னவென்றால் இதுவரையில் அந்த ஊரிலே காவல் துறை அலுவலகமே இல்லை. போலீஸ் ஸ்டேஷன் எங்கே என்றால், அவர்கள் ஆம்பூருக்குத்தான் போக வேண்டும். அது இல்லை என்றால் பள்ளிகொண்டாவிற்குத்தான் போக வேண்டும். அது ஓர் ஊராட்சி ஒன்றியத் தலைநகர். என்னிடத்தில் அண்மையிலே அந்த

ஊர் மக்கள் சொன்னார்கள். எனக்குக்கூட ஆச்சரியமாக இருந்தது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாதனூர், ஒன்றியத்தலைநகர் என்பதனால் அங்கே ஒரு போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை என்றாலே அதில் பேசுவது எனக்கு எப்போதுமே சிக்கலாகவே இருந்து கொண்டிருக்கிறது. காரணம், இந்தத் துறை மானியத்தில் பேசுவதற்கான தேதி குறிப்பிட்டவுடனே பல்வேறு துறைகள், பல்வேறு ஆவலாதிகள் எனக்கு வந்து சேருகின்றன. மாண்புமிகு பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் கோதர் மைதீன் அவர்கள்கூட இன்றைக்குக் காலையிலே அவர்களுடைய தொகுதியிலே இருந்து வந்த ஏராளமான மனுக்களை என்னிடத்திலேக காட்டினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இது தொடர்பாக அவர்கள் ஒரு கடிதம்கூட கொடுத்து இருக்கிறார்கள். அந்தக் கடிதத்தின் நகலையும் நான் பார்த்தேன். அப்பாவி மக்கள் பலர் ஏறக்குறைய 16 பேர் பல்வேறு சட்டங்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். 15 வயதிலேயிருந்து 20, 22 வயது வரையிலும் இருக்கக்கூடி இளஞ்சிறார்கள், அரும்பு மீசை கூட முளைக்காதவர்கள் காலக்கிரகத்தில் பல்வேறு காலங்களைக் கூறி அடைக்கப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டு வருகிறார்கள் என்று அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மட்டும் அல்ல, அவர்களுடைய பெற்றோர்கள் ரத்தக் கண்ணீர் வடிக்க, அவர்கள் எழுதியிருக்கின்ற கடிதங்களைப் பார்க்கும்போது, உண்மையிலேயே நாம் விரக்தியடைந்துதான் இருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனென்றால் இதை மீண்டும் மீண்டும் நாம் சொல்கிறோம். சொல்வதைச் சரியாகப் புரிந்துகொள்ளக் கூடியவர், முதல்வர் இருக்கிறார் என்றாலும், அந்தத் துறையிலே இருக்கக்கூடியவர்கள் இப்படித்தான் செய்வோம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அப்பாவி மக்களை ஏதோ காரணத்திற்காக அவர்கள் துன்புறுத்தித்தான் ஆகவேண்டும் என்ற நிலைக்கு அவர்கள் ஆளாகி, இன்றைக்கு அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரைக்கூட அல்லது கட்டளைகூட மீறப்படுகிறதோ என்றுகூட நாங்கள் கவலைப்படுகிறோம். ஓர் உண்மையை நான் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

பொதுமக்களிடத்திலே ஒரு கருத்து நிலவுகிறது. அது தவறாகக்கூட இருக்கலாம். ஆனால் ஒரு பொதுக்கருத்து, என்னவெனில், போலீஸ் துறையிலே இன்றைக்குப் பாரபட்சமாக நடந்துகொள்வது, அப்பாவி



மக்களைக் கைது செய்வது, பொய்க் கதைகளைக் கூறி, பொய் வழக்குகளைப் போடுவதற்கு யாருடைய கட்டாயத்தினாலோ அல்லது துன்புறுத்தலினாலோ அல்லது இந்த அரசிற்குத் தொடர்பில்லாத வேறு சில நபர்களோ கட்டாயப்படுத்துகிறார்கள்; அதனால்தான் இப்படி செய்யப்படுகிறது என்ற ஒரு கருத்து மக்களிடத்திலே பரவியிருக்கிறது. அப்படியொரு கருத்து நிலவுவது நாட்டுக்கு நல்லதல்ல. அரசேகூட முடமாக்கப்பட்டிருக்கிறது. யாருடைய கட்டாயங்களையோ நிறைவேற்றக்கூடிய வகையில் போலீஸ் துறை அவர்களிடத்திலே இருந்து உத்தரவு பெறுகிறது. பிறகுதான் அரசினுடைய கவனத்திற்கே வருகிறது என்றெல்லாம் சொல்லப்படுவது மக்களிடத்தில் அப்படியொரு கருத்து நிலவுவது நாட்டுக்கு நல்லதல்ல. எனவே, இதுகுறித்து முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் முதல்வர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்வது, தயவுசெய்து நாங்கள் திருப்பித் திருப்பி அதைத்தான் சொல்கிறோம். அப்பாவிகளைப் பிடிக்காதீர்கள். அவர்களை அலைக்கழிக்காதீர்கள். எந்தவொரு வழக்காக இருந்தாலும் தீர விசாரித்து, விசாரித்ததன் அடிப்படையிலே நீங்கள் நடவடிக்கை எடுங்கள். குற்றங்களுக்கு முகாந்திரம் இருக்கிறது என்றால்கூட நடவடிக்கை எடுங்கள். ஆனால் அப்பாவிகளை இப்படி கொடுமைப்படுத்துவது, அது ஏதோ வேறு காரணங்களுக்காகக் கொடுமைப்படுத்துவது என்றெல்லாம் மக்கள் பேசிக் கொள்கிறார்கள் என்றால் அது நன்மை பயக்காது. வேறு விளைவுகளைத்தான் நாட்டில் ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்ட வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. இந்த 16 பிள்ளைகள் இவர்களை முதல்வர் அவர்கள் நம்புகிறார்களா? இந்த 16 பிள்ளைகள் கொடுமையில் ஈடுபட்டார்களா அல்லது கொடுஞ்செயலைச் செய்தார்களா? இவர்களெல்லாம் Explosive Act அல்லது இந்த National Security Act-லே வைக்கக்கூடிய அளவுக்கு கொடுமைப்படுத்தியிருக்கிறார்களா? எங்களுக்குத் தெரிய வேண்டும். அப்படியிருந்தால் நாங்களும் உங்களோடு சேர்ந்துகொண்டு சொல்வோம், அவர்களை மட்டும் அல்ல, இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யக்கூடியவர்களை நீங்கள் கைது செய்யுங்கள் என்று. ஆனால் ஏதோ ஒவ்வொரு மாதமும் ஒரு பட்டியல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் இவர்களை நாம் கைது செய்தோம், காராக்கிரகத்திலே வைத்தோம். அவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையிலே பிறரையும் போடுவதற்கு பிடித்தோம் என்று தொடர் நடவடிக்கையாக இது நடந்து கொண்டிருப்பது எந்தவகையிலும் ஏற்புடையது அல்ல. நான் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், போலீஸ்காரர்களின் மீது எங்களுக்கு இருக்கக்கூடிய நம்பிக்கை அறவே இல்லாமல் போய்விட்டது. எனவே, அவர்கள் எடுக்கிற (குறுக்கீடு) உத்தரவு, நாட்டிலே போலீஸ் துறையைப்

பொறுத்தவரையில், நான் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே, காவல் துறையைக் கேட்பது, இது நாட்டுக்குத் தேவையான, தீமையான ஒரு நன்மை. இது இல்லாவிட்டாலும் நாடு சிறக்காது. இது இருந்தும் ஆக வேண்டும். இருந்தாலும் முறையாகச் செயல்பட வேண்டும். நாங்கள் கேட்பது முறையாகச் செயல்படுகிற காவல் துறைதான் வேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம். பாதுகாப்பு-இந்தக் காவல் துறை என்பது அதுவே எடுத்துவிட வேண்டுமென்று யாரும் சொல்வது கூடாது. சொல்லமாட்டார்கள். ஆனால், அதே நேரத்திலே அவர்கள் செயல்படும்போது முறையாகச் செயல்படுங்கள் என்று கேட்பது தவறா? எனவே, முறையாகச் செயல்படும் காவல் துறைதான் எங்களுக்கு வேண்டும். எனவே, காவல் துறையே முழுமையாக இல்லாமல் ஆகக வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை அல்ல.

முற்பகல் 11-05

இந்தத் துறை முறையாகச் செயல்பட வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை. முக்கியமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, நீங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளில் எந்தவிதமான பாரபட்சமும் இல்லை. அப்பாவிகளைப் பிடிக்க வேண்டும் என்ற உள்ளார்ந்த எண்ணம் இல்லை. அதுகூட யாரையோ திருப்தி செய்ய வேண்டும் என்பதற்காகச் செய்யப்படவில்லை சட்டத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகத்தான், நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்பதற்காகத்தான் அப்படிச் செய்யப்படுகிறது என்ற ஒரு எண்ணம், மேல்மட்டத்தில் இருப்பவர்களுக்கு, ஆட்சித் துறையிலே இருப்பவர்களுக்கு மட்டும் இருந்தால் போதாது. மக்களுக்கும் அந்த எண்ணம் பரவலாக ஏற்பட வேண்டும். அந்த எண்ணம் இல்லாவிட்டால் மிகப் பெரிய அபாயகரமான சூழ்நிலைகள் உருவாகும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அதைச் சுட்டிக்காட்டுவது எங்களுடைய கடமை. (மணியடிக்கப்பெற்றது) இருங்கள் சார்.

இன்னொன்று, இந்தக் காவல் துறையிலே பல நாட்களாக இருக்கிற கோரிக்கை. குறிப்பாக, வேலூர் மாவட்டத்திலே ஒரு மரபே இருக்கிறது. அந்த மாவட்ட எஸ்.பி.-யாக ஒரு முஸ்லீம் வரக்கூடாது. அப்படியொரு மரபு கடந்த காலத்திலே கடைபிடிக்கப்பட்டது. இப்போது ஒரு நிலை, என்னவென்றால் எங்களுடைய உரிமைதான் என்ன? காவல் துறையிலே நாங்கள் இருக்கக்கூடாதா? மாண்புமிகு அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 1978-லே சொன்னார்கள். எங்களுடைய ஜனத்தொகை என்ன என்று அன்றைக்கே அவர் சட்டமன்றத்திலே கொடுத்த, புள்ளிவிவரம் 5.8 சதவிகிதம் என்று சொன்னார். நான்



அதைத் திருப்பி கேட்டேன். 5.8 என்பது சரியோ தவறோ, அதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். ஆனால், காவல் துறையிலே முஸ்லீம்களுடைய சதவிகிதம் என்ன? எங்களுக்கும் அதிலே இடம் வேண்டும். இடம் இருந்தால்தான் எங்களுக்கு நம்பிக்கை வரும். எனவே, எங்களுடைய சமுதாயத்திற்கும் இடம் கொடுக்க வேண்டும். எவ்வளவு சதவிகிதம் என்று கேட்டால் எம்.ஜி.ஆர். அவர்கள் 1.8 என்ற விவரத்தை அன்றைக்கே சொன்னார்கள். அன்றைக்கே காவல் துறையிலே ஒட்டுமொத்தமாக முஸ்லீம்களில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஜனத்தொகை 5.8 சதவிகிதம். ஆனால், காவல் துறையிலே எங்களுக்குக் கொடுக்கப்பட்ட பிரதிநிதித்துவம் 1.8 சதவிகிதம். 1978-லே 5.8 சதவிகிதம்-1996-லே முஸ்லீம்களுடைய ஜனத்தொகை தமிழ்நாட்டிலே 5.6 சதவிகிதம். நான் அன்றைக்குகூட அதைச் சுட்டிக்காட்டினேன். நான் தங்களைக் கேட்டுக்கொள்வது. 5.6 சதவிகிதம் என்றே வைத்துக்கொள்வோம். தயவுசெய்து போலீஸ் துறையிலே ஒட்டுமொத்தமாக ஒதுக்கீடு தாருங்கள் என்று நாங்கள் கேட்பது. ஏதோ எங்களுக்கு இருக்கிற ஆசையை வெளிப்படுத்த வேண்டும் அல்லது அரசாங்கத்திற்குக் கட்டாயத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது எல்லாம் அல்ல. சமூகநீதிக் காவலரான தங்கள் காலத்திலேயாவது போலீஸ் துறையிலேயாவது இந்த சமூக நீதி வழங்கப்பட வேண்டும்...

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, சப்-இன்ஸ்பெக்டர் தேர்வுக்காக விண்ணப்பங்கள் கோரியதில விண்ணப்பங்கள் 31,099. அதிலே இஸ்லாமியர் அல்லாதவர்களுடைய விண்ணப்பங்கள் ... அதிலே இஸ்லாமியர் அல்லாதவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அதாவது இஸ்லாமியர் அல்லாதவர்கள். 720 பேர். அதாவது, 2.32 பர்சன்ட் இஸ்லாமியர் அல்லாதவர்கள். இஸ்லாமியர்களுடைய விண்ணப்பங்கள் 544. அதிலே தேர்ந்தெடுக்கப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர்கள் 17 பேர். அதாவது 3.13 பர்சன்ட்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** விண்ணப்பங்களின் அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது போதுமானது என்று முதல்வர் அவர்கள் கருதுவார்களேயானால்...

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, வருகிற விண்ணப்பங்களை வைத்துதான் தேர்வு செய்ய முடியும். விண்ணப்பங்களே வராவிட்டால் எப்படித் தேர்வு செய்ய முடியும்?

**திரு. ம. அப்துல் லத்தீப்:** துணைத் தலைவர் அவர்களே, அதனால்தான் நாங்கள் சொல்கிறோம். பொதுநிலையிலே எங்களுக்குக் கிடைப்பதில்லை. அதற்கு நான் யாரையும் பொறுப்பாகச் சொல்லவில்லை. தயவுசெய்து . . .

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது நிலையிலே கிடைக்க வேண்டும், கல்வி, வேலைவாய்ப்பில் என்பதற்காகத்தான், ஏற்கெனவே இதே மாமன்றத்தில் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பேசும்போதும், பிறகு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் நடைபெற்ற மாநாட்டிலே மறைந்த நண்பர் திரு. அப்துல் சமது அவர்கள் குறிப்பிட்டபோதும், முஸ்லீம்களுக்குத் தனியாக ஒரு இட ஒதுக்கீடு செய்வதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும் எதிர்காலத்தில் என்று குறிப்பிட்டிருக்கின்றேன். உச்ச நீதிமன்றத்திலேயிருக்கின்ற அந்த வழக்கு முடிந்தால்தான் அதைச் செய்ய முடியும் என்று அந்தச் சட்டரீதியான காரணத்தையும் எடுத்துக் கூறியிருக்கிறேன். நிச்சயமாக இந்த ஆண்டுக்குள் அந்த வழக்கு முடிந்து, வருகிற நிதிநிலை அறிக்கையிலே அதுபற்றி அறிவிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

**திரு. ம. அப்துல் லத்தீப்:** துணைத் தலைவர் அவர்களே, அதற்காக நாம் எப்பொழுதுமே நன்றி பாராட்டிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான் முதன்முதலாக முஸ்லீம்களுக்கு, பிற்பட்டோர் பட்டியலிலே இடம் கொடுத்தார்கள். அதை நாம் ஒருபோதும் மறக்க மாட்டோம். நாங்கள் திருப்பித் திருப்பிச் சொல்வது, யதார்த்த நிலைகளை. விளக்கம் நான் சொல்ல விரும்பவில்லை. யதார்த்த நிலைகளை எங்களுக்கு நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னால்தான் ஏதாவது கிடைக்கும் என்ற சூழ்நிலை நாட்டிலே இருக்கிறது. அதைத்தான் நாங்கள் திருப்பித் திருப்பிச் சொல்கிறோம். நீங்கள் அந்த வழக்குமன்ற வழக்குபற்றிச் சொல்லுகிறீர்கள். அது எனக்குத் தெரியும். ஆனால் இப்பொழுது இருக்கிற இந்த 69 சதவிகிதத்திலே பிற்பட்டோருக்காக ஒதுக்கீடு செய்திருப்பதிலே ஒரு சதவிகிதம் ஒதுக்கித் தாருங்களேன். அது உறுதி செய்யப்படும். (குறுக்கீடு) 69-ம் இருக்கும். 69-இலே, இப்பொழுது இருக்கிற பிற்பட்டோர் பட்டியலுக்காக நாம் ஒரு சதவிகிதம் வைத்திருக்கிறோம். அந்தப் பட்டியலிலே 30 சதவிகிதம் என்று சொன்னால்.....

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவரவர்களே, இப்பொழுது 69 இல்லை. அதுதான் உச்ச நீதிமன்றத்திலே வழக்கிலே இருக்கிறது. நாம் அதிலே ஒரு ஏற்பாடாக, இப்பொழுது அந்த 69-ஐ எப்படியாவது எட்ட வேண்டுமென்பதற்காகச் சில அதிகமான மாணவர்களை அதிலே சேர்த்து அந்த 69-ஐ எட்டுகிற ஒரு சூழ்நிலை



ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கின்ற பிற்படுத்தப்பட்டோர் அல்லது பொதுப் பட்டியல், இதிலேயிருந்துதான் எடுக்க வேண்டும். பொதுப் பட்டியலிலேயிருந்து எடுக்கும்பொழுது, இப்பொழுது 30 தான் இருக்கிறது. அதிலேயிருந்து எவ்வளவு எடுப்பது? பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து எவ்வளவு எடுப்பது? மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து எவ்வளவு எடுப்பது? தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலிருந்து எவ்வளவு எடுப்பது என்றால் ஒவ்வொரு பட்டியலிலேயிருந்தும் ஒரு பர்சென்ட் எடுத்தால்கூட அந்தப் பட்டியலுக்குச் சொந்தக்காரர்கள் சும்மாயிருப்பார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதனால்தான் ஏற்கெனவே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே சேர்க்கப்படாமல் இருந்த இஸ்லாமிய சமுதாயத்தை, சேர்க்கின்ற அந்த ஆணையை இதே சட்டமன்றத்தில் - வேறு யாரும் செய்யவில்லை - நான்தான் செய்தேன் என்பதை அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே ஒத்துக்கொண்டு நன்றி தெரிவித்திருக்கிறார். அதையும் மறந்துவிடக் கூடாது. அடுத்தகட்டமாக அது யோசிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறேன். உறுதி அளித்திருக்கிறேன். நான் உறுதி அளித்தால், அதிலிருந்து எப்போதும் பின்வாங்க மாட்டேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** துணைத் தலைவர் அவர்களே, நான் எப்பொழுதுமே அவர்களுடைய உள் உணர்வுகளை நன்றாக அறிந்தவன். அவர்களுக்கு மாறாகச் சிந்திப்பதைக்கூட சிந்திக்காதவன். எனவே, இருக்கிற நிலையிலே எங்களுக்கு உரிய சிக்கல்களை முதல்வர் அவர்கள் நன்றாக புரிந்துகொண்டிருக்கிறார். எனவே, இந்தச் சூழ்நிலையில் தயவுசெய்து நான் கேட்டுக்கொள்ள விரும்புவது (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். உங்கள் சிக்கலும் தெரியும். என் சிக்கலும் தெரியும். எல்லோருக்கும் ஒரே சிக்கலாக இருக்கிறது. என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை.

ஆகையினாலே, நான் கேட்டுக்கொள்வது, எங்களுக்கு . அந்தப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலேயிருந்துதான் கொடுங்கள். நான் தாழ்த்தப்பட்டோர் பட்டியலுக்குப் போகவில்லை; மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலுக்குப் போகவில்லை. பிற்படுத்தப்பட்டவர் பட்டியலிலே ஏதாவது ஒன்றை ஒதுக்கித் தாருங்கள் இப்பொழுது. அதற்குப் பிறகு வழக்குமன்றத்திலே தீர்ப்பு வந்த பிறகு நீங்கள் முறையாக அதை ஆய்வு செய்து தனியாக ஒரு முடிவெடுங்கள். தயவுசெய்து அந்தப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே எங்களுக்கு ஒரு இடத்தை ஒதுக்கி—ஏதாவது இருக்கட்டும், நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

நீங்கள் எது சாத்தியமோ அதைச் செய்து கொடுங்கள் என்றுதான் நாங்கள்...

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மன்னிக்க வேண்டும். துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலேதான் இப்பொழுது இஸ்லாமியர்கள் இடம் பெற்றிருப்பதால், அந்த சராசரிக் கணக்கில் அவர்களும் வர முடிகிறது. பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து ஒரு சதவிகிதத்தையோ, 2 சதவிகிதத்தையோ எடுத்துக்கொடுத்து விடுவதால், அவர்களுடைய தேவை நிச்சயமாக நிறைவு செய்யப்படமாட்டாது. அதுமாத்திரமல்ல. பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே உள்ள மக்கள் உடனடியாகக் கிளர்ச்சி செய்வார்கள். அதற்கு ஒத்துக்கொள்ள மாட்டார்கள். எனவே, அவ்வளவு சீக்கிரம் ஒரே வார்த்தையிலே முடித்துவிடக்கூடிய விஷயம் அல்ல இது. அவர்களும் நீதிமன்றத்திற்குச் செல்வார்கள், எங்களுடைய உரிமை பறிக்கப்பட்டு விட்டது என்று. எனவேதான், நாம் இப்பொழுது வாதாடி வருகின்றோம். கடந்த மத்திய அரசிலேகூட, அதிலே இடம்பெற்றிருந்த கட்சிகளும் சொன்ன அந்தக் கருத்துக்கள் —அதே கருத்தை ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்து வைத்திருக்கிறது — 'மாநில அளவில், இருக்கிற நிலைமைக்கேற்ப இட ஒதுக்கீடுகளைச் செய்து கொள்ள வேண்டும். அந்த அதிகாரத்தை அளிக்கின்ற வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்' என்ற இந்த நிலையை திராவிட முன்னேற்றக் கழகமும், பாட்டாளி மக்கள் கட்சியும், மதிமுக போன்ற கட்சிகளும் எடுத்து, ஏற்கெனவே அது பொது அறிக்கையிலே இடம் பெற்றிருக்கிறது. ஆனாலும், அதை நிறைவேற்ற முடியவில்லை. முடியாததற்குக் காரணம் எல்லோருக்கும் தெரியும். தொடர்ந்து, மாநில அரசுகள் தங்களுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு இட ஒதுக்கீடுகளைச் செய்துகொள்வதற்கான அரசியல் சட்டம் திருத்தப்பட்டால்தான், நம்முடைய லத்தீப் அவர்கள் சொல்லுகின்ற அந்த முறையில், எங்கிருந்து எடுத்துத் தருவது என்ற நிலையைக் கடைப்பிடிக்க முடியும். அதுவரையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்காகக் காத்திருக்க வேண்டியது அவசியமாகிறது. தீர்ப்பு எப்படியும் இந்த ஆண்டுக்குள் கிடைப்பதற்கான வழிவகைகளை இந்த அரசு நிச்சயமாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்து, அந்தத் தீர்ப்பு வந்தபிறகு இந்தப் பிரச்சினை நிச்சயமாகக் கவனிக்கப்படும் என்ற உறுதியை அளிக்கிறேன்.



முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** Conclude பண்ண வேண்டுமல்லவா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** எனவே, நான் இந்தப் பிரச்சினையை முதலமைச்சர் அவர்களுடைய மனசாட்சிக்கே விட்டுவிடுகிறேன்.

அடுத்து, நான் அவர்களை மிகவும் பணிவாகக் கேட்டுக்கொள்வது, தயவுசெய்து, சிறார்களை - குழந்தைகள் என்று சொல்லக்கூடியவர்களை அந்த வயது உடையவர்களை, அப்பாவிகளை எந்தச் சட்டத்தில் நீங்கள் இப்போதெல்லாம் கொடுமையான சட்டத்தின்கீழ் கைது செய்திருக்கிறீர்கள். அவர்களையெல்லாம் நீங்கள் தயவுசெய்து குறிப்பிட்ட குற்றம் இல்லாவிட்டால் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், உங்களுடைய மனப்பக்குவம், உங்களுடைய கருணை, நாட்டுக்குத் தெரிந்தது. அந்தக் கருணை தானாக வேலை செய்ய வேண்டும். அதிலே யாருடைய தாக்கமும் இருக்கக்கூடாது என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன் ....

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, யாருடைய தாக்கத்திற்கும் அடிபணிபவன் அல்ல இந்தக் கருணாநிதி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) யார் யார், யாருடைய தாக்கத்திற்கு அடிபணிவார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் யாருடைய தாக்கத்திற்கும் அடிபணிபவன் அல்ல. எனக்கென்று ஒரு தாக்கம் உண்டு. பெரியார் தாக்கம்; அறிஞர் அண்ணாவின் தாக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம், பேசுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** துணைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசி முடித்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு, பேச்சை நீட்டித்துக் கொண்டே போகிறீர்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** துணைத் தலைவர் அவர்களே, நான் நல்ல எண்ணத்தில் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள் அதைத் தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அவரைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், தயவுசெய்து, உங்களுடைய அதிகாரத்தை வைத்தாவது இந்த அப்பாவிகளை விடுதலை செய்யுங்கள். விளைவுகள் எதுவாக இருந்தாலும் . . .

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** யார் கைது செய்யப்பட்டாலும், யார் மீது குற்றம் சாட்டப்பட்டாலும், நீதிமன்றம்தான் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் உள்ளபடியே குற்றவாளிகளல்ல என்றால் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள். இடையிலே சென்று, இப்போது லத்தீப் அவர்கள் சொன்னதற்காகப் போய்த் திடீரென்று யாரையும் விடுவித்து விட முடியாது. ஏனென்றால், அவர்கள் மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகள் என்ன; என்ன காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பவைகளை எல்லாம் கவனிக்க வேண்டும். இதே அவையிலே, 'அவர்களையெல்லாம் விடுவித்து விடுங்கள்' என்று சொல்லமுடியாது. அன்றைக்கு வக்கீல்களுடைய பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள் அது இலேசாக எல்லோரும் சிந்திக்கக்கூடிய ஒன்று. எனவேதான், அவர்கள் மீது வழக்கு இருக்காது என்று திரு. லட்சுமணன் அவர்களுக்கு அன்றைக்கு உறுதியளித்தேன். அதைப்போல, இப்போது உறுதியளித்துவிட முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் முதலமைச்சர் அவர்களிடம் மனுவைக் கொடுத்து விடுகிறேன். அவரும் பார்த்து இருக்கிறார். நான் சாதாரண கேஸ்கள் பற்றிச் சொல்லவில்லை. ஸ்பெஷல் கேஸ் மூலமாக, விசாரணை இல்லாமல் இருக்கிறதே, அதைப்பற்றிச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பேசி முடித்துக்கொள்கிறார். அடுத்து, திரு. குத்தாலம் பி. கல்யாணம்.





**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டில் மிகச் சிறந்த நிர்வாகி என்ற பெயர் பெற்ற எங்களுடைய உயிருக்கும் மேலான தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்களால் முன் வைக்கப்பட்டுள்ள ஆயத்தீர்வைத் துறை, தீயணைப்புத் துறை, காவல் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது கருத்துக்களைச் சொல்கின்ற வாய்ப்பினை அளித்தமைக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆயத் தீர்வையைப் பொறுத்தவரையில், 1996-97 ஆம் ஆண்டில் ரூ.1,063.07 கோடியாக இருந்த வருமானத்தை, 1997-98 ஆம் ஆண்டில் ரூ.1,299.85 கோடியாக உயர்த்திய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நிர்வாகத் திறமையை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதிலேகூட, ஏலம் எடுக்கின்றபோது, சிண்டிகேட் முறையை ஒழித்து, அதன்மூலம் ரூ.518 கோடியை இந்த மாநில அரசினுடைய வருவாயிலே சேர்த்த பெருமை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உண்டு.

அதேபோல, தீயணைப்புத் துறையைப் பொறுத்த அளவில், தேசிய தீயணைப்புக் கல்லூரிக்கு இணையாக நாகபுரியிலே இருக்கின்ற அந்தக் கல்லூரிக்கு இணையாக, சென்னை மாநிலத்தினுடைய பயிற்சிப் பள்ளி மேம்படுத்தப்படும்; அதற்காக ரூ.4 கோடி ஒதுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இது பாராட்டத்தக்க ஒன்று.

தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்படுகின்றபோது என்னென்ன நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். சில இடங்களில் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்த நெறிமுறைகளுக்குக் கொஞ்சம் விதி விலக்களித்து, தீயணைப்பு நிலையங்கள் அமைக்கக்கூடிய இடங்களுக்கு கோரிக்கை வருகின்றபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

என்னுடைய தொகுதியில எரவாஞ்சேரியில் ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டுமென்று இரண்டாண்டு காலமாகக் கோரிக்கை வைத்திருக்கிறேன். அதேபோல என்னுடைய தொகுதியில் இருக்கிற பெரம்பூரில் ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதேபோல என்னுடைய தொகுதியில் இருக்கிற குடவாசல் மற்றும் குத்தாலம் தீயணைப்பு நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் திருவிடைமருதூர் தொகுதியில்

திருப்பனந்தாள் அல்லது அணைக்கரையில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கவேண்டிய ஒரு கட்டாயமான சூழ்நிலை இருக்கிறது. குடந்தையிலிருந்து ஏறத்தாழ 25 கிலோ மீட்டருக்கு மேலாக, திருவிடைமருதூரிலிருந்து அதே தொலைவில் - அந்த இடத்திலே அமைத்தால் நம்முடைய பெரம்பலூர் மாவட்டத்தில் இருக்கிற ஜெயங்கொண்டம் தொகுதியில் இருக்கிற பகுதிகள்கூட பயனடையக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருப்பனந்தாள் அல்லது அணைக்கரையில் ஒரு தீயணைப்பு நிலையத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவல் துறையைப் பொறுத்த அளவில் 'காவல் துறை பொதுமக்களுடைய நண்பனாக விளங்க வேண்டும். காவல் நிலையம் வருகின்ற அனைவருமே குற்றவாளிகள் என்ற வகையில் நடத்தப்படக்கூடாது' என்று சொல்லி, மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால், காவல் துறையின் நடவடிக்கைகளால், மத வெறி சக்திகள் ஒடுக்கப்பட்டிருக்கின்றன என்று கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பது நூற்றுக்கு நூறு உண்மை, பாராட்டத்தக்க ஒன்று.

இன்னொன்று, காவல் துறையைப் பொறுத்த அளவில் இரண்டு முறை அந்தத் துறைக்கு போலீஸ் கமிஷன் அமைத்து, இந்தியாவிலேயே முன்னோடியாக இந்த மாநிலம் காவல் துறையில் அமைவதற்கு வித்திட்டவர் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள். 1970-ல் கோபால்சாமி ஐயங்கார் தலைமையில் ஒரு கமிஷன், 1989-ல் சபாநாயகம் தலைமையில் ஒரு கமிஷன் என்று இரண்டு முறை போலீஸ் கமிஷன் அமைத்து காவல் துறையினுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிய நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது பொறுப்பேற்கிறபோது, சீர்கெட்டிருந்த அந்தக் காவல் துறையை எப்படி நடமாடவிடப் போகிறார்கள் என்று நாடே நினைத்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்களே இந்தச் சட்டமன்றத்திலே சொன்னார்கள் - 70 சதவிகிதம் கெட்டுப்போன ஈரலோடு இருக்கிற இந்தக் காவல் துறையை 30 சதவிகிதம் சரியாக இருக்கிற அந்த ஈரல் பகுதியை வைத்துக்கொண்டு, தூக்கி நிறுத்துகின்ற அந்தப் பணியிலே நான் ஈடுபட்டிருக்கின்றேன் என்று சொன்னார்கள். ஆங்கிலத்திலே ஒரு வாசகம் உண்டு. ' It is better to light a candle than to curse the darkness ' என்று சொல்வார்கள். 'இரவாக உள்ளதே என்று தவிப்பதைவிட, அந்த இருட்டைப் போக்க ஒரு மெழுகுவர்த்தி ஏற்றுவது நலம்' என்பதைப்போல அன்றைக்கு உங்களுடைய வாசகம் இந்த மாமன்றத்திலே அமைக்க [illegible] தூரம் வெற்றி



பெற்றிருக்கிறீர்கள் என்பதை இன்றைக்கு 'தினமலர்' பத்திரிகையில் வந்திருக்கின்ற ஒரு சிறப்புச் செய்தி மூலம் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அந்தச் செய்தி - "காவல் துறையில் ஈரல் 75 சதவிகிதம் கெட்டு விட்டது ; அதனைச் சரி செய்யவேண்டிய மிகப் பெரிய பொறுப்பு உள்ளது என்ற பிரகடனத்துடன் கடந்த 1996 ஆம் ஆண்டு முதல்வர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அதன் பின்னர் அவர் மேற்கொண்ட கடும் முயற்சி காரணமாக கெட்டுப்போன ஈரல் பெருமளவு சரி செய்யப்பட்டுவிட்டது. காவல் துறை சரியாக இயங்கிக் கொண்டிருக்கிறது" என்ற சான்றை இன்றைக்கு 'தினமலர்' பத்திரிகை சிறப்புச் செய்தியாக வழங்கியிருக்கின்றது.

இந்தக் காவல் துறைக்கு என்று இருக்கிற ஒரு சிறப்புமிக்க, பாரம்பரியமான ஒரு கட்டடத்தை சென்ற ஆட்சியிலே அதை இடித்துவிடுவோம் என்று முயற்சித்தபோது, அதைத் தடுத்து நிறுத்தி, இன்றைக்கு ஒரு அழகான மாளிகையாக அந்த காவல் துறை தலைமை அலுவலகத்தை உருவாக்கித் தந்து, நமது வணக்கத்திற்குரிய மேயர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அமர்ந்திருக்கின்ற அந்த ரிப்பன் மாளிகைக்கு அடுத்து ஒரு வெள்ளை மாளிகையை உருவாக்கித் தந்துள்ள மிகப் பெரிய பெருமைக்குச் சொந்தக்காரர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாவட்டக் கண்காணிப்பாளர்கள், மாவட்டங்களில் பணியாற்றுகிறபோது, யார் இந்தப் பணியைச் சிறப்பாகச் செய்கிறோம், அதிலே மாநில அரசினுடைய பாராட்டைப் பெறுகிறோம் என்ற அளவுக்கு ஒரு போட்டி மனப்பான்மையை, Competitive spirit என்பார்களே, அதைப்போல் ஒரு உணர்வை உருவாக்குகிற ஒரு கொள்கைக் குறிப்பு இதிலே இடம் பெற்றிருக்கிறது. காவல் துறையினருக்கான பயிற்சித் திட்டத்தில், மனித உரிமையையும் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தியது வரவேற்கத்தக்க ஒன்று.

இன்னொன்று, மனித உரிமைகள் பாதிப்புக்கு ஆளாகிவிடக் கூடாது என்பது இந்த அரசினுடைய ஆணை. காவலர்களுக்கு அருங்கொடையாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருப்பது, இரண்டாம் நிலைக் காவலர்களாக பணிக்கு சேருகின்றவர்கள் 10 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்நிலை காவலர்கள், இன்னும் 5 ஆண்டுகளுக்குப் பிறகு, தலைமை காவலர், 25 ஆண்டுகளுக்குப் பிறகு உதவி ஆய்வாளர். இன்னும் சொல்லவேண்டுமானால், இந்த மாநிலத்தினுடைய நிதிநிலை நெருக்கடியைக்கூட பாராமல், மைய அரசு அளிக்கிற கூடுதலான

உயர்வை காவல் துறைக்கு அளித்து இருக்கிற பெருமைக்குச் சொந்தக்காரர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*முற்பகல் 11-25*

கருணை அடிப்படையில் வேலை கொடுக்கிறபோது, பணியிலே இருக்கிறவர்கள் இறந்தால் மட்டுமல்ல, அவர்களால் வேலை செய்ய முடியாமல், மருத்துவ அடிப்படையில் தகுதி இழந்து விடுகிறவர்களுக்குக்கூட, 50 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு அந்த முறையான வாரிசுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய சலுகைகள் கிடைக்கும் என்று அறிவித்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்று.

இன்னும்கூட, இந்த நாட்டைப் பொறுத்தவரையில் சட்டம்-ஒழுங்கு சரியாக இருக்கிறது. சட்டம்-ஒழுங்கு நம்முடைய மாநில நிர்வாகத்திலே இருக்கிறது, முதலமைச்சருடைய கையிலேதான் இருக்கிறது, காவல் துறையிலேதான் இருக்கிறது என்பதற்கு மூன்று எடுத்துக்காட்டுகளைச் சொல்ல விரும்புகிறேன். 14-2-1999 அன்று கோவையில் தீவிரவாதிகளால் அறிவிக்கப்பட்ட முதலாம் ஆண்டு நினைவு நாள், மத்திய உள் துறை அமைச்சர் அத்வானி அவர்கள் வருகை தந்த 6-2-1999, 28-1-1999 முதல் 31-1-1999 வரை சென்னையில் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டி; இவ்வளவையும் ஒரு சிறு பிரச்சினைகூட இல்லாமல், சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகூட எழாமல் மிகத் திறமையாக நிர்வகித்த மிகப் பெரிய திறமைக்குச் சொந்தக்காரர்கள், இந்தக் காவல் துறையும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும்தான்.

இன்னும்கூட நான் சொல்கிறேன், பாரதீய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டு தலைவர்களில் ஒருவரான திரு. இல. கணேசன் அவர்கள் 1-4-1998-லே ஒரு செய்தி சொல்லி, அது தினகரன் பத்திரிகையிலே வந்தது. அவர் என்ன சொல்கிறார் என்றால், தீவிரவாதமும், பயங்கரவாதமும், வெடிகுண்டு கலாச்சாரமும ஜெயலலிதா ஆட்சியிலேதான் இந்த நாட்டிலே பரவியது-சொல்லிவிட்டு சொல்கிறார்—இவற்றையெல்லாம் தமிழக அரசின் காவல் துறை மிகச் சிறப்பாக செயல்பட்டு, பயங்கரவாதிகளையும் வெடிகுண்டுகளையும் தேடி கண்டுபிடித்துள்ளது என்று ஒரு சான்றை அவர் அன்றைக்கே வழங்கியிருக்கிறார்.

இன்னும்கூட சொல்லவேண்டுமென்றால் தினமணி பத்திரிகையில், 4-5-1998-ல் கோவையில் வெடிகுண்டு சம்பவம் நடந்து இரண்டு மணி



நேரத்திற்குள்ளாக கலவரத் தீயை முற்றிலும் அணைத்து, மேற்கொண்டு உயிர்ச் சேதமும், பொருள் சேதமும் ஏற்படாது, தமிழ்நாடு முழுவதும் அமைதியை நிலைநாட்டிய கலைஞரின் திறமையை உலகமே பாராட்டுகிறது. இது தினமணி பத்திரிகை 4-5-1998-ல் கொடுத்திருக்கிற ஒரு சான்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்பு நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய கவன ஈர்ப்புக்கு பதில் சொல்கிறபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இதை மனசாட்சியோடு சிந்திக்க வேண்டுமென்றால் இதற்கு முன்னாலே ஆட்சியிலே இருந்த ஒரு முதலமைச்சர் இந்த வார்த்தைகளைச் சொல்லி இருப்பார்களா? அப்படி ஒரு போலீஸ் அதிகாரி சொன்னால் அவர் ஒழுங்காக வேலை பார்க்க முடியுமா என்பதை எண்ணிப் பார்ப்பதற்காக சொல்கிறேன் என்று அவர் சொல்கிறபோது சொன்னார், ஒரு அதிகாரி என்னிடத்திலே கேட்டார், குறுக்கீடு இல்லை என்றால் நான் வந்து பணியாற்றுகிறேன் என்று சொன்னார், குறுக்கீடு இருக்காது, பணியாற்றுங்கள் என்று ஒரு முதலமைச்சரே உறுதிமொழி கொடுத்தார், உத்தரவாதம் கொடுத்தார் என்ற நிலையை மாண்புமிகு முதலமைச்சர் இந்த மன்றத்திலே தெரிவித்தபோது, என்னைப் போன்றவர்கள் உண்மையிலே மெய்சிலிர்த்துப் போனோம்.

இதுவொரு Rule of Law. சட்டத்தின் ஆட்சிக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்துக்கொண்டிருக்கிற மரியாதையின் அடையாளமாகும். இன்னும்கூட. . . (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்போதாவதுதான் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது, இன்னும் சிறிது நேரம் கொடுங்கள்.

இந்த மன்றத்தில், காவல் துறையில் இருக்கிற அதிகாரிகள், காவலர்களுக்கு என்னுடைய பணிவான வேண்டுகோளை, அவர்கள் உணர்வதற்கு எடுத்துரைக்க விரும்புகிறேன். இதுவொரு Secular State மத சார்பற்ற ஆட்சி. இந்த ஆட்சியிலே பணியாற்றுகிற அதிகாரிகள், அவர்களுடைய தனிப்பட்ட மத உணர்வுக்குள்ளே நான் புக விரும்பவில்லை. ஆனால் ஐயப்பசாமி பக்தர்களாக மாறி, அந்த உடையோடு பணியாற்றுவது நியாயமாக இருக்குமா என்பது என்னுடைய கேள்வி. காரணம் அவர்களால் எல்லா இடத்திற்கும் செல்ல முடியாது. Post-mortem செய்கிற இடத்திற்கு செல்லமாட்டார்கள். குற்றவாளிகளைக்கூட கொஞ்சம் force செய்து அவர்களாலே பிடிக்க முடியாது.

எனவே, அப்படிப்பட்ட நிலை இருக்கிறபோது, இராணுவத்திலே இருக்கிற கட்டுப்பாட்டைப்போல காவல் துறையினரும் அதைப் பின்பற்ற வேண்டும் என்ற உத்தரவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

இன்னும் ஒன்று, எப்படிப் போராளிகளை அடக்கினீர்களோ, பயங்கரவாதிகளை அடக்கினீர்களோ, அதுபோல நிதி நிறுவனங்கள் என்ற பெயரில் பொது மக்களை ஏமாற்றுகிற, சட்டையிலே அழுக்கு ஏறாத ஒரு குற்றம் White Collar Crime, இது அதிகரித்து வருவதை நிறுத்தக்கூடிய பணியில் இந்த மாநில அரசு ஈடுபடுவதை நான் பாராட்டுகிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்து, இந்தக் கள்ளச் சாராயத்தைப் பொறுத்த அளவில், அவர்கள் நடவடிக்கை எடுக்கிறபோது ஒரு சிக்கல் வருகிறது. காவல் நிலைய அதிகாரி சரியாக இருந்து நடவடிக்கை எடுக்கிறபோது, இன்னொரு காவல் நிலையத்தினுடைய அதிகார எல்லைக்குச் சென்று இருக்கிறார்கள். அங்கே கொஞ்சம் நெருக்கினால், இங்கே வந்துவிடுகிறார்கள், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், எங்களுடைய ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில், இன்றைக்கு மூன்றாக இருக்கிற அந்த மாவட்டத்தில், வடமட்டம் என்ற ஊர், அதிலே 3 மாவட்ட எல்லைகள் வருகின்றன. திருநீலக்குடி காவல் நிலையம், பாலையூர் காவல் நிலையம், எரவாஞ்சேரி காவல் நிலையம், ஒரு காவல் நிலையத்திலே நெருக்கினால் அடுத்த எல்லைக்குச் சென்று விடுகிறார்கள். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்வது, எப்படி ஒரு திருட்டுக் குற்றத்திற்கு எந்த இடத்திலே திருடினாலும் திருடப்பட்ட இடத்திலே இருக்கிற அதிகாரிக்கு அந்தத் திருட்டைக் கண்டுபிடிக்கிற அதிகாரம் வழங்கப்படுகிறதோ அதுபோல அந்தக் குற்றத்தைச் செய்கிறவர் எந்த ஊரைச் சேர்ந்தவரோ அந்த எல்லைக்குள் இருக்கிற காவல் நிலையத்திற்கு அந்த அதிகாரத்தை வழங்கி, ஒரு முழுமையான நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. சி. வேலாயுதன்:** பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.



**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராணுவத்தில்கூட சீக்கியர்களுக்கு அவர்களுடைய மத அடிப்படையில் தாடி, குடுமி எல்லாம் வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால் மத உரிமை அடுத்தவர்களைப் புண்படுத்துவதாகவோ அல்லது வேலைக்குத் தடங்கல் வரும் என்றோ இருந்தால் அது பரிசீலிக்கப்பட வேண்டியதுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்,

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் சொல்லி உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடவாசலைத் தலைமையிடமாகக் கொண்டு, குடவாசல், எரவாஞ்சேரி, வலங்கைமான், கொறடாச்சேரி, அரித்துவாரமங்கலம் இவைகளை உள்ளடக்கிய ஒரு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் கோட்டம் குடவாசலில் உருவாக்க வேண்டுமென்று கருத்துரு அரசுக்கு வந்திருக்கிறது. அதைச் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தில் மட்டுமே நான் சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு) தமிழ்நாட்டில் தீயணைப்புத் துறை இருக்கிறது. ஆயத்தீர்வைத் துறை இருக்கிறது. அவற்றுக்குள்ளே போக நேரம் இல்லை என்பதால் இந்த மானியத்தின் மீது மட்டும் பேசலாம் என்று சொன்னேன்.

காவல் துறையைப் பொறுத்தவரைக்கும் நடவடிக்கைகள் கடந்த மூன்று ஆண்டுகளில் குற்றங்களை ஒடுக்குவதில், கட்டுப்படுத்துவதில் ஒரு திருப்திகரமான முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்ல முடியாது. ஆனால் ஒரு திருப்திகரமான முன்னேற்றத்தை உருவாக்க வேண்டுமென்கிற அந்தரங்க சுத்தியோடு துறைக்குப் பொறுப்பேற்று இருக்கிற முதலமைச்சர் இயங்குகிறார் என்பதில் எந்தவிதமான மாற்று அபிப்ராயம் இல்லை. அந்த நோக்கம் நடைமுறையில் நிறைவேற்றுவதற்குரிய சில செயல்களும்

நடந்து வருகின்றன; அவற்றையும் நான் மறுக்கவில்லை. ஆனால் நடைமுறையில் இருக்கிற சில பிரச்சினைகளை அரசின் கவனத்திற்கு இந்த விவாதத்தின்போது கொண்டு வருவதற்காகவே நான் குறிப்பாக சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏன்? தமிழகத்தில் போலீஸ் செயல்பாட்டிற்கு மையமான சவாலாக இருப்பது எது என்று பார்த்தால் ஜாதிமத மோதல்கள்தான். சமூகம் உள்ளுக்குள் சிதைக்கப்பட்டு விடுகிறது. அவர்களின் மனம் அழுகிப்போகின்ற முறையில் சில விஷயங்கள் விதைக்கப்பட்டுவிடுகின்றன. அதன் காரணமாக பிரச்சினைகள் வந்துவிடுகின்றன. ஆகவே, நான் மாநில முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் என்பதை நான் அறிவேன். எனவே, வருகிற காலத்தில் உயர் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். மத ஜாதி மோதல்களைத் தோற்றுவிக்கின்ற தீய சக்திகளை சமூகத்திலிருந்து தனிமைபடுத்தவும், அவற்றை ஒடுக்கவும், நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பிறிதொரு இடத்தில் குற்றத்தை ஒடுக்குவது என்பது ஒரு முறை. குற்றத்தைச் செய்யத் தூண்டுகிற சமூக நிர்பந்தங்களை உதிர வைப்பதற்கான போராட்டத்தையும் நாம் நடத்த வேண்டும். ஒரு முனையில் குற்றத்தை ஒடுக்குவது, பிறிதொரு முனையில் குற்றத்தைச் செய்ய தூண்டுகிற தீய கருத்துக்களை ஜனங்களின் நெஞ்சிலிருந்து உதிர வைப்பதற்குரிய நடைமுறை யுக்திகளை உருவாக்க வேண்டும். அது அரசியல் முனையில் செய்யப்பட வேண்டிய ஒன்று. அவற்றையும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

அடுத்து, இந்த வீரப்பன் விஷயம். இந்த வீரப்பன் விஷயத்தைப் பொறுத்தவரையில், வீரப்பனைப் பற்றி நான் இப்போது பேச நேரம் இல்லை. ஆனால், வீரப்பனைப் பிடிக்கிறோம் என்ற பெயரால் சிறப்பு அதிரடிப்படை, கர்நாடகா, தமிழகம் இரண்டும் மையம்கொண்ட பகுதிகளில் மனித உரிமை மீறல் மிகக் கடுமையாக நடந்திருக்கிறது என்பதை மாநில அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இன்னும் மனித சமுதாயத்தின் நெஞ்சில் பிறருக்கு உதவுகிற ஈரம் முற்றிலும் காய்ந்துவிடவில்லை என்பதை அடையாளம் காட்டுவதற்காக மதுரையைச் சேர்ந்த சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், பெங்களூரைச் சேர்ந்த ஒரு நிறுவனமும் அதேபோல, தமிழ்நாடு பழங்குடியினர் சங்கமும் இணைந்து சமீபத்திலே மனித உரிமை மீறலால் பாதிக்கப்பட்டவர்களின் மாநாடு குளத்தூரிலே, சேலம் மாவட்டத்தில் நடத்தியது. அதிலே கொடுக்கப்பட்ட விஷயங்களை, உண்மையிலேயே



நான் படித்தவுடன் என் நெஞ்செல்லாம் பதறியது. கண்கள் எல்லாம் உண்மையிலேயே தீ பற்றி எரிகிற அளவுக்கு ஒரு ஆத்திரத்தை உருவாக்குகிறது. அவ்வளவு கொடுமையான ஒடுக்குமுறைகள் நடைபெற்று இருக்கின்றன இந்த 20 ஆம் நூற்றாண்டு முடிகிறபோது. குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், எந்தச் சூழ்நிலையிலும் நிரபராதி தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது. அது நடந்திருக்கிறது. எனவே, இது பற்றி விரிவான விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. அந்த விவரங்களுக்குள்ளே நான் போவது பொருத்தமற்றதாகிவிடும். ஒரே ஒரு வேண்டுகோளை மாநில முதலமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு முழு நம்பிக்கை உண்டு. இந்த விஷயங்கள் முழுவதும் முதலமைச்சர் அவர் கண்கொண்டு படிப்பாரேயானால், சர்வ நிச்சயமாக அதற்குத் தீர்வு செய்வார் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு. எனவே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், அதிரடிப்படையின் நடவடிக்கைகளால், வீரப்பன் சம்பந்தப்பட்ட ஏரியாக்களில் வாழ்கின்ற பழங்குடிகள், சாமான்யப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கின்ற மனித அநீதியைக் குறித்து விசாரிக்க ஒரு நீதிபதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு நீதி விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, கோவையிலே சாலையோரப் பிரச்சினை. அது பற்றியும் நான் விரிவாகச் சொல்ல முடியாது. சாலை வியாபாரம் என்ன என்பது பற்றியெல்லாம் எனக்கு சில கண்ணோட்டங்கள் உண்டு. அது உலகளாவிய பிரச்சினையும்கூட. அதிலே, சென்னை உயர்நீதிமன்றத்திலே தீர்ப்பைப் பெற்று, கோவை ராஜ வீதியிலே, தெருவிலே கடை போட்டிருக்கிறார்கள். கடை போட்டு விற்றுக்கொண்டிருந்தவர்களை, பி.1 போலீஸ் ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டர் குமார் என்பவர் திடீரென்று போய் - நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று நான் ஒருபோதும் சொல்லவில்லை. போலீஸ் சட்ட ரீதியான தங்களின் நடவடிக்கையை மேற்கொள்வது தவறு என்று சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை. ஆனால், நான் இங்கே குறிப்பிட விரும்புவது, அந்த பி.1 சப்-இன்ஸ்பெக்டர் திடீரென்று போய் சாலையோரத்திலே வியாபாரம் செய்கின்றவருடைய அதாவது மாணவர்களுக்கு கொடுக்கிற பை, செருப்பு மற்றும் அவர்கள் வைத்திருக்கின்ற எல்லா சாமான்களையும் பிளேடால் அறுத்து சர்வநாசப்படுத்திவிட்டார். அது முழுவதும் என்னுடைய அறையிலே இருக்கிறது. நான் அவற்றை இங்கே கொண்டுவர விரும்பவில்லை. இவ்வளவு சேதாரப்படுத்த வேண்டியது அவசியம்தானா? இதெல்லாம் போலீசார் செய்ய வேண்டிய வேலைதானா என்பதை தயவுசெய்து

விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுகுறித்தும் நான் முதலமைச்சர் அலுவலகத்திற்கு ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறேன். அதனுடைய பொதுச் செயலாளர் அவர்களும் ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். இன்னொன்றையும் அவர் சொன்னார். இதேமாதிரி இருந்தீர்களானால் பெட்ரோல் ஊற்றி தீ வைத்து கொளுத்திவிடுவோம் எல்லா பொருள்களையும் என்று சொல்லிவிட்டுப் போய் இருக்கிறார்கள். நான் சொல்வது, அத்துமீறி நடு ரோட்டில் என்பதல்ல. அவர்கள் சாலையோரத்தில் சென்னை உயர்நீதிமன்றத்தின் அனுமதியோடு கடை நடத்துகிறார்கள். இவருடைய ஜபர்தஸ்தைக் காட்டுவதற்காக இப்படியெல்லாம் போய் தலையிடுவது நல்லதல்ல. அந்தச் சம்பந்தப்பட்டவர்கள் மீது விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னொரு விஷயம். தொழிலாளர்கள் மீது இப்போது பல இடங்களில் வழக்கு வந்துவிடுகிறது. 506/2 போட்டு விடுகிறார்கள். நான் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, எந்தத் தரப்பிலிருந்து வன்முறை வந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், பிரச்சினை என்னவென்றால், ஒரு Labour dispute வருகிறது. தனியார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராடினார்கள். சத்தியமங்கலத்திலே, ஈரோட்டிலே வேறு பல இடங்களிலே போராடினார்கள். போராடி சட்டவிரோதமாக நீக்கிவிட்டார்களே என்ற ஆத்திரத்தில் அவர்கள் சாலை மறியல் செய்தார்கள்; பஸ்சை மறித்தார்கள். பஸ்சை மறித்தவுடன் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்மீது 506/2 போடப்பட்டுவிட்டது. அவர்களை ஜாமீனில் எடுப்பதற்கு 18 நாட்கள் ஆகிவிடுகிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால், பிரச்சினைகளில், குற்றத்திற்குரியபடி செக்ஷன் போட வேண்டும். அதுவும் தொழிலாளர் dispute-லே எல்லாம் 506/2 போட்டால் 18 நாட்கள் போட்டு, அவர் சென்னை ஹைக்கோர்ட்டிலே வந்து ஜாமீன் எடுப்பதற்குள் அவர் அம்மா வார்த்த பால் வெளியிலே வந்துவிடும் சம்பந்தப்பட்டவனுக்கு. ஆகவே, அந்தமாதிரி பிரச்சினை வரக் கூடாது என்பதற்கு தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஆர்ப்பாட்டங்கள் சில குறிப்பிட்ட இடங்களிலே மட்டுமே நடத்தப்பட வேண்டுமென்று கட்டுப்படுத்துவது சரியல்ல. ஜனநாயகத்தில் சில கருத்துக்களை வெளியிடுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, காவல் துறையிலே ஒரு பிரச்சினை இருக்கிறது. நானே முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தவுடன்,



சம்பந்தப்பட்ட Head Constable எழுதிய கடிதத்தில் சில தவறுகள் இருந்தாலும்கூட, அதைப் பெரிய மனதோடு முதலமைச்சர் அவர்கள் மன்னித்து பரிவுணர்வோடு அவர் மீண்டும் வேலையில் அமர்த்தப்படுவார் என்று அறிவித்து இருக்கிறார்கள் திருப்பூரை சேர்ந்த குணசேகரன் என்ற Head Constable விஷயத்தில்.

*முற்பகல் 11-40*

நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, மார்க்கை அவர்களுக்குத் தெரிவித்தால் அதில் என்ன தவறு வந்துவிடும் என்று எனக்குப் புரியவில்லை. எனவே, தயவுசெய்து முதலமைச்சர் அவர்கள் சிந்தித்து, இந்த விஷயத்தில் ஒருவர் தேர்வு செய்யப்படுகிறபோது, அவருக்கு மார்க்கை தெரிவிப்பதை மறுக்கக் கூடாது; உன்னுடைய மார்க் இதுதான் என்பதைத் தெரிவிக்கிற வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்; அப்படி வாய்ப்பு வழங்க மறுப்பது சரியல்ல.

சம்பந்தப்பட்ட Head Constable முதலமைச்சர் அவர்களுக்கு நேரடியாக எழுதியதை வைத்து கோயம்புத்தூர் காவல் கண்காணிப்பாளர் சஸ்பெண்ட் செய்தார்; மறுபடியும் சேர்த்துக் கொண்டார். இப்போது என்ன செய்துவிட்டார்கள் என்றால், எம்.எல்.ஏ. தலையிட்டுத்தானே சேர்த்துக் கொண்டார்கள்; நீ அங்கே இருந்துவிடுவதைப் பார்க்கிறேன் என்று சொல்லி எங்கேயோ தூக்கி அடித்துவிட்டார்கள்; கோயம்புத்தூருக்கு கடைசியில், சிறுவாணிக்கு அருகில் இருக்கிற காருண்யா நகருக்கு போட்டுவிட்டார்கள். நான் முதலமைச்சரிடம் தனிப்பட்ட முறையில் பல முறை பரிந்துரை செய்தேன். அதில் தவறு இருந்தாலும்கூட, அதை நான் பரிந்து வலியுறுத்தியதால், அதை ஏற்றுக்கொண்டு வேலை போடச் சொன்னார்கள். அவரை நல்ல Head Constable என்ற முறையில் அவரை திரும்ப அனுப்பர்பாளையம் ஸ்டேஷனில் போடாமல், வேறு இடத்திலே போட்டுவிட்டார்கள். அதை மாற்றி அங்கேயே போடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிறைவாக ஒன்றிரண்டு கோரிக்கைகளைச் சொல்லிவிட்டு முடித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் நிதி நிறுவனங்களிலே மோசடி நடந்து இருக்கிறது. இந்த நிதி நிறுவன மோசடிகளிலே சில இடங்களில் குற்றப் பத்திரிகைகள் இன்னும் தாக்கலாகவில்லை. அது 2½ வருடங்களாகியும் காலதாமதம் ஆகிறது. அதுபோல, முன்னாள் டி.ஜி.பி. ஒருவர் சம்பந்தப்பட்ட நிதி நிறுவனம் இருக்கிறது; அவர் இதுவரை கைது செய்யப்படவில்லை. அவர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால், கைது செய்யப்படவில்லை. அந்த

நிதி நிறுவன மோசடியில் முக்கியமாக மாஸ்டராக இருந்து இருக்கிறவர். அந்தமாதிரி நபர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சுப்பராயன் குறிப்பிட்டதுபோல, நிதி நிறுவனங்களில் ஏமாற்றப்பட்டவர்களுடைய எண்ணிக்கை 1,12,456 பேர்; தமிழ்நாட்டு மக்கள் 1,12,456 பேர் ஏமாற்றப்பட்டு இருக்கிறார்கள். 58 நிதி நிறுவனங்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் ஏமாற்றிய மொத்தத் தொகை 231 கோடி ரூபாய். 58 வழக்குகளில், 29 வழக்குகளுக்கு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என்பதை திரு. சுப்பராயன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வழக்குகளை விசாரிக்கத் தனி நீதிமன்றமும் அமைக்கப்பட்டு, விசாரணையும் நடைபெற்று வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு என்னுடைய நன்றி. மிக வேகமாக நடந்து கொண்டிருக்கிறது, ஆனால், முன்னாள் டிஜிபி. மாதிரி நபர்கள் இன்னும் கைது செய்யப்படாமல் இருக்கிறார்கள் என்பதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த முன்னாள் காவல் துறை அதிகாரி முன் ஜாமீன் பெற்ற காரணத்தினால், அவர் கைது செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, எப்படியெல்லாம் தாங்கள் உள்ளே போகாமல் செய்துகொள்வது என்கிற முறையிலே சிந்திப்பதிலே தேர்ந்தவர்கள்தான் அத்தகைய அதிகாரிகள்; எனவே, அவர்கள் அப்படித்தான் சிந்திப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். அப்படி அவர்கள் சிந்தித்து இந்தமாதிரி சந்துபொந்து, இண்டுஇடுக்குகளிலே தப்பித்துக்கொள்கிற இந்த உயர் அதிகாரிகள் உண்மையிலேயே தண்டிக்கப்பட வேண்டியவர்கள். இப்ப இருக்கிற போலீஸ்காரர்களைப்பற்றி அவர்களுக்குக் கவலையே கிடையாது. நேரம் இல்லை. நான் இரண்டொரு விஷயங்களைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். மணி அடித்தால், மனம் டிஸ்-ஆர்டர் ஆகிவிடும். ஆகவே, என்னுடைய இரண்டொரு கோரிக்கைகளை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.



சந்திரசேகரனுக்கு துரித பதவி உயர்வு என்ற அடிப்படையில், அவருக்கு துரித பதவி உயர்வு வழங்க அரசு கருணையுடன் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, 1993 ஆம் ஆண்டு Second Grade Constable தேர்வில் முழுத் தேர்ச்சி பெற்று இன்னும் பணி நியமனம் ஆணை கிடைக்காமல் இருக்கிற 329 பேர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்படும் என்று கடந்த ஆண்டே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி அவர்களுக்கு பணி நியமன ஆணை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், போலீஸ்காரர்கள்பற்றி நான் போன முறையும் சொன்னேன். போலீஸ்காரர்கள் தேவாங்கு மாதிரி காலம் பூராவும் காத்துக்கொண்டே இருப்பார்கள் தேவாங்கை பார்த்து இருப்பீர்கள். ஹவுசிலே பார்த்தால்கூட அவர்கள் அப்படியே நின்று கொண்டிருப்பார்கள். அந்த நிலைக்கு அவர்கள் ஆட்படுத்தப்பட்டுவிட்டார்கள் போலீஸ்காரர்கள். எனவே, போலீஸ்காரர்களின் நியாயமான உரிமை மதிக்கப்பட வேண்டும் என்பதற்காக நான் இங்கே குறிப்பிட விரும்புவது, சில பேர் 33 வருடங்களாக போலீஸ்காரர்களாகவே இருந்து ரிடையர் ஆகிவிடுகிறார்கள். அவர்கள் சல்யூட் அடித்தே காலம் முடிந்துவிடுகிறது. அவர்கள் ஒரு இடத்திலேயாவது சல்யூட் வாங்க வேண்டாமா? சல்யூட் அடித்தே அவர்கள் வாழ்க்கை முடிந்துவிடுகிறது. ஆகவே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்ள விரும்புவது 25 ஆண்டுகள் நிறைவு பெற்றவர்களுக்கு, 10 ஆண்டுகள் தலைமைக் காவலர் பணி முடிந்தவர்களுக்கு Special S.I. பதவி உயர்வு வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. 1972 ஆம் ஆண்டு, அதுவும் தாங்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அன்றைக்கும் முதலமைச்சராக இருந்தபோதுதான் அது வழங்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டில் நேரடியாகத் தேர்வுபெற்ற Second Grade Constable-களுக்கு இன்னும் Special S.I. Promotion கிடைக்கவில்லை. அது கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் மிக ஏக்கத்தோடு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அடுத்து, பெண்கள் விஷயத்தில் நாம் கொஞ்சம் பரிவோடு அக்கறை செலுத்த வேண்டும். பெண் Constables மிகவும் குறைவாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பிரமோஷனே கிடையாது. அதுவும், 1981 ஆம் ஆண்டு 'Batch'-ல் வந்தவர்களுக்கு - என்ன கொடுமையென்றால்,

அந்த அணியிலே தேர்வு பெற்று வந்தவர்கள் அந்த முதல்நிலைக் காவலர்களுக்கு 18 வருடமாக பதவி உயர்வு இல்லை. பெண் S.I. தேர்விலேகூட 40 சதவிகிதம் ஒதுக்கப்பட்டது. அதிலே அவர்கள் சேர்ந்து 18, 20 வருடங்கள் ஆகிவிட்டன. அவர்கள் 20 வயதில் சேர்ந்திருப்பார்கள். இப்போது அவர்களுக்கு 40 வயதிற்கு மேல் ஆகிவிட்டது. அவர்களைக் கொண்டுவந்து, இந்த 20 வயது பெண்களோடு ஓட்டப் பந்தயத்திலே விட்டுவிடுவது; அவர்கள் எங்கே, இதில் ஜெயிக்க முடியும்? ஜெயிக்க முடியாது. இதனைக் காரணம் காட்டி, physical fitness இல்லை என்று சொல்லி reject பண்ணிவிடுகிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தமாதிரி 40 வயது, 45 வயதில் இருக்கக்கூடிய அந்தப் பெண்களையெல்லாம் ஓடவிட்டு, தேர்வு செய்கிற முறையை தயவுசெய்து விட்டு, அவர்கள் 18, 20 வருடங்கள் பணியாற்றியிருக்கிறார்கள். (சிரிப்பு) தலைவரும் சிரிக்கிறார். எனவே அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, பெண்கள் விஷயத்தில் தயவுசெய்து முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தைக் குறித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை அவர்கள் குறித்துக்கொண்டு இந்தப் பெண்களுக்கு நீதி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடைசியாக என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன். 1994-95 இல் அனைத்து தேர்வுகளிலும் வெற்றி பெற்ற 1,198 பேர்களில் இன்னும் 98 S.I.-களுக்கு பதவி ஆணை வழங்கப்படவில்லை. அவர்களுக்கு வழங்க வேண்டும்.

நிறைவாக, என்னுடைய தொகுதி விஷயத்தை மட்டும், இரண்டே விஷயம் சொல்லிவிடுகிறேன். ஒன்று மங்கலம் போலீஸ் ஸ்டேஷன். மங்கலத்தில், திருப்பூர் மங்கலத்தில் முஸ்லீம்கள் இருக்கிறார்கள். அந்த முஸ்லீம்கள் அமைதியாக வாழவே கூடாது என்பதற்காக சில இந்துத் தீவிரவாத அமைப்புகளும் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் ஆத்திரமூட்டுகிறார்கள். ஆத்திரமூட்டி பதற்றம் வருகிறது. எனவே, அந்தப் பதற்றத்தைத் தடுக்க தயவுசெய்து, மங்கலம் பகுதியில் கட்டாயம் அந்த புறக் காவல் நிலையத்தை (மணியடிக்கப்பெற்றது) இந்த ஆண்டு முழுக் காவல் நிலையமாகக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருப்பூர், குற்றங்கள் அதிகமாக நடக்கக் கூடிய வளர்ந்து வருகின்ற நகரம். இந்த நகரத்தில் D.S.P.— அதற்கு 2 D.S.P.-க்கள். வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். 2 D.S.P. Centre- ஆக்க வேண்டும். அதேபோல் ஒரு Special Force திருப்பூருக்குக் கொண்டுவர வேண்டும். அப்போதுதான் இந்த நெருக்கடியான பிரச்சினைக்குத் தீர்வு வரும் என்பதையும்



சொல்லி, நிறைவாக ஒரேயொரு விஷயம். நம்முடைய தமிழ்நாட்டில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக இருப்பதற்கு, சாதி, மதப் பிரச்சினைகளில் பகுத்தறிவுக் கருத்துக்கள், சமூக சீர்திருத்தத் துறை ஒன்று உருவாக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் துறையிலேகூட, இந்தப் பகுத்தறிவுக் கருத்துக்களைத் தொடர்ந்து பிரச்சாரம் செய்வதற்கு உரிய உத்திகளையும் உருவாக்க வேண்டுமென்று சொல்லி, நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

***திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்று சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் மாநில ஆயத் தீர்வை, நீயணைப்புத் துறை மற்றும் காவல் துறை மானியத்திலே பேச வாய்ப்பளித்த நம்முடைய ஒப்பற்ற தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும் முதலிலே நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு காலத்திலே காவலர்கள் என்று சொன்னாலே எள்ளி நகையாடக்கூடிய ஒரு நிலையிலே காவல் துறையை மதிப்பீடு செய்திருந்தார்கள். அந்தக் காலத்திலே போலீஸ் எப்படியிருப்பார்கள் என்று சொன்னால், அளவில்லாமல் தைக்கப்பட்ட அரைக்கால் சட்டை, அதற்கேற்ற கஞ்சியிலே குளித்த கத்தி போன்ற காக்கிச் சட்டை வானத்தைப் பார்க்கும் கோபுரத் தொப்பி இவற்றை அணிந்துகொண்டு, அந்த உடையினுள்ளே ஆள் இருக்கிறாரா இல்லையா என்று சொல்ல முடியாத அளவிற்கு இளைத்துப் போன உடம்பு, ஊதி, ஊது என்று ஊதினாலும் ஓசை வராத ஒரு விசில், இடுப்பிலே ஒரு பட்டை, கையிலே ஒரு கட்டை, இவைதான் காவல் துறையினருடைய நிலைமை என்றிருந்த காலத்தை மாற்றி, போலீஸ் என்று சொன்னாலே ஒரு மரியாதை இருக்க வேண்டுமென்கிற அடிப்படையிலே நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான் அன்றைக்கு அவர்களுக்கு முழுக்கால் சட்டை, மிக அழகான முறையிலே அழகான தொப்பி, மிடுக்கான மீசை, 'இதுதான்டா போலீஸ்' என்று உலகத்திற்குச் சொல்லக்கூடிய அளவிற்கு காவல் துறைக்கு ஒரு மரியாதையை ஏற்படுத்தித் தந்தவர், நம்முடைய ஒப்பற்ற முதல்வர் கலைஞர் அவர்கள் என்பதை யாரும் மறந்திட முடியாது.

முற்பகல் 11-50

ஒரு பழமொழி சொல்வார்கள். 'வக்கற்றவனுக்கு வாத்தியார் வேலை, போக்கற்றவனுக்கு போலீஸ் வேலை' என்று சொல்வார்கள். அந்தக்

காலத்திலே, போலீஸுக்கும், வாத்தியாருக்கும் பெண்ணே கொடுக்க மாட்டார்கள். ஆனால் இன்றைக்கு என்ன நிலையென்று சொன்னால் பெண்ணைப் பெற்றவர்கள், போலீஸ் மாப்பிள்ளையை, வாத்தியார் மாப்பிள்ளையைத்தான் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அவர்களுடைய நிலையை உயர்த்தி, ஒரு நல்ல நிலைக்கு காவல் துறையைக் கொண்டு வந்த பெருமை நம்முடைய ஒப்பற்ற முதல்வர் கலைஞர் அவர்களைச் சாரும் என்று சொன்னால் அது மிகையாகாது.

கடந்த கால ஆட்சியிலே நடந்த முறைகேடு பற்றி உங்களுக்குத் தெரியும். காவல் துறை என்று சொன்னால், மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடிய காவல் துறை, மனிதர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய காவல் துறை, கட்-அவுட்டுக்குக் காவல் இருந்த காலகட்டம், அன்றைய அம்மையார் ஆட்சிக் காலத்திலே இருந்தது. கட்-அவுட்டுக்குக் காவலாக இருந்த காவல் துறையை, நீங்கள் கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பேற்க வேண்டுமென்று சொல்லி, அந்த பொறுப்பேற்கிற நல்ல முறையைப் பெற்றுத்தந்து, காவல் துறையை சீர்படுத்தி, இன்றைக்கு நல்ல முறையிலே காவல் துறை செயல்பட்டு வருகிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அன்றைய முதல்வர் அம்மையார் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பைப் பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். எவ்வளவு பொருட் செலவு, எவ்வளவு கோடிக் கணக்கிலே அவர்களுக்குப் பாதுகாப்புக்காகச் செலவு செய்யப்பட்டது என்பது உங்களுக்கு எல்லாம் தெரிந்த உண்மை. ஆனால், இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் செல்கின்றார்கள் என்றால், மிகவும் எளிய முறையில், எந்த பந்தாவும் இல்லாமல், பாதுகாப்பு குறைவான நிலையிலேதான் முதல்வர் அவர்கள் செல்கின்றார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் மறுத்தாலும்கூட, இங்கே இருக்கக்கூடிய நம்முடைய டி.ஜி.பி. அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய உயிர் இந்த உலகத்திலே விலை மதிக்கமுடியாத உயிர். அதைப் பாதுகாக்கக் கூடுதலான பாதுகாப்பை நீங்கள் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

இன்றைக்கு நம்முடைய காவல் துறை என்ன நிலையில் செயல்பட்டு வருகிறது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். மிக நல்ல முறையிலே, இந்தியாவிலேயே எடுத்துக்காட்டாக சொல்லக்கூடிய முறையிலே நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தக் காவல் துறையை தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கின்றார்கள். கோவை குண்டுவெடிப்புச் சம்பவத்தை மிக அருமையான முறையிலே அவர்கள் விசாரணை செய்து, 200 தீவிரவாதிகளில் 178 தீவிரவாதிகளைக் கைது



செய்து, இன்றைக்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். அதைப்போல தென்மாவட்ட சாதிக் கலவரங்களை ஒடுக்கியிருக்கின்றார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக்கூட்டி, அவர்களுடைய கருத்தை அறிந்து, காவல் துறையை நல்ல முறையில் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

அதைப்போல, தென்மாவட்டங்களில் இன்றைக்கும் இருக்கக்கூடிய இரட்டைக் குவளை முறையை ஒழிப்பதில் தீவிரம் காட்டி வருகின்றார்கள். இன்றைக்குச் சட்டம்-ஒழுங்கை யாரும் காரணம் காட்டிவிட முடியாது. சட்டம்-ஒழுங்கு சரியில்லை, எங்கு பார்த்தாலும் மதக் கலவரம், சாதிக் கலவரம், இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும், கலைக்க வேண்டும் என்று சொன்னவர்கள், மத்திய அரசாங்கத்தைக் கலைத்து, அவர்களே கலைந்து போயிருக்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது, இந்த ஆட்சியை ஒரு அம்மா அல்ல, ஓராயிரம் மாமாக்கள் வந்தாலும் சட்டம் ஒழுங்கைக் காட்டிக் கலைக்க முடியாது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த அளவுக்கு இன்றைக்கு யாரும் சட்டம்-ஒழுங்கைப் பற்றிப் பேச முடியாத அளவுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் காவல் துறையை வைத்திருக்கின்றார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற காவலர்களுக்குப் பயிற்சிக் காலம் 6 மாதங்கள் என்றிருந்ததை 9 மாதங்கள் என்று உயர்த்தியதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதைப்போல சென்னையில் காவலர் பயிற்சிக் கழகம் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடந்த ஆண்டு மட்டும் காவலர்களுக்கு 4 ஆயிரம் குடியிருப்புகள் நம்முடைய அரசின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கட்டித் தந்திருக்கிறார்கள். அதைப்போல தலைவர்கள் பெயரால் இயங்கி வந்த மாவட்டங்களின் பெயர்கள் மற்றும் அரசுப் பேருந்துகளின் பெயர்களையும் மாற்றியிருக்கின்றார்கள். ஏனென்று சொன்னால், சாதிக் கலவரம் வரக்கூடாது என்ற ஒரே ஒரு காரணத்திற்காக அந்தப் பெயர்களையெல்லாம் மாற்றி இன்றைக்கு நல்ல சூழ்நிலையை நம்முடைய முதல்வர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கின்றார்கள்.

'கல்வியிற் சிறந்த தமிழ்நாடு' என்று சொல்வார்கள். இன்றைக்கு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய முயற்சியால் 'கணினியில்

சிறந்த தமிழ்நாடு' என்ற அளவுக்கு எல்லாத் துறைகளிலும் கம்ப்யூட்டரைக் கொண்டு வந்திருக்கிறார்கள் நம்முடைய முதல்வர் அவர்கள். அந்த வகையிலே காவல் துறையிலே கம்ப்யூட்டர் புகுத்தப்படும் என்ற தகவலை கேள்வி நேரத்திலே சொன்னார்கள். அனைத்துக் காவல் நிலையங்களிலும் கம்ப்யூட்டரை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், குற்றவாளிகள் தகவல்கள், அவர்களுடைய புகைப்படங்கள், அவர்களைப் பற்றிய விவரம், விரல் ரேகை ஆகியவை ஒவ்வொரு காவல் நிலையத்திலும் பதிவு செய்யப்பட்டு, உடனடியாக ஏதாவது ஒரு குற்றம் நடந்தால், நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்ற வகையிலே கம்ப்யூட்டரை காவல் துறையில் எல்லா காவல் நிலையங்களிலும் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, சீருடைப் பணியாளர்கள் தேர்வு பற்றி உங்களுக்குத் தெரியும். கடந்த ஆட்சியில், அம்மையார் காலத்தில் 10 ஆயிரம் காவலர்களை எடுத்தார்கள். அந்தக் காவலர்களைத் தேர்ந்தெடுப்பதில் எவ்வளவு முறைகேடுகள் செய்தார்கள் என்பது பலபேருக்குத் தெரியும். ஆனாலும்கூட, தலைவர் கலைஞர் அவர்கள் தெரிந்தே, அவர்களுடைய காலத்தில் ஊழல் நடந்தது தெரிந்தும்கூட, பாதிப்படையக்கூடிய இளைஞர்களை நாம் காப்பாற்றவேண்டும் என்ற அடிப்படையிலே பெருந்தன்மையோடு அவர்கள் காலத்திலே தேர்வு செய்யப்பட்ட காவலர்களை அப்படியே ஏற்றுக்கொண்டார்கள். மீண்டும் நம்முடைய முதல்வர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு மேலும் காவலர்களைத் தேர்வு செய்தார்கள். நேர்மையான முறையிலே மிகமிக நேர்மையான முறையிலே காவலர்களைத் தேர்வு செய்தார்கள். எங்களுக்கெல்லாம்கூட வருத்தம். நாங்கள் உறவினர்களுக்கு, கட்சிக்காரர்களுக்குப் பரிந்துரை செய்தால், யாருக்கும் கிடைக்கவில்லை. பக்கத்திலே ஆரணி சட்டமன்ற உறுப்பினர் இருக்கிறார். அவரது அண்ணன் மகனுக்குக் கிடைக்கவில்லை. அதனால அண்ணன் தம்பிக்கு இடையே பேச்சுவார்த்தை இல்லை, இதை நான் குறையாகச் சொல்லவில்லை. அந்த அளவுக்கு இன்றைக்கு நேர்மையான முறையிலே கட்சிக்காரர்கள் பயனடையாவிட்டாலும் பரவாயில்லை, தகுதியானவர்கள், நேர்மையானவர்கள், திறமையானவர்கள் இந்தத் துறைக்கு வரவேண்டுமென்ற அடிப்படையிலே நேர்மையான முறையிலே இந்தக் காவல் துறையில் நம்முடைய முதல்வர் அவர்கள் பணியாளர்களைத் தேர்வு செய்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



முற்பகல் 11-55

இந்த ஆண்டு மட்டும் காவல் துறைக்கு 854.34 கோடி ரூபாயை நம்முடைய முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, பல பேர் குறிப்பிட்டதுபோல, காவலர்கள் என்று சொன்னால் ஒரு Get-up இருக்க வேண்டும். நம்முடைய டி.ஜி.பி. இருக்கிறார்கள், உள் துறைச் செயலாளர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்தால் மிகவும் Slim-ஆக இருக்கிறார்கள். ஆனால் அவர்களின்கீழ் பணியாற்றக்கூடிய காவலர்கள் தொந்தியுடன் இருக்கிறார்கள். காவலர்கள் என்று சொன்னாலே, கார்ட்டூன் போடுகின்றவர்கள் தொந்தியை அடையாளமாகப் போட்டுவிடுகிறார்கள். அந்த அளவுக்கு காவலர்கள் என்று சொன்னால் தொந்தியை அடையாளமாகக் காட்டக்கூடிய அளவுக்கு, அவர்களுக்குக் கீழே பணியாற்றக்கூடிய காவலர்கள் இருக்கிறார்கள். அவர்கள் முறையாக பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இன்னும் சொல்லப்போனால் அதை குறிப்பிட்ட அளவுக்கு குறைக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அல்லது அவர்களுடைய சலுகைகளைக் குறைப்பதற்கு நம்முடைய உள் துறை செயலாளர் அவர்களும், டி.ஜி.பி. அவர்களும் முயற்சி எடுத்து முறைப்படுத்த வேண்டும். அப்போதுதான் சமூக விரோதிகளை ஓடிச் சென்று பிடிப்பதற்கு அவர்களுடைய உடல்வாகு ஏற்றதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஒரு கோரிக்கை, 1986 Batch-லே பெண் காவலர்களாக கிரேடு-I தகுதியிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 15 ஆண்டு காலமாக பதவி உயர்வு பெறாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியிலே உள்ள சில பிரச்சினைகளைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். திருமணி என்கின்ற கிராமத்தில் ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால் பல கிராமங்களில் இருக்கின்ற மக்கள் பக்கத்தில் இருக்கின்ற பெரணமல்லூர் காவல் நிலைய எல்லைக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அதேபோல பிரம்மதேசம் என்கிற கிராமத்தில் ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டும். செய்யாறிலே ஒரு மகளிர் காவல் நிலையத்தையும், அதேபோல செய்யாறு காவல் நிலையத்திற்கு புதிதாகக் கட்டடத்தைக் கட்டியும், ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல செய்யாறு காவலர் குடியிருப்பு

பழைய ஓட்டு வீட்டிலே இருக்கிறது. எனவே, அங்கே புதிய கட்டிடத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, எங்களுடைய மாவட்டத்தின் தலைநகராக இருக்கின்ற திருவண்ணாமலையில் ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் பலபேர் கிரிவலம் வருகிறார்கள். இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம்கூட பலமுறை நாங்கள் பார்த்திருக்கிறோம். திருவண்ணாமலை கிரிவலத்திற்கு இலட்சக்கணக்கில் மக்கள் கூடுகின்றார்கள். அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு இருக்கின்ற காவலர்கள் போதவில்லை. எனவே, அங்கே திருவண்ணாமலையில் தெற்கு காவல் நிலையத்தை அமைக்க வேண்டும். அதேபோன்று டிராபிக் போலீசையும் கூடுதலாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு கள்ளச்சாராயம் மிகப் பெரிய அளவிலே குறைந்து இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. (மணியடிக்கப்பெற்றது) இன்னும் இதை முழுமையாக அமல்படுத்துவதற்கு, இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு அந்தந்த ஊரிலே இருக்கின்ற V.A.O. கிராம நிர்வாக அலுவலர்களைப் பொறுப்பேற்கச் செய்ய வேண்டும்; அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவர்களைப் பொறுப்பேற்க செய்ய வேண்டும்; அந்த ஊரிலே கள்ளச் சாராயம் இருந்தால் அந்த ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்யக்கூடிய சட்டத்தை நம்முடைய மாமன்றத்தில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல வட்டாட்சியர் மற்றும் இன்ஸ்பெக்டர் ஆகியவர்களின் அந்த எல்லைக்குள்ளே கள்ளச் சாராயம் விற்கப்பட்டால் பொறுப்பேற்கின்ற நிலையைக் கொண்டு வந்தால் நாம் பூரண மதுவிலக்கை நிச்சயமாக அமல்படுத்தலாம் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தீயணைப்புத் துறை நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது. நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் நவீன யுக்திகளை தீயணைப்புத் துறையிலே புகுத்தியிருக்கிறார்கள். அதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுவிலக்கு ஆயத் தீர்வையை எடுத்துக்கொண்டால் கடந்த ஆட்சி காலத்திலே ஏலத்தின் மூலம் 220 கோடி ரூபாய்தான் கிடைத்தது. ஆனால் நம்முடைய ஆட்சிக் காலத்தில் முறையாக டெண்டர்கள் கோரப்பட்டு 518 கோடி ரூபாய் அளவுக்கு நமக்கு வருவாய்



கிடைத்திருக்கிறது என்றால் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு காலத்தில், எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் உறுப்பினர் அட்டை இருந்தால் போதும் அவர்களுக்கு உரிமம் வழங்கப்படும் என்கிற நிலையிலேதான் மதுக்கடைகள் ஏலம் விடப்பட்டன. ஆனால், இன்றைக்கு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் உறுப்பினர் அட்டை இருந்தால் அறிவாலயத்திற்கு வாருங்கள். ஆனால் ஆயத் தீர்வைக்கு வாராதீர்கள் என்கிற நிலையிலே இப்படி நேர்மையான முறையில் இந்த மதுக்கடைகள் ஏலம் விடப்பட்டதை நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டுக்கான காவல் துறை மானியத்தின் மீது என்னை பேச அழைத்த தங்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய அரசியலில் அரசியல் கணிப்பொறியாக விளங்கும் நமது மாண்புமிகு முதல்வர் அளித்துள்ள இந்த மானியக் கோரிக்கையை வைத்து அதிலே பேசுவதற்கு என்னை அழைத்ததற்கு தங்களுக்கு எத்தனை முறை நன்றி சொன்னாலும் அது தகும். கடைசி வரை மணியடிக்காமல் இருந்தால் போதும். காவல் துறையில் இருக்கிற சங்கடம், நாட்டு மக்கள் கேட்கிற கேள்வி.....

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எப்படி இருந்தாலும் 1.30 மணிக்கு நான் மணியடித்துத்தான் ஆகவேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டு மக்கள் கேட்கிற கேள்வி நமக்குத் தெரியாமல் இல்லை. கோடியைத் திருடியவர்களை தண்டிக்க முடியவில்லை, ஆனால் ஒரு பீடியைத் திருடியவரை நடுரோட்டிலே போட்டு உதைக்கிறோம் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் கோடியைத் திருடியவர்கள் இந்த நாட்டின் சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்று தம்பட்டம் அடிக்கிறார்கள். இதெல்லாம் பரிதாபகரமான கேலிக்கூத்தாக இருக்கிறது. காலத்தால் அழிக்க முடியாத நமது முதல்வர் கலைஞர் அவர்கள் அந்தக்காலப் பாடல் இன்று என்னுடைய நினைவிற்கு வருகிறது. தம்பி ஸ்டாலின் இல்லை. இருந்தாலும் கேட்பார் என்று எண்ணுகிறேன்.

"போலீஸ் வேலைக்கென்று போகின்ற உங்கப்பனுக்குப் புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண்வளராய்; துப்பாக்கி எடுத்துகிட்டு அப்பன் உங்கப்பனிடம் பழம்பாக்கி கேட்டு வழிமறிக்கும் கடைக்காரன் வருகிற காட்சியினைக் காணாமல் கண்வளராய்" என்று எவ்வளவு அற்புதமான பாடலை 40 ஆண்டு காலத்திற்கு முன்னால் நம்முடைய முதல்வர் அவர்கள் இயற்றி உதயசூரியன் என்ற நாடகத்திலே நடித்த அந்த வரலாற்றுக் காட்சிகள் என்னுடைய கண்முன் இழையோடுகிறது.

அதேபோல, போலீஸ் பற்றி ஒரு சுருக்கமான கருத்து. சரஸ்வதி இருக்கின்ற இடத்திலே லட்சுமி இருக்கமாட்டாள் என்று கூறுவார்கள். ஆரம்பப் பள்ளி ஆசிரியர், வாத்தியார்களுக்கும், போலீஸ்காரர்களுக்கும் அந்த நாளிலே பெண் தரமாட்டார்கள். ஆனால் இன்று நாட்டில் தலைகீழ்மாற்றம். இந்த இருவருக்குமே கல்யாணச் சந்தையில் அதிக கிராக்கி. அவ்வளவு கவுரப்படுத்தப்பட்டு கல்வியும், காவலும் தரித்திரமில்லை என இந்தியா சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகளில் தமிழ்நாடு நிரூபித்து உள்ளது என்பதற்காகப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

துறவிக்கு காவி உடை, காவலுக்கு காக்கி உடை. இந்த இரண்டு உடையுமே பல்வேறு அரசியல் சமூகப் பிரச்சினையில் சிக்கிவிடுகிறது. மோட்சத்திற்கு வழிகாட்டுவதாகக் கூறி மோசடிக்கு வழிகாட்டும் காவி உடைப் பாவிகளை காக்கி உடை அணிந்திருக்கக்கூடியவர்கள் கைது செய்கிற அதிகாரம் அவர்களுடைய கையில் இருக்கிறது. ஆனால் குற்றம் குறைகிறதா என்றால் இல்லை. திருட்டின் வயதை கண்டுபிடிக்க வேண்டுமானால் பூட்டைக் கண்டுபிடித்தவனைக் கேட்டால்தான் தெரியும். ஆகவே ஒரு நாட்டின் நிர்வாகத்தில் சரிபாதியாக இருக்கக்கூடிய அந்தக் காவலர்கள் சாலைகளில் எல்லாம் நின்றால் மட்டும் போதாது, மக்களின் மனதிலே அவர்கள் தூய்மையானவர்கள் என்று நிற்க வேண்டும் என்பதுதான் என்னுடைய அவா. காவல் துறை 20 ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய வெற்றியாக ஆணுக்குப் பெண் சமம் என்பதை பெருமையோடு நிறைவேற்ற ஏராளமான விருதுகளைகளை தமிழகக் காவல் துறை பெற்றிருக்கிறது. இது தந்தை பெரியாருக்கும், மகாகவி பாரதிக்கும், பாவேந்தர் பாரதிதாசனுக்கும் நாம் காணிக்கையாக்கிய கண்ணியமிக்க வரலாற்றின் நன்கொடையாகும். இருப்பினும், இந்தப் பெண் காவலர்களின் பணிப் பாதுகாப்பு, பணி உயர்வு போன்றவற்றில் சில சிக்கல்கள் குறிப்பிட வேண்டியுள்ளது. திரு. சுப்பராயன் போல சமீபத்தில் பெண் உதவி ஆய்வாளர் பணி நேரடி நியமனத்தில்



ஒதுக்கப்பட்ட இடங்கள் 60. உடல்திறன் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் 12 பேர்தான். 48 இடங்கள் காலி இடங்களாக உள்ளன. சுமார் 17 வருடங்களாக பணிபுரிந்து வரும் பெண் காவலர்கள் குடும்பக் கட்டுப்பாடு, ஸிசேரியன் மற்றும் பெண்களுக்கே உரிய உடலில் சில மாற்றங்கள் காரணமாக உடல்திறன் தேர்விலே தேர்ச்சி பெற முடியாமல் போய்விட்டது. ஆனால், அவர்கள் ஏற்கெனவே உடல்திறன் தேர்விலே தேர்ச்சி பெற்றவர்கள்தான் என்பதைக் காவல் துறையும், முதலமைச்சர் அவர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, 1981-லே பெண் தலைமைக் காவலர்களாகப் பணிபுரிந்து வந்தவர்களில் உதவி ஆய்வாளர் பதவிக்கு நேரடி நியமனத் தேர்வில் கலந்து கொண்டவர்களுக்கு, தேர்வு விதியைச் சற்று தளர்த்தி, நீங்கள் மீதி இருக்கக்கூடிய 48 இடங்களுக்கும் அவர்களை நியமிக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-05

ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால், இன்றையதினம் ஜனநாயகத்திற்குக்கூட சரியான காவல் இல்லை. நம்பிய மக்களுடைய கழுத்தை அறுத்தார்கள். நாலு வழியிலும் நாட்டைக் கெடுத்தார்கள். இந்த ஜனநாயகக் குருவிக் கூட்டைக் கலைத்த பாவிகளுக்கு தண்டனை நிச்சயம். இது சத்தியம் என்று மக்கள் சொல்கிறார்கள். நல்லவர்கள் சொல்கிறார்கள்; நாடு சொல்கிறது. வாஜ்பாய் அரசை ஏன் கலைத்தார்கள்? திருவாரூர் தேர் போன்று நல்லமுறையிலே அழகாக ஆட்சி நடத்தி வருகிற நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியைக் கலைக்காததற்காக கலைத்தார்களா? (மேசையைத் தட்டும் ஒலி) நீண்ட நெடுங்காலமாக தீராத, தெளியாத பிரச்சினையாக இருந்த காவிரிப் பிரச்சினையைத் தீர்த்ததற்காகவா? அல்லது, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கனவிலே, தன்னுடைய உள்ளத்திலே போட்டுப் புதைத்து வைத்திருந்த சேதுசமுத்திர திட்டத்தை நிறைவேற்ற துணை நின்றதற்காகவா? அல்லது பொக்ரான் அணுகுண்டு சோதனை மூலம் இந்தியாவின் வலிமையான நிலையை உலகத்திற்கு எடுத்துக் காட்டியதற்காகவா? லாகூர் பேருந்து பயணம் நடத்தி, பாகிஸ்தானை பகையை அன்போடு வென்றதற்காகவா? அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடையை எதிர்த்து நின்று வெற்றி கண்டதற்காகவா? எதற்காக இந்த வாஜ்பாய் அரசைக் கலைத்தார்கள் என்று நல்லவர்கள் எல்லாம் கேட்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்டு பிள்ளை என்று எதுவும் இல்லை; பித்தலாட்டம் பொய்புரட்டு துளியும் இல்லை என வாழும் ஜனநாயக தீபம் வாஜ்பாய் அரசை அணைத்ததற்கு உலகமே கண்ணீர் வடிக்கிறது. அந்தத் தீபத்தின், எரியும் திரியை இழுத்தவர்களை இந்த நாடு அறிந்திருக்கிறது. இந்தக் கொடுமையைத் தடுக்க, எங்களுடைய டாக்டர் ஐயா அவர்களோடு நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களும் அரும்பாடுபட்டார்கள் என்பதை....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர்....

**திரு. ஐ. கணேசன்:** அவர் பேசியபோது நான் குறுக்கிடவில்லை. வீரப்பனைப் பற்றி பேசியபோது, நான் குறுக்கிட்டுப் பேச வேண்டுமென்று என் உள்ளம் எல்லாம் கொதித்தது. நான் முடித்த பிறகு பேச வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிலே ஒரே ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, என்னதான் சொல்கிறார் என்று பார்க்கலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள், வாஜ்பாய் அரசைக் கலைத்தார்கள், கலைத்தார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். நம்பிக்கை வாக்கெடுப்பில், போதிய வாக்கு இல்லாமல் கலைந்து போனார்கள் என்பதுதான் உண்மையேயொழிய, இந்தக் காவல்துறை மானிய வாக்கெடுப்பில், போய் இதையெல்லாம் சொல்லி, இது காவல் துறை மானியத்திற்கு சம்பந்தமே இல்லை; இருந்தாலும்கூட யாரும் கலைக்கவில்லை, கலைந்து போனார்கள் என்பதுதான் உண்மை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நாடு பதில் சொல்லும். ஒரு நிலையான ஆட்சியை அமைப்போம் என்று சொல்லி, இவ்வாறு செய்தவர்களுக்கு எல்லாம் சரியான தண்டனை வழங்க மக்கள் காலம் நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் தம்பி ஞானசேகரனுக்குச் சொல்லி.... (சிரிப்பு) தம்பிதான். நிச்சயமாக நாடு பதில் சொல்லும் என்று சொல்லிக் கொண்டு, நமது முதலமைச்சர் அவர்கள் பதவி ஏற்கும்போது, இந்தக் காவல் துறை ஈரல் முக்கால் பாகம் கெட்டுவிட்டதாகச் சொன்னதை மறக்க முடியாது. இப்போதுகூட காவல் நிலையத்தில்



சாவுகள், கள்ளச் சாராயம் விற்பனைகள், திருட்டுகள் ஆகியவை நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இந்தத் துறைக்கு வந்த மஞ்சள் காமாலை நோய் பூரணமாக குணமடையவில்லை. முதலமைச்சர் அவர்கள் மிக முயற்சி எடுத்து, ஓரளவு அதனைக் குறைத்திருந்தாலும், இந்த நோயை, மஞ்சள் காமாலை நோயை முழுமையாக குணமடையச் செய்ய வேண்டுமென்று என்னுடைய அன்பான வேண்டுகோளாக வைத்து, போலீஸ்காரர்கள் 24 மணி நேரமும் பணியில், தங்களுடைய குடும்பத்தையும், குழந்தைகளையும் சரியாக கவனிக்க முடியவில்லை. நான் சென்ற ஆண்டே இதே அவையில், காவல் துறை மானியத்தின்மீது பேசினேன். ஒரு சாதாரண பியூன்கூட, அரசு அலுவலகத்திலே பணியாற்றிவிட்டு, 5 மணிக்கு மேலே வீட்டிற்குச் சென்று, தன்னுடைய குடும்பத்தையும், குழந்தைகளையும் எந்த வழியிலே உருவாக்க வேண்டுமென்று நினைக்கிறானோ அந்த வழியிலே ஒழுக்கத்தோடு அவர்களை உருவாக்க முடியும். டாக்டராக, இன்ஜினியராக, வக்கீலாக, ஐ.ஏ.எஸ். அதிகாரியாக, ஐ.பி.எஸ். அதிகாரியாக உருவாக்க முடிகிறது. ஆனால் பாவம், காவல்துறையிலே பணியாற்றக்கூடியவர்கள் காலையிலே சென்றால், எப்போது வீட்டிற்கு வருவோம் என்று தெரியாமல், தங்களுடைய குழந்தைகளை பல மாதங்கள்கூட பார்க்காமல் இருக்கிறார்கள். அந்தக் குழந்தைகளையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தனி அக்கறையோடு அவர்களுக்கெல்லாம் சிறப்பான கல்வியை அளித்து அவர்களையும் சமுதாயத்தில் சிறப்பான அங்கத்தினர்களாக உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

என்னுடைய எடப்பாடி தொகுதியைப் பற்றி இந்த அவையிலே மூன்று ஆண்டு காலம் சொல்லியிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக இந்த ஆண்டு என்னுடைய காவல் நிலையத்திற்கு - என்னுடைய என்று என்னுடைய தொகுதியை உரிமையாகச் சொல்வேன், இதைக்கூட முபாரக் அவர்கள் ஒரு தடவை சொன்னார்கள். என்னுடைய ஆஸ்பத்திரி, என்னுடைய ஆஸ்பத்திரி என்று சொல்கிறீர்களே, அதனை நீ கட்டியிருக்கிறாயா என்று கேட்டார். இல்லை, நான் சட்டமன்ற உறுப்பினர் என்பதால், அரசாங்கச் சொத்து அனைத்தும் என்னுடைய சொத்தாக இல்லை, என்னுடைய கண்ணாக பார்க்கக் கூடியவன். (சிரிப்பு) ஆனால், எந்த அரசியல் தலைவியையும் போல, அந்தச் சொத்தைப் பட்டாவாக எழுதிக்கொள்ள மாட்டேன். அதற்குச் சேவை செய்யத்தான் எனக்கு ஓட்டு போட்டு இருக்கிறார்கள். எவ்வளவு பெரிய

அரசியல் நெருக்கடியில் நான் வெற்றியடைந்திருக்கிறேன். ஆகையினால், என்னுடைய தொகுதியை நான் கண்ணாக பார்க்கிறேன் என்பது முதல்வர் அவர்களுக்குத் தெரியும். அது போதும். ஆகையினாலே, இந்த ஆண்டு பழைய காவல் நிலையத்தை இடித்துவிட்டு புதிய காவல் நிலையம் கட்ட வேண்டும் என்று சொன்னேன். நிதி ஒதுக்கீடு இல்லை. கணேசா, அடுத்த ஆண்டு தருகிறேன் என்று காலையிலே கூட முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தயவுசெய்து இந்த ஆண்டே அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, அந்தக் காவல் நிலையத்தைக் கட்ட வேண்டும். இல்லையென்றால், அது பொத்துக்கொண்டு விழுந்துவிடும். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் இரண்டு நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன். எடப்பாடியிலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. போக்குவரத்துக் காவலர்கள் போதுமான அளவிற்கு இல்லை. போக்குவரத்துக் காவலர்களை எடப்பாடியிலே ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்று தினமலர் பேப்பரில் மிகத் தெளிவாக செய்தி வந்திருக்கிறது. சகோதரர் கல்யாணம் அவர்கள் சொன்னார்கள் தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் மாநகரக் காவல் தலைமை அலுவலகத்தில், அலுவலகப் பணியாளர்கள் குறைவாக உள்ளதால் பணிகள் தேக்கம் அடைவதால் அதனை விரிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பதவி உயர்வு அலுவலக அதிகாரிகள் பணிகளுக்கு ஒதுக்க கோருகிறார்கள் அதேபோல 1995-96 ஆம் ஆண்டில் உதவி ஆய்வாளர்கள் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பற்றி, 98 Sub-Inspectors பற்றி இந்த அவையிலே கவன ஈர்ப்பிலே நான் பேசியபோது, கணேசா, இடி இடிக்காதே, நான் கருணை மழை பொழிவேன் என்று சொன்னார்கள் ஆனால், இன்னும் அது பொழியவில்லை. என்ன காரணமோ தெரியவில்லை. சட்டச் சிக்கல் இருந்தாலும் முதல்வர் அவர்கள் அந்த இளம் உள்ளங்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அந்த 98 பேர்களை சப்-இன்ஸ்பெக்டர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

1993 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாம் நிலைக் காவலர்கள் 329 பேர் விடுபட்டு இருக்கிறார்கள். அவர்களையும் நீங்கள் பணிக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீயணைப்புப் பணியாளர்களுக்கு மத்திய அரசுக்கு இணையாகச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்பது நீண்ட நாள் கோரிக்கையாக



இருக்கிறது ஆகையினாலே நீங்கள் இந்தக் குறைபாடுகளையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு வீரப்பனைப் பற்றி மிக அதிகமாகத் தெரிந்தவர்களைப் போல பலர் இங்கே பேசுகிறார்கள். அதுதான் வேதனை. வீரப்பனைப் பார்க்காதவர்களே கிட்டத்தட்ட 176 பேர், 200 பேர். முதல்வர் அவர்களே, சுப்பராயன் அவர்கள் உள்ளபடியே அதைச் சொல்லும்போதெல்லாம் நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன். அவர்களை நினைக்கும்போது கண் குளமாகும், அவ்வளவு சித்ரவதை. அந்தச் சமுதாயத்தில் பிறந்தார்கள் என்பதற்காக, முஸ்லீம் சமுதாயத்திலே பிறந்ததற்காக, அண்ணன் லத்தீப் அவர்கள் எவ்வளவு தன்னுடைய ஆதங்கத்தைக் கொப்பளித்தார்களோ, அதேபோல நான் கூறுகிறேன் வீரப்பனைக் கண்ணாலே பார்க்காதவர்கள்கூட, கிட்டத்தட்ட ஆறு ஆண்டு காலம் கர்நாடக சிறையிலே, அவர்களை அடித்து, உதைத்து, வெளியே விடாமல் அவர்களை பலவகையிலே சித்ரவதை செய்கிறார்கள். அந்தப் பெண்களையெல்லாம், மானபங்கப்படுத்தியிருக்கிறார்கள். தயவு செய்து, தமிழக அரசு கர்நாடக அரசிடம் உடனடியாகத் தொடர்பு கொண்டு அவர்களையெல்லாம், விடுதலை செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுதான் என்னுடைய அன்பிற்குரிய கோரிக்கையாகும். மரம் சும்மா இருந்தாலும், காற்று சும்மா இருப்பதில்லை, அந்த மரத்தை விடுவதில்லை. ஆகையினாலே வீரப்பனை முழுமையாகத் தெரிந்து கொண்டு பேசுங்கள் என்பதை......

பிற்பகல் 12-15

**திரு. சி. ஞானசேகரன்:** பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் சொல்கிறபோது, வீரப்பனை அவர்தான் முழுமையாக உணர்ந்து பேசுவதைப் போலவும், மற்றவர்களெல்லாம் உணராமல் பேசுவது போலவும் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்று பத்திரிகையைப் பார்த்தாலும் சரி, வீரப்பனை பார்த்துவிட்டுத்தான் பேச வேண்டும் என்பதல்ல. நாட்டிலே நடக்கக்கூடிய செய்தி வனத் துறை ஊழியர்கள் கடத்தப்பட்ட செய்தி முதல்வருக்கும் வருகிறது, பத்திரிகை ஏடுகளும் எழுதுகின்றன. எங்களுக்கும் தகவல் வருகின்றன. அந்தத் தகவலினுடைய அடிப்படையிலே வீரப்பனை முழுமையாகத் தெரிந்துதான் இந்த அவையிலே பேசுகிறோமே தவிர, தெரியாமல் பேசவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அவர் எந்த வகையிலே அவரைத்

தெரிந்து வைத்திருக்கிறார் என்பது தெரியவில்லை. சமூக விரோதியாக, வனத் துறை ஊழியர்கள், காவல் துறை ஊழியர்கள் இவர்களையெல்லாம் கடத்துபவராக, யானைத் தந்தங்களை விற்பவராக, சந்தனக் கடத்தல் வீரப்பனாகத்தான் எங்களுக்கு அவரைத் தெரியுமேயொழிய, வேறு வகையிலே எங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** பாவம், தெரியாதவர்களைப் பற்றி பேசுவது தவறு. தெரிந்துகொள்ள வேண்டும். நான் கேட்கிறேன், இந்த அரசியலிலே இருந்து கொண்டு எத்தனை ஆயிரம் மாட மாளிகைகள், இந்த நாட்டு மக்களைச் சுரண்டி கட்டியிருக்கிறார்கள் என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும். இதே வீரப்பன் காட்டிலே சிறு வயதிலே உள்ளே நுழைந்தவன, நான் பார்த்ததே இல்லை. கருப்பா, சிவப்பா என்றே எனக்குத் தெரியாது. என் நண்பர் மணியை கேட்டுப் பாருங்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும், நேரமாகிவிட்டது.

**திரு. ஐ. கணேசன்:** நான் பேசி முடித்துவிடுகிறேன். இந்த உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர, வேறொன்றுமில்லை. ஆளைப் பார்க்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் அவர்கள்கூட வீரப்பனைப் பார்க்கவில்லை என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார். ஆகவே மாட மாளிகையைக் கட்டியவர்கள் யாராக இருந்தாலும், அது யானைத் தந்தத்தை கடத்தியோ அல்லது சந்தனக் கட்டையைக் கடத்தியோ, யாராவது மாட மாளிகையைக் கட்டி இருந்தால் நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும், அவர்களைப் பிடித்துத் தள்ள வேண்டும், சொத்துக்களையும் அபகரிக்க வேண்டும், அரசினுடைய கணக்கிலே கொண்டு வர வேண்டும் என்பதுதான் எங்களுடைய தமிழ மாநில காங்கிரசினுடைய தலையாய தொண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் அவர்கள் பேசுகின்ற



நேரத்திலே ஏதோ வீரப்பனைப் பற்றி அவருக்கு தெரியாததாக மற்றவர்களைப்பற்றி தெரிந்ததாக பேசவில்லை. கர்நாடக சிறையிலேயும், மைசூர் சிறைச்சாலையிலேயும் வேதனையோடு வாடிக்கொண்டு இருக்கக்கூடிய அவர்களைப் பற்றி தெரியவில்லை என்றுதான் இங்கே குறிப்பிட்டாரே தவிர, அவர்களுடைய வேதனையைப் பற்றி மனித உரிமைகள் கமிஷன் பல்வேறு நிலையிலே பத்திரிகையின் வாயிலாக சித்தரித்திருக்கிறது. இப்படி வீரப்பனைப் பற்றியெல்லாம் பேசுகின்ற நேரத்திலே வீரப்பன் பெயராலே வீரப்பனைப் பார்த்திராத அப்பாவிகள், எந்த நிலையிலும், குழந்தை பருவத்திலே இருந்து இன்றைய வரையிலும் வீரப்பனைப் பார்க்காதவர்கள் நூற்றுக்கணக்கான அந்த அப்பாவிகளை, காட்டுவாசிகளை வீரப்பனின் அந்த ஜாதியிலே பிறந்தவர்கள் என்ற காரணத்திற்காக, வன்னியர்களையும், ஆதிவாசிகளையும் கொடுமைப்படுத்தக்கூடிய அவல நிலையைத்தான் சொன்னாரே தவிர அதை மாண்புமிகு உறுப்பினர் உணர வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

• **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, காலையிலிருந்து வீரப்பனைப் பற்றிப் பேசிய நேரத்தில் சில மாண்புமிகு உறுப்பினர்கள், அங்கு வீரப்பனைப் பிடிப்பதற்காகச் செல்கின்ற காவல் துறையினர், அந்தப் பகுதியிலே வாழ்கின்ற ஏழை, எளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் இவர்களை இம்சிப்பதாக, கொடுமைப்படுத்துவதாகச் சொன்னார்கள். அது உண்மை. ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, அந்தக் காரியம் நடைபெறவில்லை என்பதை நான் அவர்களுக்கு உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கர்நாடக மாநிலப் போலீசாரும், அதேபோல் தமிழகப் போலீசாரும் 1996-க்கு முன்பு இதுபோல நடந்துகொண்டார்கள் என்று வீரப்பனே சில செய்திகள் மூலமாகவும், தொலைக்காட்சி மூலமாகவும், நக்கீரன் பத்திரிகை மூலமாகவும், பேட்டிகள் மூலமாகவும், கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

அதுமாத்திரமல்ல, கர்நாடகப் போலீசார் அந்த வட்டாரத்திலே வாழ்ந்த தமிழ்நாட்டு மக்கள் பலரை 'தடா' சட்டத்தின் அடிப்படையிலே கைது செய்தும் வைத்திருக்கிறார்கள். இப்போது 'தடா' சட்டம் இல்லை என்றாலும்கூட, 'தடா' சட்டம் பயன்படுத்தப்பட்டு, யார் மீது வழக்குகள் இருக்கின்றனவோ, அந்த வழக்குகள் தொடர்ந்து நடைபெறக்கூடிய சூழல் இருக்கிறது. இங்கே மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் அவர்கள் வீரப்பன் பிரச்சினையாகப் பேச வந்தபோது, அவர்களிடத்திலே நான் முறையீடு செய்திருக்கிறேன். அவர்களையெல்லாம் விடுவிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். சட்டப பிரச்சினைகளை ஆராய்ந்து

செய்வதாகச் சொன்னார். இதுவரையிலே 4, 5 கடிதங்கள் திரு. பட்டேல் அவர்களுக்கு நான் எழுதியிருக்கிறேன். 2 நாளைக்கு முன்புகூட திரு. பட்டேல் அவர்களுக்கு நான் ஒரு கடிதம் எழுதியிருக்கின்றேன். உடனடியாக அவர்களை எல்லாம் விடுதலை செய்ய வேண்டும். தமிழ்நாட்டிலே உள்ளவர்கள் 'தடா' கைதிகளாக அங்கே இருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதற்கு உறுதுணையாக இங்கே பேசியவர்களுடைய உரைகளும் அமையும். அது எனக்குப் பக்கபலமாக இருக்கும், பட்டேல் அவர்களிடத்திலே விடுத்துள்ள முறையீட்டுக்கு என்று, இன்னமும் நான் நம்பிக் கொண்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-20

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை நீங்கள் உட்காருங்கள். நேரம் அதிகமாக ஆகிவிட்டது. நீங்கள் உட்காருங்கள். திரு. பொ. முருகேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் அதிகமாகிவிட்டது. உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ஒரேயொரு நிமிஷம். அதற்கு மேலே எடுத்தால் நீங்கள் மணி அடித்துவிடுங்கள் (குறுக்கீடு) நான் மணியைச் சொன்னேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள் மிக உணர்வோடும், பொறுப்போடும் அந்தப் பகுதி மக்களினுடைய வயிற்றிலே பாலைத் தறபோது வார்த்திருக்கிறார். அந்தப் பகுதி மக்கள் சார்பாக எங்களுடைய நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அதைப்போல, வீரப்பனைப் பற்றி அவன் 11 பேரை பிடித்துச் சென்றபோது ஒரு விஞ்ஞானி மிகத் தெளிவாக தன்னுடைய கருத்தை சொல்லியிருக்கிறார் என்பதை நண்பருக்கு சொல்லிக்கொள்கிறேன். 'மனிதாபிமானம் மிக்கவர்தான் பட்டினியிருந்தபோதுகூட எங்களுக்கு உணவு அளித்தவர்' என்று நான் சொல்லவில்லை, ஒரு விஞ்ஞானி அவனால் கடத்தப்பட்டவர் சொல்லியிருக்கிறார் என்பதையும் இந்த அவையிலே பதிய வேண்டும் என்பதற்காகச் சொல்லி, நல்லது நடக்க வேண்டும் என்பதைச் சொல்லி விடைபெறுகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பொ. முருகேசன்.



**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காவல் துறை, ஆயத் தீர்வைத் துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியங்களின்மீது பேசுகின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்த எங்களுடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் தங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்தில், என்னுடைய கருத்துக்களையும் ஒரு சில கோரிக்கைகளையும் வைக்க நான் விரும்புகிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில் அரசுக்கு நற்பெயர் தரக்கூடிய ஒரு துறையாகும். நாட்டில் சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்றி ஒரு அமைதியான மாநிலம் என்ற நற்பெயரைப் பெற்றுத் தருகின்ற பொறுப்பு இந்தத் துறையைச் சார்ந்ததாகும். ஆட்சிக்குப் பெருமை சேர்க்கின்ற துறையாக இருந்தாலும், இந்தத் துறைக்குப் பெருமை சேர்க்கக்கூடியவர் நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் ஆவார்கள்.

காவல் துறையில் இதற்கு முன்னால் ஜூனியராக இருந்தவர்களை சீனியர்களாக ஆக்கிய பெருமை நம்முடைய முதல்வர் அவர்களுக்கு உண்டு. ஒரு காலத்திலே பள்ளிச் சிறுவர்கள்போல அரைக்கால் சட்டை அணிந்திருந்தவர்களை, இன்றைக்கு கல்லூரி மாணவர்களைப்போல 'டிப் டாப்' ஆக உடையணிகின்ற அந்த வாய்ப்பை உருவாக்கித் தந்தவர் கலைஞர் அவர்கள்.

இப்போது காவலர்கள் பல கோரிக்கைகளை வைத்திருந்தாலும்கூட அந்தக் கோரிக்கைகளை ஏற்று காவலர்களுக்குப் பதவி உயர்வு பெறுவதில் ஒரு பிரச்சினை என்று சொன்னார்கள். அதிலே, காவலர்கள் பதவி உயர்வு பெறுவதில் உள்ள தேக்கத்தை அகற்றும்பொருட்டு கலைஞருடைய அரசு ஒரு திட்டத்தை இப்போது நிறைவேற்றியிருக்கிறது. பணியிலே சேருகின்ற ஒரு காவலர், 10 ஆண்டுகளிலே முதல் நிலைக் காவலராகவும், பின்னர் 5 ஆண்டுகளில் தலைமைக் காவலராகவும், 25 ஆண்டுகள் பணியாற்றி முடித்ததும் உதவி ஆய்வாளர்களாகவும் பதவி உயர்வு பெற ஒரு திட்டத்தை அரசு செயல்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தினால் இரண்டாம் நிலைக் காவலராகப் பணியில் சேரும் ஒருவர் 25 ஆண்டுகளிலே உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு பெறுவார்கள். இந்தத் திட்டம் காவலர்களுக்கு ஓர் அருங்கொடையாக இருப்பதால் அவர்களிடையே இந்தத் திட்டத்திற்கு நல்ல வரவேற்புள்ளது.

மேலும், காவலர்களுக்குப் போதிய வீட்டு வசதி இல்லாதது ஒரு பொதுவான குறையாக இருந்து வந்தது. அதனைக் கருத்தில்கொண்டு நம்முடைய கலைஞர் அவர்கள், ஆண்டுக்கு ஆயிரம் காவலர்

குடியிருப்புகள் கட்டப்பட்டு வந்த நிலைமையை மாற்றி, இப்போது அவர்களுக்கு 2,500 குடியிருப்புகள் கட்டுவதற்குத் தேவையான நிதியை அளித்த முதல்வர் அவர்களுக்கு நிச்சயமாக காவலர்கள் நன்றி செலுத்துவார்கள்.

காஞ்சிபுரம் நகரத்தில், மக்கள் பெருக்கத்தின் காரணமாகவும், வாகனப் பெருக்கத்தின் காரணமாகவும், போக்குவரத்தைப் போக்குவரத்துக் காவலர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. காரணம், போக்குவரத்துக் காவலர்கள் குறைவாக உள்ளதால், போக்குவரத்தைச் சீராகப் பேணிக் காக்க முடியவில்லை. தற்சமயம் ஏழு காவலர்கள் மட்டுமே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, குறைந்தபட்சம் 15 போக்குவரத்துக் காவலர்களாவது இருக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-25

எனது தொகுதியான காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் பாலுசெட்டிசத்திரம் என்ற இடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற காவல் நிலையம் மிகவும் பழமையான கட்டடத்திலே இருக்கிறது. அந்தக் கட்டடம் பழுதுபட்டக் கட்டடமாக பாதுகாப்பற்ற நிலையிலே உள்ளது. மழைக் காலங்களிலே காவலர்கள் உள்ளே இருந்து பணியாற்ற முடியாமலும், காவல் துறை கோப்புகளைப் பாதுகாக்க முடியாத நிலையும் உள்ளது. எனவே, நடப்பு ஆண்டிலே அந்தக் காவல் நிலையக் கட்டடத்தைப் புதுப்பித்துத் தருமாறு நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டுகூட துணைக் கேள்வி கேட்ட நேரத்திலே காஞ்சிபுரம் தொகுதியில் இருக்கின்ற அந்த பாலுசெட்டிசத்திரம் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் வேண்டும் என்று கேட்டபோது இந்த ஆண்டிலே காஞ்சிபுரம் இல்லையென்று சொன்னார்கள். எனவே, தயவுகூர்ந்து இந்த ஆண்டிலே அந்தக் கட்டடத்தைப் புதுப்பித்துத் தருமாறு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், பாலுசெட்டிசத்திரம் காவல் நிலையத்திலே பணிபுரிகின்ற காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கின்ற நோக்கத்தில் 20 ஆண்டுகளுக்குமுன் இடம் ஒதுக்கப்பட்டு சுற்றுவேலி அமைத்தும், பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தும் அந்த இடத்தில் இப்போது வேலியெல்லாம் அப்புறப்படுத்தப்பட்டு ஒருசிலர் ஆக்கிரமிப்பு செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, காவலர் குடியிருப்புகளுக்காக ஒதுக்கப்பட்ட அந்த இடத்தில் காவலர் குடியிருப்பு கட்டித் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.



காஞ்சிபுரம் காவல் மாவட்டமாகப் பிரிக்கப்பட்டபோது அந்த மாவட்டத்திற்கென கூடுதலாக அலுவலகப் பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. அருகில் உள்ள காவல் மாவட்டங்களில் களப் பணியாளர்களின் எண்ணிக்கை, அதற்கான அமைச்சுப் பணியாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை ஒப்புநோக்கினால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் குறைந்த எண்ணிக்கையில் அலுவலகப் பணியாளர்களை வைத்து அதிகமானப் பணிகளை சிரமத்துடன் பணியாற்ற வேண்டியுள்ளது. எனவே, காவல் மாவட்ட அலுவலகத்திற்கு அலுவலகக் கண்காணிப்பாளராக இரண்டு பேரும், உதவியாளர்களாக 8 பேரும், இளநிலை உதவியாளர்களாக 6 பேரும், ஆக 16 புதிய பதவிகளை வழங்கி அவர்களின் வேலைப் பளுவைக் குறைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க ஒரு விதியைப் போட்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரு தீயணைப்பு நிலையம் இருக்க வேண்டும் என்று சொன்னால் 20 கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, ஒரு தீ விபத்து ஏற்பட்டால், அந்த விபத்து பற்றி தகவல் சொன்னால், பத்தே நிமிடத்திலே அந்த 20 கிலோ மீட்டர் கடந்துவந்து சேரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 10 நிமிடங்களில் 20 கிலோ மீட்டர் எப்படி வந்து சேர முடியும் என்று தெரியவில்லை. எனவே, அந்த விதிகளை மாற்றி 15 கிலோ மீட்டர் இடைவெளி இருந்தால் போதும் என்ற நிலையை விதித்து, எங்களுடைய தொகுதியிலுள்ள மாகரல் கிராமத்திற்கு ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இன்னொன்று என்னுடைய தொகுதியைப் பற்றி, காஞ்சிபுரம் மாவட்ட மருத்துவமனையில் நாள் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 3 ஆயிரம் பேர், 4 ஆயிரம் பேர் வரை வெளிப்புற நோயாளிகளாக வந்து கொண்டிருக்கிறார்கள். உள்நோயாளிகளாக கிட்டத்தட்ட சுமார் 500 பேர் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்குப் போதுமான மருத்துவர்களும் செவிலியர்களும் இல்லை. இந்தக் குறை நீண்ட காலமாக இருந்து வருகிறது. எனவே, மாவட்ட மருத்துவமனைக்குக் கூடுதலாக மருத்துவர்களையும் செவிலியர்களையும் உடனடியாக நியமிக்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காஞ்சிபுரத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும். பட்டுத் தொழிலுக்குச் சிறந்த ஊர் காஞ்சிபுரம். இன்றைக்குக் காஞ்சிபுரம் பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களில் பட்டுச் சேலைகள் அதிகமாகத் தேங்கிக் கிடக்கின்ற காரணத்தாலே அந்தப் பட்டு நெசவாளர்கள் வேலை இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, சென்ற ஆண்டு போல கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்து, அந்தப் பட்டுச் சேலைகளின் தேக்கத்தைத் தவிர்த்து பட்டு நெசவாளர்களுக்கு நீங்கள் வேலைவாய்ப்பைத் தரவேண்டும் என்று கேட்டு, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டிற்கான இந்த மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய வில்லிவாக்கம் தொகுதியிலே அம்பத்தூர் பகுதி நிறைய தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியிலே இரவு நேரங்களிலே தகராறுகள், பிரச்சினைகள் ஏற்படுமேயானால் காவல் நிலையங்களுக்கு Phone செய்தால் அங்கே பாரா பி.சி. மட்டும்தான் இருக்கின்றேன். வேறு யாரும் இல்லை என்று சொல்லக்கூடிய ஒரு நிலை இருக்கின்றது. ஏறத்தாழ 10 இலட்சம் தொழிலாளர்கள் அந்தப் பகுதியிலே வேலை பார்க்கின்றார்கள். ஆகவே, காவல் துறை அங்கே விரிவுபடுத்தப்பட வேண்டும். அங்கே காவல் துறையைச் சேர்ந்த நிறைய காவலர்களை நியமிக்க வேண்டும். அங்கே இரண்டு காவல் நிலையங்கள் இரண்டு பகுதிகளாக இருந்தாலும், ஒரு பகுதியிலேயிருந்து இன்னொரு பகுதிக்கு வருவதற்கு, 3 முதல் 7 கிலோ மீட்டர் வரை டிஸ்டன்ஸ்-க்கு அங்கே தொழிற்சாலைகள் பரவியிருக்கின்றன. ஆகவே, காலதாமதம் மிக ஆவதினால் சம்பவம் நடந்து முடிந்த பின்பு அவர்கள் வருகின்றதுபோல ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, எந்தெந்த இடங்களிலே மூலை முடுக்குகளிலே, அந்தத் தொழிற்சாலை முடிகின்ற இடங்களிலே ஒரு போலீஸ் அவுட்போஸ்டைப் போட்டால் குற்றங்களைத் தடுக்க முடியும். ஆகவே, உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அம்பத்தூர் பகுதியிலே மிக அதிகமான கவனத்தை நீங்கள் செலுத்த வேண்டும்.

*பிற்பகல் 12-30*

அதேபோன்று, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த மோரை, வீராபுரம், பாண்டீஸ்வரம் போன்ற இடங்களிலே நிறைய பிரச்சினைகள் ஏற்பட்டால் - அங்கே நிறைய வன்னிய சமுதாயத்தைச் சார்ந்த மக்களும், பிற தலித்



மக்களும் இருக்கிறார்கள். எனவே, ஒரு பிரச்சினை என்று போலீஸ் ஸ்டேஷனுக்குப் Phone பண்ணினால், வர வேண்டுமென்றால் 15 கிலோ மீட்டர் வர வேண்டியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வேன். அங்கே பாண்டீஸ்வரத்திலே ஒரு காவல் நிலையத்தை நீங்கள் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அம்பத்தூர் பகுதியிலே, காலையிலே பார்த்தீர்கள் என்றால், டிராஃபிக் நெரிசல் அதிகமாக இருப்பதனால், சென்னை சிட்டியிலேயிருந்துதான் அந்த டிராஃபிக் கான்ஸ்டபிள்ஸ் வருகிறார்கள். ஏறத்தாழ 10 இலட்சம் பேர் வேலை செய்கின்ற இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டிற்கு அங்கே தனியாக ஒரு டிராஃபிக் காவல் நிலையத்தை அம்பத்தூர் பகுதியிலே ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, டிராஃபிக் காவல் நிலையம் வேலூர் சத்துவாச்சாரி பகுதியிலேயும் ஒரு காவல் நிலையத்தை நீங்கள் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியிலே நிறைய Wine shops இருக்கின்றன. அந்த Wine shops பூராவும் bar-ஆக இருக்கின்றது. Wine shop-cum-bar. அதைத் தமிழக அரசு bar-ஆகவே விட்டால் அரசுக்கு நிறைய வருவாய் வரும். நீங்கள் வெறும் Wine shop-க்கு விட்டாலும் அவர்கள் bar நடத்துகிறார்கள். ஆகவே, காவல் துறையில் அங்கே இருக்கின்றவர்கள் துணையோடு அந்த bar மிகவும் தாராளமாக நடைபெறுகின்றது. காலை முதல் இரவு வரை - இரவு 12 மணி வரை நடைபெறுகின்றது. இந்த நிலைகள் மாற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, அவைகளை ஒழுங்குபடுத்த வேண்டும். அதற்கு நீங்கள் bar நடத்தலாம் என்று விட்டுவிட்டால் பிரச்சினையே கிடையாது. ஆகவே, அதைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

ஏறத்தாழ 34 பிளாட்பார வியாபாரிகள் கோவையிலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் 4 மாதமாக ஹேபியஸ் கார்ப்பஸ் பெட்டிஷன் போட்டுக்கூட கோர்ட்டிலே அந்த வழக்கு வராமல் இருக்கிறது. ஆகவே, அந்த பிளாட்பாரத்திலே இருக்கின்ற வியாபாரிகள், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கருணை கூர்ந்து அவர்களை மீண்டும் தனியாக ஆய்வு நடத்தி அவர்கள் உண்மையிலேயே குற்றம் செய்தார்களா என்பதைத் தெளிவுபடுத்தி அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், ஆயிரம் பேர் தவறு செய்தவர்கள்

தப்பித்தால்கூடப் பரவாயில்லை, ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக்கூடாது. நிரபராதியான அவர்கள் பிளாட்பாரத்திலே தொழில் செய்து தங்களுடைய வாழ்க்கையை நடத்தி, தங்களுடைய குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டிய நிலையிலே இருக்கின்றவர்கள். இப்போது அந்தக் குடும்பங்களெல்லாம் தெருவிலே நின்று பிச்சையெடுக்க வேண்டிய நிலைமையிலே இருக்கின்றன.

நாங்கள்கூட எங்களுடைய இஸ்லாமிய சமுதாயத்தின் சார்பிலே, நேற்று உண்ணாவிரதம் இருந்தபொழுது 500 பேர்தான் வருவார்கள் என்று பார்த்தேன். எங்களுக்கு சூழ்நிலை தெரியும். ஆனால் அந்த உண்ணாவிரதத்திலே ஏறத்தாழ 5,000 பேர் வந்திருந்தார்கள். இந்த இட ஒதுக்கீட்டுக் கோரிக்கையை வலியுறுத்தி பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அந்தத் தலைவர் ஜி.கே. மணிகூட வந்து ஆதரித்துப் பேசினார். பாட்டாளி மக்கள் கட்சித் தலைவரும் ஆதரித்துப் பேசியிருக்கிறார். உத்தரப் பிரதேச மாநிலத்திலேகூட அந்த ஆட்சியிலே இருக்கின்ற லோக் தந்திரி காங்கிரஸ் முஸ்லீம்களுக்கு பொதுவாக வாக்காளர் ஜாபிதா போன்று, அவர்களுடைய எண்ணிக்கையைக் கணக்கிலே எடுத்து அவர்களுக்கு இட ஒதுக்கீடு தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று தமிழகத்தில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இஸ்லாமியப் பெருமக்களுடைய எண்ணிக்கை-விகிதாச்சாரத்தைத் தனியாகக் கணக்கெடுத்து அவர்களுக்கு நிச்சயமாக இட ஒதுக்கீடு தர வேண்டும். இட ஒதுக்கீடு என்பது இந்தக் கால கட்டத்திலே இன்றியமையாத ஒன்று. காவல் துறையிலே நாங்கள் புறக்கணிக்கப்பட்டு வருகிறோம். கல்வியிலே புறக்கணிக்கப்பட்டு வருகிறோம், அதைப்போன்று அனைத்துத் துறைகளிலும். நானே சில தொழிற்சாலைகளிலே தொழிற்சங்கத் தலைவராக இருக்கின்றேன். அங்கே 100 பேர், 200 பேர் வேலை செய்கிறார்கள். அதிலே ஒருவர்கூட இஸ்லாமியர் இல்லை என்ற ஒரு நிலை இருக்கிறது

இதையெல்லாம் பார்க்கும்பொழுது எங்கே இந்தச் சமுதாயம் ஒதுக்கப்படுகின்றதோ, எங்கே இந்தச் சமுதாயம் ஓரம் கட்டப்படுகின்றதோ, புறக்கணிக்கப்பட்டு விடுகின்றதோ என்ற ஒரு அச்ச நிலை எங்களுடைய சமுதாய மக்கள் மத்தியிலே உருவாகி இருக்கிறது. ஆகவே, அதைப் போக்குகின்ற வகையிலே இட ஒதுக்கீடு அளிப்பீர்களேயானால் இந்தச் சமுதாயம் உங்களுக்கு நன்றிக்கடன்பட்டதாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

அதைப்போல திருநெல்வேலியிலே நடந்த ஒரு சம்பவம் குறித்து சட்டமன்றத்திலே நான் பேசியிருக்கின்றேன். திருநெல்வேலியிலே அன்சர்



என்ற ஒரு இளைஞன் படுகொலை செய்யப்பட்டான். அந்தக் குடும்பத்திற்கு நிதி உதவி தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அதற்கு தயவுசெய்து நிதி உதவி தர வேண்டும். அது மிகவும் ஏழ்மையான குடும்பம். அந்தக் குடும்பத்திலே ஒருவருக்கு வேலைவாய்ப்பினைத் தர வேண்டும்.

அதேபோன்று எலக்ஷன் கமிஷனிலே வந்து நிறையபேர் வோட்டர் லிஸ்ட் எடுத்திருக்கிறார்கள். ஜமீலா என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ஆனால் பொட்டு வைத்திருக்கிறார்கள் வேண்டுமென்றே.

அதேபோன்று கோவை சிறைக்குள்ளே சில பசங்கள் வெளியே போனால் காவல் துறை அதிகாரிகள் அடிக்கின்றார்களாம். ஆனால், ** சிறுபான்மை சமுதாய மக்கள்மீது அக்கறை கொண்ட அரசு இருக்கிற நேரத்திலே ஒரு சிறைச்சாலையிலே மனித உரிமை மீறல் நடைபெறுகிறது. தனி மனிதனுடைய சுதந்திரம் பறிக்கப்படுகிறது. பேச்சுரிமை பறிக்கப்படுகிறது. எழுத்துரிமை பறிக்கப்படுகிறது. சுதந்திர நாட்டில் நாம் 50 ஆண்டு பொன் விழாவைக் கொண்டாடிவிட்டோம். இன்னும் இது போன்ற அராஜகங்கள் நடப்பதை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆகவே சிறைகளிலே யார் இதைச் செய்தார்கள்? **என்று சொல்லக்கூடிய அளவுக்கு அங்கே அநியாயங்கள் நடக்கின்றன....

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளில் **என்று எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். இது தவறான குற்றச்சாட்டு. ஆதாரமற்ற குற்றச்சாட்டு. இது போன்று ஏதாவது ஒரு நிகழ்வு நடந்திருக்குமேயானால் அவர், எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கலாம் இந்த அவைக்குச் சொல்வதற்கு முன்னால். உரிய நடவடிக்கையை நிச்சயமாக எடுத்திருப்போம். இஸ்லாமிய மக்கள் மனம் புண்படுகிற வகையில் சிறைச்சாலையிலே எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை சட்டவிரோதமாக என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது தவறான தகவலை நான் இந்த அவையிலே தரவில்லை. அதுகுறித்து நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இன்றே தெரிவித்துவிடுகிறேன் உடனடியாக....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எந்தச் சிறைச்சாலையில் எந்த அதிகாரி இப்படிச் சொன்னார் என்று கேட்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எந்த அதிகாரி அதைச் செய்தார்? யார் எந்தப் பெயருடையவர் அப்படி இம்சிக்கப்பட்டார்? ** யார் என்று அந்தப் பெயர்களை எல்லாம் சொன்னால் நல்லது. (குறுக்கீடு) முழு விவரமும் தெரியாமலா இங்கே வந்து பேசுவது?

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இன்று மாலையே தருகிறேன். அந்தக் கடிதம் என்னிடம் வந்திருக்கிறது நான் அதை உங்களுடைய பார்வைக்கு அனுப்பி வைக்கிறேன்

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, விவரங்கள் கொடுத்த பிறகு, அவர் பேசியது அவைக் குறிப்பிலே ஏறலாம். அதற்கு முன்பு அவைக் குறிப்பில் ஏறுவது தேவையில்லாத மத விரோதங்களை நாட்டிலே ஏற்படுத்தும். அதற்கு நாம் வித்திட்டவர்களாக ஆகிவிடுவோம் அவர் விவரங்களைக் கொடுத்த பிறகு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கிறோம். அதுவரையிலே இது அவைக் குறிப்பில் ஏறாமல் இருப்பது எல்லோருக்கும் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, திரு. ஆரூண் ரஷீத் அவர்கள் குறிப்பிட்ட அந்த வாசகங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சமுதாயத்தின் சார்பிலே நான் கேட்டுக் கொள்வதெல்லாம் எங்களுக்குரிய மரியாதையைத் தர வேண்டும் உளவுத் துறை பெரிய அதிகாரிகள் நல்ல முறையில் செயல்படுகிறார்கள் ஏதோ மேலெழுந்தவாரியாக செய்திகளை அரசுக்குத் தந்து விடுகிறார்கள் அவர்கள் களத்திற்குச் சென்று அங்கே என்ன உண்மை நிலவரம்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



என்பதைக் கண்டறிந்து அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமே தவிர, உண்மைக்கு மாறாக தவறான தகவல்களைத் தருவதன் காரணமாக இதுபோன்ற செயல்கள் ஏற்பட்டுவிடுகின்றன ஏற்கெனவே நாங்கள் அமைதிக் குழுக்கள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். ஒரு சில இடங்களில் அமைத்திருக்கிறார்கள். அமைதிக் குழுக்களில் மாவட்டங்களின் பொறுப்பில் இருக்கின்றவர்களைப் போட்டு அதிகாரத்தோடுகூடிய அமைதிக் குழுக்களாக நியமிக்க வேண்டும். அதன் வாயிலாக மத நல்லிணக்கக் கூட்டங்களை நடத்துவதாலும், சமபந்தி போஜனங்கள் நடத்துவதாலும் இதுபோன்ற நிலைகளை எல்லாம் நாம் தடுக்கலாம். எந்தவொரு பிரச்சினைக்கும் நாம் தீர்வு காண வேண்டுமென்றால் நிச்சயமாக அந்தத் தீர்வு ஏற்படும். அப்போது மத நல்லிணக்கமும் ஏற்படும். அதற்கு அமைதிக் குழுக்கள் வலுவானதாக இருக்க வேண்டும். அந்த அமைதிக் குழுக்கள் நீதிமன்ற அதிகாரத்தோடு இருக்கக்கூடியதாக அமைக்கப்பட வேண்டும்.

நாங்கள் சமீபத்தில் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தில் ஏறத்தாழ 5,000 பேர் கலந்து கொண்டார்கள். அங்கே வந்த அத்தனை பேரும், எங்களுக்கு வாடகைக்கு வீடு தரமாட்டேன் என்கிறார்கள், 'பாய் என்றால் போலீஸ் ஸ்டேஷனில் போய் சொல்லிவிட்டு வா' என்கிறார்கள், காவல் துறை அதிகாரிகள் சொன்னால்தான் வீடு என்கிறார்கள் என்று சொன்னார்கள். நாங்கள் எங்கே போவோம்? இல்லையென்றால் வீடு வாடகைக்குக் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். இஸ்லாமிய சமுதாயம் ஏழ்மையான சூழ்நிலையில் இருக்கிறது. இன்று பிச்சை எடுப்பவர்கள் அதிகமான பேர்கள் இருப்பது இஸ்லாமிய சமுதாயத்தில்தான். காரணம் வேலை தருவது கிடையாது. நாங்கள் அயல்நாட்டுக்குச் செல்வதற்கு Passport தரமாட்டேன் என்கிறார்கள். இதுகுறித்து தமிழக அரசு மத்திய அரசுக்கு (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன் இதுகுறித்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி எங்களுக்கு, உடனடியாக சிறுபான்மை சமுதாய மக்களுக்கு உதவ வேண்டுமென்று நமது அரசு கேட்டுக்கொள்ள வேண்டும். நாங்கள் அன்னிய நாடுகளுக்குச் சென்றால் அன்னியச் செலாவணி நாட்டுக்குக் கிடைக்கும். ஆனால் Passport-க்கு 3 மாதம் 4 மாதம் இழுத்தடிக்கிறார்கள். பாய் என்றால் Passport தராமல் இழுத்தடிக்கிறார்கள். இதுபோன்ற சூழ்நிலைகள் மாற வேண்டும். யாரோ லாகூருக்கு பஸ்சில் போனால் எங்களுக்கு என்ன இலாபம்? எங்களுக்கு சோறு கிடைக்குமா? லாகூருக்கு பஸ் போகட்டும். நான் வேண்டாம் என்று கூறவில்லை. எங்களுக்கு முதலில் வாழ உரிமையை இங்கே தாருங்கள். நாங்கள்

சுதந்திர உணர்வோடு இங்கே வாழ வேண்டும். ஜாலியன்வாலாபாக் படுகொலையிலேகூட அதிகம் பேர் இறந்தவர்கள் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஆனால் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முபாரக்.

*பிற்பகல் 12-40*

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து, ஏதோ ஒரு சமுதாயத்திற்கே எதிர்ப்பாக இந்த அரசு செயல்படுகிறது என்கிறமாதிரி முத்திரையைப் பதித்துப் பேசுகின்றார். அது இங்கே நிச்சயமாகப் பிரச்சினையை ஏற்படுத்தும். தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்துக்களைச் சொல்கிறபோது, சமுதாயத்திற்கான கோரிக்கையை வைக்கிறபோது, நல்ல கருத்துக்களை ஒரு இணக்கமான நிகழ்வுகளைச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கிற கூடலூர் பகுதியில்கூட பல பிரச்சினைகள் நடந்திருக்கின்றன என்று சொல்கிறார்கள். பிரச்சினைகள் நடக்கிறபோது அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது எங்களுடைய கடமை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். அவர் கருத்தை அவர் சொல்கிறார். திரு. ஆரூண் ரஷீத், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது எங்களுடைய கடமை. இப்போதுகூட வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆலங்காயம் என்ற இடத்திலே கிறிஸ்தவப் பெண்மணிகள் நான்கு பேர் அங்கே சென்று பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்கள். பி.ஜே.பி.யைச் சேர்ந்த இளைஞர் அணித் தலைவர் அவர்களை அடித்துத் துன்புறுத்தி அவர்களுடைய புடவையை எல்லாம் பிடுங்கி, இங்கே பிரச்சாரம் பண்ணக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். மதமாற்றம் செய்யக்கூடாது என்று.....

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது எந்த அளவுக்கு உண்மை என்று தெரிவதற்கு முன்னாலேயே அவர்மீது நடவடிக்கை எடுத்து அவர்களைக் கட்சியை விட்டு நீக்கியிருக்கிறோம். நீக்கியதற்குப் பிறகுதான் விசாரி



சொல்லியிருக்கிறோம். நிச்சயமாக அது தவறு என்று சொல்கிறோம். தவறாக இருந்தால் நீக்கியது மட்டுமல்ல, நிரந்தரமாக நீக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**• மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, அந்த நண்பர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதையும் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிக நேரம் ஆகிவிட்டது, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே இருக்கிற எஸ்.பி., ரமேஷ் குடவாலா அவர்கள் தன்னுடைய குடும்பத்தோடு அங்கே சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலைத் தெரிவித்திருக்கிறார்கள். உண்மையிலேயே இது எல்லாம் பாராட்டப்பட வேண்டிய விஷயம். ஒருசில காவல் துறை அதிகாரிகள் நல்ல முறையில் செயல்படுகிறார்கள். நாங்கள் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இதுவரை நடந்த கலவரங்களில் எந்த இடத்திலாவது எந்த எஸ்.பி.யாவது இப்படி நடந்திருக்கிறார்களா ? ரமேஷ் குடவாலா என்ற அதிகாரி தனது குடும்பத்தோடு அங்கே சென்று அந்தப் பெண்களுக்கு ஆறுதல் சொல்லியிருக்கிறார். இதுபோன்ற நிலைமை தொடர்ந்தால் எந்த இடத்திலும் சிக்கலான கலவரமான சூழ்நிலை ஏற்படாது என்பதைச் சொல்வதற்காகத்தான் இந்தப் பிரச்சினையை இங்கே வைக்கிறேன். அந்தப் பெண்கள் தலித் இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ சமுதாயப் பெண்கள். அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே போலீஸ் அதிகாரிகளும் உடனடியாகச் சென்று நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். காவல் துறையும் நேரடியாகச் சென்று ஆறுதல் சொல்லியிருக்கிறது. அதை உளமார நான் பாராட்டுகிறேன். ஆனால் அதேநேரத்தில் ஆறுதல் சொல்லாத இடங்களில் எங்களுடைய கோரிக்கைகளை, ஆர்வங்களை இங்கே வைப்பதில் தவறு இல்லை. அதை கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதில் எந்தவிதமான தவறும் இல்லை. அதே நேரத்தில் சென்னையிலே சோதனை என்ற பெயரால்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்களே எல்லாவற்றையும் பேசிவிட்டால் மற்றவர்கள் பேச வேண்டாமா ? உட்காருங்கள். (குறுக்கீடு) அதிக நேரம் எடுத்துக் கொண்டுவிட்டீர்கள்.

[1999 மே 7

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சை விரைவில் முடித்துவிடுகிறேன். ஆகவே, சென்னையில் எங்களுக்கு வீடுகள் வாடகைக்குக் கிடைப்பதற்கு காவல் துறை குறுக்கிடாத அளவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறையில் உயர் அதிகாரிகளுக்குச் சொல்ல வேண்டும். பாய் என்றாலே எங்களைக் கேட்டுக்கொண்டுதான் வாடகைக்கு வீடு கொடுக்க வேண்டும் என்று எல்லாம் சொல்கிற நேரத்தில் அந்தக் காலத்தில் குற்றப்பரம்பரையைப் பார்க்கிற மாதிரி, எங்கள் இந்தச் சமுதாயத்தைப் பார்க்க வேண்டாம் என்று....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். யார், எந்த அதிகாரி, எங்கே அப்படிச் சொன்னார் என்று குறிப்பிட்டுச் சொன்னால்தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்று. நீங்கள் பொத்தாம்பொதுவாகச் சொல்லிக்கொண்டே போனால் எப்படி? உட்காருங்கள். திரு. லத்தீப் ஏதோ சொல்ல வேண்டுமென்று நிற்கிறார்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சம்பவம் என்னுடைய தொகுதியிலே நடந்ததுதான். நான்கு பிரச்சாரகர்கள், கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தாக்கப்பட்டது உண்மை விஜிலாபுரம், வெள்ளிப்பட்டு என்ற பகுதியில். ஆனால் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு நான்கு பெண்களும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். நானும் அந்தக் கிராமத்திற்குச் சென்று...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தச் சம்பவம் நடந்ததை யாரும் மறுக்கவில்லை. நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்களே சொல்லிவிட்டார்கள். ஆகவே, அதோடு விட்டுவிடுவதுதான் நல்லது. (குறுக்கீடு) விவாதம் எங்கோ போய்க்கொண்டிருக்கிறது. ஒன்றரை மணிக்குள் சபையை முடிக்கவேண்டும். இன்னும் பலவேறு உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) அவர் சொல்லிவிட்டார். அவர் சொன்ன சம்பவத்தை, நடக்கவில்லை என்று யாரும் மறுக்கவில்லை. அதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்றும் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் நேற்று அங்கேதான் இருந்தேன். பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் பேசுகிறார் என்று சொல்லி விட்டுப் பேசுவதை நீங்கள் தடுக்கிறீர்களே?



1999 மே 7]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்றால், எதுவும் ஒழுங்கு தவறியிருந்தால் நீங்கள் அதைச் சொல்லலாம். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மருத்துவமனையில் அந்தப் பெண்கள் நான்கு பேரும் நேற்று இரவு காணாமல் போய்விட்டார்கள் என்ற தகவல் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுத்ததை நான் வரவேற்கிறேன். போலீஸ் துறை துரித நடவடிக்கை எடுத்திருக்கிறது. நாங்கள் அதைப்பற்றி குறை சொல்லவில்லை. உறுப்பினர் சொன்னது இத்தகைய உணர்வு எங்கள் பகுதியிலும் ஊடுருவிக் கொண்டிருக்கிறது. அந்த உணர்வுக்கு விரோதமாக நடவடிக்கை எடுத்து, அந்த உணர்வு பரவாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் முக்கியமானதே தவிர, நடவடிக்கை எடுப்பதில் இந்த அரசு சோடை போகவில்லை. நடவடிக்கை எடுத்தது. அதைத்தான் விளக்கிச் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இன்னும் நிறையப் பேர் பேச வேண்டும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன்.

பிற்பகல் 12-45

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆரூண் ரஷீத் அவர்கள் பேசுகின்றபோது wine shops-களிலே எல்லாம், ஆங்காங்கே bar நடக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர் பேசியதிலேயே நீங்கள் விளக்கம் கேட்கிறீர்களா?

**திரு. சி. ஞானசேகரன்:** Bar நடக்கிறது என்ற ஆதங்கத்தில், Bar-ஐத் திறந்து விடலாம் என்ற பாணியிலே பேசினார்கள். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை என்பது, பூரண மதுவிலக்கு, Bar-ஐத் திறக்க வேண்டுமென்பதல்ல என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறை, தீயணைப்புத் துறை மற்றும் ஆயத் தீர்வைத் துறை ஆகிய மானியங்களை வரவேற்று ஒரு சில கருத்துக்களை நான் இங்கே கூற விரும்புகிறேன். பொதுவாக

ஒரு அதிகாரி, 'சென்' என்ற ஒரு எழுத்தாளர் எழுதியிருக்கிறார்:

'A good Government is not possible without good law enforcement'

'நல்ல ஒரு சட்டத்தை நிலை நிறுத்தாமல் ஓர் அரசாங்கம் செயல்பட முடியாது' என்ற கருத்தை அவர் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்) தலைமை)*

அதுபோல, 'The cancer of corruption is also eating into the vitals of the organisation. At a time when the spectres of terrorism and communalism are haunting the country, the growing incapacity of the Police to face the challenge squarely is a matter of great concern' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இது இந்தியத் துறை பற்றிக் குறிப்பிட்டது. ஆனால், நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் அவர்களே அந்தத் துறையைக் கையிலே வைத்திருக்கின்ற காரணத்தினால், இப்போது போலீசிலே லஞ்சத்தை ஒழிப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து, மற்ற நண்பர்கள் குறிப்பிட்டதைப்போல, இரண்டு காவல் துறை உயர் அதிகாரிகள்மீதே லஞ்ச ஊழல் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே பெருமையோடு குறிப்பிடுகிறேன்.

அதைப்போல, காவல் துறையில் திறமையை அதிகரிப்பதற்காக அவர்களுக்கு நவீன கருவிகளை வழங்கியிருக்கிறார்கள். நல்ல பயிற்சி, வீட்டு வசதி, பதவி உயர்வு போன்ற சலுகைகளையும், திறமையானவர்களுக்குப் பாராட்டு விருதையும் வழங்கி, இப்போது காவல் துறையை இந்தியாவிலே முதல் தரமான காவல் துறை என்ற அளவில் அவர்கள் அதை உருவாக்கியிருப்பதை நான் மிகப் பெருமையோடு இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னொன்று, இங்கே ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசினார்கள். தென் மாவட்டங்களில் இனக் கலவரமும், மதக் கலவரமும் அதிகமாக நடந்தது உங்களுக்குத் தெரியும். நானும் அந்த மாவட்டத்தின் தலைநகரான திருநெல்வேலியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அதைப்பற்றி ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக, நெல்லையைப் பொறுத்தவரையில், இப்போது இது மாநகராட்சியாக ஆகியிருக்கிறது. முன்பு, நெல்லை, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் என்று மூன்று நகராட்சிகளாக இருந்தன. நெல்லை



சைவப் பெருமக்கள் அதிகமாக வாழ்கின்ற இடம். பாளையங்கோட்டை, கிறிஸ்தவர்கள் வாழ்கின்ற இடம். மேலப்பாளையம், இஸ்லாமியர்கள் வாழ்கின்ற இடம். ஆனால், பல நூறு ஆண்டு காலமாக மூன்று இனத்தாரும் ஒன்றாக இருந்து ஒரு கலவரம்கூட வராத ஒரு இடத்தில், நான்கைந்து ஆண்டு காலமாக மதத்தின் சார்பாகவும், அதேநேரத்தில் இனக் கலவரமும் ஏற்பட்டு பல அசம்பாவிதங்கள் நடைபெற்றதற்காக உண்மையிலே நான் மெத்த வருத்தப்படுகிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் லத்திப் அவர்கள் மேலப்பாளையம் பிரச்சினைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மேலப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் மனுத் தந்திருக்கிறார்கள். என்னிடத்திலேயும் அங்குள்ள மக்கள் மனுத் தந்தார்கள். அது முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த நேரத்தில் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏதோ இஸ்லாமிய சமுதாயமே மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு ஒரு எதிரான அணியைப் போன்றதொருத் தோற்றத்தை உருவாக்கக் கூடாது என்பதற்காக ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நெல்லையிலே வரி உயர்வு ஏற்பட்டபோது போராட்டங்கள் நடத்தினார்கள். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரியைக் குறைத்து அறிவிப்புச் செய்தார்கள். அப்படி அறிவிப்புச் செய்ததற்கு மேலப்பாளையத்தில் இருக்கின்ற அனைத்து மசூதிகளுடைய தலைவர்கள் - ஜமாத்தாக சேர்ந்து ஒரு வரவேற்பு கொடுத்தார்கள். யாருக்கு என்றால், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர், நம்முடைய முகம்மது கோதர் மைதீன் அவர்களுக்கும், எனக்கும் சேர்த்து வரவேற்பு தந்தார்கள். பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவர்களுக்கு வரவேற்புத் தந்திருக்கலாம். ஆனால், எனக்கும் சேர்த்து வரவேற்புத் தந்தார்கள் என்றால், அது எனக்குத் தந்த வரவேற்பல்ல; வரவேற்புத் தந்தார்கள் என்றால், தலைவர்மீது இஸ்லாமிய சமுதாயம் வைத்திருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) நம்பிக்கைக்கும், அன்பிற்கும் ஓர் எடுத்துக்காட்டு என்பதை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தென் மாவட்டங்களில் ஜாதி, சமய கொலைகள் நடந்ததை இப்போது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கிறார்கள். 2 முறை அனைத்துக் கட்சிக் கூட்டம் இராமநாதபுரத்திற்கு நேரில் சென்றது; காவல் துறையிலும், மாவட்ட நிர்வாகத்திலும் எடுத்திருக்கின்ற நடவடிக்கை; இனக் கலவரத்தில் இறந்தவர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் நிவாரணம்; ஜாதித் தலைவர்களுடைய பெயர்கள் மாவட்டங்களுக்கும், போக்குவரத்துக் கழகங்களுக்கும் இருந்ததை

மாற்றியமைத்தல் போன்ற நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார்கள். அதேநேரத்தில், அந்தத் தொகையை பல்கலைக்கழகத்திற்கு Chair என்ற முறையில் அவர்கள் ஒரு அறக்கட்டளையை உருவாக்கியிருக்கிறார்கள். நான் என்னுடைய கருத்தாகத் தெரிவிக்க விரும்புவது, அந்த அறக்கட்டளை உருவாக்குகின்ற அந்த வட்டிப் பணத்திலிருந்து—இன்றைக்குத் தென் மாவட்டங்களில் மாணவர்களிடத்திலேகூட ஒரு இன வேறுபாடு இருக்கிறது ஆகவே—தந்தை பெரியார், காமராசர், காந்தியார், அண்ணா போன்றவர்களுடைய ஜாதி, சமய வேறுபாடற்ற சமுதாயம் அமைய வேண்டுமென்ற கருத்துக்களை சொற்பொழிவுகள் நடத்துவதற்குப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அதேபோல, பல்வேறு இனத்தைச் சேர்ந்த. மதத்தைச் சேர்ந்த மாணவர்களை ஒழுங்காக இணைத்து, அடிக்கடி சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்வதற்கும் இந்தப் பணத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இப்போது மாவட்டந்தோறும், கிராமங்கள்தோறும் குழுக்களை அமைத்திருக்கிறார்கள். அதிலே பெண்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் தரப்படவில்லை. ஆண்களைவிட ஜாதிப் பற்று பெண்களுக்கு மிக மிகக் குறைவு. ஆகவே, அவர்களை அதிலே அதிகமாக ஈடுபடுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களிடத்திலேகூட இந்த இன வேறுபாடு இன்றைக்கு வளர்ந்து வருகிறது. தீண்டாமையை ஒழிப்பதற்கு, முன்பெல்லாம் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கு Moral class என்று நான் படிக்கும்போதெல்லாம் உண்டு. அதைப்போல இப்போது ஜாதி ஒழிய வேண்டுமென்பதற்காக ஒரு பாடத்திட்டத்தை ஒரு வாரத்திற்கு இரண்டு வகுப்புகள் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ஏற்படுத்தலாம் என்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் நெல்லை, தூத்துக்குடியில் நடந்த இனப் படுகொலைகளைப்பற்றி தனியாக விசாரணை நடத்துவதற்காக அவர்கள் மதுரையிலே ஒரு Special Sessions Court அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நெல்லையிலும், தூத்துக்குடியிலும்தான் இந்தப் படுகொலைகள் அதிகம். ஆகவே, ஒரு ஸ்பெஷல் நீதிமன்றத்தை திருநெல்வேலியிலேயும் அமைக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



அதோடு, நீதியரசர் மோகன் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, அவர்கள் ஜாதி சமய வேறுபாடற்ற சமுதாயத்தை எப்படி அமைக்கலாம் என்பதற்காகச் சுற்றுப்பயணம் செய்து அறிக்கை தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையில், இப்போது தென் மாவட்டங்களில் உள்ள மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக High Power Commission for Socio-economic and Industrial Development for Southern Districts என்று அமைத்திருக்கிறார்கள். அந்த நோக்கத்திற்காக ஓய்வுபெற்ற நீதியரசர் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் குழுவை அமைத்திருப்பதற்காக தென் மாவட்டத்து மக்கள் சார்பாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலையும் வணக்கத்தையும் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, சென்ற ஆண்டின் கணக்கை எடுத்துப் பார்த்தால், 2, 3 ஆண்டுகள் தென் மாவட்டங்களில் அதிகப்படியான இனப் படுகொலைகள் நடந்துள்ளன. ஆனால், இந்த ஆண்டு மிகக் குறைவாக, அங்கு மட்டுமல்லாமல், இப்போது மாநிலம் எங்கும் எடுத்துப் பார்த்தால், முன்பு 1996-ல் இருந்ததைவிடக் குறைந்து இப்போது 30 என்ற அளவில் குறைக்கப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு இனக்கலவரத்திலே படுகொலைகள் தென் மாவட்டங்களில் நடைபெறவில்லை என்பது ஒரு நல்ல செய்தி. அதற்காகவும் நான் காவல் துறைக்கும், உள்துறைச் செயலாளருக்கும் டி.ஜி.பி. போன்ற காவல் துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுதலை இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், இப்போது அடிக்கடி காவல் துறைக்கும் வழக்கறிஞர்களுக்கும் மோதல் ஏற்படுவதை நீங்கள் பத்திரிகையிலே பார்த்திருக்கக்கூடும். நான் முன்பே ஒருமுறைகூட சட்டமன்றத்தில் சொன்னேன். அடிக்கடி மோதல் நிகழுகின்ற காரணத்தால் இதற்காக ஒரு Permanent Commission, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி, ஓய்வு பெற்ற டி.ஜி.பி. இன்னும்-வழக்கறிஞர்கள்—'Bar Council' தலைவர், இந்த மூன்று பேரையும் கொண்ட ஒரு நிலையான குழுவை அமைத்தால் நிச்சயமாக இதற்கு ஒரு முடிவு காண முடியும் என்று நான் நம்புகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், பாளையங்கோட்டை நகர், அதனுடைய காவல் நிலையம், விரிந்த பரப்பைக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதை இரண்டாகப் பிரித்து, இன்னொரு புதிய காவல் நிலையத்தைத் தரவேண்டுமென்றும், சீதபத்மநல்லூர் புறக்காவல்

நிலையத்தை முழுக்காவல் நிலையமாக ஆக்கவேண்டுமென்றும் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதோடு மட்டுமல்லாமல், இப்போது, Road Accidents மிகமிக அதிகமாக நடைபெறுவது உங்களுக்குத் தெரியும். ஒரு கணக்கு பார்த்தால், அதிலே கணக்குச் சொல்கிறார்கள், நாள் ஒன்றுக்கு இந்தியாவில் 60 பேர் இந்த விபத்துக்களால் இறக்கிறார்கள், 300 பேர் காயம் அடைகிறார்கள் என்று. ஒரிஸ்ஸாவில் ஓர் ஆண்டில் 826 பேர் விபத்தில் இறந்திருக்கிறார்கள். ஆனால் கொலை 577 தான். இதைவிட அது அதிகமாகத்தான் இருக்கிறது. தமிழகத்தை பொறுத்தவரையிலும் அடிக்கடி விபத்துககள் நடப்பதை தடுப்பதற்கு, சட்டத்திலே 304 (A) I.P.C. என்கிற இந்திய தண்டனைச் சட்டத்தில் தண்டனையோ அல்லது அதற்கு அபராதமோ விதிக்கலாம் என்று இருப்பதை மாற்றி, தண்டனைதான் தரவேண்டும் என்ற சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொண்டு, தென் மாவட்டங்களில் இனப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தியதற்காகவும், அதைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததற்காகவும் நான் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, பாராட்டுகளைத் தெரிவித்து, முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை, ஆயத் தீர்வைத் துறை மற்றும் தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது சில கருத்துக்களை நான் இங்கே சொல்ல விழைகின்றேன். ஏற்கெனவே நம்முடைய காவல் துறையினுடைய பல்வேறு அம்சங்களை, கடந்த வரவு-செலவு கூட்டத்தின்போது, பல கருத்துக்களை நான் இங்கே சொல்லியிருந்தேன். காவல் துறைக்கும் நம்முடைய மக்களுக்கும் இருக்கின்ற தொடர்பு என்பது அரசாங்கத்திற்கு நல்ல பெயரை உண்டாக்கித் தருவதிலே ஒரு பெரிய பொறுப்பு இருப்பது காவல் துறையினுடைய பங்கு என்று நான் கருதுகிறேன். அந்த வகையிலே காவல் துறை செயல்படுவதில் கோளாறுகள் ஏற்பட்டால் அது அரசுக்குப் பல்வேறுவிதமான கெட்ட பெயர்களைச் சம்பாதிக்கின்ற நிகழ்வினை நாம் பார்க்க முடியும். குறிப்பாக இதைச் சொல்கிறபோது, சில கோரிக்கைகளை வைக்கவேண்டியுள்ளது. அதாவது, சமீபத்திலே நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். நம்முடைய மதுவிலக்குப் பிரிவைச் சேர்ந்த 2 இன்ஸ்பெக்டர்கள்,



மதுவிலக்கு என்று சொல்லுவது மதுவிலக்கை அமலாக்க வேண்டியவர்கள், சாராய விற்பனைக்கு உடந்தையாகச் செயல்பட்டதன் விளைவாக குழிவிளை என்ற பகுதியில், எங்களுடைய இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்த வாலிபன் தங்கமணி கடுமையாகத் தாக்கப்பட்டு, அவருடைய வீட்டிலே சாராயம் இருப்பதாகச் சொல்லி, அவனைக் கடுமையாகத் தாக்கி, 10 தினங்கள் மருத்துவமனையில் இருக்கும்படி அனுப்பினார்கள். அந்த இன்ஸ்பெக்டர்கள் ஞாறாம்விளையிலிருந்து 15 கிலோமீட்டர் தூரத்திற்குப் பின்னால் போய் ஒரு சாராய வியாபாரியை அழைத்துச் சென்று, . அவருடைய வீட்டிலே சோதனையிடச் சென்றதனுடைய பின்னணி, அதனால் பல்வேறு அசம்பாவிதங்கள் நடைபெற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு, ஊர்மக்கள் எல்லாம் சேர்ந்து, அவருடைய வண்டியை முன்னால் மறித்து, பல நிகழ்ச்சிகள், நடக்கவேண்டியது ஏதோ துரதிருஷ்டவசமாக அது மாற்றப்பட்டது. எனவேதான், அந்த ஞாறாம்விளையில் இருக்கிற மதுவிலக்குப் பிரிவைச் சார்ந்த 2 இன்ஸ்பெக்டர்கள் மீதும், அதிலே ஈடுபட்ட 3 காவலர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, சாராயம் கூடாது, கடத்தலைத் தடுக்க வேண்டும், சாராய விற்பனை கூடாது என்று சொன்ன காரணத்திற்காக அடி வாங்க வேண்டிய ஒரு சூழ்நிலை இந்தத் துறையிலே ஏற்படுகிறது என்று சொன்னால், எப்படி நாம் இதைத் திருத்திக்கொள்ள முடியும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுபோல, 1980-ல் பதவி உயர்வு பட்டியலில் சேர்ந்து, கிரேடு I-ஆக இருந்த 89 ஊழியர்கள் 33 வருடங்களாக சர்வீஸ் இருந்தும், சப்-இன்ஸ்பெக்டராகப் பதவி உயர்வு கிடைக்காமல் இருக்கிற பிரச்சினையை அரசு கவனிக்க வேண்டும்.

அதுபோன்று, பத்துகாணியில் உள்ள காவல் நிலையத்திற்காக இடம் தந்திருக்கிறார்கள். அந்த இடத்திலே காவல் நிலையக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, கண்ணுமாமூடு என்ற இடத்தில் இருக்கிற புறக்காவல் நிலையத்தை மாற்றி, ஒரு காவல் நிலையமாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நம்முடைய சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு 30-9-1998-இல் அறிவித்தபடி பதவி உயர்வு வழங்கவில்லை என்ற பிரச்சினை இருக்கிறது. 329 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். அந்தப் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சப்-இன்ஸ்பெக்டர்கள் 98 பேர்கள் பயிற்சிக்கு அனுப்பப்படாமல் இருப்பதை ஏற்கெனவே இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் அந்த விவரங்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு மறுவாழ்வளிக்கின்ற வகையில் அவர்களுக்கு சப்-இன்ஸ்பெக்டர் பணி சம்பந்தமாக அவர்களைப் பயிற்சிக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, ஆயுதப் படை சப்-இன்ஸ்பெக்டர்கள் பதவி இறக்கம், 117 பேர்கள் இருக்கிறார்கள். அதிலே தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, தீயணைப்பு நிலைய ஊழியர்களுக்கு, 6-ஆவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம், படிகள், உபரி பணிக்கு 50 ரூபாய் என்று அறிவித்திருந்தும் வழங்கப்படவில்லை. அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லங்கோட்டில் கடந்த ஆண்டு ஒரு தீயணைப்பு நிலையத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி தந்தார்கள். ஆனால், இங்கே தந்திருக்கிற வண்டி என்பது நகர முடியாத ஒரு வண்டியாக இருக்கிறது. எனவே, ஒரு புதிய வாகனம் வேண்டும். அதேபோன்று, நம்முடைய அரசுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அந்த இடத்திலே, அதற்குத் தேவையான கட்டடத்தைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே தேங்காய்ப்பட்டணம் வெடிகுண்டு சம்பந்தமாக நான் இங்கே பல விவரங்களைச் சொல்லியிருக்கிறேன். தவறான வழக்கு ஒன்றை ஜோடித்திருக்கிறார்கள். அந்த ஜமாத்து நண்பர்கள் மீது உள்ள அந்த வழக்கினை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, விருதுநகர் மாவட்டததில், 10 ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் கொலை சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. 25-2-1999-லிருந்து எப்.ஐ.ஆர் நிலையிலேயே இருக்கிறது.

பிற்பகல் 1-00

காவல் நிலையச் சாவுகள் என்பது கடந்த ஆண்டு, 1-4-1998 முதல் 1-4-1999 வரையிலும் சுமார் 26 மரணங்கள் நடந்திருக்கின்றன. சரிவர விசாரணை வேண்டும், நடவடிக்கை வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஆலங்குளம் உதவி ஆய்வாளர் பொய் வழக்குப் போட்டு துன்புறுத்துவதாகத் தகவல் வந்துள்ளது.

அதுபோல, 30-3-1999-ல் குருந்தங்கோடு பகுதியில் ஸ்ரீமதி என்ற இளம் பெண்ணைக் கற்பழித்துக் கொலை செய்திருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கவில்லை.

15-3-1999 அன்று திருவட்டாறு காவல் நிலையச் சரகத்தில், ஆற்றூரில் குளோரிபாய் என்ற பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்திருக்கின்றார்கள். எப்.ஐ. ஆர் போட்டதோடு இருக்கிறது.

6-1-1999-ல் அருமனை காவல் நிலையச் சரகம் மலமாரியில் ஆதிதிராவிடப் பெண்ணைக் கற்பழித்திருக்கின்றார்கள். காவல் துறையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

6-10-1998-ல் அருமனை காவல் நிலையம், அண்டுகோடு கோணத்து வீட்டில், 10 ஆம் வகுப்பு மாணவி சுதாவை பலாத்காரம் செய்த சம்பவத்திலே காவல் துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

15-8-1998-ல் அருமனை காவல் நிலையம, மாறப்பாடி சுபிதா, என்ற 4 ஆம் வகுப்பு மாணவி பலாத்காரம் செய்யப்பட்டதில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை

31-3-1998-ல் கன்னியாகுமரி, பெருமாள்புரம், அகதி முகாமிலுள்ள, உமா என்ற சசிகலா, ஜெயசீலன், அர்ஜுன் ஆகியோரால் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கின்றாள். உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

20-1-1999-ல் கீழ்சந்தையடியில், அம்பிகா என்ற பெண், கணவனால் வரதட்சணைக் கொடுமையின் காரணமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார். நடவடிக்கை இல்லை.

8-12-1998-ல் உஷா என்ற பெண், கணவனால் கொலை செய்யபபட்டு தூக்கில் தொங்கவிடப்பட்டதில் அருமனை காவல் நிலையம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்.

26-10-1998-ல் குழித்துறை காவல் நிலையப் பகுதியில், ஆர்.சி. தெருவில், அருள்சீலி என்ற பெண், கணவனால் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, இவ்வளவு நிகழ்ச்சிகளுக்குப் பின்னாலே சாராயத்தைப் பற்றி மட்டும் ஒரு வார்த்தை சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே சாராயத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று முழுமையாக மாநில அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டாலும், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இங்கிருந்து ஸ்பிரிட் கடத்துவது ஒரு வாடிக்கையான தொழிலாக இருக்கின்ற ஒரு சூழ்நிலை அங்கே நிலவுகிறது. பல பகுதிகளிலே, ஒரு பகுதியிலே மிகப் பெரிய முயற்சி எடுத்து, ஒரு கிராமத்திலே சாராயத்தை ஒழிக்கக்கூடிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கு அடிப்படையான சில வசதிகளை, அவர்கள் குடியிருக்கின்ற பகுதியில் அவர்களுடைய நிலங்களுக்குப் பட்டா வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறோம். ஆனால், கிட்டத்தட்ட 10 மாதங்களாகியும் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

செம்பகத்தரிசு என்ற பகுதி சாராய ஒழிப்பு இப்போது முழுமையாக நிறுத்தப்பட்டப் பகுதியாகப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய காவல் துறை அதிகாரிகள் போய் பார்த்து எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறார்கள். இருந்தும் அவர்களுடைய குடியிருப்பு நிலங்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. ஆகவே, இந்தச் சாராயத் தடுப்பு என்பது என்னுடைய மாவட்டத்திலே, தக்கலையிலே ஒரு டி.எஸ்.பி. இருக்கிறார். ஒவ்வொரு பிராந்திக் கடையிலும் மாதத்திலே ஆயிரம் ரூபாய் மாமூல் கொடுத்தாகிவிட்டது என்று சொன்னால், அங்கே bar நடத்துவதற்குரிய இடம் தருகின்றார்கள். இது மாவட்டம் பூராவும் மட்டுமல்ல, மாநிலத்திலே பல்வேறு பகுதிகளிலே இருக்கின்ற சூழ்நிலை. ஆகவே, இந்தத் துறையில் சாராயக் கட்டுப்பாடு என்று சொல்வது, இன்று நாம் எவ்வளவு முயற்சி செய்தாலும், அதைக் கட்டுப்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை நிலவுகிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு எந்த நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்பதை அரசு ஆராய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இல்லையென்று சொன்னால், அதை நம்முடைய கொள்கைப் பிரச்சினையாக நாம் எடுத்துக்கொண்டு முழுமையாக கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை, ஆயத் தீர்வைத் துறை, தீயணைப்புத் துறை



இவைகளிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியினைக் கூறிக்கொள்கிறேன். காவல் துறை என்பது மனிதனுடைய உடைமைகளுக்கும், உயிருக்கும் வேலியாக, பாதுகாப்பு அரணாக விளங்குகின்ற ஒரு துறை. அதைத்தான் வள்ளுவர் கூட,

"ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

என்று சொல்லுவார். 'உழுது, உரமிட்டு, களை பறித்து, நீர் பெருக்கி, ஒரு விவசாயி தன்னுடைய வயலிலே கதிரை விளையவைத்திருந்தாலும், அதைக்காட்டிலும் அந்த விளைந்து நிற்கின்ற கதிரைப பாதுகாப்பதுதான் அவர்களுடைய தலையாய கடன்' என்று சொல்வது போல, காவல் துறை என்பது மனிதனுடைய உடைமைகளையும், உயிரையும் பாதுகாத்துத் தருவது என்பதுதான் ஓர் அரசுக்கு நல்ல பெயரை ஈட்டித் தரும். காவல் துறையின் கடமையிலே சோர்வு ஏற்படுமானால், அதிலேதான் சட்டம் ஒழுங்கு என்கின்ற பிரச்சினைகள் எல்லாம் கூறப்பட்டு, ஓர் அரசுக்கு நல்ல பெயரோ அவப்பெயரோ ஏற்படுகின்ற ஒரு நிலை வருகிறது.

பிறபகல் 1-05

இன்றைக்கு நமது அரசைப் பொறுத்த அளவிலே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, கோவையிலே நடந்த குண்டு வெடிப்புக்குப் பின்னாலும், பல்வேறு சாதிக் கலவரங்கள் தென் பகுதியிலே ஏற்பட்டு இருந்தாலும்கூட அவற்றை எல்லாம் மிகத் திறமையாக இந்தக் காவல் துறையின் மூலமாகக் கட்டுப்படுத்தி, கோவை குண்டு வெடிப்புச் சம்பவத்திலே ஏறத்தாழ 178 பேரைக் கைது செய்து அந்த மதக் கலவரத்தை ஒடுக்கி இருக்கிறது இந்த அரசு.

அதேபோல, சாதிய மோதல்கள் தென் பகுதியிலே நேர்ந்தபோது, அந்த மோதல்களை எல்லாம் தடுத்து, இன்றைக்கு ஒரு கட்டுப்பாடான நிலையைத் தமிழகத்திலே உருவாக்கி இருக்கிறது. ஆனால், இந்த சாதிய மோதல்கள் குறைந்து இருந்தாலும்கூட, பல பகுதிகளிலே அந்த மோதல்களின் காரணமாக பல மக்கள் அந்தக் கிராமங்களை விட்டுக் குடி பெயர்ந்து இருக்கிறார்கள். இன்றைக்குக்கூட திருநெல்வேலி பகுதியிலே ஊருடையான் குடியிருப்பு என்ற ஓர் ஊர் இருக்கிறது. அந்தக் கிராமத்திலே சிறுபான்மையாக இருந்த மக்கள் எல்லோரும் அடித்து விரட்டப்பட்டு, இன்றைக்கு அந்த மோதல்கள் அங்கு இல்லாது

இருந்தாலும்கூட, அவர்கள் தங்களுடைய இடங்களுக்குத் திரும்பிப் போக முடியவில்லை. அவர்களை அந்தக் கிராமத்திலே குடியமர்த்த முடியவில்லை என்பதைக் காவல் துறை அதிகாரிகளிடத்திலே நாங்கள் சென்று சொன்ன நேரத்திலே, அவர்களும் மிகுந்த வருத்தத்தோடு எங்களால் அதைச் செய்ய முடியவில்லை என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இதையெல்லாம் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இனக் கலவரத்தின் மூலமாக வெளியேற்றப்பட்ட மக்களை எல்லாம் உரிய இடத்திலே எந்த இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களை அமர்த்துகின்ற பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, அந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், காவல் துறையும் இதை கவனத்தில்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த அரசு உரிய முறையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருந்தாலும்கூட, மேலே இருக்கின்ற காவல் துறையைச் சார்ந்தவர்களும் நேர்மையான முறையிலே நடந்து கொண்டிருந்தாலும்கூட, கீழே இருக்கின்ற காவல் துறையைச் சேர்ந்தவர்களின் மெத்தனப் போக்கின் காரணமாக பல்வேறு துயரங்களையும், துன்பங்களையும் எங்களைப் போன்றவர்கள் எல்லாம்கூட அனுபவித்து இருக்கின்றோம். கடந்த அக்டோபர் மாதம் 29 ஆம் தேதி பசும்பொன்னிலே நடந்த தேவர் குருபூசை விழாவிலே இந்த அரசு எந்தவிதமான பிரச்சினைகளும் எழுந்துவிடக்கூடாது என்பதற்காக 10 ஆயிரம் காவலர்களை அங்கே பணியிலே அமர்த்தியது. ஹெலிகாப்டரைக்கூட வைத்து ரோந்து வந்து எந்தவிதமான அசம்பாவிதமும் நடந்துவிடக்கூடாது என்பதற்காக காவல் காத்தார்கள். ஆனால், அதன்பிரகாரம் எங்களது இயக்கம் அங்கு நடைபெற்ற குருபூசை விழாவிலே கலந்துகொள்வதற்கு இந்த அரசிடத்திலிருந்து அனுமதி பெற்று இருந்தது. எங்கள் இயக்கத்தின் சார்பிலே நாங்கள் எல்லாம், எங்கள் தலைவர்கள் மேற்கு வங்கத்திலே இருந்து வந்த நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட அனைவரும் செல்கின்ற நேரத்திலே உரிய பாதுகாப்பு அளிக்கப்பட்டது. ஆனால், அந்த விழா முடிந்து வருகின்ற நேரத்தில் எங்களுக்கு அந்தப் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என்கின்ற காரணத்தினால், திரும்பி வருகின்றபோது, ஒரு சாலை விபத்திலே நாங்கள் எல்லாம் ஆட்பட்டு, எங்களது இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் 4 பேர், எங்களது தலைவர் உட்பட 4 பேர், உயிர் இழக்கின்ற ஓர் அவலமான நிலை அன்றைக்கு ஏற்பட்டது. அன்றைக்கு



நாங்கள் இந்த அரசுக்குத் தோழமைக் கட்சியாக இருந்த காரணத்தினால்தான் பெரும் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுக்கப்பட்டது. அதுவே, இந்த அரசுக்கு விரோதமானவர்களுக்கு ஏற்பட்டிருக்குமானால், அன்றைக்குப் பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளை இந்த அரசு சந்திக்க வேண்டிய அவலமான நிலை ஏற்பட்டிருக்கும். இதற்கெல்லாம் காரணம், அங்கே இருக்கின்ற காவல் துறையினுடைய மெத்தனப்போக்குதான். இவ்வளவு காவலர்களை அரசு வைத்திருந்தும்கூட, அதை முறையாக அவர்கள் செயல்படுத்தவில்லை என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பகல் 1-10

அதுபோல, அன்றைக்குத் திறந்த வாகனங்கள், லாரி போன்றவை எல்லாம் ஓடக்கூடாது என்று கடுமையான சட்டம் இயற்றப்பட்டிருந்தது. நாங்கள் சென்ற வழியிலே ஒரு பேருந்துகூடச் செல்லவில்லை என்கின்ற அளவிற்குத் தடுக்கப்பட்டிருந்தது. அப்படி இருந்தும், அந்த நேரத்திலேயும், இரவு 1-00 மணிக்கு, எப்படி அந்த லாரி அங்கே வந்தது என்பதே ஒரு கேள்விக்குறியாக இருந்தது. அதை அரசிடத்திலே எடுத்துச் சொல்லி, அதற்கு ஒரு கமிஷன்கூட வைத்தார்கள். அது விபத்தாக இருந்தாலும்கூட அதை அனுமதித்தது காவல் துறையினருடைய மெத்தனப்போக்கு என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த விபத்தில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு இந்த அரசு வேலைவாய்ப்பு அளித்து உதவிட வேண்டுமென்று நான் மனுக் கொடுத்திருக்கிறேன். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்- அந்த விபத்திலே இறந்தவருடைய மனைவி கைம்பெண்ணாக இன்றைக்கு ஆதரவற்றவராக இருந்து கொண்டிருக்கிறார். அவருக்கு இந்த அரசு கருணையோடு ஒரு வேலைவாய்ப்பைத் தந்து உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையிலே பணியாற்றுகின்றவர்கள்-இன்றைக்குக்கூட மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த நண்பர்கள் சிலர் வந்து, காவல் நிலையங்களிலே, இன்னும் காவல் நிலைய மரணங்கள் தடுக்கப்படவில்லை; அங்கே கீழ்நிலையிலே இருக்கின்ற காவலர்கள் மனித உரிமைகளை மீறுகின்ற அளவிற்கு எதேச்சதிகாரத்தோடு நடந்துகொள்கிறார்கள்; இந்த ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 26 காவல் நிலைய மரணங்கள் நேர்ந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எனவே, கீழ்நிலையில்

இருக்கின்ற காவலர்கள், காவல் நிலையங்களிலே - நீங்கள்கூட உங்களது கொள்கை விளக்கக் குறிப்பிலே சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள் - குற்றம் செய்தவர்களும், மனிதர்கள்தான் என்கின்ற நிலையிலே அவர்கள் குற்றம் செய்தவர்கள்மீது உரிய முறையிலே நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு, இப்படி அவர்களைத் தவறாகத் தாக்கி, மரணம் ஏற்படுகின்ற அளவிற்கு நடந்து கொள்பவர்கள்மீது நீங்கள் நீங்கள் கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இன மோதல்களிலே, பல்வேறு இடங்களிலே அதிலே சம்பந்தம் இல்லாத சில அப்பாவி மக்கள்மீது வழக்குத் தொடரப்பட்டு இருக்கிறது. சிவகாசியிலே ஒரு துப்பாக்கிச் சூட்டை போலீஸ் நடத்தியது. அந்தத் துப்பாக்கிச சூட்டிலே ஏறத்தாழ 5,000 பேர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. நடத்திய துப்பாக்கி சூடு, போலீஸ் நடத்தியது. ஆனால், வழக்கிலே சேர்க்கப்பட்டிருப்பவர்கள் அந்தப் பகுதியிலே உள்ள அப்பாவி மக்கள். இவையெல்லாவற்றையும் முதலமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு - அதுபோல இராமநாதபுரம் பகுதியிலே, பல்லாயிரக்கணக்கானவர்கள், எதுவும் அறியாத அந்த மக்கள் இந்த வழக்குகளிலே ஆட்படுத்தப்பட்டு மிகுந்த சிரமத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வழக்குகளையெல்லாம் நீங்கள் தனிக் கவனம் செலுத்தி, உண்மையிலே அவர்கள் குற்றவாளிகளாக இருந்து அவர்கள் வழக்கிலே சேர்க்கப்பட்டிருந்தால் அதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் சம்பந்தமே இல்லாமல் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த வழக்குகளிலே சேர்க்கப்பட்டிருப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய கவனத்தில் எடுத்துக்கொண்டு - அந்த வழக்குகளையெல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, சில கோரிக்கைகள். இன்றைக்கு அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் இந்தக் கோரிக்கைகளையெல்லாம் தங்களிடம் வைத்திருக்கிறார்கள். ஆனால், நான் இன்றைக்குச் சொல்ல விரும்புவது—நமது அரசு மத்திய அரசுக்கு இணையான சம்பள விகிதத்தை வழங்கியிருக்கிறது. ஆனால் காவல் துறையிலே இருக்கின்றவர்கள், சப்-இன்ஸ்பெக்டராகப் பணியாற்றுகின்றவர்கள், தங்கள் நிலையிலே தங்களுக்கு ஒத்தப் பணியிலே இருக்கின்ற வருவாய்த் துறையைச் சேர்ந்த Deputy Tahsildar போன்றவர்கள், உதவி தாசில்தார் எல்லாம் 5,500 ரூபாய் சம்பளத்தைப் பெறுகிறார்கள், நாங்கள்



சப்-இன்ஸ்பெக்டர்கள், அவர்களுக்கு இணையாக இருக்கின்றவர்கள், எங்களுக்கு என்று தனி அசோசியேஷன் இல்லை. நாங்கள் கேட்பதற்குக்கூட முடியாத நிலையில் இருக்கிறோம், எங்களுக்கு 5,300 ரூபாய்தான் சம்பளம் வழங்கப்படுகிறது. இதற்கு முந்தைய ஊதிய விகிதத்திலே நாங்களெல்லாம் ஒன்றுபட்டு இருந்தோம். ஆனால், தற்பொழுது கொடுத்த ஊதிய உயர்விலே எங்களுக்கு 5,300 ரூபாயும், மற்றவர்களுக்கு, எங்கள் தகுதியுள்ள வருவாய்த் துறையைச் சேர்ந்தவர்களுக்கு 5,500 ரூபாயும் கொடுத்து இருக்கிறார்கள். அதை முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு செல்லவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-15

அதுபோல, தலைமைக் காவலர்கள். இங்கிருக்கிற வருவாய்த் துறையினுடைய உதவியாளர்கள் இருக்கிறார்களே, அவர்களைக் காட்டிலும் 500 ரூபாய் குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. முந்தைய சம்பள விகிதத்தில் ஒன்றாக இருந்தது. இப்பொழுது எங்களுக்கு 4,000 ரூபாயாகவும், அவர்களுக்கு 4,500 ரூபாயாகவும் சம்பள விகிதம் இருக்கிறது. எனவே, இந்த ஏற்றத்தாழ்வுகளைப் போக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுபோல தலைமைக் காவலர்கள் சப்-இன்ஸ்பெக்டர்களாகப் பதவி உயர்வு பெறுகின்ற நேரத்திலே சில முரண்பாடுகள் இருக்கின்றன. அதைக் களையவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். 1993 ஆம் ஆண்டிலே இரண்டாம் நிலைக் காவலர்களாகத் தேர்வு செய்யப்பட்ட 356 பேர்களில், தாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, 1998 ஆம் ஆண்டிலே அவர்களில் 329 பேர்களுக்கு மருத்துவப் பரிசோதனைகளையெல்லாம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் வேலை வழங்கப்படவில்லை. ஏறக்குறைய அவர்களெல்லாம் 30 வயதைக் கடக்கின்ற ஒரு சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கும் கருணைகூர்ந்து இந்த அரசு வேலை அளிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 1995 ஆம் ஆண்டிலே தேர்வு செய்யப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர்களில், 98 பேர்கள் விடுபட்டுப் போய் இருக்கிறார்கள். அவர்களும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் இந்த அரசு பரிவோடு கவனித்து, அவர்களுக்கும் வேலை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். அதோடு என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு

சிறிய கோரிக்கையை மட்டும் வைத்து நான் விடைபெறலாம் என்று நினைக்கிறேன். தீயணைப்புத் துறையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக — என்னுடைய தொகுதி, அலங்காநல்லூரில் — அங்கே ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. அந்தச் சர்க்கரை ஆலையைச் சுற்றி கரும்பு விவசாயம் நிறைய இருக்கிறது. அதிலே அடிக்கடி தீப்பற்றக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த ஆண்டுகூட, அந்தச் சர்க்கரை ஆலையிலேயே தீப்பற்றிக் கொண்டு ஏறக்குறைய 3, 4 இலட்சம் ரூபாய் அந்த ஆலைக்குச் சேதம் வருகின்ற அளவுக்கு தீப்பற்றி விட்டது — ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கடந்த இரண்டு ஆண்டுகளாக கோரிக்கை வைத்து வருகிறேன். ஆனால் துறையைச் சார்ந்த அதிகாரிகள் மதுரையிலும், சோழவந்தானிலும் தீயணைப்பு நிலையம் இருக்கிறது அதுவும் ஏறக்குறைய 18 கிலோமீட்டர் 20 கிலோமீட்டருக்கு உள்ளாகவே இருக்கிறது, எனவே அதற்குச் சாத்தியமில்லை என்ற பதிலையே சொல்லிக்கொண்டு வருகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆனால் மதுரையிலிருந்தும், சோழவந்தானிலிருந்தும் அந்த வண்டிகள் வருகின்ற நேரத்தில் அங்கிருக்கிற இரயில்வே லைனைத் தாண்டி வரும் சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சந்தர்ப்பங்களிலே அந்த இரயில்வே கேட் மூடப்பட்டுவிட்டதால், ஏறக்குறைய 10 நிமிடங்களுக்கு மேல் தாமதமாகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், உரிய நேரத்திலே அங்கு ஏற்படுகின்ற அந்தத் தீயை அணைக்க முடியவில்லை என்கின்ற ஒரு குறைபாடு அந்தப் பகுதியிலே இருக்கிறது. ஆகவே, கனம் முதலமைச்சர் அவர்கள் அதைக் கருணையோடு பரிசீலித்து, என்னுடைய தொகுதி, அலங்காநல்லூரில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதுபோல, டாஸ்மாக்கிலே ஒரு Godown . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மணியடித்தாகிவிட்டது. அதற்குப் பிறகும் 'அதுபோல' என்றால் எப்படி? (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** டாஸ்மாக் Godown ஒன்று மதுரையிலே இருக்கிறது. அதிலே பலபேர் இராமநாதபுரம் பகுதியிலிருந்து, பிற்படுத்தப்பட்ட பகுதி - அங்கிருந்து வந்து வேலை செய்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே, மதுரையிலே இருக்கின்ற அந்த Godown-ஐ



வேறு இடத்திற்கு மாற்றப் போவதாகச் சொல்லுகிறார்கள். அந்த மாற்றுவதன் மூலமாக அரசுக்கு வாடகைகூட அதிமாகச் செலவாகிறது என்றும் சொல்கிறார்கள். 20 ஆயிரம் ரூபாய் வாடகை இருப்பதை 36 ஆயிரம் ரூபாய் கொடுத்து வேறு ஒரு Godown-ஐ ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இது தேவையில்லாத செலவை அரசுக்கு ஏற்படுத்துகிறது. எனவே, இதை மாற்றவேண்டாமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, நன்றி தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய சட்டம்-ஒழுங்கு சீரான முறையில், சிறப்பான முறையில் செயல்பட்டு வருவதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தீவிரவாதிகளுடைய பிடியில் சிக்கித் தவித்து சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டிருந்த காஷ்மீர் மாநிலம் மற்றும் பஞ்சாப், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களிலேகூட தீவிரவாதம் கட்டுக்கோப்புக்குள்ளே வந்துவிட்டது. ஆனால் அமைதியான தமிழகத்திலே இன்று சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்றும், தீவிரவாதிகளுடைய பிடியிலே சிக்கித் தவிக்கிறது என்றும், ஐ.எஸ்.ஐ. தீவிரவாதிகளுடைய ஆதிக்கத்தினுடைய பிடியிலேதான் தமிழகம் இருக்கிறது என்றும், கடந்த 15 நாட்களுக்கு முன்னால் இந்தியத் திருநாட்டினுடைய பிரதமர் திருச்சியிலே பேசுகின்றபோது, பத்திரிகையாளர்கள் மத்தியிலே மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்.

பிற்பகல் 1-20

உளவுத் துறையினுடைய அறிக்கையினை, காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இந்தியாவிலே எந்த மூலையிலே, எங்கே தீவிரவாதம் தலைவிரித்திருக்கிறது என்பதையும், எந்த மாநிலத்திலே சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து இருக்கிறது என்பதையும் தெள்ளத் தெளிவாக புள்ளிவிவரத்தோடு தெரிந்து கொள்ளுகின்ற வாய்ப்பைப் பெற்ற இந்திய நாட்டினுடைய பிரதமர் அவர்கள் தமிழகம் தீவிரவாதிகளுடைய பிடியிலே சிக்கியிருக்கிறது என்றும், சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து இருக்கிறது என்றும் சொல்லுகிறபோது நாம் அதைக் கூர்மையாகச் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதைவிட, இன்றைக்கு காவல் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலே நீங்கள் தந்திருக்கின்ற புள்ளிவிவரத்தைப் பார்க்கின்றபோது, இந்த நாட்டின் பிரதமருடைய கருத்து உண்மையா அல்லது இந்தப் பக்கங்களில் எழுதப்பட்டிருக்கின்ற வாசகங்கள் உண்மையா என்பதை நீங்கள்தான் இந்த மாமன்றத்திற்குச் சொல்ல வேண்டும்.

அதுபோலத்தான் இந்த நாட்டினுடைய அமைதி. தமிழகத்தை ஒரு அமைதிப் பூங்காவாக இந்தியாவிலே உருவாக்க வேண்டுமென்று சொன்னால், மீண்டும் ஒரு தொழிற்புரட்சி இந்த மண்ணிலே வர வேண்டுமென்று சொன்னால், மத வாத நச்சுப் பாம்புகள் தமிழகத்திலே நுழையக்கூடாது என்றும், தூங்குகின்றவர் தொடையிலே கயிறு திரிக்கக்கூடிய அந்தச் சக்திக்கு இங்கே ஊக்கம் அளிப்பவர்களை மக்கள் மன்னிக்க மாட்டார்கள் என்றும், இந்தத் தமிழ் மண்ணிலே என்றைக்கோ கேட்ட ஒரு குரல் இன்றைக்கும் என்னுடைய காதுகளிலே ரீங்காரம் இட்டுக்கொண்டிருக்கிறது. அந்தக் குரல், அந்த எண்ணம், அந்தக் கருத்து இன்றைக்கு மாறுபட்டிருக்காது என்று நான் கருதுகிறேன். அது தொடர்ந்து இருக்கும் என்று நான் நம்புகிறேன். இந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு காவல் துறையினுடைய மானியக் கோரிக்கை இந்த அவையிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

இன்றைக்கு குற்றங்கள் தமிழகத்திலே குறைந்திருக்கிறது என்றும், அவற்றைக் கண்டுபிடிக்கின்ற எண்ணிக்கை விகிதம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்றும் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், சென்னையிலே இன்றைக்கு, ஒரு காலகட்டத்திற்குப் பிறகு, எனக்கு முன்னால் பேசிய ஒரு சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுபோல, ஆங்காங்கு மும்பையை முந்துகின்ற அளவுக்கு தாதாக்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதும், வியாபாரிகள் அமைதியான முறையிலே தொழில் நடத்த முடியாத சூழ்நிலை, காவல் துறையிலே தீர்க்கப்பட வேண்டிய, நீதிமன்றத்திலே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளுக்கு யாருடைய வீட்டிலோ, எங்கோ அமர்ந்து, குண்டர்கள் மத்தியிலே இன்றைக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகின்ற அந்தக் கொடிய சூழ்நிலை தாதாக்கள் சாம்ராஜ்யம் மீண்டும் சென்னையிலே தலைதூக்கி இருக்கிறது என்பது பத்திரிகை பார்க்கின்ற அத்தனை வாசகர்களுக்கும் தெரியும். காவல் துறை அதிகாரிகளும் ஒத்துக்கொள்வார்கள், இந்த அரசும் ஒத்துக்கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.



கடந்த காலத்திலே நான் சட்டமன்றத்திலே பேசுகின்றபோது, இரண்டு முறை இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். தீயணைப்புத் துறையிலே ஒரு தவறு நடந்தது என்றும், அந்த அதிகாரிமீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினேன். கடந்தமுறை சொல்லுகின்றபோதுகூட அந்த அதிகாரியின்மீது நான் குற்றச்சாட்டைச் சொன்னபோது, அது இங்கே மறுத்துச் சொல்லப்பட்டது என்பதையும், அதற்குப் பிறகு இன்றைக்கு லஞ்சம் வாங்கியதற்காக அவர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் என்கின்ற செய்தியையும் நாம் பார்க்கிறோம், அந்த அதிகாரியின்மீது நான் சொல்லுகின்றபோது, தீயணைப்புத் துறையிலே மிதவைப் பம்புகள் வாங்கியதில் 35 ஆயிரம் ரூபாய்க்கான பம்புகளை 2-3/4 இலட்சம் ரூபாய் விலை கொடுத்து வாங்கியதாகவும், அதன் மூலமாக பல கோடி ரூபாயைக் கொள்ளையடிப்பதற்குக் காரணமாக இருந்த அதிகாரி, அந்த அதிகாரிமீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பலமுறை நான் இந்த மன்றத்திலே உரக்கக் குரல் கொடுத்திருக்கிறேன். ஆனால் இன்றைக்கு வேறு ஒரு காரணத்திற்காக, லஞ்சம் வாங்கியதற்காக, அவர்மீது தற்காலிக நடவடிக்கை எடுக்கப்பட்டு, இன்றைக்கு விஜிலென்ஸ் நான் கூறிய குற்றச்சாட்டு உண்மை என்பதை நிரூபித்து, அவர்மீது துறையின் சார்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந்த ஊழலைப் பொறுத்தவரையில் இதைவிடக் கொடுமையான முறை என்று சொல்லுவதைவிட, அதைவிட குறைந்த அளவிலேதான் உத்தரப்பிரதேச மாநிலத்தில் இதுபோன்று மிதவைப் பம்புகள் வாங்குவதிலேகூட ஊழல் நடந்தது. அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருந்த செல்வி மாயாவதி அவர்கள் மீது, இதேபோன்று மிதவைப் பம்புகள் வாங்குவதிலே 35,000 ரூபாய்க்கான மிதவைப் பம்புகளை 75,000 ரூபாய்க்கு வாங்கியதற்கு, இன்றைக்கு சி.பி.ஐ.யினுடைய விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. அவர்கள், நீதிமன்றத்திலே, சி.பி.ஐ.யிலே இன்றைக்கு தினசரி, படிகளிலே ஏறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இங்கே 2½ இலட்சம் ரூபாய்க்கு வாங்கப்பட்டிருக்கிறது, 35,000 ரூபாயக்கான மிதவைப் பம்புகள். நீங்கள் இன்றைக்கு அவர் மீது திணித்திருப்பது துறையினுடைய விசாரணை என்பதை நான் அறிகிறேன்.

பிற்பகல் 1-25

மாயாவதி அவர்கள் சி.பி.ஐ.யிலே சொன்ன கருத்திலேகூட, "என்னைவிட அதிகமான விலைக்குத்தான் தமிழகத்திலே வாங்கி

இருக்கிறார்கள். எனவே, தமிழகத்தை பார்த்துத்தான் அதைவிடக் குறைந்த விலையிலே நான் இங்கே வாங்கியிருக்கிறேன்" என்று சிபிஐயிலே அவர் சாட்சி சொல்லியிருப்பதையும், கருத்துச் சொல்லியிருப்பதையும் நாம் பார்க்கிறோம். எனவே, நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது, தனி நபரைக் காக்க வேண்டும் என்று சொன்னால், காக்க வேண்டுமென்று நீங்கள் எண்ணுவீர்கள் என்று சொன்னால், அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நீங்கள் காக்கலாம். ஊழலுக்கு விரோதமாக, எதிராக இருக்கிறோம் என்று சொல்கின்றபோது, அவர் யாராக இருந்தாலும், நமக்கு எவ்வளவு வேண்டியவர்களாக இருந்தாலும், அல்லது நம்முடைய வேண்டியவர்களுக்கு அவர்கள் எவ்வளவு வேண்டியவர்களாக இருந்தாலும், அவர்கள்மீது உரிய நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டும். இது Departmental Enquiry என்று ஒரு பூசி மெழுகுகிற வேலையை விட்டுவிட்டு, அவர்மீது உரிய நடவடிக்கையை, இன்னும் சொல்லப்போனால் சி.பி.ஐ.க்குக்கூட அதனைக் கொடுத்து, அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஒரு பக்கம் தீயணைப்புத் துறையிலே பொருட்கள் வாங்குவதிலே ஊழல் என்று சொன்னால், அதற்குப் பிறகு இன்றைக்கு ஏறத்தாழ 3½ கோடி ரூபாய்க்கு அதிகமாக, தீயணைப்புத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி, அதற்கான பணிகள் செய்யப்படாமல், பொருள்கள் வாங்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அந்தத் துறையிலே, தீ எங்கே பற்றி எரிந்தாலும் அதனைப் புகைப்படம் எடுப்பதற்காக என்று ஒரு அலுவலகம் இருக்கிறது. அதிலே அதிகாரிகள் இருக்கிறார்கள், பணியாளர்கள் இருக்கிறார்கள். ஆனால், அந்தக் கேமரா வாங்குவதற்கு, 50,000 ரூபாய், 70,000 ரூபாய் என்று கருதுகிறேன். அதை வாங்காத காரணத்தினால் பணியாளர்கள் இன்றைக்கும் பணி இல்லாமல் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிற சூழ்நிலை அந்தத் துறையிலே இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, அந்தத் துறையைப் பற்றித் தெரிந்தவர்கள், அந்தத் துறையிலே திறமை பெற்றவர்கள், அந்தத் துறைக்குத் தலைமை தாங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோலத்தான், கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே நான் சொல்கின்றபோது, தமிழகத்திலே சென்னையிலே குறிப்பாக ஆங்காங்கு



பொதுமக்கள் அமைதியோடு வாழ்ந்துகொண்டிருக்கிற அவர்களுடைய குடியிருப்புப் பகுதிகளில் மனமகிழ் மன்றம் என்கிற பெயரில் பல்வேறு சூதாட்ட விடுதிகள் இன்றைக்குத் தலைதூக்கியிருக்கின்றன. அதுதான் சமூகவிரோதக் கும்பல்களுடைய மறைமுகத் தொழிற்கூடமாக, அவர்களை உருவாக்குகின்ற இடமாக இன்றைக்கு அமைந்து கொண்டிருக்கின்றது என்று இந்த மன்றத்திலே நான் சொல்லியிருந்தேன். முதலமைச்சர் அவர்கள்கூட, அதற்குக் கருத்துச் சொல்கின்றபோது, பதில் சொல்கின்றபோது, பட்டியலையெல்லாம் போட்டுக் காட்டினீர்கள். இத்தனை மனமகிழ் மன்றங்களா என்று ஆச்சரியத்தோடுகூட இங்கே சொன்னதும் என்னுடைய காதிலே ஒலிக்கிறது. குறிப்பாக என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலேகூட, 120-க்கும் மேற்பட்டவைகளா; எப்படி இவையெல்லாம் உருவாகியது என்றுகூட ஆச்சரியக்குறி போட்டீர்கள். இன்றைக்கும் நான் சொல்கிறேன், ஆச்சரியக் குறி, ஆச்சரியக் குறியாகத்தான் இருக்கின்றது. இன்றைக்கும் அவை தொடர்ந்து யாருடைய பாதுகாப்பின் கீழ் நடைபெறுகின்றன என்பது தெரியவில்லை. யாருடைய அரவணைபபின்கீழ் அவை நடைபெறுகின்றன என்று தெரியவில்லை. இன்றைக்கும் அவை தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. அண்மையிலே, பத்திரிகை பார்க்கின்ற நண்பர்களுக்குத் தெரிந்திருக்க முடியும்; டெல்லி மாநகரிலே நடைபெற்ற மிகப் பெரிய படுகொலை, இதுபோன்று தவறுதலான முறையிலே, அரசினுடைய மறைமுகப் பாதுகாப்பின்கீழ் நடைபெறுகின்ற இதுபோன்ற சூதாட்ட விடுதியிலேதான் இந்திய நாட்டினுடைய அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர்கூட படுகொலை செய்யப்பட்டு, அந்தக் கொடுமையான சம்பவத்தை இன்றைக்குப் பத்திரிகையிலே பார்க்கிறோம். எனவே, இதுபோன்ற சம்பவங்கள் தமிழகத்திலே நடைபெற்ற பிறகுதான், சென்னையிலே நடந்து முடிந்த பிறகுதான் இவர்கள்மீது நடவடிக்கை எடுப்பீர்களா என்பதுதான் எங்களுக்குப் புரியாத புதிராக இருக்கிறது.

அதேபோல, இன்றைக்கு இங்கே வீரப்பனைப பற்றிச் சொன்னார்கள். வீரபபன் அவர்கள் தொலைக்காட்சியிலே பல்வேறு பேட்டிகள் கொடுக்கின்றபோது தமிழகத்தின் முதலமைச்சரை மிகவும் பாராட்டியதையெல்லாம் நாங்கள் கேட்டிருக்கிறோம். அவர் ** முதலமைச்சர் மீது நம்பிக்கை வைத்திருப்பவர். அந்த வீரப்பன் அவர்களை இத்தனை ஆண்டுகாலமாக பல கோடிக்கணக்கான ரூபாய்களை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இன்றைக்கு அரசு செலவு செய்தும்கூட, ஒரு மனிதரை, சமூக விரோதியை, பல நூற்றுக்கணக்கான தமிழ் மக்களைப் படுகொலை செய்த அந்த சமூக விரோதியைக் கைது செய்வதற்கு காவல் துறையால் இயலவில்லை என்று சொன்னால் (குறுக்கீடு) (கூச்சல்-குழப்பம்) **என்று சொன்னால், அவர் பத்திரிகையிலேயெல்லாம் முதலமைச்சரைப் பாராட்டிப் பேசியதை அத்தனை பேரும், நாட்டுமக்கள் கேட்டிருக்கிறார்கள். எனவேதான், நான் சொல்கிறேன். (கூச்சல்-குழப்பம்) இன்றைக்கு அந்தத் தனி மனிதரை (குறுக்கீடு) பேசி முடித்து விடுகிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்ளுங்கள். வார்த்தைகளைக் கொஞ்சம் நீங்கள் நிதானமாகப் பேச வேண்டும். முதலமைச்சர் மேலே மரியாதை வைத்திருப்பவர்கள் எல்லாம் ** என்று சொன்னீர்கள். அது முறை இல்லாதது. அந்த வார்த்தையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள். முதலமைச்சருக்கும், அவருக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்று நீங்கள் ஏதாவது ஆதாரம் சொன்னால் ** என்று சொல்வதில் அர்த்தம் இருக்கிறது. அதனால் முதலமைச்சர் மேலே மரியாதை வைத்திருப்பவர்கள் எல்லாம் ** ஆகமுடியாது. நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** அந்தச் சந்தனக்கட்டை வீரப்பனைக் காவல் துறையால் கைது செய்ய இயலவில்லை என்று சொன்னால் சர்வதேச அளவில் இந்தியாவினுடைய மரியாதையை நாம் இழந்து கொண்டிருக்கிறோம் என்பதை நாம் பார்க்க வேண்டும். ஏறத்தாழ நூற்றுக்கணக்கான கோடி ரூபாய், ஆண்டுதோறும் தமிழக அரசும், கர்நாடக அரசும் செலவு செய்தும் ஒரு சமூக விரோதியைக் கைது செய்வதற்கு முடியவில்லை என்று சொன்னால், அதிலே கவுரவம் பார்ப்பதைவிட காவல் துறையால் இயலவில்லை அல்லது எங்களது அரசால் இயலவில்லை என்பதை நீங்கள் மனப்பூர்வமாக ஒத்துக்கொண்டு,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இராணுவத்தினுடைய கையிலே அதை ஒப்படைப்பதுதான் இனியும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்று சொன்னால் கடந்த ஆட்சியிலே, அந்த ஆட்சியாளர்கள் கைது செய்ய முடியவில்லை என்று சொன்னபோது அதையும் நாம் விமர்சித்திருக்கிறோம். இதே மன்றத்திலே அந்த ஆட்சியைக் கையாலாகாத ஆட்சி என்றும் நாம் விமர்சனம் செய்திருக்கிறோம். இப்போது நீங்கள் ஆட்சிக்கு வந்து 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போதும் வீரப்பனைக் கைது செய்ய இயலவில்லை என்று சொன்னால் மற்றவர்களுக்கு என்ன விதிமுறைகளை நாம் சொன்னோமோ அதுதான் நமக்கும் பொருத்தமாகிறது. எனவே, நம்மால் இயலாத ஒரு காரியத்தை இராணுவத்தின் கையிலே ஒப்படைப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

சென்னையிலே உள்ள கள்ளச்சாராயத்தைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் சொன்னார்கள். தமிழகத்திலே அத்தனை மதுக்கடைகளிலும் Bar-கள் தடைவிதிக்கப்பட்டிருக்கின்றன என்று காவல் துறையினுடைய ஆணையர், அதிகாரிகள் எல்லாம் பத்திரிகையிலே இப்போது செய்தி கொடுக்கிறார்கள். ஆனால் நடைமுறையிலே அத்தனை மதுபானக் கடைகளிலும் 'Bar-கள்' அங்கீகாரத்தோடு நடந்து கொண்டிருக்கின்றன என்பதை நாம் பார்க்கிறோம். எந்த மதுக்கடையை எடுத்துக் கொண்டாலும் 'Bar-கள்' இன்றைக்கு இருக்கின்றன. எனவே, அவற்றை எல்லாம் மூடுவதற்கு காவல் துறை அதிகாரிகளால் இயலவில்லை என்று சொன்னால், எங்கோ ஒரு தவறு நடந்துகொண்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். யாரோ காவல் துறையினுடைய கைகளை கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அதுபோலத்தான் தனியார் நிதி நிறுவனங்கள். ஏறத்தாழ 231 கோடி ரூபாய்க்கு தமிழக மக்களுடைய பணத்தை, அந்தத் தனியார் நிதி நிறுவனங்கள் ஏமாற்றியிருப்பதும் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதும், அதற்கென்று தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் நடத்திக் கொண்டிருப்பதையும் நான் உணர்ந்து பார்க்கிறேன். ஆனால் என்னுடைய கருத்து என்ன என்று சொன்னால், அவர்கள் மீது உரிய நடவடிக்கையை, துரித நடவடிக்கையை எடுப்பதற்கு, இந்த அரசு தன்னால் இயன்ற அளவிற்கு, நீதிமன்றத்திலே அதற்கு எந்த அனுமதியை பெற்றாவது உடனடியாக அவர்களுடைய அந்த 231 கோடி ரூபாயை மீட்டெடுத்து, இந்த நாட்டு மக்களுக்குத் திருப்பிக்

கொடுக்க வேண்டிய கடமையில் நாம் இருக்கிறோம். அந்த வேளையில் அந்தத் தனியார் நிதி நிறுவனங்களிலிருந்து சில பெரிய புள்ளிகள், அவர்கள் கடனாக பல கோடிக் கணக்கான ரூபாயைப் பெற்றுவிட்டு இப்போது அவர்கள் சட்டத்தினுடைய பாதுகாப்பிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கம் அந்தத் தனியார் நிதி நிறுவனங்களுடைய அதிபர்கள் தவறு செய்து இருக்கிறார்கள், அவர்கள் மீது நாம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் நமக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அதே வேளையிலே அந்தத் தனியார் நிதி நிறுவனங்களிலிருந்து, நிதி பெற்று, கோடிக்கணக்கான ரூபாயைக் கடனாகப் பெற்றுவிட்டவர்கள் இப்போது அந்தத் தனியார் நிதி நிறுவனத்தினுடைய அதிபர்கள் சட்டத்தின் பிடியிலே சிக்கி இருக்கின்ற காரணத்தினாலே நாம் தப்பித்துக்கொள்ளலாம் என்று எண்ணுவார்கள் என்று சொன்னால், அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களிடமிருந்தும் அந்த நிதியைப் பெற்று, மீண்டும் தமிழகத்து மக்களுக்கு, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு நாம் அந்த நிதியைப் பெற்றுக் கொடுப்பது நம்முடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

அதேபோல, சென்னையிலே இப்போது ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது அது ஏறத்தாழ 45,000...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** 45 ஆயிரம் ஆட்டோ ரிக்ஷாக்கள் சென்னையிலே இருப்பதாக நாம் சொல்கிறோம். ஆனால், அதைவிட அதிகமாக ஏறத்தாழ இன்னும் 20,000-க்கும் மேற்பட்ட ஆட்டோ ரிக்ஷாக்கள் சென்னையிலே ஓடிக் கொண்டிருக்கின்றன என்றுதான் தகவல் வந்துகொண்டிருக்கிறது. ஆட்டோ ரிக்ஷாக்களில்தான், அதிகமாகக் குற்றம் செய்பவர்கள் அதைத்தான் அதிகமாகப் பயன்படுத்துகிற ஒரு வேதனையான சம்பவமும் இப்போது இருக்கிறது. எனவே, நாம் அனுமதி கொடுக்கிறபோது அவர்கள் யார் என்கிற முகவரியை முழுமையாகத் தேர்ந்தெடுத்து, அதை நாம் பரிசீலிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் அண்மையிலேகூட காமராஜர் சாலையிலே ஒரு பத்திரிகை நிருபர் மீது



மோதிவிட்டுச் சென்றவர்கள். அதற்குப் பிறகு இன்னொரு பகுதியில் சென்று, இன்னொரு நிருபரைக்கூட தாக்கியதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

அதைப்போல, 1981 ஆம் ஆண்டு, முதல் நிலைக்காவலர்களாகப் பணியமர்த்தப்பட்ட பெண் காவலர்கள் 18 ஆண்டுகளாகப் பதவி உயர்வில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-35*

என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே, ஒரு காவல் நிலையத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில், காவல் துறை மானியத்திலே பேசிவிட்டு, அதற்குப் பிறகு முதலமைச்சரிடமும் கடிதம் கொடுத்திருந்தேன். முதலமைச்சர் அவர்களும் உடனடியாக அது வழங்கப்படும் என்று அவர்களுடைய தனிச் செயலரை என்னிடம் அனுப்பிக்கூடச் சொன்னார். அந்தக் காவல் நிலையம் உடனடியாக அனுமதிக்கப்படும் என்று சொல்லி, அதற்குப் பிறகு அரசினுடைய சார்பாக 18 காவல் நிலையங்கள் தமிழகத்திலே உருவாக்கப்பட்டபோது, அந்தப் பட்டியலிலே என்னுடைய சட்டமன்றத் தொகுதியில், தியாகராயநகர் சட்டமன்றத் தொகுதியிலே அந்தக் காவல் நிலையம் வரவில்லை என்பதை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல், 1993-இல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்து விடுங்கள், நான் சொல்லி 3 நிமிடங்கள் ஆகிவிட்டன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (10-5-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*(ஏதுமில்லை)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

200. மாநிலத்திற்கிடையேயான வர்த்தகத்தின்போது அல்லது வாணிபத்தின்போது தொழிற்சாலை பயனுக்குரிய உப்பு நீங்கலாக, மக்கள் பயன்படுத்தும் அயோடின் கலந்த அல்லது வைட்டமின் சத்து கலந்த உப்பு உட்பட சாதாரண உப்பு (சோடியம் குளோரைடு) விற்பனை தொடர்பாக 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் வணிகர் எவரும் வரி எதுவும் செலுத்த வேண்டியதில்லை என உத்திரவிடுவது குறித்து வணிக வரிகள் துறையின் 7-12-1998 ஆம் நாளிட்ட 328 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

201. மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

202. மானியக் கோரிக்கை எண்-15—தமிழ்நாடு காவல் துறையின் 1999-2000 ஆண்டுக்கான கொள்கைக் குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

203. மானியக் கோரிக்கை எண்-16—தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

204. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து மூன்றாவது அறிக்கை, 1998-99.

205. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து நான்காவது அறிக்கை, 1998-99.

206. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து ஐந்தாவது அறிக்கை, 1998-99.

207. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து ஆறாவது அறிக்கை, 1998-99.

208. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)



## இணைப்பு 1

(310 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 2

## மாநில ஆயத் தீர்வை குறித்த

## கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000

### 1. முன்னுரை

1.1 மதுவிலக்கை அமல்படுத்துவதைப் பொறுத்தமட்டில் இந்த அரசு நடைமுறைக்கு உகந்த கொள்கையைப் பின்பற்ற விழைகிறது. நம் அண்டை மாநிலங்கள், பல ஆண்டுகளுக்கு முன்னரே அவற்றின் மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தியுள்ள நிலையில், தமிழ்நாட்டில் மட்டும் முழு மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்துவது என்பது நடைமுறையில் கடைபிடிக்க முடியாத ஒன்றாகும். எனவே, தற்போதைய மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்துவதோ அல்லது முழு மதுவிலக்கைச் செயல்படுத்துவதோ தற்போதைய சூழ்நிலைக்கு ஒவ்வாதது என்பதால் இந்த அரசு இவ்விரு நிலைகளுக்கும் இடைப்பட்டதொரு கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றுகிறது.

1.2 மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறை மாநிலத்திற்குப் பெருமளவில் வருவாய் ஈட்டித்தரும் ஒரு துறையாகும். தற்போதைய அரசு, மாநிலத்தில் ஆயத் தீர்வை வருவாயைப் பெருக்க பல கொள்கை முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் ஆயத் தீர்வை வருவாய் வெகுவாக அதிகரித்துள்ளது. 1996-97 ஆம் ஆண்டிற்கான ஆயத் தீர்வை வருவாய் ரூ. 1,063.07 கோடியாக இருக்க, ஆயத் தீர்வை, விற்பனைக் கட்டணம் உயர்த்தப்பட்டதன் காரணமாக இது 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 1,299.85 கோடியாக உயர்ந்தது.

1.3 ஒரு புறம் மாநிலத்தின் ஆயத் தீர்வை வருவாயை உயர்த்துவதையும், மறுபுறம் மதுவிலக்கை அமல்படுத்துவதை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த அரசு 1998-99 ஆம் ஆண்டில் பல கொள்கை நடவடிக்கைகளை மேற்கொண்டது.

[1999 மே 7

* சுதந்திரமான நியாயமான ஏலம் நடத்துவதைத் தடுக்கும நோக்கத்தோடு கூட்டணி அமைத்துக கொண்டு அதன் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதைத் தடுக்க ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலமுறைக் கொள்கையில் அரசு குறிப்பிடத்தகுந்த மாற்றங்களைச் செய்துள்ளது. அரசு ஏலம் விடும் கொள்கையைச் சீரமைக்க மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக, உரிமத தொகையாக 1995-96 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஏலத்தின்போது கிடைத்த தொகை ரூ. 220 கோடியிலிருந்து, 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 518 கோடியாக அதிகரித்துள்ளது.

* 1998 நவம்பரில் 'டாஸ்மாக' செலுத்த வேண்டிய கூடுதல் விறபனைக கட்டணம் 1-4-1997 முதல் முன்தேதியிட்டு உயர்த்தப்பட்டது. இதனால் 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 25.98 கோடியும், 1998-99 ஆம ஆண்டில் ரூ. 28.17 கோடியும் அரசிற்குக் கூடுதல் வருவாய் கிடைத்தது.

* இதைப்போன்றே, அரசு, நட்சத்திர ஓட்டல்களுக்கான விண்ணப்பக் கட்டணம், உரிமக் கட்டணம் ஆகியவற்றை இரு மடங்கு உயர்த்தியது.

* இந்த அரசு 17-3-1999 ஆம் நாளிலிருந்து இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மீதான ஆயத்தீர்வையை 100 மி.லி. அளவு பாட்டில்கள் தவிர மற்றவற்றிற்கு புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு 10 ரூபாய் உயர்த்தியுள்ளது. இதனால் இந்த ஆண்டில் ரூ. 158.42 கோடி கூடுதல் வருவாய் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

* இத்துடன் அரசு மேற்கொண்ட ஏனைய நடவடிக்கைகளும் சேர்ந்து, 1998-99 ஆம் ஆண்டில ஆயத்தீர்வையாக ரூ. 1,709.66 கோடி வருவாய் கிடைத்தது. இது 1997-98 ஆம் ஆண்டைக் காட்டிலும் [illegible]% கூடுதலாகும்.

1.4 அரசு மேற்கொண்டுள்ள மற்றொரு குறிப்பிடததக்க நடவடிக்கை, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை புட்டிகளில் ஒட்டப்படும் வணிகப் பெயர் லேபில்களில் உயர்ந்தபட்ச சில்லறை விற்பனை விலையை அச்சிடப்படுவதைக் கட்டாயமாக்கியதாகும். நிர்ணயிக்கப்பட்ட சில்லறை விலையைவிடக் கூடுதல் விலையில் மது விற்கப்படுவதாகப் புகார்கள் வந்ததால், நுகர்வோரின் நலனைப் பாதுகாக்கும் நோக்குடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



1999 மே 7]

1.5 நியாயமான விலையில் மது கிடைக்கச் செய்யவும், கள்ளச்சாராயம் அருந்துவதிலிருந்து மக்களைத் தடுக்கவும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாதாரண மதுவகைகளை 100 மி.லி. பாட்டில்களில் விற்பனை செய்ய அரசு அனுமதி வழங்கியது.

1.6 கள்ளச்சாராயத்தைத் தமிழ்நாட்டிலிருந்து ஒழிப்பது, தமிழ்நாடு அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை ஆகும். இந்த நோக்கத்தை எய்துவதற்காக, அரசு, 1-7-1998 ஆம் நாளிலிருந்து மதுவிலக்கு அமலாக்கப் பிரிவை மீண்டும் ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் காவல் துறை ஆய்வாளர் ஒருவர் தலைமை வகிக்கும் வகையில் 86 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் ஏற்படுததப்பட்டுள்ளன. மதுவிலக்குக் குற்றங்களைத் தடுக்கும் நோக்குடன், கள்ளச்சாராயம் காய்ச்சுவதையும், அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படும் கள்ளச்சாராய விற்பனையைத் தடை செய்யும் நோக்குடனும், 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் தொடர்புடைய விதிகளை அரசு திருத்தியுள்ளதோடு, சட்டத்தை மேலும் கடுமையாக்கியுள்ளது. மேலும், முதன்முறையாக, அரசு, கள்ளச்சாராய அச்சுறுத்தலைத தடுப்பதற்காக பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளது. இதுதொடர்பாக, பொது மக்களிடமிருந்து புகார்களையும், தகவல்களையும் பெற பிரிவு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கை பொது மக்களின் அமோக ஆதரவைப் பெற்றுள்ளது.

1.7 ஆயத் தீர்வை வருவாயைப் பெருக்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ள அதேநேரததில் இம்மாநிலத்தில் மதுவிலக்கைத் தீவிரமாகச் செயல்படுத்துவதற்கும் அரசு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. இம்மாநிலத்தின் மதுவிலக்குக் கொள்கையின் முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன:

* கள்ளச்சாராயம் காய்ச்சுவது, கொண்டு செல்வது, வைத்திருப்பது, விற்பனை செய்வது, பிற மாநிலங்களிலிருந்து கடத்தி வருவது ஆகியவற்றை ஒழிக்க அரசு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்.

* சில சமூக விரோத சக்திகள், தொடர்ந்து குற்றம் செய்பவர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தித் தடுக்கும் நோக்குடன், "1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், போதைப் பொருள் குற்றவாளிகள், வனப் பொருள்களைத் திருடும் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில

ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1982)" விதிகள் தொடர்ந்து திறம்படச் செயற்படுத்தப்படும்.

- இம்மாநிலத்தில், அரசுத் துறையில் மது தயாரிக்கப்பட மாட்டாது என்னும் அரசின் கொள்கை தொடரும்.

- கள்ளச்சாராயம் காய்ச்சும் நோக்கத்திற்காகத் தெளிந்த சாராவியைத் தவறாகப் பயன்படுத்துவதற்குப் பெரும் வாய்ப்பு உள்ளதால், இரசாயனத் தொழிற்சாலைகள், தெளிந்த சாராவிக்குப் பதிலாக, இயல்பு மாற்றப்பட்ட சாராவியைப் பயன்படுத்துமாறு செய்யும் திடமான கொள்கையை அரசு பின்பற்றும்.

- இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளின் சில்லறை விற்பனைக் கடைகளுடன் இணைந்து செயல்படும் "பார்"களுக்கு உரிமங்கள் வழங்குவதில்லை என்னும் அரசின் கொள்கை தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

- 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் அபராதம் விதிக்கும் விதிகளை அரசு கடுமையாக்கியுள்ளதோடு, அச்சட்டத்தையும் கடுமையாக்கியுள்ளது. கள்ளச்சாராயம் காய்ச்சும் நடவடிக்கையைத் தடுப்பதற்காக இந்த விதிகள் மதுவிலக்குக் குற்றவாளிகள் மீது கடுமையாகப் பயன்படுத்தப்படும்.

## 2. மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் அமைப்பும் செயல்பாடும்

2.1 தலைமைச் செயலக அளவில், கொள்கைகளை உருவாக்குவதும், கொள்கைகள் செயலாக்கப்படுவதை ஆய்வு செய்வதும், நிருவாகத் துறையான மதுவிலக்கு ஆயத் தீர்வைத்துறையின் முக்கியப் பணிகளாகும். உள்துறையின் அரசுச் செயலரே மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் செயலராவார். இவருக்கு உதவியாக, கூடுதல் செயலர் ஒருவர் (இந்திய ஆட்சிப் பணியாளர் பதவித் தரத்தில்), துணைச் செயலர் ஒருவர் மற்றும் துறைப் பணியாளர்கள் உள்ளனர்.

### மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறை ஆணையாளர்

2.2 மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறை ஆணையாளர் இத்துறைத் தலைவர் ஆவார். தலைமையிடத்தில் இவருக்கு உதவியாக, இணை ஆணையாளர் இருவர் (இந்திய ஆட்சிப் பணியாளர் பதவித் தரத்தில் ஒருவர், மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில் மற்றொருவர்), நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் ஒருவர் (நிதித் துறையின் அரசு இணைச் செயலாளர் பதவித் தரத்தில்), உதவி ஆணையாளர்கள் நால்வர் ஆகியோர் உள்ளனர்.



D V 211, 31'N 99.
N99.79.2

2.3 மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறை ஆணையாளர், மதுவிலக்கு குறித்த கொள்கைகளை உருவாக்குவதிலும் ஆயத் தீர்வைத் துறை நிருவாகத்தை மேற்பார்வையிடுவதிலும் அரசுக்கு உதவுகிறார்; மேலும், 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தையும் (தமிழ்நாடு சட்டம் 10/1937), மேற்படி சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விதிகளையும் செயல்படுத்தும் பொறுப்பு அவரிடமே உள்ளது.

2.4 விதிகளுக்கிணங்க, அரசின் முன்அனுமதியுடன் ஆல்கஹால் தயாரிப்பதற்கான உரிமம் வழங்கும் அதிகாரமும் வடிசாலை/பீர் வடிப்பாலை அமைக்க உரிமம் வழங்கும் அதிகாரமும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை தயாரிக்கும் உரிமம், வழங்கும் அதிகாரமும் ஆணையருக்குத் தரப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் அவ்வாறு நிறுவப்பட்ட வடிசாலைகள், பீர் வடிப்பாலைகள் மற்றும் மது தயாரிப்பு நிறுவனங்களின் உரிமங்களை ஆண்டுதோறும் புதுப்பிக்கும் அதிகாரமும் இவ்விதிகளின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### மாவட்ட அளவிலான பணி

2.5 மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆயத் தீர்வை நிருவாகத்தை மேற்பார்வையிடுகிறார். மதுவிலக்குச் சட்டம் மற்றும் இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் கீழ் அவருக்கு பல்வேறு அதிகாரங்கள், பொறுப்புகள் உள்ளன. மாவட்ட ஆட்சியருக்கு உதவியாக, ஓர் உதவி ஆணையாளர் (ஆயத் தீர்வை) பணியாற்றுகிறார். சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இரு மாவட்டங்களிலும் 1999 ஜனவரி முதல், இப்பதவி, மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில், துணை ஆணையாளர் (ஆயத் தீர்வை) பதவியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது. சென்னை, கோயம்புத்தூர் தவிர எஞ்சியுள்ள 27 மாவட்டங்களில் உதவி ஆணையாளர் (ஆயத் தீர்வை) பதவி, துணை ஆட்சித் தலைவர் பதவித் தரத்தில் உள்ளது. 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழும், அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படியும், வருவாய்த் துறை அதிகாரிகள்,

221196

ஆல்கஹாலை மூலப் பொருளாகக் கொண்ட தொழிற்பிரிவுகளில் ஆல்கஹால் சரிவரப் பயன்படுத்தப்படுகிறதா என்பதை மேற்பார்வையிடவும், ஆயத் தீர்வை விதிக்க வேண்டிய பொருட்களுக்கு ஆயத்தீர்வை விதிக்கவும், வடிசாலைகளிலும், ஆயத் தீர்வைக்குட்பட்ட கிடங்குகளிலும், வடிசாலை அதிகாரிகளாகவும், ஆயத் தீர்வைக்குட்பட்ட பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை மேற்பார்வையிடும் அதிகாரிகளாகவும் நியமிக்கப்படுகின்றனர். வடிசாலைகளில் துணை ஆட்சித் தலைவர் பதவித் தரத்தில் வடிசாலை அதிகாரிகள் 14 பேரும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை, பீர் தயாரிப்புத் தொழிற்பிரிவுகள் ஆகியவற்றில் இதே பதவித் தரத்தில் ஆயத்தீர்வை மேற்பார்வை அதிகாரிகள் 7 பேரும் உள்ளனர். மேலும், DL உரிமம் பெற்ற தொழில் பிரிவுகளில், (இயல்பு மாற்றப்பட்ட சாராவியைப் பயன்படுத்தும் இரசாயனத் தொழில் பிரிவுகள்), ஆயத்தீர்வை மேற்பார்வை அதிகாரிகள் 13 பேரும், RL உரிமம் பெற்ற தொழில் பிரிவுகளில் (தெளிந்த சாராவியைப் பயன்படுத்தும் இரசாயனத் தொழில் பிரிவுகள்) ஆயத் தீர்வை மேற்பார்வை அதிகாரிகள் 10 பேரும், ஆயத் தீர்வைக்குட்பட்ட தயாரிப்புக் கிடங்குகளில், ஆயத் தீர்வைக்குட்பட்ட தயாரிப்பு அதிகாரிகள் 4 பேரும் உட்பட மொத்தம் 27 பேர் துணை வட்டாட்சியர் பதவித் தரத்தில் உள்ளனர்.

**சர்க்கரை ஆலைகளும் கருப்பஞ்சாற்றுக் கசண்டும்**

2.6 இம்மாநிலத்தில் மொத்தம் 34 சர்க்கரை ஆலைகள் உள்ளன. (விவரம் இணைப்பு 1-இல் தரப்பட்டுள்ளது) சர்க்கரை தயாரிப்பு முறையில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு துணைப் பொருளாகும். இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், ஏனைய இரசாயனப் பொருட்கள், வார்னிஷ் ஆகியவற்றின் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் ஆல்கஹாலைத் தயாரிப்பதற்கு, கருப்பஞ்சாற்றுக் கசண்டு மூலப்பொருளாகப் பயன்படுகிறது. தமிழநாடு, கருப்பஞ்சாற்றுக் கசண்டு உபரியாக உள்ள மாநிலமாகும். 1958 ஆம் ஆண்டு தமிழநாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்தல் விதிகளின்படி, மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட கூடுதல் ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் கருப்பஞ்சாற்றுக் கசண்டை வைத்திருத்தல், விற்பனை செய்தல், பயன்படுத்தல், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்புதல், ஏற்றுமதி, இறக்குமதி செய்தல் ஆகியவற்றிற்குத் தேவையான உரிமம் வழங்கும் அதிகாரம் பெற்றவர்களாவார்கள்.



2.7 மத்திய அரசு 1961 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாட்டு ஆணையை 10-06-1993 ஆம் நாளன்று ரத்துச் செய்தது. அதற்கிணங்க, சர்க்கரை ஆலைகள், உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவைப் பொறுத்து, உரிமம் பெற்ற எந்தவொரு நுகர்வோருக்கும், கருப்பஞ்சாற்றுக் கசண்டை விற்பனை செய்யலாம். விலைக்கட்டுப்பாடு ஏதும் இல்லை. மத்திய அரசு கட்டுப்பாட்டை நீக்கி ஆணை பிறப்பித்ததால், உரிமம் பெற்றுள்ள நுகர்வோர் கருப்பஞ்சாற்றுக் கசண்டை விற்பனை செய்தல், கொண்டு செல்லுதல், வைத்திருத்தல், பயன்படுத்துதல், ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல் தொடர்பான விரிவான வழிகாட்டிக் குறிப்புகளை 1993 ஆகஸ்டு திங்களில் மாநில அரசு பிறப்பித்துள்ளது. இந்த வழிகாட்டிக் குறிப்புகள், 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்தல் விதிகளுக்கு உட்பட்டவையாகும்.

2.8 அரசின் வருவாயைப் பெருக்க, மாநிலத்திற்கு வெளியே எடுத்துச் செல்லப்படுகின்ற கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு, மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 200/- நிருவாகப் பணிக் கட்டணமாக, விதிக்க வழிவகை செய்து, 1996 ஜூலைத் திங்களில் 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்தல் விதிகளில், அரசு திருத்தம் கொண்டு வந்துள்ளது.

2.9 1997-98 ஆம் கருப்பஞ்சாற்று கசண்டு ஆண்டில் (அக்டோபர் முதல் செப்டம்பர் வரை) நமது மாநிலத்தில் 4.18 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தி உபரியாக இருந்தது. கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் துறை சர்க்கரை ஆலைகளில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு தேக்கத்தைக் குறைக்க, கூட்டுறவு/பொதுத் துறை சர்க்கரை ஆலைகள், பிற மாநிலங்களுக்கும், பிற நாடுகளுக்கும் 1.75 இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டை ஏற்றுமதி செய்ய அரசு அனுமதியளித்துள்ளது. தனியார் சர்க்கரை ஆலைகளும் பிற மாநிலங்களுக்கும், பிற நாடுகளுக்கும் 25,000 மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டன.

**ஆல்கஹால்**

2.10 கருப்பஞ்சாற்றுக் கசண்டை மூலப்பொருளாகக் கொண்டு ஆல்கஹால் தயாரிக்கும் 16 வடிசாலைகள் நமது மாநிலத்தில் இயங்கி வருகின்றன. (அவை பற்றிய விவரங்கள் இணைப்பு 2-ல் அளிக்கப்பட்டுள்ளன) அவற்றுள் 14 வடிசாலைகள் தனியார் துறையிலும், 2 வடிசாலைகள் கூட்டுறவுத் துறையிலும் உள்ளன.

2.11 இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள், சில இரசாயனப் பொருட்கள் மற்றும் வார்னிஷ் ஆகியவற்றின் தயாரிப்பில், ஆல்கஹால் ஒரு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், கல்வி நிறுவனங்கள், ஆய்வுக்கூடங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவற்றிலும் ஆல்கஹால் சிறு அளவில் பயன்படுத்தப்படுகிறது.

2.12 மத்திய அரசு, அதன் 10-6-1993 ஆம் நாளிட்ட ஆணையில் 1971 ஆம் ஆண்டு எதைல் ஆல்கஹால் (விலைக் கட்டுப்பாடு) ஆணையை ரத்துச் செய்தது. அதனால், தற்போது எதைல் ஆல்கஹாலுக்கு விலைக் கட்டுப்பாடு எதுவும் இல்லை. எனவே, அரசு, மாநிலத்தில் ஏற்கெனவே உரிமம் பெற்றவர்கள் பின்பற்ற வேண்டிய ஆல்கஹால் விற்பனை செய்தல், எடுத்துச் செல்லுதல், வைத்திருத்தல், பயன்படுத்துதல் ஆகியன தொடர்பான வழிகாட்டிக் குறிப்புகளைப் பிறப்பித்தது. ஆல்கஹாலை விற்பனை செய்தல், வைத்திருத்தல், பயன்படுத்தல், இறக்குமதி, ஏற்றுமதி செய்தல், எடுத்துச் செல்லுதல் போன்ற ஆல்கஹாலின் பல்வேறு பயன்பாடுகள் தற்போது நடைமுறையில் இருக்கும் அரசு விதிகளின் கீழ், அதாவது, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகள், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி மற்றும் வார்னிஷ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளின்கீழ், முறைப்படுத்தப்படும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டது. தனியார் வடிசாலைகள் மது தயாரிப்பதற்காக 60 இலட்சம் பல்க் லிட்டர் ஆல்கஹாலை பிற மாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டன. கூட்டுறவுத் துறை வடிசாலைகளும் மது தயாரிப்பதற்காக 50 இலட்சம் லிட்டர் சாராவியை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டன. ஏற்றுமதி அனுமதிக் கட்டணமாக பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 6 விதிக்கப்படுகின்றது.

**மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு**

2.13 இரண்டாம்தர மது மற்றும் கள்ளச்சாராயம் தயாரித்தல், அவற்றை எடுத்துச் செல்லுதல், வைத்திருத்தல், விற்பனை செய்தல் ஆகியவற்றை முற்றிலுமாக ஒழிப்பதும், ஏனைய மாநிலங்களிலிருந்து கள்ளத்தனமாக அவற்றைக் கொண்டு வருவதைத் தடுத்தலும் அரசின் முக்கிய நோக்கங்களாகும். இதனைக் கருத்திற்கொண்டே, அரசு 1998 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து மதுவிலக்கு அமலாக்கப் பிரிவை மீண்டும் ஏற்படுத்தியுள்ளது. இந்த மாநிலத்தில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகளைக் கூடுதல் காவல் துறை இயக்குநர் (சிறப்புப் பணிகள்) மேற்பார்வையிடுகிறார்.





2.14 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, காவல் துறைத் தலைவரின் (அமலாக்கம்) தலைமையில் செயல்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதிலும் மொத்தம் 86 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் காவல் துறை ஆய்வாளர் ஒருவரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. பெரிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் மூன்று அமலாக்கப் பிரிவுகளும், சிறிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு அமலாக்கப் பிரிவுகளும், சென்னை பெருநகரில் 6 அமலாக்கப் பிரிவுகளும், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய மாநகரங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் அமலாக்கப் பிரிவும் இயங்குகின்றன. மாவட்டங்களிலும், மாநகரங்களிலும் மதுவிலக்கு செம்மையாக அமலாக்கப்படுவதைக் கண்காணிக்க 37 காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர்களும், 37 காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்களும் இருக்கின்றனர். இந்தப் பிரிவுகள், மாவட்டங்களில், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரே, மதுவிலக்கு அமலாக்கத்திற்கும் பொறுப்பாவார் அனைத்து மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளும் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

2.15 கர்நாடக மாநிலம், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரி, காரைக்கால் ஆகியவற்றின் எல்லைகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் மற்றும் பீர் கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைத் தடுக்க நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், தருமபுரி, சேலம், நீலகிரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 21 சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2.16 1-7-1998 முதல் மாவட்டங்களிலுள்ள காவல் பிரிவிலிருந்தும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளில் இருந்தும் போதிய எண்ணிக்கையிலான காவலர்களைத் திரட்டி மதுவிலக்குக் குற்றங்கள் நடைபெற வாய்ப்புள்ள கிராமங்களில் தொடர்ந்து அதிரடி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், கள்ளச்சாராயம் காய்ச்சுவோரின் நடவடிக்கைகளை ஒடுக்க தலைமையிடத்திலிருந்து மத்திய புலனாய்வுப் பிரிவு உட்பட அனைத்துக் காவலர்களையும் ஒருங்கிணைத்து வாரம் ஒரு முறை பெரிய அளவில் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பொங்கல், தீபாவளி, கிறிஸ்துமஸ், புத்தாண்டு போன்ற முக்கிய பண்டிகை நாட்களில் அமைதிக்குக் குந்தகம்

[1999 மே 7

விளைவிப்போரை அதாவது, குடித்துவிட்டுக் கலாட்டா செய்வோரையும் ஏனைய மதுவிலக்குக் குற்றங்கள் புரிவோரையும் தடுப்பதற்காக அதிரடிச் சோதனைகள் நடத்தப்பட்டன. இந்தத் திடீர் சோதனைகளின்போது 34.30 இலட்சம் லிட்டர் கள்ளச்சாராயமும், 2.28 கோடி லிட்டர் ஊறல்களும், 1.64 இலட்சம் லிட்டர் கள்ளும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. கள் இறக்குவதற்கு எதிராகக் காவல் துறை கடும் நடவடிக்கை எடுத்துவருகிறது.

**2.17** மதுவிலக்குக் குற்றங்களைத் தடுக்கவும், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், அவற்றை மறைத்துவைத்து விற்பனை செய்தல் ஆகியவற்றை ஒழிக்கவும், 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு 14-ஆவது சட்டத்தின் விதிகளின் கீழ் கள்ளச்சாராய வணிகத்தில் ஈடுபடக்கூடும் எனக் கருதப்படுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டில் இத்தகையோர் 795 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். 1997 ஆம் ஆண்டில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 669 ஆகும்.

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்)**

**2.18** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், தமிழ்நாடு முழுவதும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளின் மொத்த விற்பனையைத் தனியார் துறையிடமிருந்து எடுத்துக்கொள்ளும் நோக்கத்திற்காக, 23-5-1983 அன்று 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டது. 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 17 (C) (A) (a) பிரிவின்படி, தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான வகையினை மொத்த விற்பனை மூலம் வழங்கும் தனி உரிமையை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் பெற்றுள்ளது. உள், மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறை, அரசுச் செயலர் 'டாஸ்மாக்' நிறுவனத்தின் தலைவர் ஆவார். இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் இக்கழகத்தின் மேலாண்மை இயக்குநராகப் பணியாற்றுகிறார். 'டாஸ்மாக்' நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. தலைமை அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில் பொது மேலாளர் ஒருவரும், நிதி ஆலோசகர் மற்றும் தலைமைக் கணக்கு அலுவலர் ஒருவரும், நிறுவனச் செயலர் மற்றும் நிர்வாக அலுவலர் ஒருவரும் மற்றும் இரு மேலாளர்களும் ஏனைய துறைப் பணியாளர்களும் நிர்வாக இயக்குநருக்கு உதவியாக உள்ளனர்.



1999 மே 7]

**2.19** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், ரூ.15 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்தைக் கொண்டுள்ளது. மாநில அரசு, 1983 இல் ரூ. 5 கோடியும், 1998-இல் ரூ. 2 கோடியும் ஆக மொத்தம் ரூ. 7 கோடி முதலீடு செய்துள்ளது. இதில் ரூ. 2.40 கோடியை 1989-90 ஆம் ஆண்டு 'டாஸ்கோ' நிறுவனத்தின் பங்கு மூலதனத்தில் 'டாஸ்கோ' நிறுவனம் முதலீடு செய்துள்ளது. இதைத்தவிர, தேவைப்படும்போது அரசு, இக்கழகத்திற்கு வழிவகை முன்பணங்களையும் அனுமதித்து வந்துள்ளது. பாரத ஸ்டேட் வங்கியின் வணிகக் கிளை ரூ. 15.00 கோடிவரை ரொக்கக் கடன் அனுமதித்துள்ளது.

**2.20** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை இம்மாநிலத்தில் உள்ள 5 தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்தும், பீர் வகைகளை இரண்டு தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்தும் பெறுகிறது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளில் சிலவும் பீர் மற்றும் ஸ்காட்ச் விஸ்கி ஆகியவையும் பிற மாநில விநியோகிப்பாளர்களிடமிருந்து பெறப்படுகின்றன.

**2.21** மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்திலுள்ள முதுநிலை மண்டல மேலாளர்கள் தலைமையின் கீழ் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து இடங்களில் மண்டல அலுவலகங்கள் உள்ளன. இக்கழகம் தனது 38 மது விற்பனை மையங்கள் (Depots) வாயிலாக மதுவை விநியோகம் செய்கின்றது. வட்டாட்சியர்களின் பதவித் தரத்திலுள்ள மேலாளர்களின் தலைமையின்கீழ், விற்பனை மையங்கள் இயங்குகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் தேனியில் ஒரு விற்பனை மையம் ஏற்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் விற்பனையளவு-கழகத்தின் மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருவாய்**

**2.22** 1998-99 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மொத்த விற்பனை அளவும் தீர்வையாக அரசுக்குச் செலுத்தப்பட்ட வரிகள் மற்றும் தீர்வைகள் குறித்த விவரமும் அட்டவணை இணைப்பு 4-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

[1999 மே 7

## தமிழ்நாடு சாராவிக் கழகம் (டாஸ்கோ)

2.23 தமிழநாடு மாநில வாணிபக் கழகத்தின் (டாஸ்மாக்) துணை நிறுவனமாக தமிழ்நாடு சாராவிக் கழகம் (டாஸ்கோ), இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், பீர், நாட்டு மது ஆகியவற்றைத் தயாரிக்கும் நோக்கத்திற்காக, 1989 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இக்கழகம் 31-12-1989 ஆம் நாளிலிருந்து பீர் உற்பத்தியையும், 21-7-1990 ஆம் நாளிலிருந்து நாட்டு மது உற்பத்தியையும் தொடங்கியபோதும், 16-7-1991 முதல் நாட்டு மது உற்பத்தியை நிறுத்திவிட்டது. நாட்டு மது கலவைப் பிரிவுகளின் சொத்துக்களை விற்பது (Disposal) தொடர்பாக அரசு அமைத்த குழு பரிந்துரைத்தபடி, 12 நாட்டு மது கலவைப் பிரிவுகளின் சொத்துக்கள் 1992 ஜூன் திங்களில் பால் உற்பத்தி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. பின்னர், இந்த 12 முன்னாள் கலவைப் பிரிவுகளில் ஒன்பது பிரிவுகளின் சொத்துக்கள், டாஸ்மாக் விற்பனை மையக் கிடங்குகளாகப் பயன்படுத்துவதற்கு 1997-98, 1998-99 ஆம் ஆண்டுகளில் மீண்டும் பால் உற்பத்தி ஒன்றியங்களிலிருந்து திரும்பப் பெறப்பட்டன.

## போதை மருந்துகள் புலனாய்வுப் பிரிவு

2.24 போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவை தொடர்பான செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தவும், போதை மருந்துகள், மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவற்றின் மூலம் அல்லது அவற்றைக் கள்ளத்தனமாகக் கொண்டு சென்று வழங்குவதன் மூலம் பெறப்பட்ட சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வகை செய்யவும், போதை மருந்துகள், மனமயக்கம் தரும் பொருட்கள் குறித்த பன்னாட்டு ஒப்பந்தங்களின் விதிகளைச் செயல்படுத்தவும், மத்திய அரசு 1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள்-மனமயக்கம் தரும பொருட்கள் சட்டத்தை (மத்திய சட்டம் 61/1985) இயற்றியது. இச்சட்டமும், அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் 1?-11-1985 முதல் செயலுக்கு வந்துள்ளன. அபராதம் விதிக்கவும், கடும் சிறைத் தண்டனை விதிக்கவும், குற்றவாளியென ஏற்கெனவே தண்டிக்கப்பட்டவர்கள், மீண்டும் குறிப்பிட்ட சில குற்றங்களைப் புரிந்தால், அவர்களுக்குக் கூடுதல் தண்டனை வழங்கவும், ஏற்கெனவே தண்டிக்கப்பட்டவர்கள் செய்யும் சிலவகையான குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்கவும் இச்சட்டம் வகை செய்கிறது. இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தண்டனை எதனையும் தற்காலிகமாக நிறுத்தி



1999 மே 7]

வைக்க அல்லது குறைக்க அல்லது மாற்ற முடியாது. இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் ஒவ்வொன்றும், பிடியாணையின்றிக் கைது செய்வதற்குரிய குற்றங்களாகும். இவை ஜாமீன் பேரில் விடுதலை செய்ய முடியாதவையும் ஆகும்.

2.25 மத்திய அரசு, 1988 ஆம் ஆண்டு போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்கள் கள்ள வியாபாரத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 46/1988) என்ற மற்றொரு சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் 1-7-1988 முதற்கொண்டு செயலுக்கு வந்துள்ளது. இதன்படி, போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்களைக் கள்ளத்தனமாக வியாபாரம் செய்யும் நபர்களைக் காவலில் வைக்கப்படும் நாளிலிருந்து குறைந்தது ஓர் ஆண்டுக்காலமும், அதிகமாக இரண்டாண்டுக் காலமும் காவலில் வைக்க, மாநில, மத்திய அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

2.26 இம்மாநிலத்தில் மாநில அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மாவட்டக் காவல் துறை, இரயில்வே காவல் துறை, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, குற்றப்புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவு ஆகியவையும், மத்திய அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள போதைப் பொருள் கட்டுப்பாட்டுப்பிரிவு, சுங்கத் துறை கலெக்டர், வருவாய் உளவுத் தகவல் சேகரிப்பு இயக்ககம் ஆகியவையும், போதைப்பொருள் தடுப்புச் சட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

2.27 குற்றப்புலனாய்வுத் துறையின் போதைப்பொருள் மாநிலப் புலனாய்வுப் பிரிவிற்கு காவல் துறைக் கண்காணிப்பாளர் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக, காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் ஒருவர், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவர், 13 ஆய்வாளர்கள், 14 உதவி ஆய்வாளர்கள் ஏனைய பதவித் தரங்களில் 91 பேர் ஆகியோர் உள்ளனர். இம்மாநிலத்தில், குற்றப்புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவுகள் 12 உள்ளன. அவை சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், திண்டுக்கல், தேனி, விழுப்புரம், தூத்துக்குடி, வேலூர், இராமநாதபுரம், கோயம்புத்தூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ளன. அவை காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

2.28 தமிழ்நாட்டில் போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்கள் பயன்படுத்தப்படுவதைக் கண்டறிந்து, தடுப்பதற்கு, தமிழ்நாடு குற்றப்புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவு தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு குற்றப்புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவு, 1997 ஆம் ஆண்டில் எய்திய சாதனையைக் காட்டிலும், 1998 ஆம் ஆண்டில் திறம்பட நடவடிக்கைகளை மேற்கொண்டதால் இவ்வாண்டில் சாதனை மேம்பாடு அடைந்துள்ளது.

2.29 குற்றப்புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவு, 1998 ஆம் ஆண்டில், 1,174 வழக்குகளைக் கண்டறிந்து, 1,156 குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்து, 3,092.950 கி.கிராம் உலர்ந்த கஞ்சா, 8.379 கி.கிராம் அபின். 4.805 கி.கிராம் ஹெராயின், 3.350 கி.கிராம் ஹஷிஷ் (Hashish), 1.500 கி.கிராம் ஹஷிஷ் எண்ணெய், 47.700 கி.கிராம் டயூசிபம் (Diazepam), 10 போர்ட்வின் (Fortwin) மாத்திரைகள் ஆகியவற்றைக் கைப்பற்றியதோடு 116.760 கி.கிராம் கஞ்சா செடிகளையும் அழித்தது; கைப்பற்றப்பட்டு, அழிக்கப்பட்ட போதைப் பொருட்களின் தோராயமான மொத்த மதிப்பு ரூ. 43.69 கோடியாகும்.

### 3. அரசு எடுத்த கொள்கை நடவடிக்கைகள்

3.1 தற்போதைய அரசு, 1996 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்ட உடனேயே, மதுவிலக்கு-ஆயத்தீர்வை கொள்கை குறித்து விரிவான ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. அந்த ஆய்வில், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகளின் தயாரிப்புச் செலவு மிகவும் குறைந்துவிட்டது என்றும், தயாரிப்பாளர்களின் ஆதாயம் அதிகரித்து விட்டது என்றும், டாஸ்மாக் (TASMAC) நிறுவனத்தின் கொள்முதல் விலை 1994 ஆம் ஆண்டிலிருந்து திருத்தியமைக்கப் படவில்லை என்றும் அரசு அறிந்தது. பீர் வகையைப் பொறுத்தமட்டில், விற்பனைக் கட்டண வீதம் 1989 ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டது; அதன் பின்னர், விற்பனைக் கட்டண வீதம் உயர்த்தப்படவில்லை. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகிய இரண்டிற்கான விற்பனைக் கட்டணம் உயர்த்தி திருத்தியமைக்கப்பட்டால், மாநிலத்திற்கு அதிக வருவாய் கிடைக்குமென்று அரசு கருதியது. அதிக வருவாயைப் பெருக்கும் பொருட்டு, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் மீதான ஆயத்தீர்வையை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றும் அரசு





கண்டறிந்தது. அதன்படி, அரசு, பின்வரும் பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தீர்வை/கட்டண வீதங்களைத் திருத்தியமைத்தது:

#### இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் மீதான தயாரிப்பாளர்கள் மற்றும் மொத்த வணிகர் விற்பனைக் கட்டணம்

3.2 அரசு, 15-6-1996 ஆம் நாள் முதற்கொண்டு ஒரு பெட்டிக்கு (9 பல்க் லிட்டர்) ரூ. 45/-லிருந்து ரூ. 95/- ஆக விற்பனைக் கட்டணத்தை உயர்த்தியது. மீண்டும், 6-3-1997 ஆம் நாள் முதற்கொண்டு, விற்பனைக் கட்டணத்தை ஒரு பெட்டிக்கு ரூ. 95/ -லிருந்து ரூ. 165/-ஆக உயர்த்தியது.

3.3 இதைப்போன்றே, மொத்த வணிக உரிமதாரர் செலுத்தத்தக்க விற்பனைக் கட்டணத்தை 6-3-1997 முதற்கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைக்கு ஒரு பெட்டிக்கு ரூ. 68/-லிருந்து ரூ. 138/- ஆகவும், ஒயினுக்கு ரூ. 59/-லிருந்து ரூ. 129/ ஆகவும் அரசு உயர்த்தியது.

3.4 தயாரிப்பாளர்கள் மற்றும் மொத்த வணிகர் செலுத்தத்தக்க விற்பனைக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டதன் வாயிலாக 1998-99 ஆம் ஆண்டில் அரசுக்கு ரூ. 168.58 கோடி கூடுதல் வருவாய் கிடைத்தது.

#### இறக்குமதி உரிமக் கட்டணம்

3.5 மாநிலத்திற்கு வெளியே உள்ள தயாரிப்புத் தொழிற்சாலைகளிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் தயாரிப்புகளுக்கு 1997 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து சாதாரண, நடுத்தர மற்றும் பிரீமியம் வகைகளுக்கு ஒரு பெட்டிக்கு முறையே ரூ. 110/-, ரூ. 130/-, ரூ. 187/- என்றவாறு இறக்குமதி உரிமக் கட்டணத்தை அரசு அதிகரித்தது. இவ்வாறு இறக்குமதி உரிமக் கட்டணத்தை அதிகரித்ததன் வாயிலாக 1998-99 ஆம் ஆண்டில் அரசு ரூ. 42.23 இலட்சம் அளவுக்குக் கூடுதல் வருவாயைப் பெற்றது.

3.6 மீண்டும் 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின்மீதான இறக்குமதி உரிமக் கட்டணத்தை அரசு பின்வருமாறு அதிகரித்தது:

[1999 மே 7

| | |
|---|---|
| சாதாரண வகைகள் பெட்டி ஒன்றுக்கு | ரூ. 150/- |
| நடுத்தர வகைகள் பெட்டி ஒன்றுக்கு | ரூ. 181/- |
| பிரீமியம் வகைகள் பெட்டி ஒன்றுக்கு | ரூ. 269/- |
| பீர் பெட்டி ஒன்றுக்கு | ரூ. 30/ |

3.7 மேலும் அரசு ஸ்காட்ச் விஸ்கியின் மீதான இறக்குமதி உரிமக் கட்டணத்தை பெட்டி ஒன்றுக்கு ரூ. 269/- என நிர்ணயித்தது. இந்த உயர்வின் காரணமாக 1998-99 ஆம் ஆண்டில் 8.29 கோடி கூடுதல் வருவாய் அரசுக்குக் கிடைத்தது.

3.8. 17-3-1999 அன்று அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் ஆயத்தீர்வை உயர்த்தப்பட்டதன் விளைவாக 17-3-1999 முதல் இறக்குமதி உரிமக கட்டணம் பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| சாதாரண மதுவகைகள் பெட்டி ஒன்றுக்கு | ரூ. 160/- |
| நடுத்தர மதுவகைகள் பெட்டி ஒன்றுக்கு | ரூ. 190/- |
| பிரீமியம் மதுவகைகள் பெட்டி ஒன்றுக்கு | ரூ. 279/- |
| பீர் பெட்டி ஒனறுக்கு | ரூ. 30/- |

**பீருக்கான விற்பனைக் கட்டணம்**

3.9 பீருக்கான விற்பனைக் கட்டணத்தை 15-6-1996 ஆம் நாள் முதற்கொண்டு ஒரு பெட்டிக்கு ரூ. 4.50-விருந்து ரூ. 10/- ஆக அரசு உயர்த்தியது. இவ்வாறு தயாரிப்பாளர் விற்பனைக் கட்டணம் மற்றும் மொத்த வணிகர் விற்பனைக் கட்டணம் ஆகியவைகளை அதிகரித்ததன் வாயிலாக 1998-99 ஆம் ஆண்டில் அரசுக்கு ரூ. 6.00 கோடி கூடுதல் வருவாய் கிடைத்தது.

**கூடுதல் விற்பனைக் கட்டணம்**

3.10 1998 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் கணக்கு ஆண்டு 1997-98-க்கு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தினால் செலுத்தத்தக்க கூடுதல் விற்பனைக் கட்டணம் பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 12.17-விருந்து ரூ. 14.46 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பின் காரணமாக 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 25.98 கோடியும் 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 28.17 கோடியும் கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது.



1999 மே 7]

**ஆயத் தீர்வை**

3.11 இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் மீதான ஆயத் தீர்வையை 6-3-1997 முதற்கொண்டு சாதாரண மதுவகைகளைப் பொறுத்தஅளவில் புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு ரூ 40/-விருந்து ரூ. 55/- ஆகவும், நடுத்தர மதுவகைகள் மற்றும் பிரீமியம் மதுவகைகளைப் பொறுத்தஅளவில் புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 60/-லிருந்து ரூ. 75/- ஆகவும் அரசு உயர்த்தியது.

3.12 17-3-1999 முதற்கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் மீதான ஆயத் தீர்வையை புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 10/- வீதம் அரசு உயர்த்தியுள்ளது. எனினும், போலி மதுவகைகளின் விற்பனையைத் தடுப்பதற்காக நூறு மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட பாட்டில்களில் அடைத்து விற்கப்பட்டு வருகின்ற இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளில் சாதாரண மதுவகைகளின்மீது ஆயத் தீர்வை உயர்த்தப்படவில்லை. திருத்திய ஆயத் தீர்வை விகிதங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | சாதாரண மதுவகைகள் புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு-100 மி.லி. கொள்ளளவு பாட்டில்களில் அடைக்கப்பட்டவை | ரூ. 55/- |
| 2. | சாதாரண மதுவகைகள் புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு (100 மி.லி. தவிர இதர கொள்ளளவுகளில் அடைக்கப்பட்டவை) | ரூ. 65/- |
| 3. | நடுத்தர மற்றும் பிரீமியம் மதுவகைகள் புரூப் லிட்டர் ஒன்றுக்கு | ரூ. 85/- |
| 4. | ஸ்காட்ச் விஸ்கி புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு | ரூ. 85/- |

3.13 இத்தீர்வை அதிகரிப்பின் காரணமாக 17-3-1999-விருந்து 31-3-1999 வரையிலான கால அளவில் ரூ. 6 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது. இத்தீர்வை உயர்வின் காரணமாக 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 158.42 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கப்பெறும்.

**டிராட் பீர்**

*3.14* அரசு 1997-இல் இம்மாநிலத்தில் உள்ள ஐந்து நட்சத்திர ஓட்டல்களின் உரிமம் பெற்ற வளாகங்களில் டிராட் பீர் விற்பனைக்கு அனுமதி வழங்க கொள்கை முடிவு எடுத்தது. பின்னர் சென்னையில் உள்ள நான்கு நட்சத்திர ஓட்டல்கள், மூன்று நட்சத்திர ஓட்டல்கள் மற்றும் மனமகிழ் மன்றங்களுக்கும் இந்த அனுமதி வழங்கப்பட்டது. ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் டிராட் பீர் விற்பனை 1997 ஆம் ஆண்டு மே திங்களிலும், சென்னை நகரிலுள்ள மூன்று நட்சத்திர ஓட்டல்கள் மற்றும் மனமகிழ் மன்றங்களில் 1997 ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலும் டிராட் பீர் விற்பனை தொடங்கியது. 1997 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் டிராட் பீர் மீதான ஆயத் தீர்வை பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 2.50 லிருந்து 8.10 ஆக அதிகரிக்கப்பட்டது.

*3.15* டிராட் பீர் விற்பனை வாயிலாக 1998-99 ஆம் ஆண்டில் அரசுக்கு ரூ. 75.79 இலட்சம் கூடுதல வருவாய் கிடைத்தது.

**ஸ்காட்ச் விஸ்கி**

*3.16* தொடர்ந்து வந்த கோரிக்கைகளின் அடிப்படையில் மனமகிழ் மன்றங்களின் மற்றும் சமுதாயத்தின் உயர் வருவாய் பிரிவைச் சார்ந்த மதுபானம் அருந்துபவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, அரசு ஸ்காட்ச் விஸ்கி விற்பனையை அனுமதித்தது. 1998 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் விற்பனை தொடங்கியது. ஸ்காட்ச் விஸ்கி விற்பனை வாயிலாக 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 2.98 கோடி கூடுதல் வருவாய் அரசுக்கு கிடைத்தது.

**உரிமையாளர் அல்லாத மனமகிழ் மன்றங்கள் மீதான உரிமக் கட்டணம்**

*3.17* மனமகிழ் மன்றங்களின் எப்.எல்.2 உரிமத்தின் ஆண்டு உரிமக் கட்டணத்தை, அரசு, 1997 ஆம் ஆண்டு நவம்பரில் ரூ 50,000லிருந்து ரூ. 2,00,000 ஆக அதிகரித்துள்ளது. மேலும், அத்தகைய மனமகிழ் மன்றங்களில் மது அருந்த விரும்புவோரின் குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கையை 5-லிருந்து 50 ஆக அதிகரித்துள்ளது. உரிமையாளர் அல்லாத மனமகிழ் மன்றங்களின் எண்ணிக்கை திடீர் என அதிகரிப்பதைத் தடுக்கும் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகச் செயல்பட்டால் மட்டுமே, எப்.எல்.2 உரிமத்திற்கு விண்ணப்பம் செய்ய இந்த மன்றங்கள் தகுதி படைத்தவை என அரசு அதற்கான



விதிகளைக் கடுமையாக்கியுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, உரிமைக் கட்டணம் உயர்த்தப்பட்டதன் வாயிலாக அரசுக்கு 1998-99-இல் ரூ. 69 இலட்சம் கூடுதல் வருவாய் கிடைத்தது.

**கருப்பஞ்சாற்றுக் கசண்டு மீதான நிருவாகப் பணிக் கட்டணம்**

*3.18* இம்மாநிலத்திற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு, 8-7-1996-லிருந்து மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 200 நிருவாகப் பணிக் கட்டணம் விதிக்க அரசு ஆணையிட்டது இதனால், அரசுக்கு 1998-99-இல் ரூ. 3.60 கோடி அதிக வருவாய் கிடைத்தது.

**ஏலக் கொள்கை**

*3.19* இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் சில்லறை விற்பனைக் கடைகள், 1-6-1989-லிருந்து மூன்றாண்டுத் தொகுதியில் ஒரு முறை. ஒப்பந்தப் புள்ளி-ஏல முறையைப் பின்பற்றி விற்பனை செய்யப்பட்டன. கூட்டணியாகச் சேர்ந்து கொண்டு ஒட்டுமொத்தமாக ஏலம் கேட்டு அரசுக்கு இழப்பை ஏற்படுத்தக் கூடிய நடைமுறையைத் தடுக்கும் நோக்கத்துடன், அரசு ஒப்பந்தப்புள்ளி-ஏல நடைமுறையை 1998-99-இல் திருத்தியமைத்துள்ளது.

*3.20* இந்தத் திருத்திய முறைக்கிணங்க, 1998-99 ஆம் ஆண்டிற்கான ஏலமதிப்பு விலை, கடையின் உண்மையான விற்பனை வாய்ப்பை பிரதிபலிக்கும் வகையில் படிமுறை வீதங்கள் (Slab rates) முறையில் 1998-99-இல் நிர்ணயிக்கப்பட்டது. ஆர்வமற்ற ஏலதாரர்களை நீக்கிவிடும் வகையில், அரசு பொறுப்பு பண வைப்புத் தொகையை (Earnest Money Deposit) கணிசமான அளவு அதிகரித்தது. பிணைய வைப்புத் தொகை (Security Deposit) எல்லாப் பகுதிகளுக்கும் ஒரே அளவாக, முன்பு ரூ 5,000 மற்றும் ரூ. 7,500 என்று இருந்ததை, ரூ 25,000 என்று அரசு அதிகரித்தது.

*3.21* அரசு எடுத்த மேற்சொன்ன நடவடிக்கைகளின் காரணமாக, 1998 ஆம் ஆண்டு மே திங்களில் நடைபெற்ற 4,674 கடைகளின் பொது ஏலத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு, உரிமைக் கட்டணமாக ரூ. 518 கோடி வருவாயினை ஈட்ட முடிந்தது. இது சென்ற ஆண்டில் (1997-98) கிடைத்த உரிமைக் கட்டணத் தொகையைவிட ரூ. 300 கோடி கூடுதல் தொகை ஆகும். இந்தக் குறிப்பிடத்தக்க சாதனைக்கு

[1999 மே 7

பொது ஏலமுறையில் அரசு கொண்டு வந்த மாற்றங்களும், அவைகளைப் பயனுள்ளவகையில் நிறைவேற்றியதுமே காரணம் ஆகும்.

**உரிமைக் கட்டணங்களில் மாற்றங்கள்**

*3.22* *1981* ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (உரிமம்-அனுமதி) விதிகளின்கீழ் வழங்கப்படும் உரிமங்களுக்கு உரிமதாரர்கள் செலுத்தக்க உரிமைக் கட்டணம் மற்றும் விண்ணப்பக் கட்டண வீதங்களை, அரசு *1998* டிசம்பரில் இரண்டு மடங்காக உயர்த்தியுள்ளது. இந்த உயர்வு காரணமாக, அரசுக்குக் கூடுதல் வருவாய் ரூ. *1.86* கோடி கிடைத்துள்ளது.

*3.23* இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை, பீர் தயாரிப்பதற்கான நிறுவனங்களுக்கு விண்ணப்பக் கட்டணம், உரிமைக் கட்டணம், உரிமக் கட்டணம் ஆகியவற்றை உயர்த்தியும், திராட்சை மது (மாஸ் ஒயின்) விண்ணப்பக் கட்டணம், உரிமைக் கட்டணம், உரிமக் கட்டணம் ஆகியவற்றை உயர்த்தியும் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது மற்றும் பீர் ஏற்றுமதிக் கட்டணத்தை உயர்த்தியும் *1999* ஜனவரியில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்த உயர்வின் காரணமாக, அரசுக்கு ரூ. *22.42* இலட்சம் கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது.

**DL வகை உரிமங்களின் உரிமக் கட்டண உயர்வு**

*3.24* *1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி மற்றும் வார்னிஷ் (பிரஞ்ச் பாலிஷ்) விதிகளின் கீழ் வழங்கப்பட்ட டி.எல். வகை உரிமங்களுக்கான உரிமக் கட்டணத்தை, அரசு *1-4-1999* ஆம் நாள் முதற்கொண்டு உயர்த்தியுள்ளது. மேற்சொன்ன விதிகளின் கீழ் வரையறுக்கப்பட்ட, உரிமக் கட்டணம், இறக்குமதி உரிமக் கட்டண வீதம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்டவை என்பதால், அவை மிகவும் குறைவாக இருந்தன. எனவே, சில டி.எல். வகை உரிமங்கள் மற்றும் இறக்குமதி அனுமதிக் கட்டணம் ஆகியவற்றிற்கென்று வசூலிக்கப்பட வேண்டிய உரிமக் கட்டணங்களை உயர்த்துவது நியாயமானதென்று கருதப்பட்டது. எனவே, *1-4-1999* முதற்கொண்டு ஆண்டு இறக்குமதி அனுமதிக் கட்டணத்தை அரசு, ரூ. *150*-லிருந்து ரூ. *1,500* ஆக உயர்த்தியது. டி.எல். *1*, டி.எல். *4*, டி.எல் *5*, டி.எல். *6* மற்றும் டி.எல். *7* ஆகிய உரிமங்களுக்கான உரிமக் கட்டணங்களை உயர்த்தியுள்ளது.



*1999* மே *7*]

*3.25* டி.எல் *2* உரிமங்களைப் பொறுத்த மட்டில், இந்த உரிமங்களில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள இயல்பு மாற்றப்பட்ட சாராவியின் அளவைப் பொறுத்து, இந்த உரிமங்களுக்கான உரிமக் கட்டணங்கள் படிமுறை வீதங்களில் (Slab rates) இருப்பதால், உரிமக் கட்டணங்களின் அதிகரிப்பு ரூ. *175* முதல் ரூ. *23,500* வரை உள்ளன.

**100 மி.லி. கொள்ளளவில் மதுபானங்கள் வழங்குதல்**

*3.26* இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான வகைகள் *100* மி.லி. கொள்ளளவு கொண்ட பாட்டில்களில் அடைக்கப்பட்டு விற்கப்படுமானால் இதன் விலை சாதாரண மக்களுக்கு தாங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்குமெனவும், அவர்கள் போலி மதுபானங்களை நாடுவது பெரும்பாலும் தவிர்க்கப்படும் என்பதைக் கருத்தில்கொண்டு, சாதாரண வகை மதுபானங்களை *100* மி.லி. அளவு பாட்டில்களில் தயாரித்து வழங்க, இம்மாநிலத்திலுள்ள தயாரிப்பாளர்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. *1997* ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதற்கொண்டு *100* மி.லி. அளவு கொண்ட பாட்டில்களில் மதுபானங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மதுபானங்கள் விற்பனையாகும் மொத்த அளவில், *100* மி.லி. கொள்ளளவில் அடைத்து விற்கப்படும். மதுபானங்களின் விற்பனை அளவு *7* சதவீதமாகும்.

**உயர்ந்தபட்ச சில்லறை விற்பனை விலை**

*3.27* மதுபானங்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட சில்லறை விற்பனை விலைகளைக்காட்டிலும் கூடுதலான விலைகளுக்கு மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதாக மது அருந்துவோர்களிடமிருந்து அரசுக்கு புகார்கள் வந்தன. மது அருந்துவோர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டி, இம்மாநிலத்தில் விற்பனை செய்யப்படும், இந்தியாவில் தயாரிக்கப்படும், அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் ஆகியவற்றிற்கான உயர்ந்தபட்ச சில்லறை விற்பனை விலைகளை, பாட்டில்களின் மீது ஒட்டப்பட்டுள்ள வணிக முகப்புச் சீட்டுகளின் மீது அச்சடிக்கப்பட வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது. இந்த ஆணை *1-12-1997* முதற்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்திற்குத் திருத்தம்**

*3.28* 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தில், இழைக்கப்படும் குற்றங்கள் அல்லது சட்டமீறலின் பரிமாணம் என்னவாக இருப்பினும் அதனைக் கருதிப்பாராது தண்டனை வழங்கிட வகைசெய்யப்பட்டிருந்தது. மேலும், சிலவகைக் குற்றங்களைத் தவிர்த்து, பிற எல்லாவகை குற்றங்கள் குறித்தும் இணக்க முறையில் தீர்த்துக் கொள்ள முடியும் என இருந்தது. இதன் காரணமாக, தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ், மிகக் கடுமையான, குற்றங்களைப் புரிவதில் ஈடுபட்டிருந்த சமூக விரோத சக்திகள் அனைவரும் சிறு தண்டனையுடன் தப்பித்துக் கொள்ள முடிந்தது. அல்லது, அவர்கள் இணக்க முறையில் தீர்த்துக் கொள்ளும் கட்டணமாக சிறு தொகையைச் செலுத்திவிட்டு தண்டனை ஏதுமின்றியே தப்பித்துக் கொள்ள முடிந்தது. இது குறித்து கிடைத்த அனுபவத்திலிருந்து, மிகக்கடுமையான குற்றம் இழைக்கின்ற பெரிய குற்றவாளிகள் எல்லோரும், சட்டத்தில் உள்ள சில தண்டனை விதிகளைத் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு மிக எளிய தண்டனைகளுடன் தப்பித்துக் கொள்கிறார்கள் என்றும், கள்ளச்சாராயம் விற்பனை செய்வோர் போன்ற சிறியவகைக் குற்றம் செய்வோர் மீது மட்டுமே வழக்கு தொடரப்படுகிறது என்றும் தெரியவந்தது.

*3.29* இதுபோன்ற சமூக விரோத சக்திகளின் நடவடிக்கைகளைத் தடைசெய்யும் நோக்குடன், தமிழ்நாடு அரசு, 1937ம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்த முடிவு செய்தது. இச்சட்டத்தின் தொடர்புடைய விதிகள் 24-12-1998 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இதன் மூலம், கடுமையான குற்றங்களுக்கு, கடுமையான தண்டனைகள் வழங்க வகைசெய்யப்பட்டுள்ளது.

*3.30* மேற்சொன்னவாறு திருத்தப்பட்ட விதிகளின்படி, சிறிய குற்றங்கள் இழைப்போர்/சிறிய அளவில் விதி மீறல்கள் செய்வோர் சிறிய அளவில் தண்டனைகள் விதிக்கப் பெறுவர். அந்த சமயம், பெரிய அளவில் விதி மீறல்கள் புரிவோர் மிகக்கடுமையான தண்டனைகள் விதிக்கப்பெறுவர். அதாவது, அத்தகையோருக்கு மூன்று ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையும் ரூபாய் 10,000 வரை அபராதமும் விதிக்கப்படும். மேலும், அத்தகைய கடும் குற்றங்கள், இணக்க முறையில் தீர்க்கப்படுவதற்கு உரியன அல்ல என்று ஆக்கப்பட்டுள்ளது.



**புதிய ரக மதுவகைகளை அறிமுகம் செய்தல்**

*3.31* மது சில்லறை விற்பனைக் கடைகள், ஓட்டல்கள், மனமகிழ் மன்றங்கள் (clubs) ஆகியவற்றின் உரிமதாரர்கள், இந்தியாவில் தயாரிக்கப்படும் புதிய ரக அயல்நாட்டு மது தயாரிப்புகளையும் புதிய ரக பீர் வகைகளையும் அறிமுகப்படுத்தும்படி கோரிக்கை விடுத்தனர். நமது மாநிலத்திலுள்ள, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது தயாரிப்போரும், இந்தியாவில் தயாரிக்கப்படும் புதிய ரக அயல்நாட்டு மது மற்றும் பீர் தயாரிப்புகளை அறிமுகப்படுத்த அனுமதி வழங்கும்படி கேட்டுக்கொண்டனர். இந்தியாவில் தயாரிக்கப்படும் புதிய ரக அயல்நாட்டு மது தயாரிப்புகளையும், புதிய ரக பீர் வகைகளையும் அறிமுகப்படுத்துவதால், பின்வரும் பயன்கள் கிடைக்கும் எனக் கருதப்பட்டது:

(அ) நமது மாநிலத்தில், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகை, பீர் ஆகியவற்றுக்கான கூடுதல் தேவையை நிறைவு செய்ய முடியும்.

(ஆ) மது அருந்துவோர் அவரவர் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்ய பல ரக மது தயாரிப்புகளும் கிடைக்கும்.

(இ) மதுவகைகளின் விற்பனை அதிகரிப்பதால், கணிசமான வருவாய் கிடைக்கும்.

*3.32* எனவே, நமது மாநிலத்தில் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை, பீரைத் தயாரிப்போர், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகையைச் சேர்ந்த 31 தயாரிப்புகளையும், 5 புதிய வகை பீர் தயாரிப்புகளையும் கூடுதலாகத் தயாரிக்க 1998 டிசம்பர் திங்களில் அரசு அனுமதியளித்துள்ளது. ஒவ்வொரு தயாரிப்புக்கும் பதிவுக்கட்டணமாக ரூ. 2 இலட்சம், புதுப்பிக்க கட்டணமாக ரூ. 2 இலட்சம் விதிக்கவும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

**டாஸ்மாக் நிறுவனத்தைக் கணினிமயமாக்குதல்**

*3.33* காலப்போக்கில் டாஸ்மாக் நிறுவனத்தின் நடவடிக்கைகள் பலமடங்கு அதிகரித்துள்ளன. இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை உன்னிப்பாக கண்காணிக்க கணினிமயமாக்கப்பட்ட மேலாண்மை தகவல் ஏற்பாட்டு முறை (M.I.S.) இருக்கவேண்டியது அவசியம் என்று

உணரப்பட்டது. இதன் செயல்பாடுகள் அனைத்தையும் கணினிமயமாக்குவதால் இந்நிறுவனத்தின் செயல்திறன் மேம்படும் என்றும் உணரப்பட்டது. எனவே, டாஸ்மாக் நிறுவனத்தில் ரூ. 7 இலட்சம் செலவில் நிறுவனத்தின் தலைமை அலுவலகம், வட்டார அலுவலகம், கிடங்குகள் உள்ள இடங்களில் இவற்றின் செயல்பாடுகளுக்கான மென்பொருள்களை உருவாக்கல், நிறுவுதல், செயல்படுத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. இந்தக்கால அளவில் ரூ. 1.08 கோடி மதிப்புள்ள கணினி வன்பொருள்கள் வாங்கி நிறுவப்பட்டுள்ளன.

*3.34* *1-9-1998* முதற்கொண்டு, அனைத்து 38 கிடங்குகளின் செயல்பாடுகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. கணினிமயமாக்கப்பட்ட மேலாண்மை தகவல் ஏற்பாட்டு முறையில், இந்த நிறுவனம், இப்போது கொள்முதல், விற்பனை, இருப்பு நிலை ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், நாளது வரையான தகவலைப் பெறுவதன் மூலம் நிறைவான பொருள் இருப்பு நிருவாகத்தைப் (Inventory Management) பெற்றுள்ளது. இதன் பயனாக, இந்நிறுவனத்தால், விரைவாக விற்பனையாகும் இனங்கள் இருப்பில் இல்லாத நிகழ்வுகளைக் குறைக்கவும், மாவட்டவாரியாக, மது சில்லறைக் கடை வாரியாக விற்கப்படும் சரக்கின் அளவைக் கண்காணிக்கவும் தற்போது முடிகிறது. இந்த மேலாண்மைத் தகவல் ஏற்பாட்டு முறை நிறுவனத் தலைமை அலுவலகத்திற்கும்/அரசுக்கும் அனுப்பப்படும் பல்வேறு அறிக்கைகள்/கணக்கு அறிக்கைகள்/கோரிக்கைகள் ஆகியவற்றை உடனடியாகவும், துல்லியமாகவும் அமைவதை உறுதிப்படுத்துகிறது. இது, கிடங்கு அளவில் பணிகள் எளிமைப்படுத்தப்படுவதோடு கூடுதலாக விளையும் பயனாகும்.

**டாஸ்மாக் நிறுவனத்திற்குச் சொந்தமான கிடங்குகள்**

*3.35* கடந்த 15 ஆண்டுகளாக, டாஸ்மாக் நிறுவனத்தின் 38 கிடங்குகளும் வாடகை கட்டடங்களில் செயல்பட்டு வந்தன. பொதுவாக, அவைகளில் வசதிகள் போதுமானவையாக இல்லை. 'டாஸ்மாக்' நிறுவனத்தின் வணிகம், 1983 ஆம் ஆண்டிற்குப் பிறகு 10 மடங்குக்கு மேல் பெருகியுள்ளது. ஆனால், கிடங்கு வசதி ஓரளவிற்குத்தான் அதிகரித்துள்ளது. இதனால், பல லாரிகள் வெளியே காத்திருக்க வேண்டிய நிலையும், இன்றியமையாத இனங்கள் இருப்பில் இல்லாத நிலையும் ஏற்பட்டுள்ளது. ஆகையால், போதிய சேமிப்புத் திறன் கொண்ட, நிறுவனத்திற்குச் சொந்தமாக கிடங்குகள் இருக்க



வேண்டியது அவசியம் என்று உணரப்பட்டது. 1998-99ஆம் ஆண்டில், டாஸ்மாக் நிறுவனம், திருமழிசை, அம்பத்தூர், கடலூர், தூவாக்குடி, திருபுவனம், காரைக்குடி, திண்டுக்கல், திருநெல்வேலி, சூரியம்பாளையம் ஆகிய இடங்களில் உள்ள 'டாஸ்கோ' (சாராவி கழகம்) நிறுவனத்தின் கலவை தொழிற்பிரிவுகளைத் தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டது. இந்தக் கலவைப் பிரிவுகள் புதுப்பிக்கப்பட்ட பிறகு, டாஸ்மாக் நிறுவனத்தின் கிடங்குகள், அவற்றுக்கு மாற்றப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் எஞ்சியுள்ள நான்கு கிடங்குகளையும், திருமழிசை, அம்பத்தூர் ஆகிய இடங்களில் கிடங்குகளாக மாற்றப்பட்டுள்ள முன்னாள் கலவை தொழிற்பிரிவுகளுக்கு இடமாற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

*3.36* தூத்துக்குடி, புதுக்கோட்டை சிப்காட் தொழிற்பேட்டைகளில் கிடங்குகள் கட்ட மனைகள், 99 ஆண்டு குத்தகை அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதே போல, திருவள்ளூர், காஞ்சிபுரம், விருதுநகர் ஆகிய இடங்களில் உள்ள சிட்கோ தொழிற்பேட்டைகளில் உள்ள மனைகள், டாஸ்மாக் நிறுவனத்திற்குக் கிடங்குகள் கட்டுவதற்காக நேரடியாக ஒட்டு மொத்த விலையில் வாங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள கிடங்குகளுக்கும், படிப்படியாக, சொந்தக் கட்டடங்கள் கட்ட தகுந்த மனைகளைக் கண்டறிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**விற்பனை வாய்ப்பு குறித்த ஆய்வு**

*3.37* மது உற்பத்திப் பொருள்களின் வகை அதிகமாக இருந்து நுகர்வோருக்கு மனநிறைவை அளிக்கவும், விற்பனையைப் பெருக்கவும் வேண்டுமென்ற நோக்கத்தில், ஆய்வுப்பணி ஒன்றை ரூ. 4.90 இலட்சம் செலவில் திருவாளர்கள் மோடு ரிசர்ச் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் நோக்கம், விரும்பப்படுகின்ற வகைகள், நுகர்வோர் விவரம், கொள்முதல் முறைகள் முதலியவற்றைக் கண்டறிவதே ஆகும். ஆய்வு அறிக்கை பெறப்பட்டுள்ளது. இந்த விற்பனை வாய்ப்பு குறித்த ஆய்வு அறிக்கை அடிப்படையில், 'டாஸ்மாக்' நிறுவனம் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையைக் கணினிமயமாக்கல்**

*3.38* மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அன்றாட பணிகளைப் படிப்படியாக கணினிமயமாக்க முடிவெடுக்கப்பட்டது. இந்த ஆண்டில், அரசு ஐந்து கணினிகள் மற்றும் தேவையான

துணைக் கருவிகள் ரூ. 5.00 இலட்சம் மதிப்பில் வாங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், அரசு தடுப்புக்காவல் பிரிவிற்கு ஒரு எலக்ட்ரானிக் தட்டச்சு இயந்திரமும் ஒரு நிகரியும் (Fax Machine) ரூ. 75,000/- மதிப்பில் வாங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாடு சட்டம் 14/1982இன்கீழ் அமைக்கப்பட்டுள்ள தடுப்புக் காவல் வழக்குகளைப் பரிசீலிக்கும் ஆலோசனைக் குழுவிற்கு ரூ. 1.00 இலட்சம் மதிப்பில் கணினி மற்றும் துணைக் கருவிகள் வாங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**3.39** இதனுடன் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகத்தில் கருப்பஞ்சாற்றுக் கசண்டின் இருப்பு, சாராவி உற்பத்தி மற்றும் பல்வேறு உற்பத்திப் பிரிவுகளுக்கு சாராவி வழங்கப்படும் அளவு ஆகியவற்றைக் கண்காணிக்க ரூ. 3.00 இலட்சம் மதிப்பில் மூன்று கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் வாங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## 4. முக்கியமான நடவடிக்கைகள்

**4.1** முன்னே உள்ள அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இம்மாநிலத்தின் ஆயத்தீர்வை வருவாயைப் பெருக்குவதற்காக அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும் அரசின் மதுவிலக்குக் கொள்கையைத் திறம்படச் செயல்படுத்தும் பொருட்டு ஆயத்தீர்வை நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த அரசு பல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. மாநிலத்தின் ஆயத்தீர்வை வருவாய்ப் பெருக்கத்திற்கு அரசு கவனம் செலுத்த வேண்டியவை எவை என்று கண்டறிந்துள்ளது. மாநிலத்தின் ஆயத்தீர்வை நிர்வாகம் சிறப்பாக செயல்படுவதை உறுதி செய்யும் பொருட்டு வருவாய் இழப்பை ஏற்படுத்துகின்ற குறைபாடுகளை நீக்க அரசு திறம்பட நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அரசின் தற்போதைய மற்றும் எதிர்கால கொள்கைகளைப் பொறுத்தமட்டில இந்தப் பகுதிகளில் அரசு அதிக கவனத்தைச் செலுத்தும். சில முக்கிய நடவடிக்கைகள் பற்றி பின்வரும் பத்திகளில் சுருக்கமாக குறிப்பிடப்படுகின்றன.

### ஆயத் தீர்வைக் குறிப்பு சீட்டுகளை நவீனமயமாக்குதல்

**4.2** ஆயத் தீர்வை ஏய்ப்பை தடுப்பதற்கும், மாநிலத்திலுள்ள உரிமம் பெற்றுள்ள கடைகளில் போலியான மதுவகைகள், கள்ளச்சாராயம் போன்றவை விற்கப்படுவதைத் தடுப்பதற்கும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், பீர்



அடங்கியுள்ள பாட்டில்களின் மீது ஒட்டப்பட வேண்டிய ஆயத் தீர்வைக் குறிப்பு வில்லைகளை அச்சிட்டு, வழங்கும் அதிகாரம் மதுவிலக்கு ஆயத் தீர்வை துறை ஆணையாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக, மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறை ஆணையாளர் அலுவலகத்தில் மாநில ஆயத் தீர்வைக் குறிப்புச் சீட்டுகள் அச்சிடும் மூன்று இயந்திரங்கள் இயங்கி வருகின்றன. ஆயத் தீர்வைக் குறிப்புச் சீட்டின் விலையாக ஒரு குறிப்புச் சீட்டுக்கு 10 காசு என்ற வீதத்தில், இம்மாநிலத்தில் உள்ள இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை உற்பத்திப் பிரிவுகளிடமிருந்தும், இறக்குமதி செய்யப்பட்ட இனங்களுக்காக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடம் இருந்தும் வசூலிக்கப்படுகிறது.

### பாதுகாப்பு ஹோலோகிராம் அறிமுகப்படுத்துதல்

**4.3** மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை மட்டுமல்லாமல் பாதுகாப்பு ஹோலோகிராம் ஒட்டுவது குறிப்புச் சீட்டுகளின் பாதுகாப்பு சிறப்பியல்புகளை அதிகரித்து போலி குறிப்புச் சீட்டுகள் அச்சிட்டு பயன்படுத்தப்படுவதை ஒட்டுமொத்தமாக தடுக்க வகைசெய்யும் என்று உணரப்பட்டது. ஆயத் தீர்வை குறிப்புச் சீட்டுகளின்மீது பயன்படுத்தப்படவுள்ள ஹோலோகிராமிற்கான வடிவமைப்பு மற்றும் பாதுகாப்பு சிறப்பியல்புகளை அரசு முடிவு செய்துள்ளது. ஹோலோகிராம் ஒட்டப்பட்ட ஆயத் தீர்வை குறிப்புச் சீட்டுகள் நடப்பாண்டில் அறிமுகப்படுத்தப்படும். இந்த நடவடிக்கை அரசுக்கு பெரிதும் வருவாய் இழப்பை ஏற்படுத்துகின்ற போலி குறிப்புச் சீட்டுகள் ஒட்டப்பட்ட போலி மதுவகைகளின் விற்பனையைத் தீவிரமாகக் கட்டுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சாராவி ஒதுக்கீட்டைக் கணினிமயமாக்குதல்

**4.4** மாநிலம் முழுவதிலும், சாராவி ஒதுக்கீடு, பெறுதல், பயன்பாடு ஆகியவை தொடர்பான புள்ளிவிவரங்களைப் பெறுவதற்காக, கணினியில் தயாரிக்கப்பட்ட அறிக்கை படிவம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்து வடிசாலைகள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் உற்பத்தி பிரிவுகள், பெரிய அளவிலான இரசாயனத் தொழிற்பிரிவுகள் அனைத்தும் மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறை ஆணையாளர் அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள கணினியுடன் இணைக்கப்பட்டு வருகின்றன. வடிசாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படும் சாராவியின்

அளவு, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் உற்பத்திப் பிரிவுகளும், இரசாயனத் தொழிற்பிரிவுகளும் பயன்படுத்தும் சாராவியின் அளவு, ஆகியவை குறித்த விவரங்களை ஒவ்வொரு தினமும் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அப்போதுதான், சாராவியின் போக்குவரத்தை தினந்தோறும் உன்னிப்பாக கண்காணிக்க இயலும். இந்தக் கணினிமயமாக்கும் பணி அண்மையில்தான் தொடங்கப்பட்டுள்ளது. படிப்படியாக, இது ஆயத்தீர்வை நிருவாகத்தின் ஏனைய பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டு வருகிறது.

**சாராவி வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க ஆய்வுக் குழு ஏற்படுத்தல்**

4.5 இரசாயனத் தொழிற் பிரிவுகள், தெளிந்த சாராவியைத் தவறாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பினைத் தடுக்க சாராவியின் போக்குவரத்தை உன்னிப்பாக கண்காணிக்க வேண்டியதும், இறுதி உற்பத்திப் பொருள்களின் போக்குவரத்தையும் முழுமையாக சரிபார்க்க வேண்டியதும் அவசியமானதென்று அரசு உணர்ந்தது. இத்தொழிற் பிரிவுகளின் செயல்பாட்டைத் தொடர்ந்து கண்காணிக்க பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட, ஓர் ஆய்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது:

(i) இணை ஆணையாளர் - I / இணை ஆணையாளர் - II .. ஒருங்கிணைப்பாளர்

(ii) இணை இயக்குநர்/துணை இயக்குநர் (இரசாயனம்) .. உறுப்பினர்

(iii) காவல் துறை கண்காணிப்பாளர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு (தலைமையிடம்) .. உறுப்பினர்

(iv) தடய அறிவியல் உதவி இயக்குநர் (ஆயத் துறை சம்பந்தப்பட்ட பொருள்களை கவனிப்பவர்) .. உறுப்பினர்

(v) மத்தியப் பிரிவிலிருந்து வரும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுப் படை .. உறுப்பினர்

4.6 இந்த ஆய்வுக் குழுக்கள் இம்மாநிலத்தில் உள்ள அனைத்து இரசாயனத் தொழிற் பிரிவுகளிலும் முழுமையான ஆய்வு நடத்த வேண்டும். மேலும், இம் மாநிலத்திலிருந்து இறுதி உற்பத்திப் பொருட்கள் கொண்டு செல்லப்படுவதைச் சரிபார்க்க வேண்டும்.





அடுத்த மாதங்களுக்கான ஒதுக்கீட்டிற்கு பரிந்துரைப்பதற்குமுன் முந்தைய சாராவி ஒதுக்கீடு முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும் என்று திட்டவட்டமாக உத்தரவிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் இரசாயன தொழிற்பிரிவுகளைச் சென்று பார்வையிட, மாவட்ட வருவாய் அதிகாரி, மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அல்லது மாவட்டக் காவல் துறையின் கூடுதல் கண்காணிப்பாளர்/காவல் துறை துணைக் கண்காணிப்பாளர், சம்பந்தப்பட்ட உதவி ஆணையாளர் (ஆயத் தீர்வை) ஆகியோர் அடங்கிய மாவட்ட அளவிலான குழு ஒன்றை மாவட்ட ஆட்சியர்கள் அமைத்துள்ளனர். இது ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சியர்கள், இரசாயனப் பிரிவுகளை உன்னிப்பாக கண்காணிக்க வழி வகுக்கும். இதன் மூலம் இரசாயனப் பிரிவுகள் சாராவியை வேறு பயனுக்குப் பயன்படுத்துவது அல்லது தவறாகப் பயன்படுத்துவது ஆகியவற்றைத் தடுக்க இயலும்.

**பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற புகார்கள்**

4.7 கள்ளச்சாராயத்தையும்/போலி மதுவையும் முற்றிலுமாக ஒழிக்கும் பணியில் பொது மக்களை ஈடுபடுத்துவதற்காக, போலி மது/கள்ளச்சாராயம் காய்ச்சுதல், விற்பனை செய்தல், கொண்டு செல்லுதல் தொடர்பாக, தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் அலுவலகத்திற்குத் தகவல் அளிக்கும்படி பொதுமக்களைக் கேட்டுக் கொண்டு, பிரபலமான செய்தித்தாள்களில் 25-8-1998 ஆம் நாளன்று விளம்பரம் செய்யப்பட்டது.

4.8 இதற்கு மக்களிடமிருந்து பெரும் ஆதரவு கிடைத்தது. முதல் வாரத்தில் மட்டும் 289 புகார்கள் வரப்பெற்றன. 1999 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரையில் 1,268 புகார்கள் வரப்பெற்றன. அனைத்துப் புகார்களும் காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (சிறப்புப் பணிகள் மற்றும் அமலாக்கம்) அவர்களின் கண்காணிப்பின்கீழ் புலனாய்வு செய்யப்பட்டன. 1,268 புகார்களில் 484 புகார்கள் உண்மையானவை என்று கண்டறியப்பட்டன. இதுவரை 869 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 660 புகார்கள் தவறானவை என்று கண்டறியப்பட்டன. இது தவிர, புகார்களை எனக்கு நேரடியாக அனுப்பலாம் என்று பத்திரிகைகள் மூலமாக கொடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் வந்த புகார்களின் மீதும்

அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வகையில், 26-4-1999 வரை வந்த 1,006 விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**4.9** போலி மது/கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும விற்பனை செய்தல் ஆகியவற்றை ஒழிக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு கோரி, அரசு, இத்தகைய நடவடிக்கை எடுத்திருப்பது இதுவே முதல் முறையாகும். பொதுமக்கள் இந்தக் கோரிக்கைக்கு அளித்துள்ள வரவேற்பையும், நல்கிய ஒத்துழைப்பையும் அரசு பாராட்டுகிறது.

**கள்ளச்சாராய உயிர் இழப்புகளைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

**4.10** கள்ளச்சாராய உயிர் இழப்புகளைத் தடுக்க அரசு பல நடவடிக்கைகள் எடுத்துள்ளது. பெரிய அளவில் குற்றம் புரியும் வழக்கமான குற்றவாளிகளுக்கான தண்டனை ரூபாய் 10,000 அபராதத்துடன் மூன்று ஆண்டு கடுங்காவல் என்று அதிகரிக்கப்பட்டு, 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச சட்டத்தின் தண்டனை விதிகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டததின் பிரிவுகள் 4, 5, 7 ஆகியவற்றின்கீழ் வரும் மதுவிலக்குக் குற்றங்களுக்கு பிரிவு 24-D இன் கீழ் இணக்க முறையில் தீர்வு காணும் முறை நீக்கப்பட்டுள்ளது. 1-7-1998 முதற்கொண்டு இம் மாநிலத்தில் அரசு, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவை மீண்டும் ஏற்படுத்தியுள்ளது.

**4.11** இந்த உயிர் இழப்புகள் பெரும்பாலானவை மெத்தனால் தொடர்புடையவை என்பதால், மெத்தனாலை வைத்திருத்தல், கொண்டு செல்லுதல், உபயோகித்தல் ஆகியவற்றின் மீது கடுமையான கட்டுப்பாடு விதிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மெத்தனால் மத்திய அரசுச் சட்டமான 1919 ஆம் ஆண்டு நச்சுப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வருகின்ற ஒன்றாகும். மெத்தனாலுடன் நிறத்தையும் கசப்புத் தன்மையையும் கொடுக்கும் பொருட்களைச் சேர்த்து குடிக்க இயலாத வகையில் மாற்றுவதற்கு நச்சுப் பொருட்கள் சட்டத்திற்கு, பொருத்தமான சட்டத்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு இந்த அரசு, மத்திய அரசை அணுகியுள்ளது.



## 5. முடிவுரை

இந்த அரசு, நமது மாநிலத்திலும் சுற்றியுள்ள அண்டை மாநிலங்களிலும் நிலவிவரும் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, மதுவிலக்குக் கொள்கையை வகுத்துள்ளது. அரசின் மதுவிலக்குக் கொள்கையைத் திறம்பட செயற்படுத்துவதற்காக, இம் மாநிலத்தில் சிறப்பான ஆயத்தீர்வை நிர்வாகத்தை உறுதி செய்திடுவதே இந்த அரசின் தலையாய நோக்கமாகும். இவ்வகையில் காவல் துறையில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவை அமைத்தது, 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்திற்குத் திருத்தங்கள் செய்தது போன்ற பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. அதே சமயம் மாநிலத்தில் வருவாய் தேவைகளைக் கருத்திற்கொண்டு இம் மாநிலத்தின் ஆயத்தீர்வை வருவாயைப் பெருக்குவதற்கு அரசு பற்பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இம் மாநிலத்தில் கடந்த மூன்றாண்டுகளில் ஆயத்தீர்வை வருவாய் வெகுவாக அதிகரித்துள்ளது. வருவாய் இழப்பிற்கு வழிகோலுகின்ற சட்டத்தில் உள்ள குறைகளைத் திருத்தி சரி செய்யவும், மாநிலத்தில் சிறப்பான ஆயத்தீர்வை நிர்வாகத்திற்கு உறுதிசெய்யவும் அரசு பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. மாநிலத்தின் ஆயத்தீர்வை வருவாயினை மேலும் பெருக்குவதற்கு இன்றியமையாதவையாக உள்ள பல முக்கிய இனங்களை அரசு கண்டறிந்துள்ளது. மதுவிலக்கு தொடர்பான தற்கால மற்றும் வருங்காலக் கொள்கைகளை வகுக்கும்பொழுது, மேற்சொன்ன முக்கிய இனங்களை அரசு கவனத்தில் கொள்ளும்.

## இணைப்பு-I

### இம்மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள் மற்றும் அவற்றின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் பற்றிய விவரங்கள்

| தொ. எண் (1) | சர்க்கரை ஆலையின் பெயர் (2) | கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத்திறன் (மெட்ரிக் டன்களில்) (3) |
|---|---|---|
| | **திருவானர்கள்** | |
| 1 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 11,000 |
| 2 | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 3 | திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 4 | தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 5 | சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 6 | நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 17,000 |
| 7 | மதுரா சுகர்ஸ் | 6,000 |
| 8 | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 12,000 |
| 9 | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 7,000 |
| 10 | திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 10,000 |
| 11 | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 21,000 |
| 12 | சக்தி சுகர்ஸ் நிறுவனம், அலகு-1 | 16,000 |
| 13 | சக்தி சுகர்ஸ் நிறுவனம், அலகு-2 | 12,000 |
| 14 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 12,000 |
| 15 | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம், திருநெல்வேலி மாவட்டம் | 12,500 |
| 16 | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம், திருவண்ணாமலை | 10,000 |
| 17 | செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 16,000 |
| 18 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 19 | எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 20 | அருணா சுகர்ஸ் அண்டு என்டர்பிரைசஸ் நிறுவனம் | 25,000 |
| 21 | ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம் | 18,000 |
| 22 | சவுத் இந்தியா சுகர்ஸ் நிறுவனம் | 16,500 |
| 23 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 19,000 |
| 24 | பொன்னி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம் | 8,400 |
| 25 | என்.பி.கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 18,000 |
| 26 | அறிஞர் அண்ணா கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 27 | திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் அலகு 1 | 14,500 |
| 28 | திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் அலகு 2 | 12,000 |
| 29 | பெரம்பலூர் சாக்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 30 | காவேரி சுகர்ஸ் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 7,000 |
| 31 | கோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம் | 13,300 |
| 32 | செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 33 | எஸ்.வி. சுகர்ஸ் நிறுவனம் | 9,200 |
| 34 | டெக்கான் சுகர்ஸ் (ஈ.ஐ.டி., புகளூர்) | 14,700 |
| | **மொத்தம்** .. | **461,800** |

## இணைப்பு-2

### வடிசாலைகள்-சாராவி உற்பத்தி
(சாராவி ஆண்டு: டிசம்பர் முதல் நவம்பர் வரை)

| தொ.எண் (1) | வடிசாலையின் பெயர் (2) | கருப்பஞ் சாற்றுக் கசண்டு வைத்துக் கொள்ள அனுமதிக்கப் பட்ட அளவு (மெட்ரிக் டன்களில்) (3) | கருப்பஞ் சாற்றுக் கசண்டு சேமிக்கும் திறனளவு (மெட்ரிக் டன்களில்) (4) | 1997-98 ஆம் சாராவி ஆண்டின் சாராவி உற்பத்தி அளவு (கோடி லிட்டர்களில்) (5) |
|---|---|---|---|---|
| | **திருவாளர்கள்** | | | |
| | **தனியார் துறையிலுள்ள வடிசாலைகள்** | | | |
| 1. | ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் | 50,000 | 15,040 | 130 |
| 2. | அருணா சுகர்ஸ் மற்றும் என்டர்பிரைசஸ் நிறுவனம் | 50,000 | 12,840 | -- |
| 3. | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 71,350 | 22,800 | 1.18 |
| 4. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனம், மரிகம்பள்ளி, அலகு 1 | 65,000 | 15,000 | -- |
| 5. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனம், மரிகம்பள்ளி, அலகு 2 | 1,10,000 | 26,468 | 0.25 |
| 6. | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 36,000 | 12,500 | 0.57 |
| 7. | ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம் | 45,000 | 14,077 | 1.03 |
| 8. | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 10,000 | 0.69 |
| 9. | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 12,000 | 0.36 |
| 10. | சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் | 12,500 | 2,250 | 0.32 |
| 11. | சக்தி சுகர்ஸ் நிறுவனம் | 78,260 | 23,950 | 0.70 |
| 12. | திருச்சி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 1,10,000 | 26,200 | 0.52 |
| 13 | மோகன் புருவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் நிறுவனம் | 45,000 | 11,788 | 0.63 |
| 14. | பவானி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 20,000 | 5,000 | 0.09 |
| | **கூட்டுறவுத் துறையிலுள்ள வடிசாலைகள்** | | | |
| 15. | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 12,000 | 0.57 |
| 16. | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 11,000 | 0.18 |
| | **மொத்தம்** .. | 863,110 | 2,33,013 | 8.10 |

[1999 மே 7

## இணைப்பு-3

### இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது மற்றும் பீர் உற்பத்தி பற்றிய விவரங்கள்

| ஆண்டு | அளவு (கோடி பல்க் லிட்டர்களில்) |
|---|---|
| இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகை உற்பத்தி | |
| 1994-95 | 8.10 |
| 1995-96 | 8.13 |
| 1996-97 | 12.78 |
| 1997-98 | 10.90 |
| 1998-99 | 11.60 |
| பீர் உற்பத்தி | |
| 1994-95 | 4.18 |
| 1995-96 | 5.79 |
| 1996-97 | 5.33 |
| 1997-98 | 5.25 |
| 1998-99 | 5.29 |



1999 மே 7]

## இணைப்பு-4

### தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) பல்வேறு தலைப்புகளின் கீழ் செய்த விற்பனை அளவு, விற்று முதல் மற்றும் அரசுக்குச் செலுத்திய வருவாய் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை

| ஆண்டு | விற்பனை: இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை | விற்பனை: பீர் | விற்றுமுதல் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை மற்றும் பீர் | ஆயத் தீர்வை | விற்பனைக் கட்டணம் | கூடுதல் விற்பனைக் கட்டணம் | விற்பனை வரி | இறக்குமதி உரிமக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பெட்டிகளின் எண்ணிக்கை கோடிகளில் | | (ரூபாய் கோடிகளில்) | | | | | |
| 1994-95 | 0.93 | 0.68 | 1173.74 | 35.83 | 20.53 | 109.14 | 148.33 | 5.36 |
| 1995-96 | 1.15 | 0.95 | 1518.71 | 42.75 | 25.34 | 144.97 | 193.13 | 6.79 |
| 1996-97 | 1.39 | 1.00 | 1825.39 | 60.42 | 28.10 | 181.74 | 245.83 | 10.33 |
| 1997-98 | 1.30 | 1.02 | 1999.53 | 69.22 | 49.15 | 198.25 | 277.48 | 23.05 |
| 1998-99 | 1.40 | 1.09 | 2347.24 | 51.99 | 43.57 | 214.60 | 442.28 | 32.90 |

[1999 மே 7

## இணைப்பு-5

### ஆயத் தீர்வை வருவாய்

| தொடர் எண் | வருவாய்த் தலைப்பு | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 (துறைக் கணக்குகள்) |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் கோடிகளில்) | | | |
| 1. | நாட்டுச்சாராவி (சாராயம்) | 0.88 | 1.01 | 4.02 | 4.81 | 19.65 |
| 2. | புளிக்க வைக்கப்பட்ட நாட்டு மது(கள்) | 0.20 | 0.14 | 0.39 | 1.04 | 15.48 |
| 3. | மால்ட் வகை (பீர்) | 40.09 | 70.88 | 72.59 | 74.43 | 86.22 |
| 4. | அயல்நாட்டு மது, சாராவி மற்றும் இயல்பு மாற்றப்பட்ட சாராவி | 490.06 | 807.51 | 940.31 | 1171.03 | 1515.31 |
| 5. | வணிக ரீதியாக இயல்பு மாற்றப்பட்ட சாராவி | 0.11 | 2.36 | 0.26 | 2.01 | 4.89 |
| 6. | மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்பு | 4.60 | 5.81 | 5.32 | 6.03 | 6.90 |
| 7. | அபின் ஹெரம்ப் ஏனைய மருந்துப் பொருட்கள் | 0.01 | 0.01 | 0.02 | 0.35 | --0.72 |
| 8 | அபராதங்களும் பறிமுதல்களும் | 13.57 | 13.27 | 8.75 | 8.77 | 10.53 |
| 9. | பணியும், பணிக்கட்டணங்களும் | 3.85 | 5.86 | 8.70 | 6.03 | 14.93 |
| 10. | ஏனைய வரவினங்கள் | 61.37 | 27.81 | 22.70 | 22.35 | 36.47 |
| | **மொத்தம்** | **614.64** | **934.66** | **1063.07** | **1299.85** | **1709.66** |

## இணைப்பு-II

(96ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண் 15

### காவல் துறை குறித்த

### கொள்கைக் குறிப்பு, 1999-2000

#### 1. முகவுரை

*1.1.1.* சட்டம், ஒழுங்கு, அமைதியையும் பாதுகாத்திடும் கடமையைச் சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு அரசுக்குத் துணைபுரிவது காவல் துறையாகும். தமிழக அரசின் காவல் துறையைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கினைப் பாதுகாத்து - குற்றங்களைக் களைந்து - மக்களின் அன்றாட வாழ்வில் அமைதியை நிலைநாட்டி, சீரான தொழில்-பொருளாதார வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் உன்னதப் பணியில் இந்திய நாட்டின் இதர மாநிலங்களுக்கும் வழிகாட்டும் வண்ணம் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

*1.1.2.* காவல் துறை பொது மக்களின் நண்பனாக விளங்க வேண்டும் என்பதும், பொது மக்களைக் கண்ணியமாக நடத்திட வேண்டும் என்பதும், காவல் நிலையம் வருகின்ற அனைவருமே குற்றவாளிகள் என்ற வகையில் நடத்தப்படக்கூடாது என்பதும் இந்த அரசின் சீரிய அணுகுமுறைகளாகும்.

*1.1.3.* இத்தகைய அணுகுமுறைகளுடன் தமிழக அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் பயனாகக் கடந்த ஆண்டில் சட்டம். ஒழுங்கு நிலைமை மிகவும் மேம்பாடு எய்தியது. குற்றங்களின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைந்துள்ளது.

*1.1.4.* குற்றங்களைக் கண்டுபிடித்து, குற்றவாளிகளைக் கைது செய்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது, தண்டனை வழங்குவது போன்ற நடவடிக்கைகளில் தமிழகத்தை இந்திய நாட்டின் இதர மாநிலங்களுடன் ஒப்பிடும்பொழுது, தமிழகம் முன்னணியில் உள்ளது என்பது தெளிவாகிறது.

*1.1.5* மைய அரசின் உள் துறை அமைச்சகத்தின்கீழ் இயங்கும் அகில இந்திய குற்றப் பதிவுருக்கள் (N.C.R.B.) நிறுவனம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து இந்த உண்மை புலப்படுகிறது.

*1.1.6.* தமிழ்நாடு அரசின் காவல் துறை, தமிழகத்தின் பொது அமைதியை மேம்படுத்துவதில் சாதனைகள் நிகழ்த்தி வருவதுடன், காவலர்களின் செயல்திறனை மேம்படுத்துவதிலும், காவல பணியாளர்களின் நலன்களைப் பேணுவதிலும் தனிக் கவனம் செலுத்தி பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இவ்வகையில் தமிழ்நாடு காவல் துறை கடந்த ஆண்டில் ஆற்றியுள்ள முக்கிய பணிகளின் விவரம் பின்வருமாறு:-

**1.2. சட்டம் மற்றும் ஒழுங்கு**

*1.2.1.* சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதில் தமிழ்நாடு காவல் துறை மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளின் விளைவாக சென்ற ஆண்டில் தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்குப் பராமரிப்பு மிகச் சீரிய முறையில் இருந்தது. கோவை குண்டு வெடிப்புச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட 200 மத வெறித் தீவிரவாதிகளில் 178 பேர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். 8 பேர் இறந்துள்ளனர். இவர்களில் 123 பேர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 28-9-1998 அன்று இவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இச்சம்பவம் குறித்த வழக்குகளை விரைவாக விசாரணை செய்வதற்கு சென்னை உயர்நீதிமன்றத்தின் அனுமதியுடன் தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தனி நீதிமன்றங்கள் விரைவில் செயல்பட உள்ளன. கோவை குண்டு வெடிப்புச் சம்பவத்தில 178 குற்றவாளிகள் மிகக் குறுகிய காலத்திற்குள் கைது செய்யப்பட்டது அனைவராலும் பாராட்டத்தக்க ஒரு நிகழ்வாகும். காவல் துறையினர் எடுத்த இந்த நடவடிக்கைகளின் விளைவாக தமிழ்நாட்டில் மதவெறித் தீவிரவாத சக்திகள் ஏறத்தாழ முழுமையாக ஒடுக்கப்பட்டு விட்டன. ஓரிரு சம்பவங்கள் நீங்கலாக மதத் தீவிரவாதம் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் தமிழ்நாட்டில் நிகழவில்லை. நிகழ்ந்த ஓரிரு சிறு சம்பவங்களில்கூட காவல் துறையினர் விரைந்து செயல்பட்டு குற்றவாளிகளைக் கைது செய்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளும் இந்த அமைதியான நிலைமைக்கு ஒரு காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.



*1.2.2.* சென்ற ஆண்டு தென்மாவட்டங்களில் சாதிக் கலவரங்கள் அதிகமாக நிகழாவண்ணம் காவல் துறையினர் கண்காணித்தனர். சிவகங்கை மாவட்டத்தில் கண்டதேவி ஸ்வர்ணமூர்த்தீஸ்வரர் கோவில் தேர்த் திருவிழாவில் தேர் இழுப்பதில் சச்சரவுகள் எழுந்த போது, காவல் துறையினர் நிலைமையைச் சீரிய முறையில் கையாண்டதன் விளைவாக, அங்கு நிகழ இருந்த ஒரு பெரும் சட்ட ஒழுங்குப் பிரச்சினை முழுவதுமாக தவிர்க்கப்பட்டது. ஆனால், பின்னர் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் நடத்திய ஊர்வலத்தின் விளைவாக அம்மாவட்டத்தில் சாதி மோதல்கள் நிகழ்ந்தன. அங்கும் காவல் துறையினர் உடனடியாகத் தலையிட்டு, நிலைமையை இரண்டு நாட்களில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். நான்கு அமைச்சர்களைக் கொண்ட குழு ஒன்று இராமநாதபுரம் சென்று பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, அரசின் நிதி உதவிகளையும் வழங்கியது. இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக, இராமநாதபுரம் அமைதி நிலைக்குத் திரும்பியது. இதுபோன்ற சாதிக் கலவரங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் அரசு அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் ஒன்றை 22-10-1998, 26-10-1998 ஆகிய இரு தினங்களிலும் சென்னையில் கூட்டியது. இந்தக் கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முடிவுகள் அனைத்தையும் அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

*1.2.3.* அரசின் இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக இராமநாதபுரம் கலவரத்திற்குப் பின்னர் தமிழ்நாட்டில் சாதிக் கலவரங்கள் எந்த ஒரு பகுதியிலும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சூழ்நிலை தொடர்ந்து நீடித்திட அரசு அனைத்து நடவடிக்கைகளையும் விழிப்புடன் மேற்கொண்டுள்ளது. சாதி வேற்றுமை, தீண்டாமை ஆகியவை ஒழிக்கப்பட வேண்டும் என்பதிலும் இந்த அரசு தீவிரமாக உள்ளது. சில இடங்களில் தேநீர் கடைகளில் மேல் சாதியினருக்கென்று ஒரு குவளையும் கீழ் சாதியினருக்கென்று ஒரு குவளையும் பயன்படுத்தப்படும் ஓர் அநாகரிகமான முறை இக்காலத்திலும் காணப்படுகிறது. இந்த நடைமுறையை அறவே ஒழித்திட தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசு காவல்துறையினருக்கு ஆணையிட்டுள்ளது. அதனடிப்படையில் இரட்டை குவளைமுறை பின்பற்றப்படும் இடங்கள் கண்டறியப்பட்டு, அதற்கு உடந்தையாய் இருப்பவர்கள் கைது செய்யப்படுவதன் மூலம் இக்குற்றத்தின் கொடுமையைக் குறைப்பதிலும்

காவல்துறை கடந்த ஆண்டில் சிறப்பாகப் பணியாற்றியுள்ளது. தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

*1.2.4.* சென்ற ஆண்டு சென்னை நகரில் நடைபெற்ற விநாயக சதுர்த்தி ஊர்வலத்தின் போதும், 14-2-1999 அன்று கோவையில் தீவிரவாதிகளால் அறிவிக்கப்பட்ட முதலாம் ஆண்டு நினைவுநாள் அன்றும், 6-2-1999 அன்று கோவைக்கு மத்திய உள் துறை அமைச்சர் திரு. எல்.கே. அத்வானி அவர்கள் வருகை புரிந்தபோதும், 28-1-1999 முதல் 31-1-1999 வரை சென்னையில் இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின்போதும் அரசும், காவல் துறையினரும் மேற்கொண்ட சீரிய பாதுகாப்பு நடவடிக்கைகளின் காரணமாக எந்தவித அசம்பாவித சம்பவங்களும் நடைபெறவில்லை. சென்னை மாநகரக் காவல் துறை இந்திய பாகிஸ்தான் அணிகளின் கிரிக்கெட் போட்டியின்போது மேற்கொண்ட தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் தமிழக அரசுக்கு மட்டுமல்ல, இந்திய அரசுக்கும் பெருமை சேர்த்தவையாகும்.

**1.3. குற்ற நிகழ்வுகள்**

*1.3.1.* காவல் துறை குற்றங்களைத் தடுப்பதற்கு சரியான நடவடிக்கைகளை மேற்கொள்கிறதா? குற்றங்கள் சரியான முறையில் கண்டுபிடிக்கப்படுகின்றனவா? குற்றப் பத்திரிகைகள் உடனுக்குடன் தாக்கல் செய்யப்படுகின்றனவா? என்பது குறித்து மாவட்ட வாரியான புள்ளிவிவரங்கள் கணிப்பொறி மூலம் மாதந்தோறும் பெறப்படுகின்றன. இவை முதலமைச்சர் அளவில் ஆய்வு செய்யப்படுகின்றன. இதன் மூலம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் செயல்படும் முறை அரசு அளவில் கண்காணிக்கப்பட்டு, செம்மையான முறையில் பணியாற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்களை அரசு பாராட்டுகிறது. நன்கு பணியாற்றாத கண்காணிப்பாளர்களிடம் அதற்கான காரணங்களைக் கேட்டு விளக்கங்கள் பெறப்படுகின்றன. இந்த முறையினால் மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர்களுக்கிடையே நன்றாகப் பணியாற்றி, அரசின் பாராட்டுதல்களைப் பெற வேண்டும் என்னும் ஒரு போட்டி மனப்பான்மை வளர்க்கப்படுகிறது. குற்றங்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.





**1.1. மனித உரிமைகள்**

காவல் துறையினர் குற்றவாளிகளை மனித நேயத்துடனும் மனிதாபிமானத்துடனும் நடத்த வேண்டுமென்று அரசு, அவர்களுக்குப் பலமுறை அறிவுரைகளை வழங்கியுள்ளது. இந்த அறிவுரைகளுக்கு மாறாக செயல்பட்ட காவலர்களின் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்கத் தவறியதில்லை. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வண்ணம் மனித உரிமைகள் பற்றிய பாடப் பயிற்சியையும் காவலர்களுக்கு அளிக்க வேண்டும் என்பதற்காக காவலர்களின் பயிற்சித் திட்டத்தில் மனித உரிமையையும் ஒரு பாடமாக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இது மட்டுமின்றி மனித உரிமை பற்றிய கருத்தரங்குகளை மாவட்ட அளவில் காவல் பணியாளர்களிடையே நடத்தி, ஏற்கெனவே பயிற்சி முடித்துப் பணிகளில் இருக்கின்ற அனைத்து காவலர்களுக்கும் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் அரசு ஆணையிட்டுள்ளது. கருத்தரங்குகளை நடத்துவதற்கு இதுவரை ரூ.10.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. ஓரிரு குற்றங்கள் கண்டுபிடிக்கப்படாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால், தனி மனித உரிமைகள் பாதிப்புக்கு ஆளாகிவிடக் கூடாது என்று அரசு காவல் துறைக்கு ஆணையிட்டுள்ளது. காவல் நிலையங்களுக்கு வந்து மனுக்களைத் தரும் பொது மக்களுக்கு மனுக்களைப் பெற்றுக்கொண்டமைக்கான ஏற்புச் சீட்டுகள் வழங்கப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டு காவல் நிலையங்களில் மனுக்களைப் பெற்றுக் கொள்வதில்லை என்ற குற்றச்சாட்டுகள் வெகுவாகக் குறைந்துள்ளன. காவல் நிலையங்களுக்கு வருகைதரும் பொது மக்களை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் அவர்கள் அமர்வதற்கு இருக்கை வசதிகள் செய்ய, சென்ற ஆண்டில் அரசு ரூ. 2.5 கோடி செலவிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. காவல் நிலையங்களில் நிகழும் மரணங்களின் எண்ணிக்கை சென்ற ஆண்டில் வெகுவாகக் குறைந்துவிட்டது. 1997 ஆம் ஆண்டில் காவல் நிலையங்களில் நிகழ்ந்த மரணங்களின் எண்ணிக்கை 16. இது 1998 ஆம் ஆண்டில் 8 எனக் குறைந்துள்ளது. காவல் நிலையங்களில் மரணங்களே நிகழாவண்ணம் காவல்துறையினர் செயல்பட வேண்டும் என்று அரசு கண்டிப்பாக ஆணையிட்டுள்ளது.

## 1.5. காவல் துறையின் திறன் மேம்பாடு

1.5.1. தமிழ்நாடு காவல் துறை சீரிய முறையில் செயல்பட வேண்டுமென்றால் அத்துறையில் பணியாற்றும் ஏறத்தாழ 85,000 காவலர்களும் திறமை மிக்கவர்களாகத் திகழ வேண்டுமென்ற நோக்கத்துடன், பணியில் உள்ள அனைத்துக் காவலர்களுக்கும் பயிற்சித் திட்டங்களை அரசு சென்ற ஆண்டு தீட்டியது. அத்திட்டங்களின்படி, காவலர்கள் பணி உயர்வு பெறுகின்ற ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1.5.2. காவல் துறைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் காவலர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியின் கால அளவு 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களாக நீட்டிக்கப்பட்டு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. காவலர்களுக்கான பயிற்சிக்குரிய பாடத் திட்டங்களிலும் பல மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன.

1.5.3. காவலர் பயிற்சிப் பள்ளிகளில் உள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ. 8.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. காவல் துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் அளிக்கப்படும் பல்வேறு பயிற்சிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும்பொருட்டு, சென்னையில் காவலர் பயிற்சிக் கழகம் (Police Academy) ஒன்றை நிறுவுவதற்காக அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. இந்தப் பயிற்சிக் கழகத்திற்காக 132.92 ஏக்கர் நிலம் காவல் துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக ரூ. 6.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.6. காவலர்கள் நலன்

1.6.1. காவலர்களின் நலனுக்காக, அரசு சென்ற ஆண்டுகளில் அறிவித்த திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, காவலர்கள் பதவி உயர்வு பெறுவதில் உள்ள தேக்கத்தை அகற்றும்பொருட்டு ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டது. பணியில் சேருகின்ற ஒரு காவலர் 10 ஆண்டுகளில் முதல் நிலைக் காவலராகவும், பின்னர் 5 ஆண்டுகளில் தலைமைக் காவலராகவும், 25 ஆண்டுகள் பணி முடித்ததும் உதவி ஆய்வாளராகவும் பதவி உயர்வு பெற ஒரு திட்டத்தை அரசு செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தினால், 2ஆம் நிலைக் காவலராக பணியில் சேரும் ஒருவர் 25 ஆண்டுகளில் உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு பெறுவார். இத்திட்டம் காவலர்களுக்கு ஓர் அருங்கொடையாக



இருப்பதால், அவர்களிடையே இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு உள்ளது. மேலும், மாநில அரசுக்குப் பெரிய அளவில் நிதிநெருக்கடி இருந்தபோதிலும் காவலர்களுக்கு மைய அரசு அளித்த கூடுதல் ஊதிய உயர்வையும் உடனடியாக இந்த அரசு வழங்கியுள்ளது.

1.6.2. போதிய வீட்டுவசதி இல்லை என்பது காவலர்களுக்குள்ள ஒரு பொதுவான குறையாகும். இதனைக் கருத்தில் கொண்டு ஆண்டுக்கு 1,000 காவலர்கள் குடியிருப்புகள் வீதம் கட்டப்பட்டு வந்த நிலையை மாற்றி, இப்போது அவர்களுக்கு 2,500 குடியிருப்புகள் கட்டுவதற்குத் தேவையான நிதியினை அரசு ஒதுக்கியுள்ளது. கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. சென்ற ஆண்டில் 4,000 காவலர் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன என்பது ஒரு சாதனையாகும். இந்த ஆண்டும் 2,500 குடியிருப்புகளைக் கட்டுவதற்காக அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்படவுள்ளன. எந்த மாவட்டங்களில் காவலர் குடியிருப்புகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளனவோ, அந்த மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து, அவை இந்த ஆண்டு காவலர் குடியிருப்புகள் கட்டுவதற்காகத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே உள்ள காவலர் குடியிருப்புகள் பழுது அடைந்துவிட்டன என்ற குறை அரசின் கவனத்திற்கு வந்ததின்பேரில், இந்த குடியிருப்புகளைப் பழுது பார்ப்பதற்காகவே அரசு சென்ற ஆண்டு கணிசமான அளவு அதாவது 7.00 கோடி ரூபாய் ஒதுக்கியது.

1.6.3 அதே போன்று, சென்ற ஆண்டில் மின் விசிறிகள் இல்லாத 11,140 காவலர் குடியிருப்புகளுக்கு ரூ. 1.67 கோடி செலவில் மின் விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன.

1.6.4. பல ஆண்டுகளாக, காவலர் குடியிருப்புகளில் ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு தனி மின்சார மீட்டர் இல்லை என்ற பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்பட்டுள்ளது.

## 1.7. காவல் துறையை நவீனமயமாக்குதல்

1.7.1. காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ரூ. 12.00 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்திற்காக, மைய அரசும் ரூ. 2.00 கோடி நிதி உதவி அளிக்கிறது. ஆண்டு தோறும் மொத்தம் ரூ. 14.00 கோடி மதிப்பீட்டில் பல திட்டங்கள் திட்டப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன. இந்த

ஆண்டும் இதே அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், சென்ற ஆண்டில், கைரேகையைக் கணிப்பொறி மூலம் கண்டறியும் பொருட்டு சி.எம்.சி. என்ற நிறுவனத்தின் வாயிலாக ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டு, அது முடியும் தருவாயில் உள்ளது. இந்தக் கணிப்பொறித் திட்டத்தினால் ஏறத்தாழ 40,000 குற்றவாளிகளின் கைரேகைகளைக் கணிப்பொறியில் பதிவு செய்ய இயலும். இந்தக் கணிப்பொறிப் பதிவுப் பணி முடிந்த பின்னர், கைரேகைகளுக்குச் சொந்தமான குற்றவாளிகள் தமிழகத்தில் எந்த மாவட்டத்தில் இருந்தாலும் அவர்களை ஒரு சில நிமிடங்களில் கண்டுபிடித்துவிடலாம்.

*1.7.2.* ரோந்துப் பணிகளில் ஈடுபட்டுள்ள காவலர்களுக்கு உதவியாக இருக்கும்பொருட்டு 4,300 வாக்கி டாக்கிகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. இதனால் இக்காவலர்களின் பணித்திறன் பெரிதும் மேம்பட்டுள்ளது. தஞ்சாவூரில் சரிவர இயங்காமல் இருந்த காவல் துறை தொலைத்தொடர்பு மையத்தை மேம்படுத்துவதற்கு ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தென் மாவட்டங்களிலும், கோயம்புத்தூரிலும் காவலர்கள் சீரிய முறையில் திறமையாகப் பணிபுரியும்பொருட்டு ரூ. 2.09 கோடி செலவில் வாகனங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

*1.7.3.* சாலைகளில் ஏற்படும் போககுவரத்து நெரிசல்களைத் தவிர்ப்பதற்கென்று போக்குவரத்துக் கட்டுப்பாட்டு விளக்குகளை அமைக்க, சென்ற ஆண்டினைப் போலவே இந்த ஆண்டிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

*1.7.4.* கலவரங்களில் ஈடுபடும் கும்பல்களைக் கலைப்பதற்குப் பயன்படும் நவீன கருவிகளை வாங்குவதற்கும் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. கலவரக் கும்பல்களைக் கலைப்பதற்குக் காவல் துறையினர் பிளாஸ்டிக் குண்டுகளையும், தண்ணீர் பீய்ச்சியடிக்கும் இயந்திரங்களையும் பயன்படுத்துவார்கள் ஏற்கெனவே தண்ணீர் பீய்ச்சியடிக்கும் இயந்திரம் ஒன்று வாங்கப்பட்டு இராமநாதபுரத்தில் ஏற்பட்ட கலவரங்களின்போது அந்த இயந்திரம் பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



## 2. காவல் துறையின் பணியமைப்பு

### 2.1 உயர்நிலை நிர்வாகம்

*2.1.1.* தமிழ்நாடு காவல் துறையின் ஒட்டுமொத்த நிர்வாகப் பொறுப்பைக் காவல் துறைத் தலைமை இயக்குநர் வகித்து வருகிறார்.

*2.1.2.* காவல் துறைத் தலைமை இயக்குநருக்கு உதவியாக, காவல் துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), காவல் துறைத் தலைவர் (நிர்வாகம்), காவல் துறைத் தலைவர் (தலைமையிடம்), காவல் துறைத் தலைவர் (சட்டமும் ஒழுங்கும்) ஆகியோர் காவல் துறைத் தலைமை இயக்குநர் அலுவலகத்தில் பணியாற்றுகின்றனர்.

*2.1.3.* மாநிலத்தில் சட்டம் ஒழுங்குப் பராமரிப்பில் சட்டம் ஒழுங்குப் பிரிவு காவல் துறை கூடுதல் இயக்குநரும், காவல் துறைத் தலைவரும், காவல் துறைத் தலைமை இயக்குநருக்கு உதவியாகப் பணியாற்றுகின்றனர்.

*2.1.4.* தலைமையிட காவல் துறைத் தலைவரும், நிர்வாக காவல் துறைத் தலைவரும் காவல் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனித்து வருகின்றனர். இதுதவிர, காவல் துறை செயல்பாட்டுக்கான தேவைகள் மற்றும் திட்டங்கள் குறித்த பணிகளையும் செய்து வருகின்றனர்.

*2.1.5.* தொழில்நுட்பப் பிரிவின் காவல் துறைத் தலைவர், கணினிப் பிரிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்பப் பிரிவுகளை நிர்வகித்து வருகின்றார்.

*2.1.6.* காவல் துறை தலைமை இயக்குநர் ஒருவர் காவலர் பயிற்சிப் பிரிவின் தலைவராகவும், தமிழ்நாடு காவலர் பயிற்சிக் கழகத்தின் திட்ட அலுவலராகவும் இருந்து வருகின்றார்.

*2.1.7.* தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் தலைவராகக் காவல்துறைத் தலைமை இயக்குநர் ஒருவர் இருந்து வருகிறார்.

*2.1.8.* குற்ற நிகழ்வுகளைத் தடுக்கும் பிரிவில் காவல் துறை கூடுதல் இயக்குநர், பல்வேறு முக்கிய வழக்குகளின் புலன் விசாரணையை மேற்பார்வையிட்டு, குற்றப்புலனாய்வுப் பிரிவையும் நிர்வகித்து வருகின்றார்.

**2.1.9.** தொழில் நுட்பப்பிரிவு காவல் துறைத் தலைவர், கடலோரப் பாதுகாப்புப் படை காவல் துறைத் தலைவர் மற்றும் சிறப்பு நடவடிக்கைகள் படை காவல் துறைத் தலைவர் ஆகியோரது பணிகளை, கூடுதல் காவல் துறை இயக்குநர் (சிறப்பு நடவடிக்கைகள்) மேற்பார்வையிடுகின்றார்.

**2.1.10.** பொருளாதாரக் குற்றங்களைக் கண்டுபிடித்து புலன் விசாரணை நடத்தும் பொறுப்பை அப்பிரிவின் கூடுதல் காவல் துறை இயக்குநர் வகித்து வருகிறார். சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவு, கள்ள நோட்டு மற்றும் கள்ள நாணயத் தடுப்புப் பிரிவு, காவல் ஆராய்ச்சி மையம் போன்ற பிரிவுகளின் பணிகளையும் அவர் மேற்பார்வையிடுகிறார். தமிழ்நாடு சிறப்புப் புலனாய்வுப் பிரிவு காவல் துறைத் தலைவரின் கூடுதல் பொறுப்பையும் அவர் கவனித்து வருகிறார்.

**2.1.11.** காவல் தனிப்பிரிவு தொடர்பான பயனுள்ள தகவல்களைச் சேகரித்து, மேல் நடவடிக்கைக்காக அனுப்புவது, மாநிலத்திற்கு முக்கிய நபர்கள் வருகை புரியும்போது பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வது, அரசுக்குச் சொந்தமான கட்டமைப்புகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது போன்ற பணிகளை, நுண்ணறிவுப் பிரிவு காவல் துறைத் தலைவர் கவனித்து வருகிறார். 'இசட்' ப்ளஸ் வகைப் பாதுகாப்பில் உள்ள நபர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக, பாதுகாப்புப் பிரிவில் தனிப்படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தீவிரவாதிகள், போராளிகள் ஆகியோரது சதிச் செயல்களைக் கண்காணித்து, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள, நுண்ணறிவுப் பிரிவு காவல் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டில் 'க்யூ' பிரிவு காவல் கண்காணிப்பாளர் பணியாற்றி வருகிறார்.

**2.1.12.** மாநிலத்தில் கடலோர எல்லைப் பகுதிகளில் பாதுகாப்புப் பணிகளை, கடலோரப் பாதுகாப்புப் பிரிவு காவல் துறைத் தலைவர் கவனித்து வருகிறார்.

**2.1.13.** குடியுரிமை பாதுகாப்புப் பிரிவு, காவல் துறை கூடுதல் இயக்குநரின் (சமூக நீதி-குற்றப் புலனாய்வுப் பிரிவின்) கீழ் இயங்கி வருகிறது.

**2.1.14.** ஆயுதப் படைப் பிரிவு காவல் துறைத் தலைவர், 11 ஆயுதப்படைப் பிரிவுகளுக்கும், ஆவடியில் உள்ள காவல் படைக்கலப் பயிற்சி மையத்துக்கும் பொறுப்பு அதிகாரியாக உள்ளார்.





**2.1.15.** அரசு இரயில்வே காவல் படையினரின் பணிகளை மேற்பார்வையிட இரயில்வே காவல் படைப் பிரிவின் காவல் துறைத் தலைவர் உள்ளார்.

**2.1.16.** காவல் துறை, சிறைத் துறை மற்றும் தீயணைப்புப் படை ஆகியவற்றில் சீருடைப் பணியாளர் நியமனத்தை ஒருமுகப்படுத்தி சீரான நியமனத்திற்கு வழிவகுக்கும் வகையில், காவல் துறை இயக்குநர் தலைமையில் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

**2.1.17.** சிவில் பாதுகாப்புப் பயிற்சிப் பிரிவின் காவல் கூடுதல் இயக்குநர் தமிழநாட்டில் சிவில் பாதுகாப்பு உட்பட ஊர்க்காவல் படைக்கு அதிகாரியாக இருந்து வருகிறார். காவல் துறைத் தலைவர், சிவில் பாதுகாப்பு இயக்குநர். ஊர்க்காவல் படைத் துணைத் தளவாய் ஆகியோர், கூடுதல் இயக்குநருக்கு உதவியாகப் பணியாற்றி வருகின்றனர்.

**2.1.18.** தமிழ்நாடு காவல் துறையில, 1-1-1999-ன்படி செயல் அலுவலர்கள், அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் தொலைத்தொடர்புப் பணியாளர்கள் ஆகியோரின் ஏற்பளிக்கப்பட்ட எண்ணிக்கை 95,411 ஆகும். 219 ஆயுதப்படைப் பிரிவுகளும், 11 தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளும், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க உள்ளூர் காவல் துறையினருக்குப் பெரிதும் உதவி வருகின்றன. இதில் ஓர் ஆயுதப்படைப் பிரிவு திகார் சிறைச்சாலை வளாகத்திற்குப் பாதுகாப்பு அளிக்க புதுடில்லியில் அயல்பணியில் ஈடுபட்டுள்ளது.

## 2.2. காவல் துறையில் உள்ள சிறப்புப் பிரிவுகள்

### 2.2.1. கமாண்டோ படை மற்றும் கமாண்டோ பள்ளியின் அமைப்பு

தமிழ்நாடு கமாண்டோ படையில், 1 காவல் கண்காணிப்பாளர், 3 துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், 8 ஆய்வாளர்கள், 2 தொழில்நுட்ப ஆய்வாளர்கள், 36 உதவி ஆய்வாளர்கள், 4 தொழில்நுட்ப உதவி ஆய்வாளர்கள், 40 தலைமைக் காவலர்கள்/நாயக்குகள், 177 காவலர்கள் ஆகியோர் பணியாற்றுகின்றனர். 1 காவல் கண்காணிப்பாளர், 1 கூடுதல் காவல் கண்காணிப்பாளர், 1 துணைக் காவல் கண்காணிப்பாளர், 1 தொழில்நுட்ப துணைக் காவல் கண்காணிப்பாளர், 11 ஆய்வாளர்கள், 22 உதவி ஆய்வாளர்கள், 37 தலைமைக் காவலர்கள் 10 முதல்நிலைக் காவலர்கள்/நாயக்குகள் மற்றும் 43 காவலர்கள் தமிழ்நாடு கமாண்டோ பள்ளியில் பணி புரிகின்றனர்.

## 2.2.2. தமிழ்நாடு கமாண்டோ படையின் செயல்பாடுகள்

மதக் கலவரங்கள் மற்றும் இதர ஆபத்தான சூழ்நிலைகளின்போது தமிழ்நாடு கமாண்டோ படையினரின் பணிகளைப் பயன்படுத்திக் கொள்வதுடன் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கெதிராகவும், முன்கூட்டியே பெறப்பட்ட தகவலின்பேரில், களப்பணியில் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடவும் இவர்கள் பிரதானமாகத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

கமாண்டோ படையினர் எப்போதும் தீவிரப் பயிற்சியில் ஈடுபட்டிருப்பார்கள் என்பதால், பாதுகாப்பு அலுவலர்களாகவோ அல்லது வழிக்காவல் பணிக்காகவோ அல்லது அதிமுக்கிய நபர்கள் வருகையின்போது பாதுகாப்புப் பணிக்கோ இப்படையினரின் சேவைகளைப் பயன்படுத்த முடியாது.

தனிப்பட்ட நபரின் பாதுகாப்பை மட்டுமே கருத்தில் கொள்ளாமல், மாநிலத்தில் ஒட்டுமொத்த மக்களின் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்டதே கமாண்டோ படையாகும். அதிமுக்கிய நபர்கள் வருகை புரியும்போது, அவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படும் நேரங்களில் கமாண்டோ படையினர் ஆயத்த நிலையில் வைக்கப்படுவர். தீவிரவாதிகளின் செயல்களை ஒடுக்க இப்படை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

## 2.2.3. அதிவிரைவுப் படை

மாநிலத்தில் மதக்கலவரங்கள் நடக்கும்போது விரைந்து நடவடிக்கை எடுக்கவும், அவற்றைக் கட்டுப்படுத்தவும் 1997 ஆம் ஆண்டில் அதிவிரைவுப் படை உருவாக்கப்பட்டது. வன்முறையைக் கட்டுப்படுத்துதல், தீயணைப்பு நடவடிக்கைகள், மீட்புப் பணிகள், முதலுதவிப் பணிகள், மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு போன்ற பயிற்சிகள் இப்படையினருக்கு அளிக்கப்படுகின்றன. இப்படையில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை 161 ஆக உயர்த்தப்பட்டு வீராபுரம் (சென்னை), வேலூர், கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய ஐந்து இடங்களில் செயல்பட்டு வருகிறது. தீவிரவாதிகளை வெளியேற்ற நடத்தப்படும் சோதனைகளின்போதும், பல்வேறு சட்டம் ஒழுங்குப் பராமரிப்பு தொடர்பான பணிகளின்போதும், அதிவிரைவுப் படையினரின் சேவைகள்



பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன. 30-9-1998 அன்று திருச்சியில் நடைபெற்ற காவல் பதக்கம் வழங்கும் விழா அணி வகுப்பில் அதிவிரைவுப் படையினர் முதலிடம் பெற்றது, இப்படையினரின் மெச்சத்தக்கப் பணிக்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல் இருந்தது.

## 2.2.1. திருக்கோயில் பாதுகாப்புப் படை

இப்படையில் 1,000 இரண்டாம் நிலைக் காவலர்களும், 3,000 முன்னாள் இராணுவ வீரர்களும் பணிபுரிகின்றனர். இத்திருக்கோயில் பாதுகாப்புப் படை, கோயில்களுக்கும், அவற்றின் சொத்துக்களுக்கும் பாதுகாப்பு அளித்து வருகிறது.

## 2.2.5. பெண் காவலர்கள்

1973 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பெண் காவலர் படை ஏற்படுத்தப்பட்டது. இளம் பெண்களை மீட்பது, காணாமல் போன குழந்தைகளைக் கண்டு பிடிப்பது, விபச்சாரத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சோதனை நடத்தும்போது ஆண் காவலர்களுக்கு உதவி செய்வது, மக்கள்/பெண்கள் கூடும் இடங்களில் ரோந்து மற்றும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுவது, விமான நிலையம் துறைமுகம் ஆகிய இடங்களில் பெண் பயணிகளைச் சோதனையிடுவது, காவல் தொலைபேசி இணைப்பகத்தை நிர்வகிப்பது போன்ற பணிகளில் பெண் காவலர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். பெண் காவலர்கள் திறமையாகவும், வெற்றிகரமாகவும், தமிழ்நாடு காவல் துறைக்கு உதவி வருகிறார்கள். மகளிர் தொடர்பான பிரச்சினைகளைக் கையாள, குறிப்பாக வரதட்சணைக் கொடுமைகள் குறித்த வழக்குகளைக் கையாளுவதற்கு, மகளிர் காவல் நிலையங்களை அரசு உருவாக்கியது. தமிழ்நாட்டில் 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உள்ளன. அவற்றில் மூன்று காவல் நிலையங்கள் சென்னை நகரில் உள்ளன. 1-1-1999 நிலவரப்படி, மொத்த பெண் காவலர்கள் எண்ணிக்கை 4,415 ஆகும். இதில் 26 பெண் காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், 72 ஆய்வாளர்கள், 265 உதவி ஆய்வாளர்கள், 554 தலைமைக் காவலர்கள், 3,498 காவலர்கள் அடங்குவர். 3,498 பெண் காவலர்களில், 3,052 பேர் ஒருமுகத் தேர்வு முறை மூலம் பணி நியமனம் செய்யப்பட்டவர்கள். அவர்கள் தற்போது தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளில் இணைக்கப்பட்டுள்ளனர். ஆண் காவலர்களைப் போல விழிப்புக் காவல் பணி, முக்கிய நபர்கள் வருகையின்போது

பாதுகாப்புப் பணி ஆகியவற்றிலும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த பெண் காவலர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

### 2.2.6. இருப்புப்பாதை காவல் படை

தமிழ்நாடு காவல் துறையின் கட்டுப்பாட்டில் அரசு இருப்புப்பாதை காவல் படை இயங்கி வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள இருப்புப்பாதை முழுவதிலும் இதன் அதிகார எல்லை இருந்து வருகிறது. இரயில்வே நிர்வாகச் சொத்துக்களுக்குப் பாதுகாப்பு அளித்து, காவல் அதிகாரமில்லாத இரயில்வே பாதுகாப்புப் படையிலிருந்து வேறுபட்ட படையாக இருப்புப் பாதை காவல்படை உள்ளது. இந்திய தண்டனைச் சட்டம், குற்ற தண்டனைச் சட்டம், இந்திய இரயில்வே சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கவும் மற்றும் குற்ற நிகழ்வுகளைத் தடுத்தல், சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல் ஆகிய பணிகளிலும் இரயில்வே நிர்வாகம், அரசு இருப்புப்பாதை காவல் படையின் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்கிறது. இரயில்வே சொத்துகள், இதர அரசாங்கக் கட்டடங்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், இரயில்களில் பயணம் செய்வோருக்கும் இரயில்வே பிளாட்பாரத்தில் உள்ளவர்களுக்கும் பாதுகாப்பு அளித்தல் போன்ற பணிகளையும் அரசு இருப்புப்பாதை காவல் படை கவனித்து வருகிறது. இவ்வாண்டில், குற்ற நிகழ்வுகள் அதிகமாக நடக்கும் பகுதிகள்/இரயில்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து அதிக அளவில் ரோந்துப் பணிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. குற்றங்களைக் கண்டுபிடிக்கத் தனிப்படைகள் அமைக்கப்பட்டு, முக்கிய வழக்குகளில் துப்புதுலக்கவும், புலன் விசாரணை செய்து, குற்றம் செய்யும் கும்பல்களைக் கண்டுபிடிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அரசு இருப்புப்பாதை காவல் படையின் மொத்தச் செலவினங்களைத் தமிழ்நாடு அரசும், இரயில்வே நிர்வாகமும் சரிபாதியாகப் பகிர்ந்து கொள்கின்றன.

### 2.2.7. கடலோரப் பாதுகாப்புப் படை

தமிழ்நாடு கடலோரப் பகுதியிலிருந்து இலங்கைக்குக் கடல் வழியாக பெட்ரோலியப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுத்தல், மருந்துகள், போதைப் பொருட்கள், வெடிமருந்துகள், துப்பாக்கிகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தலைத் தடுத்தல், போராளிகளின் ஊடுருவலைத் தடுத்தல், மீனவர், போராளிகள் மற்றும் கடத்தல்காரர்களிடையே ஏற்படக்கூடிய மோதல்களைத் தடுத்தல்



போன்ற பணிகளைக் கவனிப்பதற்காக கடலோரப் பாதுகாப்புப் படை ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டின் கிழக்குக் கடலோரத்தில், எண்ணூரிலிருந்து கன்னியாகுமரி வரை உள்ள 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடலோரப் பகுதியில் பாதுகாபபு அளிக்கும் பொறுப்பு கடலோரப் பாதுகாப்புப் படையைச் சார்ந்ததாகும்.

### 2.2.8. மதுவிலக்கு அமல் பிரிவு

*2.2.8.1.* தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கை அமல்படுதத வேண்டுமென்ற கொள்கையில் அரசு முழு மூச்சுடன் செயல்பட்டு வருகிறது. அதனால், 1998 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் முதல் நாள் மதுவிலக்கு அமல் பிரிவை அரசு மீண்டும் கொண்டு வந்தது. காவல் ஆய்வாளர்கள் தலைமையில் 86 மதுவிலக்கு அமல் பிரிவு கிளைகள் அமைக்கப்பட்டன. அந்தந்த மாவட்டங்களில் மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்தவும், பணிகளை மேற்பார்வையிடவும் 37 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களும், 37 துணைக் காவல் கண்காணிப்பாளர்களும் பணியில் அமர்த்தப்பட்டனர். மாநில அளவில், மதுவிலக்குப் பிரிவு காவல் துறைத் தலைவர் ஒருவரையும், இரண்டு காவல் கண்காணிப்பாளர்களையும், மதுவிலக்கு அமல் சட்டங்களைக் கண்காணிக்க அரசு நியமித்துள்ளது.

*2.2.8.2.* பாண்டிச்சேரி, காரைக்கால், கர்நாடக மாநிலம் ஆகியவற்றிலிருந்து போலி மதுபானங்கள்/பீர் பாட்டில்கள கடத்தப்படுவதைத் தடுக்க, நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், தர்மபுரி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 21 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

### 2.2.9. ஒழுக்கக்கேடு தடுப்புப் பிரிவு

1956ஆம் ஆண்டு விபச்சாரத் தடுப்புச் சட்டம் தொடர்பான மத்திய சட்டங்களை நடைமுறைப்படுத்தும் வகையில், விபச்சாரத் தடுப்புப் பிரிவு தொடங்கப்பட்டது. சென்னை நகரில், காவல் உதவி ஆணையாளர் மற்றும் இதர மாவட்டங்களில் காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவிக்குக் குறையாத தரத்தில் உள்ளவர்கள், தங்களது அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் 1956ஆம் ஆண்டு விபச்சாரத் தடுப்புச் சட்டத்தை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்ற சிறப்புக் காவல் அதிகாரிகளாவர்.

### 2.2.10. ஊர்க்காவல் படை

#### 2.2.10.1. பணி அமைப்பு

தமிழ்நாடு ஊர்க்காவல் படை, காவல்துறையினருக்கு ஒரு துணைப் படையாகவும், தன்னார்வப் படையாகவும் செயல்படுகிறது. அனைத்துத் தரப்பையும் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள், இவ்வமைப்பில் பணியாற்றுகின்றனர். ஒப்பளிக்கப்பட்டுள்ள 10,566 ஊர்க்காவல் படையினரில், 550 பெண்களும், 10,016 ஆண்களும் உள்ளனர்.

#### 2.2.10.2 முக்கிய செயல்கள்

போக்குவரத்துப் பணி, இரவு ரோந்து, கோயில் மற்றும் திருவிழாப் பாதுகாப்பு, அழைப்பாணைகளை ஒப்படை செய்தல், புள்ளிவிவரங்களைச் சேகரித்தல், இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது மீட்புப் பணிபுரிதல், கொடிநாளில் நிதி வசூலித்தல் போன்ற பணிகளில், ஊர்க்காவல் படையினர் ஈடுபடுத்தப்படுகின்றனர். மிக மிக முக்கியப் பிரமுகர்கள் தமிழகத்திற்கு வருகை புரியும்போதும், அவர்களது பணிகள் பயன்படுத்தப்படுகின்றன. சென்னை நகரம் மற்றும் இதர மாவட்டத் தலைநகரங்களில், குடியரசு தின விழாக்களின்போது, அணிவகுப்பில் ஊர்க்காவல் படையினர் கலந்து கொள்கின்றனர்.

### 2.2.11. மக்கள் பாதுகாப்புப் படை

பகைமை உணர்வு காரணமாக எதிராளிகள் தாக்குதல் நடத்தும்போது மனித உயிரைக் காத்தல், சொத்துக்களின் சேதத்தைக் குறைத்தல், தொழிற்சாலைகளின் உற்பத்தியை நிலைநாட்டுதல் போன்ற பணிகளை மக்கள் பாதுகாப்புப் படை மேற்கொள்கிறது. இப்படையினர், நாட்டில் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது நிவாரணம் மற்றும் மீட்புப்பணிகளில் தன்னார்வத்துடன் செயல்படுகின்றனர். சென்னை நகரம், கல்பாக்கம் ஆகியவை, முதல் வகைப் பாதுகாப்பு நகரங்களின் பட்டியலில் உள்ளன. மக்கள் பாதுகாப்புப் படை இயக்குநர் பதவியையும் வகித்து வரும் ஊர்க்காவல் படைப் பிரிவின் காவல் துறைத் தலைவர், வெள்ளச் சீற்றம்/புயல் மீட்பு நடவடிக்கைகளில், மக்கள் பாதுகாப்புப் படையின் பணிகளை மேற்பார்வை இடுகிறார். வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளைக் கண்காணித்திட, ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவமழையின்போது (அக்டோபர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரையிலான காலத்தில்), மாநில வெள்ளக்கட்டுப்பாட்டு மையம் இயங்குகிறது. இயற்கை சீற்றங்களின்போது, காற்றடைத்து மிதக்க வைக்கும் படகுகள், மற்றும் சிறப்பு நிவாரண வாகனங்கள் போன்றவை, தக்க பயிற்சியாளர்களுடன், கடலோர மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றன.



### 2.2.12. குடியுரிமைப் பாதுகாப்பு

2.2.12.1. குடியுரிமைப் பாதுகாப்புப் பிரிவு, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் தாழ்த்தப்பட்ட இனம் மற்றும் மலைவாழ் இன (வன்கொடுமைத் தடுப்புச்) (1989 ஆம் ஆண்டின்) சட்டப்பிரிவுகளை நடைமுறைப்படுத்துகிறது. 1955ஆம் ஆண்டின் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், 1976ஆம் ஆண்டு பெருமளவு திருத்தியமைக்கப்பட்டது. தீண்டாமையைக் கடைப்பிடித்தாலோ அல்லது பிரச்சாரம் செய்தாலோ, 1989ஆம் ஆண்டில் இருந்து ஒரு மாத கடுங்காவல் தண்டனையுடன், ரூ. 100 அபராதம் விதிக்க இச்சட்டம் வகை செய்கிறது. தாழ்த்தப்பட்ட இன மற்றும் மலைவாழ் இன மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைத் தடுத்திடவும், அக்குற்ற வழக்குகளை நடத்திட தனி நீதிமன்றங்களை அமைத்திடவும், அக்குற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தக்க நிவாரணம் மற்றும் புகலிடம் அளித்திடவும், தாழ்த்தப்பட்ட இன மற்றும் மலைவாழ் இன (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம் உருவாக்கப்பட்டது.

2.2.12.2. குடியுரிமைப் பாதுகாப்புப் படைப்பிரிவு, காவல் துறைத் தலைவர் (மனித உரிமைகள்) தலைமையில் இயங்குகிறது. அவருக்குப் பொருளாதார மற்றும் சமூகவியல் நிபுணர் ஒருவர் தலைமையிடத்தில் உதவி புரிகின்றார். நிர்வாகம் சிறந்து விளங்கிட வேண்டுமென்பதற்காக, கூடுதல் காவல் துறை இயக்குநர் (சமூகநீதி குற்றப்புலனாய்வுத் துறை) என்ற ஒரு பதவி உருவாக்கப்பட்டு, அவர் இப்பிரிவு செயல்படும் விதத்தை மேற்பார்வையிடுகின்றார். இப்பிரிவின்கீழ், ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும், ஒரு காவல் ஆய்வாளரின் தலைமையில் குடியுரிமைப் பாதுகாப்புப் படைப் பிரிவு இயங்குகிறது. சென்னை (சென்னை மற்றும் வேலூர் சரகங்களை உள்ளடக்கியது), திருச்சி (திருச்சி, கோவை சரகங்கள் மற்றும் கோவை மாநகரை உள்ளடக்கியது), மதுரை (மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி சரகங்கள் மற்றும் மதுரை, திருநெல்வேலி மாநகரங்களை உள்ளடக்கியது) ஆகிய மூன்று

இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் காவல் துறைத துணை கண்காணிப்பாளர்கள் மூவரால் இப்பிரிவுகளின் பணிகள் மேற்பார்வையிடப்படுகின்றன.

## 2.2.13. கூட்டுக் கொள்ளைத் தடுப்புப் பிரிவு

2.2.13.1. தமிழ்நாட்டில் நிகழும் கொள்ளை வழக்குகளைக கண்டுபிடித்து, அந்நிகழ்வுகளைத் தடுத்திடும்பொருட்டு, 1 காவல் கண்காணிப்பாளர், 2 துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், 4 ஆய்வாளர்கள், 5 உதவி ஆய்வாளர்கள, 5 தலைமைக் காவலர்கள், 5 இரண்டாம் நிலைக் காவலர்கள், 4 இரண்டாம் நிலைக் காவலர் ஓட்டுநர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டுக் கொள்ளைத் தடுப்புப் பிரிவு (குற்றப்பிரிவு, குற்றப்புலனாய்வுத் துறை) உருவாக்கப்பட்டு, இப்பிரிவு 5-10-1995 முதல் செயல்பட்டு வருகிறது.

2.2.13.2 மாநிலம் முழுவதுமான எல்லைகளை உள்ளடக்கிய இப்பிரிவின் முக்கிய நோக்கம், கொள்ளை, கூட்டுக்கொள்ளை, ஆதாயத்திற்காக நடைபெறும் கொலைகள் தொடர்பான வழக்குகள் பற்றிய செய்திகளை அறிந்து, அத்தகைய செய்திகளை, மாவட்டம் முழுவதிலும் உள்ள பிரிவு அலுவலகங்களுக்குத் தீவிரப் புலன்விசாரணை மேற்கொள்ள அனுப்புவதாகும்.

## 2.2.14. வீடியோ திருட்டுத் தடுப்புப் பிரிவு

2.2.14.1 வீடியோக்களில் திருட்டுத்தனமாகத் திரைப்படங்களைப் பதிவு செய்வதையும் அவற்றை விற்பனை செய்வதையும் தடுக்கும பொருட்டு, தமிழக அரசு காவல் துறை கூடுதல் இயக்குநர் (குற்றம்), சென்னை நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ், ஒரு தனிப்பிரிவைத் தொடங்கிட அனுமதி வழங்கியது. பதிப்புரிமைச் சட்டத்தை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கவும் இப்பிரிவு உபயோகப்படுத்தப்படுகிறது இப்பிரிவில் ஒரு காவல் கண்காணிப்பாளர், ஒரு துணைக் காவல் கண்காணிப்பாளர் மற்றும் 24 காவல் துறையினர் பணியாற்றுகின்றனர்.

2.2.14.2 1998 ஆம் ஆண்டில், இப்பிரிவு 170 வழக்குகளில் துப்பு துலக்கியதில், 4 வழக்குகள் தண்டனையில் முடிந்தன; 165 வழக்குகள் நிலுவையில் உள்ளன; ஒரு வழககு புலன் விசாரணையில் இருக்கிறது.



## 2.2.15 நுகர் பொருள் கண்காணிப்பு, குற்றப்புலனாய்வுப் பிரிவு

கள்ளச்சந்தை வியாபாரிகள், கடத்தல்காரர்கள் ஆகியோர் இன்றியமையா உணவுப் பொருட்களைப் பதுக்கி மாநில எல்லையைத் தாண்டிக் கடத்துவதைத் தடுத்திடவும், கலப்படங்களைக் கண்டுபிடிக்கவும், 1964 ஆம் ஆண்டு, நுகர் பொருள் கண்காணிப்பு, குற்றப்புலனாய்வுப் பிரிவு தொடங்கப்பட்டது. இப்பிரிவின் தலைவராகக் காவல் கண்காணிப்பாளர் ஒருவர், சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறார். இப்பிரிவில் 4 துணைக் கண்காணிப்பாளர்கள் உட்பட 211 காவல் துறையினர் பணிபுரிகின்றனர்.

## 2.2.16. சிறப்பு அதிரடிப்படைப் பிரிவு

சிறப்பு அதிரடிப்படைப் பிரிவு, சென்னை நகர காவல் ஆணையர் அவர்களின மேற்பார்வையில் செயல்பட்டு வந்தது. சென்னை நகரக் காவல் ஆணையர் தனது வழக்கமான பணிகளுடன் கூடுதலாக, இப்பிரிவிற்கும் பொறுப்பை வகித்து வந்தார். இப்பிரிவின் பணிகளை நன்கு கண்காணித்திட 1999 ஜனவரியில் இருந்து, ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு, தனியாக ஒரு காவல் துறைத் தலைவர் செயல்பட்டு வருகிறார். சந்தனக் கடத்தல்காரன் வீரப்பன் மற்றும் அவனது குழுவினரைப் பிடித்திட, தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.2.17. போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு

மாநில போதைப் பொருட்கள் கடத்தல் தடுப்புப் பிரிவு, ஒரு காவல் கண்காணிப்பாளர் தலைமையில். ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஒரு துணைக் காவல் கண்காணிப்பாளர், 13 காவல் ஆய்வாளர்கள், 14 காவல் உதவி ஆய்வாளர்கள். மற்றும் இதர பதவிகளைச் சேர்ந்த 91 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. செனனை, மதுரை, திருச்சி, சேலம் விழுப்புரம், திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி, வேலூர், கோவை, இராமநாதபுரம், நாகப்பட்டினம் ஆகிய 12 இடங்களில் போதைப் பொருட்கள் கடத்தல் தடுப்புப் பிரிவுகள் செயல்படுகின்றன. இப்பன்னிரண்டு பிரிவுகளும் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

[1999 மே 7

**2.2.18. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்**

2.2.18.1 காவல் துறை, சிறைத் துறை, தீயணைப்புத் துறை ஆகியவற்றிற்குத் தேவையான சிறந்த பணியாளர்களை எவ்விதமான புகாருக்குமிடமின்றி தேர்வு செய்வதற்காக, தமிழக அரசால், 1991 ஆம் ஆண்டு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் அமைக்கப்பட்டது. தற்பொழுது இக்குழுமத்தில், அங்கம் வகிப்போர் விவரம் பின்வருமாறு:

(அ) காவல் துறை இயக்குநர் நிலையில் தலைவர்.

(ஆ) கூடுதல காவல் துறை இயக்குநர் நிலையில் உறுப்பினர்.

(இ) காவல் துறை துணைத்தலைவர் நிலையில் உறுப்பினர் செயலர்.

**2.2.18.2 பணிகள்**

காவல் துறை தீயணைப்புத் துறை, சிறைத் துறை போன்றவற்றில் பின்வரும் பதவிகட்கு பணியாளர்களை நியமனம் செய்யும் பொறுப்பு இக்குழுமத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| (அ) காவல் துறை | உதவி ஆய்வாளர் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர்கள் (ஆண் & பெண்) |
| (ஆ) தீயணைப்புத் துறை | தீயணைப்பாளர் |
| (இ) சிறைத் துறை | இரண்டாம் நிலை வார்டர்கள் (ஆண் & பெண்) |

**2.2.19. பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு**

பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு காவல் துறைக் கூடுதல் இயக்குநர் தலைமையின்கீழ் இயங்குகிறது. அவருக்கு உதவியாக காவல் துறைத் தலைவர் ஒருவர் பணியாற்றுகிறார். இப்பிரிவு காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் தலைமையின்கீழ் உள்ள சிலைத்திருட்டுத் தடுப்புப் பிரிவு, "வணிகக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு" ஆகிய இரு பிரிவுகளையும் உள்ளடக்கியதாகும். சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவுடன் "காவல் ஆய்வு மையம்" இணைக்கப்பட்டுள்ளது.



1999 மே 7]

**2.2.20. சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவு**

மாவட்டக் காவல் துறையினர் பதிவு செய்துள்ள சிலை திருட்டு வழக்குகளின் புலன் விசாரணைக்கு உதவியாக இப்பிரிவு செயல்படுகிறது. மேலும் புராதனச் சிலைகளை விற்கும் மொத்த வியாபாரிகள்/இடைநிலைத் தரகர்கள், முகவர்கள், கடத்தல்காரர்கள் ஆகியோரின் நடவடிக்கைகளைக் கண்காணித்து தகவல் சேகரிக்கும் பணியையும் இப்பிரிவு செய்கிறது. கோவில் திருட்டுக்களைத் தடுத்தல், கண்டுபிடித்தல், புலன் விசாரணை செய்தல் போன்றவை மாவட்டக் காவல் துறையினரால் செய்யப்படுகின்றன. ஐந்து இலட்ச ரூபாய் மதிப்பிற்கு மேலான வழக்குகளும், முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பரபரப்பான வழக்குகளும் காவல் துறை இயக்குநரின் அறிவுரைப்படி சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவால் கையாளப்படுகின்றன.

**2.2.21. வணிகக் குற்றங்கள் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு**

கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் அனுப்பப்படுகின்ற வழக்குகளின் புலன்விசாரணையை இப்பிரிவு மேற்கொள்கிறது. ரூ. 1 இலட்சம் மற்றும் அதற்கு மேலான தொகை மதிப்புள்ள வழக்குகளின் புலன் விசாரணை இப்பிரிவினால் கையாளப்படுகிறது. 5 காவல் துணைக் கண்காணிப்பாளர்களுடன் பல்வேறு மாவட்டங்களில் 26 பிரிவுகள் செயல்படுகின்றன. காவல் துறைக் கண்காணிப்பாளர் ஒருவரின் கீழ், 27 ஆய்வாளர்களும் 129 இதர காவல் துறைப் பணியாளர்களும் பணியாற்றுகின்றனர்.

**2.2.22. தமிழ்நாடு சிறப்புக் காவல் பிரிவு**

தமிழ்நாடு சிறப்புக் காவல் பிரிவு அதிகாரிகளும் இதரப் பணியாளர்களும காவல் துறை காவலர்களும் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் பணிக்காக அனுப்பப்படுகின்றனர். சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுதல், வகுப்புக் கலவரங்களைத் தடுத்தல், போராளிகளின் நடவடிக்கைகளைக கட்டுப்படுத்துதல் போன்ற உள்ளூர் காவல் பணிகளுக்கு இவர்கள் உதவியாக உள்ளனர். இது தவிர, கடலோரப் பாதுகாப்புப் பணிக்காகவும், மிக மிக முக்கியமானவர்களின் வருகையின்போது பாதுகாப்புப் பணிக்காகவும் இவர்களின் பணி பயன்படுத்தப்படுகிறது. இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக இருக்கும் முகாம்களிலும் அவர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாடு சிறப்புக் காவல்படை அணியின் ஒரு பிரிவானது,

1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் புது டெல்லியில் பணி செய்து வருகின்றது.

### 2.2.23. நுண்ணறிவுப் பிரிவு

காவல் துறைத் தலைவர் ஒருவரின் தலைமையில் இயங்கி வரும் நுண்ணறிவுப் பிரிவில் தனிப்பிரிவு, ஒற்றாய்வுப் பிரிவு, சிறப்புப் பிரிவு, 'க்யூ' பிரிவு, பாதுகாப்புப் பிரிவு ஆகியன அடங்கும். முன் கூட்டியே தகவல்களைச் சேகரிப்பது, அவற்றை தக்க நடவடிக்கைக்காக உரிய அதிகாரிகளுக்கு அனுப்புவது உள்ளிட்ட பணிகளை இப்பிரிவு கவனித்து வருகிறது. மத சம்பந்தப்பட்ட அடிப்படை வாதம் குறித்த தகவல்களைச் சேகரிக்க 1998 ஆம் ஆண்டு தனியாக சிறப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 2.2.24. தனிப்பிரிவு ஒற்றாய்வுத் துறை

சாதி/மதப் பூசல்கள், பொதுச் சட்டம், ஒழுங்குப் பராமரிப்பு குறித்த தகவல்கள் ஆகியவற்றை இப்பிரிவு சேகரித்து மேல் நடவடிக்கைக்காக காவல் துறை அதிகாரிகளுக்கு அனுப்பி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு காவல் துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் இப்பிரிவின் கிளைகள் இயங்கி வருகின்றன. சட்டம் ஒழுங்கு தொடர்பான நிலைமையை நன்கு கண்காணித்து, பிரச்சினைகள் எழ வாய்ப்புள்ள தருணங்களில் உரிய காவல் கண்காணிப்பாளர்களுக்கும், காவல் ஆணையாளர்களுக்கும் தகவல்கள் முன்கூட்டியே அனுப்பப்படுகின்றன.

### 2.2.25. பாதுகாப்புப் பிரிவு ஒற்றாய்வுத் துறை

முக்கிய நபர்களின் வருகையின்போது பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிப்பதோடு அரசாங்கக் கட்டடங்களுக்கு இப்பிரிவு பாதுகாப்பு அளித்து வருகிறது. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் உள்ள காவலர்கள் அடங்கிய கமாண்டோ பிரிவு ஒன்று பாதுகாப்புப் பிரிவுடன் இணைந்து செயல்பட்டு மிகப் பெரிய அளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் நபர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருகிறது. தனிப்பிரிவு பயிற்சிப் பள்ளியில் தகவல் சேகரிப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த 13 வகுப்புகள் நடத்தப்பட்டு அதில் 650 காவலர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்துள்ளனர்.



### 2.3. காவல் துறையின் பணிகள் குறித்த புள்ளி விவரங்கள்

புது டில்லியில் உள்ள தேசியக் குற்ற ஆவணக் காப்பகக்கூடம் அளித்துள்ள அகில இந்திய அளவிலான பின்வரும் புள்ளி விவரங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழ்நாடு காவல் துறையின் சிறப்பானச் செயல்பாட்டை உணரலாம்:

| வ.எண் | | தமிழ்நாடு | அகில இந்தியா |
|---|---|---|---|
| 1. | ஒவ்வொரு 100 சதுர கிலோ மீட்டருக்கான காவலர்களின் எண்ணிக்கை | 57.4 | 37.7 |
| 2. | ஒரு இலட்சம் மக்கட் தொகைக்கான காவலர்களின் எண்ணிக்கை | 127 | 130 |
| 3. | ஒரு காவலருக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகும் செலவு | 68,059 | 61,883 |
| 4. | குற்றப்பத்திரிகையின் விகிதாச்சாரம் | 90.6 | 76.9 |
| 5. | தண்டனையின் விகிதாசசாரம் | 63.6 | 37.8 |

Source— ("Crime in India - 1996" by N.C.R.B)

[1999 மே 7

## 3. காவல் துறையை நவீனப்படுத்துதல்

3.1. காவல் துறைப் பணியாளர்களின் திறனை மேம்படுத்துதல் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் இரு முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டத்தின்கீழ் தகவல் தொடர்பு, போக்குவரத்து, புலனாய்வுக்குத் தேவையான அறிவியல் சார்ந்த கருவிகள், முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல், போக்குவரத்து மேம்பாடு, கணினி மயமாக்குதல் மற்றும் காவல் துறையினருக்குப் பயிற்சி ஆகியவை முக்கியமானப் பணிகளாகும்.

3.2. காவல் துறையை நவீனப்படுத்துதற்குப் பின்வருமாறு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது:

| | |
|---|---|
| மைய அரசிடமிருந்து 50 சதவீத உதவித் தொகை மற்றும் மாநில அரசின் இணை நிதி ஒதுக்கீடு ஆகியவை இரண்டு தவணைகளில் ரூ. 1.96 கோடி + ரூ. 1.96 கோடி) | ரூ. 3.92 கோடி |
| மாநில நிதியிலிருந்து மட்டும் தனியே ஒதுக்கப்பட்ட தொகை | ரூ. 10 கோடி |

3.3. 1998-99 ஆம் ஆண்டில் காவல் துறையை நவீனப்படுத்த முற்றிலும் மாநில அரசு நிதியிலிருந்து ரூ. 10 கோடி வழங்கப்பட்டது. இத்தொகை காவல் படை, எல்லா இடங்களுக்கும் விரைவாகச் சென்று வர புதிய வாகனங்கள் வாங்குவதற்கும், தகவல் தொடர்பு வசதிகளை அதிகரிக்கவும் மற்றும் போக்குவரத்தை மேம்படுத்த சிக்னல் விளக்குகள் வாங்கவும் பின்வருமாறு செலவிடப்பட்டுள்ளது:

### 3.3.1. வாகனங்கள்:

கோயம்புத்தூர் நகருக்கு சுற்றுக் காவல் பணி புரிய 30 ஜீப்புகள் தென் மாவட்டங்களுக்கு சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க 40 ஜீப்புகள், விரைவாகச் சென்று விவரங்கள் சேகரிக்க குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு 132 மோட்டார் சைக்கிள்கள், கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 10 டெம்போ டிராவலர் வேன்கள் வாங்குவதற்கும் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க தென் மாவட்டங்களுக்கு 14 டெம்போ டிராவலர் வேன்கள் வாங்குவதற்கும் ஆணைகள் வெளியிடப்பட்டன. தென் மாவட்டங்களுக்கு 20 சிறு பேருந்துகளும் வழங்கப்பட உள்ளன.



1999 மே 7]

### 3.3.2. தகவல் தொடர்பு வசதிகளை வலுப்படுத்துதல்:

மாநிலத்தில் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்த தென் மாவட்டங்களுக்கு 144 வி.எச்.எப். ஹை பாண்ட் செட்டுகளும், தஞ்சாவூர் சரகத்திற்கு 500 வி.எச்.எப் செட்டுகளும், கோயம்புத்தூர் நகரத்திற்கு 32 வி.எச்.எப். செட்டுகளும் மற்றும் எல்லா மாவட்டங்களுக்கும் சேர்த்து 1,500 வாக்கி டாக்கி செட்டுகளும் வழங்கப்படும். மாநிலக் காவல் தலைமையகத்திற்குத் தொலைபேசி இணைப்பகம் ஏற்படுத்த ரூ. 20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 3.3.3. போக்குவரத்தை மேம்படுத்துதல்:

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி நகரங்களுக்கு போக்குவரத்தை மேம்படுத்த ரூபாய் ஒரு கோடி செலவில் போக்குவரத்து விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

3.4. 1998-99 ஆம் ஆண்டு காவல் துறையை நவீனப்படுத்த மைய அரசு ரூ. 1.96 கோடி உதவி மற்றும் கடனாக வழங்கியுள்ளது. மாநில அரசும் அதற்குச் சமமான தொகையை அளித்து ரூ. 3.93 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்தொகை பல்வேறு காவல் பிரிவுகளுக்கு வாகனங்கள் வாங்கவும், தடய அறிவியல் துறை மற்றும் தடய அறிவியல் சோதனைக்கூடங்களுக்கு கருவிகள் வாங்கவும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், காவல் துறை இயக்குநர் அலுவலகம் மற்றும் மற்ற மாவட்டக் காவல் அலுவலகங்களுக்குக் கணினிகள் வாங்கவும், அலுவலகச் சாதனங்கள் உள்பட இதர பிற இனங்கள் வாங்கவும் செலவிடப்படுகின்றது.

3.5. காவல் துறையை நவீனப்படுத்த சிறப்பு நிதி உதவியாக கூடுதலாக ஒவ்வொரு ஆண்டும் ரூ. 10 கோடி நிதியுதவி அளிக்க வேண்டும் என மாநில அரசு மைய அரசைக் கோரியிருந்தது. ஆனால மைய அரசு ரூ. 1.25 கோடி மட்டுமே வழங்கியுள்ளது.

## 4. சட்டம் மற்றும் ஒழுங்கு

4.1. மாநிலத்தில் தொடர்ந்து அமைதியும் மத நல்லிணக்கமும் நிலவிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. அரசு எடுத்த தீவிரமான மற்றும் உறுதியான நடவடிக்கைகள் பயனளித்துள்ளன. மக்களின் ஒத்துழைப்பாலும்,

அரசின் சீரிய நடவடிக்கைகளின் விளைவாகவும் மாநிலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு மிகவும் நன்முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**4.2. சாதிக் கலவரம்:**

**4.2.1.** நீண்டகாலமாக தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் நிலவி வந்த சாதி மோதல்கள் அரசால் மேற்கொள்ளப்பட்ட தீவிர நடவடிக்கைகளினால் தற்போது மிகவும் கட்டுக்குள் உள்ளது. 1998 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, இராமநாதபுரம் மாவட்டத்தில் அக்டோபர் முதல் வாரத்தில் ஏற்பட்ட கலவரத்தைத் தவிர மாநிலத்தில் வேறு எங்கும் குறிப்பிடத்தக்க சாதி மோதல்கள் நிகழவில்லை. சிவகங்கை மாவட்டம், தேவக்கோட்டைக்கு அருகில் கண்டதேவி என்னுமிடத்தில் அமைந்துள்ள சுவர்ணமூர்த்தீஸ்வரர் கோவில் திருவிழா 29-6-1998 முதல் 8-7-1998 வரை நடைபெற இருந்தது. இக்கோவில் திருவிழாவில் தேர் வடம் இழுப்பதில் இரு சமுதாயத்தினரிடையே ஏற்பட்ட பிரச்சினை மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறை எடுத்த தீவிர நடவடிக்கையினால் சாதிக் கலவரமாக உருவாகாமல் தடுக்கப்பட்டது. பின்னர், இராமநாதபுரத்தில் நடத்தப்பட்ட ஊர்வலத்தை அடுத்து இரு வகுப்பினரிடையே ஏற்பட்ட மோதல்களில் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன. காவல் துறை துப்பாக்கிச் சூடுகள் நடத்தி நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர நேர்ந்தது. துப்பாக்கிச் சூடுகளில் 5 பேரும், சாதிக் கலவர நிகழ்வுகளில் 6 பேரும் இறந்தனர். அரசு எடுத்த உடனடி நடவடிக்கைகளினால், நிலைமை உடனே கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. நிலைமையைக் கண்காணிக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரண உதவி வழங்கவும், நான்கு அமைச்சர்கள் உடனடியாக இராமநாதபுரத்திற்குச் சென்று நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர். நானும் 14-10-1998 அன்று இராமநாதபுரத்திற்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து, நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டேன். இவ்வாறு எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகளினால், பிற மாவட்டங்களுக்கு இக்கலவரம் பரவாமல தடுக்கப்பட்டது. இக்கலவரத்திற்குப் பின் நடைபெற்ற தேவர் ஜெயந்தி விழா, காவல் துறையினரும் மாவட்ட நிர்வாகமும் எடுத்த உறுதியான நடவடிக்கைகளினால் எவ்வித அசம்பாவிதமுமின்றி மிகவும் அமைதியாக நடைபெற்றது.

**4.2.2.** இக்கலவரத்தில் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு தற்போது நடைமுறையில் உள்ள நிவாரண வரம்பின்படி ரூ. 2,00,000/- வீதமும்,





கொடுங்காயமுற்றோருக்கு ரூ. 10,000/- வீதமும், சிறு காயமுற்றோருக்கு ரூ. 5,000/- வீதமும் அரசால் நிதியுதவி வழங்கப்பட்டது. வீடுகள் மற்றும் கடைகள் சேதமடைந்தோர்க்கு தற்போதுள்ள நிவாரண வரம்பிற்கு அதிகமாகச் சேதம் அடைந்த கடை அல்லது வீடு ஒன்றிற்கு ரூ. 25,000/- அல்லது உண்மையான சேத மதிப்பு இதில் எது குறைவோ அதை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இதன்படி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியருக்கு ரூ. 1.65 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**4.2.3.** இராமநாதபுரத்தில் 1998 அக்டோபர் முதல் வாரத்தில் ஏற்பட்ட சாதிக் கலவரங்கள் சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் குற்றப் புலனாய்வுத் துறையினரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. தீவிர விசாரணைக்குப் பின் இதுவரையில் 504 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 28 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**4.2.4.** அவ்வப்போது ஏற்பட்ட சாதி அடிப்படையிலான கொலைகளின் எண்ணிக்கை அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் மிகவும் குறைந்துள்ளன என்பது பின்வரும் பட்டியலிலிருந்து தெரிய வருகிறது:-

வருட வாரியான பட்டியல்

| வருடம் | இறந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1995 | 68 |
| 1996 | 50 |
| 1997 | 93 |
| 1998 | 30 |

**4.3. மதக் கலவரம்:**

**4.3.1.** அரசு எடுத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் தீவிரக் கண்காணிப்பினால், 1998-99 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க மதக் கலவரங்கள் ஏதும் ஏற்படவில்லை. மதவெறித் தீவிரவாதம் தொடர்பாக இரண்டு கொலைகள் நிகழ்ந்தன. வேறு எந்த நிகழ்வுகளும் இல்லை. இந்தக் கொலைகளிலும் குற்றவாளிகள் உடன் கைது செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

[1999 மே 7

4.3.2. 14-2-1998 அன்று கோவையில் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தவுடன், புலன் விசாரணையை மேற்கொள்ள குற்றப் புலனாய்வுத் துறையின் காவல் துறைத் தலைவர் தலைமையிலான ஒரு சிறப்புப் புலனாய்வுக் குழுவினை அமைக்க அரசு ஆணையிட்டது. இந்தச் சிறப்புப் புலனாய்வுக் குழு உடனடியாக செயலில் இறங்கி, எல்லா விவரங்களையும் தீவிரமாக ஆராய்ந்து புலன் விசாரணையில் ஈடுபட்டது. இக்குழுவின் இடையறாத முயற்சியினால் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட 200 குற்றவாளிகளில் 178 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். 8 பேர் ஏற்கெனவே இறந்துவிட்டனர். உயிரிழந்த 8 குற்றவாளிகளையும் சேர்த்து, 166 குற்றவாளிகள் மீது கோயம்புத்தூர் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4.3.3. இந்த வழக்குகளின் விசாரணையைத் துரிதப்படுத்த சென்னை உயர்நீதிமன்றத்தின் அனுமதியுடன் சென்னையிலும், கோயம்புத்தூரிலும் தனி நீதிமன்றங்களை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. இந்தத் தனி நீதிமன்றங்கள் விரைவில் செயல்படத் தொடங்கும். இதுபோன்று தீவிரவாதம் தொடர்பான வழக்குகளில் தீவிரவாதிகளை இவ்வளவு விரைந்து கைது செய்து குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தது அனைவராலும் பாராட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

4.3.4. மாநிலத்தில் அடிப்படைவாதிகளின் சதித் திட்டங்கள் நிறைவேறாவண்ணம் அரசு தொடர்ந்து தீவிரமாகக் கண்காணித்து, மத நல்லிணக்கத்தைப் பேணிக் காத்து வருகிறது. பல்வேறு மக்களிடையே அமைதியையும் ஒற்றுமையையும், சமுதாய நல்லிணக்கத்தையும் பேணிக் காக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க 22-10-1998 மற்றும் 26-10-1998 ஆகிய நாட்களில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் சென்னையில் அரசால் நடத்தப்பட்டது. இந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் அரசு பல தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1. கிராமந்தோறும் கிராமப் பஞ்சாயத்துக் தலைவர்களைத் தலைவர்களாகக் கொண்ட அமைதிக் குழுக்கள் அமைக்க 9-11-1998 அன்று அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த அமைதிக குழுக்கள் மாவட்ட ஆட்சியர்களால் அமைக்கப்பட்டுவிட்டன. இவை தீண்டாமையை வேரோடு



1999 மே 7]

களைய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும். அமைதிக் குழுக்களின் நடவடிக்கைகள் அரசால் அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு, அவற்றின் செயல்பாடுகளில் மேலும் முன்னேற்றம் ஏற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2. வன்முறையைத் தூண்டும்படியான செயல்பாடுகளுக்குக் காரணமாகும் சாதிச் சங்கங்கள், சாதி அமைப்புகள், மற்றும் அவற்றின் தலைவர்கள்மீது சட்டப்படி அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், சாதி, மத உணர்வுகளைத் தூண்டக்கூடிய ஊர்வலங்களுக்குத் தடை விதிக்க வேண்டும் என்றும், சாதி, மத அடிப்படையில் வன்முறையைத் தூண்டும் சுவரொட்டிகள் ஒட்டுவதையும், சுவரில் எழுதுவதையும் அனைவரும் முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டுமென்றும், அத்தகையச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுககப்பட வேண்டுமென்றும், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

3. தீண்டாமையை ஒழிப்பதற்காகத் தீவிர பிரச்சாரம் செய்யும் பொருட்டு முதற்கட்டமாக அரசு ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

4. அனைத்துக் கட்சித் தலைவர் கூட்டத்தில், சமத்துவ சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்திட அரசாங்கத்தில் தனியாக சமுதாய சீர்திருத்தத் துறை ஒன்றை உருவாக்கிட வேண்டுமென கருத்து தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், இத்துறையை அமைப்பது குறித்து பரிசீலிக்க சமூகவியல் வல்லுநர்கள் கொண்ட ஆய்வுக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

4.3.5. 14-11-1998 அன்று மாவட்ட ஆட்சியர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, மாவட்ட ஆட்சியர்கள் தங்கள் மாவட்டங்களில் இன்னமும் தேநீர் கடைகளில் இரு குவளைகளைப் பயன்படுத்தும் பழக்கம் இருக்கின்றதா என்பதைக் கண்டறிந்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டுமென்றும், தீண்டாமையின் சின்னமான இந்த இரு குவளை முறையை அறவே ஒழிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அதன்படி மாவட்ட ஆட்சியர்களால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை அரசு அவ்வப்போது ஆய்வு செய்து வருகிறது.

**4.3.6.** சாதி/மதக் கலவரங்கள் நிகழாமல் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கைகள்:

சாதி/மதக் கலவரங்கள் ஏற்படாவண்ணம் தடுக்க அரசு எடுத்த நீண்ட கால மற்றும் குறுகிய கால நடவடிக்கைகளின் சுருக்கம பின்வருமாறு:

(1) தலைவர்களின் பெயரால் இயங்கி வந்த மாவட்டங்கள் மற்றும் அரசுப் பேருந்துக் கழகங்களின் பெயர் மாற்றம்.

(2) அகில இந்தியாவிற்கே முன்னோடியாக தமிழ்நாட்டில் பல இடங்களில் சமத்துவபுரங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சமத்துவபுரம் திட்டத்தை விரிவாகவும், தீவிரமாகவும் செயல்படுத்த 1999-2000 ஆம் ஆண்டில் ரூ 17.5 கோடி ஒதுக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. இதுவரை சமத்துவபுரப் பணிகளுக்காக மொத்தம் ரூ. 35 கோடி அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

(3) நீதிபதி திரு. எஸ். மோகன் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு நடவடிக்கை.

(4) அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தப்பட்டு அதில் எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்தியது.

(5) காவல் துறையின் சீரிய கண்காணிப்பு

**4.3.7.** சாதிக் கலவரங்கள் சம்பந்தப்பட்ட குற்றங்களைத் தற்போது சம்பந்தப்பட்ட மாவட்ட நீதிமன்றங்கள் விசாரணை செய்து வருகின்றன. இதனால் இந்த வழக்குகளை விசாரிப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றன என்பதைக் கருத்திற்கொண்டு, அரசு, சென்னை உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து, சாதிக் கலவரங்களில் தொடரப்படும் வழக்குகளை விசாரணை செய்வதற்காக மதுரையில் தனி நீதிமன்றம ஒன்றை நிறுவ ஆணையிட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றம் இதற்கான நீதிபதியை நியமித்தவுடன் இந்த நீதிமன்றம் செயல்படத் தொடங்கும். இந்த நீதிமன்றம் சாதிக் கலவரங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரித்து, சாதிக் கலவரக் குற்றங்கள் புரிபவர்களுக்கு விரைவில் தண்டனை அளிக்கும். இதன் விளைவாக சாதிக் கலவரங்கள் குறைய வாய்ப்பு ஏற்படும்.





**4.3.8.** சாதி மற்றும் மதக் கலவரங்கள் நிகழாவண்ணம் தடுத்திட அரசு எடுத்த துரிதமான மற்றும் உறுதியான நடவடிக்கைகள் பொது மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டன. கடந்த பல ஆண்டுகளில் மத மற்றும் சாதிப் பிரச்சனைகள் தோன்றக் காரணமாகவும், பிரச்சினைக்குரிய நாட்களான பாபர் மசூதி நினைவு தினம், விநாயக சதுர்த்தி ஊர்வலங்கள், தேவர் ஜெயந்தி குரு பூசை ஆகியவை, அரசின் உறுதியான நடவடிக்கைகளின் காரணமாக, மக்களின் ஒத்துழைப்புடன் எவ்வித அசம்பாவிதமுமின்றி அமைதியாக நடந்தேறின என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**4.4. சென்னையில் நடை பெற்ற கிரிக்கெட் டெஸ்ட் போட்டி**

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே நீண்ட இடைவெளிக்குப்பின் சென்னையில் முதல் கிரிக்கெட் டெஸ்ட் போட்டி 28-1-1999 முதல் 31-1-1999 வரை நடைபெற்றது. இந்த முதல் போட்டி டெல்லியில நடைபெறுவதாக இருந்தது. பாதுகாப்பான இடம் எனக் கருதி சென்னையில் இது நடத்தப்பட்டது. இப்போட்டியில் இந்தியா தோல்வியுற்ற போதிலும், அரசும், காவல்துறையினரும் எடுத்த தீவிரப் பாதுகாப்பு நடவடிக்கைகளால், ஒரு சிறு அசம்பாவிதமும் இன்றி போட்டி அமைதியாக நடந்தேறியது. அகில இந்திய அளவில் பொது மக்களாலும், மத்திய அரசாலும் பாராட்டும்வண்ணம் இப்போட்டிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

**4.5. காவல் துறையினரின் காவலில் இருந்தபோது ஏற்பட்ட மரணங்கள்.**

காவல் துறையினரின் காவலில் இருக்கும்போது ஏற்படும் மரணங்கள் குறித்து அரசு அவ்வப்போது ஆய்வு செய்து தக்க அறிவுரைகளை காவல் துறையினருக்கு வழங்கி வந்ததன் பயனாக, கடந்த ஆண்டுகளை ஒப்பிடும்போது, 1998 ஆம் ஆண்டில் காவல் துறையினரின் காவலில் இருக்கும்போது ஏற்படும் மரணங்கள் வெகுவாகக் குறைந்துள்ளன. அதன் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

| 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 மார்ச் 31 வரை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | 16 | 17 | 14 | 19 | 13 | 16 | 8 | 2 |

[1999 மே 7

இவற்றை மேலும் குறைக்க காவல் துறைக்கு அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது. காவல் நிலைய மரணங்களே இல்லாமல் செய்ய வேண்டும் என்பதுதான் அரசின் குறிக்கோள்.

### 4.6. காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு

ஊர்வலங்கள், பேரணிகள் மற்றும் போராட்டங்கள் போன்றவற்றை அரசியல் கட்சிகள், சாதிச் சங்கங்கள் போன்றவை நடத்தும்போது வன்முறைகள் ஏற்படும் பட்சத்தில் அவற்றைக் கையாளுகையில் நடைமுறையிலுள்ள அனைத்து வழிமுறைகளும் பயன்தராதபோது, நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட வேண்டிய சூழ்நிலை சில சந்தர்ப்பங்களில் ஏற்படுகிறது. 1998-ல் துப்பாக்கிப் பிரயோக நிகழ்வுகள் 48 ஏற்பட்டுள்ளன. இது குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:



1999 மே 7]

**1991 ஆம் ஆண்டு முதல் 1999 (பிப்ரவரி 10) வரை தமிழ்நாட்டில் நடந்த துப்பாக்கிச் சூடுகளின் விவரங்கள்**

| வ. எண் | விவரங்கள் | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 பிப். 10 வரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டின் எண்ணிக்கை | 33 | 67 | 63 | 23 | 32 | 24 | 63 | 48 | 2 |
| 2. | கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் போது | 28 | 40 | 21 | 17 | 26 | 17 | 50 | 22 | 1 |
| 3. | கூட்டுக்கொள்ளையைத் தடுக்கும்போது | - | 1 | - | - | - | - | - | 2 | - |
| 4. | மற்ற குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் | 5 | 26 | 42 | 6 | 6 | 7 | 13 | 24 | 1 |
| 5. | உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை | 18 | 14 | 44 | 5 | 10 | 15 | 28 | 10 | 3 |
| | (அ) காவலர்கள் | - | - | 2 | - | 1 | - | - | - | - |
| | (ஆ) பொதுமக்கள் | 18 | 14 | 42 | 5 | 9 | 15 | 28 | 10 | 3 |
| 6. | காயமடைந்தவர்களின் எண்ணிக்கை | 177 | 258 | 115 | 145 | 240 | 116 | 307 | 116 | 13 |
| | (அ) காவலர்கள் | 115 | 163 | 98 | 119 | 185 | 97 | 245 | 68 | 10 |
| | (ஆ) பொதுமக்கள் | 62 | 95 | 17 | 26 | 55 | 19 | 62 | 48 | 3 |

[1999 மே 7

## 4.7. இலங்கைப் போராளிகள்

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் வகையில், சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம், 1967-ன்கீழ் இந்த அமைப்பைத் தடை செய்யுமாறு மாநில அரசு விடுத்த கோரிக்கையை ஏற்று மத்திய அரசு பிறப்பித்த ஆணையை 1998 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் தேதியிலிருந்து மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது. மாநில அரசு எடுத்த உறுதியான நடவடிக்கைகளின் பயனாக போராளிகளின் செயல்பாடுகள் வெகுவாகக் குறைந்துள்ளன. பொதுவாக, போராளிகள் தங்களுக்குத் தேவையான பொருட்களைக் கடத்தும் பணியில் ஈடுபடுகின்றனர். கடற்படை, கடலோரக் காவல்படை மற்றும் மாநில காவல் துறை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த உறுதியான நடவடிக்கைகளின் பயனாக போராளிகளுக்கு ஆதரவான கடத்தல் நடவடிக்கைகள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மாநில அரசு இதுவரை 14 கடத்தல்காரர்களைத் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்து காவலில் வைத்துள்ளது. மாநில அரசு தொடர்ந்து தீவிர கண்காணிப்பை மேற்கொண்டு வருகிறது.

*4.8.* இந்த அரசு, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும், சமுதாய நல்லிணக்கத்தைப் பேணிக் காக்கவும், பல நீண்டகால மற்றும் குறுகியகால நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்நடவடிக்கைகளின் பயனாக, சட்டம் ஒழுங்கு மாநிலத்தில் மிகவும் நன்முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் நல்கிவரும் ஆதரவோடு சாதி, சமய மோதல்களை வேரோடு அகற்றி மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க அரசு உறுதி பூண்டுள்ளது.



1999 மே 7]

## 5. குற்றச் சம்பவங்கள் குறித்த நிலை

*5.1.1.* குற்றங்கள் அதிகமாவதைக் கண்காணிக்க காவல் துறையால் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலுள்ள முன்தடுப்பு நடவடிக்கைப் பிரிவுகள், மாநகரக் காவல் சட்டம், குண்டர் தடுப்புச் சட்டம், கள்ளச் சாராயத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் அடையாளம் தெரிந்த குற்றவாளிகளின் நடவடிக்கைகள் கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்பட்டுள்ளன. குற்றங்கள் அதிகமாக நடக்கும் பகுதிகளில், குறிப்பாக அமாவாசை மற்றும் நள்ளிரவு நேரங்களில், சுற்றுக் காவல் பணியும், ரோந்துப் பணியும் தீவிரப்படுத்தப்படுகின்றன. குற்றவாளிகளின் நடமாட்டத்தைத் தடுப்பதற்காகச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

### 5.1.2. 1996, 1997, 1998 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நடைபெற்ற சொத்து தொடர்பான குற்றங்களின் விவரப் பட்டியல்

| | 1996 | | 1997 | | 1998 | |
|---|---|---|---|---|---|---|
| குற்றத்தின் தன்மை | பதிவு செய்யப் பட்டவை | கண்டு பிடிக்கப் பட்டவை | பதிவு செய்யப் பட்டவை | கண்டு பிடிக்கப் பட்டவை | பதிவு செய்யப் பட்டவை | கண்டு பிடிக்கப் பட்டவை |
| ஆதாயக் கொலை | 89 | 49 | 99 | 48 | 77 | 56 |
| கூட்டுக்கொள்ளை | 171 | 107 | 197 | 101 | 181 | 118 |
| கொள்ளை | 600 | 407 | 723 | 433 | 692 | 506 |
| கன்னக் களவு | 6362 | 3490 | 6615 | 3474 | 6206 | 3102 |
| பெரிய திருட்டுகள் | 17171 | 13746 | 18511 | 15420 | 17153 | 12745 |
| சிறிய திருட்டுகள் | 1051 | 1050 | 1023 | 1014 | 743 | 739 |
| கால்நடை திருட்டுகள் | 444 | 400 | 450 | 431 | 446 | 402 |
| மொத்தம் | 25888 | 19249 | 27618 | 20921 | 25498 | 17668 |
| கண்டுபிடிப்பின் விழுக்காடு | 74.3% | | 75.8% | | 73.0%* | |

*வரும் காலத்தில் இது மேலும் கூடும்

| | 1997 | 1998 |
|---|---|---|
| | (மதிப்பு கோடியில்) | |
| களவு போன சொத்துகள் | ரூ. 38.0 | ரூ. 38.5 |
| மீட்கப்பட்ட சொத்துகள் | ரூ. 23.2 | ரூ. 25.2 |
| மீட்கப்பட்ட சொத்துகளின் விழுக்காடு | 60.5% | 65.4% |

5.1.3. தமிழகக் காவல் துறையினர் தமது இயல்பான சட்டம் ஒழுங்கு மற்றும் அமைதியை நிலைநாட்டும் பணியில் தொடர்ந்து தீவிரமாகச் செயல்பட்டதுடன் முந்தைய இரு ஆண்டுகளைக் காட்டிலும் 1998-ல் சொத்துக் குற்றங்கள் குறைந்திடும் வகையிலும் செயல்பட்டுள்ளனர். மேலும் இதனால் களவுச் சொத்து மீட்புச் சதவீதம் நடப்பு ஆண்டில் கணிசமாக உயர்ந்துள்ளது

5.1.4. 1998 ஆம் ஆண்டில் நடைபெற்ற சொத்துக் குற்றங்கள் 25,498-ல் 17,668 குற்றங்களில துப்பு துலக்கப்பட்டுள்ளன. 1997-ல நடைபெற்ற சொத்துக் குற்றங்கள் 27,618-ல் கண்டுபிடிக்கப்பட்டுள்ள குற்றங்களின் எண்ணிக்கை 20,921 ஆகும். இதனைப் பார்க்கும்பொழுது கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு குற்றங்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் குறைந்து காணப்படுகிறது. குற்றக் கண்டுபிடிப்பு விழுக்காடு 1998-ல் 73-ம் 1997-ல் 75.8-ம் ஆகும். 1998-ல் களவு போன சொத்துகளின் மதிப்பீடு ரூ. 38.5 கோடியாகும். சென்ற ஆண்டில் இது ரூ. 38 கோடியாகும். 1998-ல் களவுச் சொத்து மீட்பு விழுக்காடு 65.4. இது 1997-ல் 60.5 விழுக்காடு மட்டுமே.

5.1.5. உரிய இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைந்துள்ளதாலும், இரவு நேர ரோந்துப் பணிகளைத் திட்டமிட்டு மேற்கொண்டதாலும், இரவு நேர திடீர் சோதனைகளாலும், கடுப்புக் காவல் சட்டங்களை உரிய முறையில் பயன்படுத்தி ஏற்கெனவே இனங்காணப்பட்டுள்ள குற்றவாளிகளைத் தொடர்ந்து கண்காணித்ததாலும் நடப்பு ஆண்டில் குற்றங்கள் வெகுவாகக் குறைந்துள்ளன.

5.1.6. நடப்பு ஆண்டில் இரண்டு ஆதாயக் கொலை, 20 கொள்ளை, 15 கூட்டுக் கொள்ளை, 18 பெருந்திருட்டுகள், 30 சிறிய திருட்டுகள் தொடர்பான குற்றவாளிகளைப் பிடித்து 24 மணி நேரத்தில் களவுச்



சொத்துகளை மீட்டுள்ளது காவல் துறையின் குறிப்பிடத்தக்க செயலாகும்.

## 5.2. சிறப்புப் புலனாய்வுப் பிரிவு

5.2.1. கோவையில் 14-2-1998 அன்று நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறித்த புலன் விசாரணையைத் தமிழக காவல் துறையின் குற்றப்பிரிவு-குற்றப்புலனாய்வுத் துறையின் சிறப்பு புலன் விசாரணைக் குழு மேற்கொண்டது. இக்குழுவினர் மேற்கொண்ட தீவிரப் புலன் விசாரணையின் காரணமாக இவ்வழக்கின் பல்வேறு வகையான கோணங்கள் துப்பு துலக்கப்பட்டதுடன், இக்குற்றத்தைச் செய்வதற்கான கூட்டுசதி அம்சங்கள் மற்றும் அதனைச் செயல்படுத்திய முறை ஆகியவை குறித்த விவரங்களும் வெளிக் கொணரப்பட்டன. இதுவரை இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் என அடையாளம் காணப்பட்டுள்ள 200 நபர்களுள் குண்டு வெடிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை ஆகியவற்றின் போது இறந்த 8 நபர்கள் உட்பட 186 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட வெடி மருந்துப் பொருட்கள் பெறப்பட்ட இடங்களென கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்கள் இனங் காணப்பட்டு, அதற்குரிய சான்றுகளும் பெறப்பட்டன. தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், 123 குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பான 43 வழக்குகளுள் 25-ல் 166 குற்றவாளிகள்மீது முதன்மை குற்றப்பத்திரிகை நீதிமன்றத்தில் 28-9-1998 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.2.2. சில முக்கிய மதவெறித் தீவிரவாதிகளைக் கைது செய்ததன் மூலம் 1991 முதல் இந்நாள்வரை தமிழகத்தில் நடைபெற்றுள்ள, சில முக்கிய குற்ற நிகழ்வுகளில், குறிப்பாக இராமநாதபுரத்தில் இந்து முன்னணித் தலைவர் குப்புராமைத் தாக்கிய வழக்கு, மதுரை உதவி ஜெயிலர் ஜெயப்பிரகாஷ், மேலப்பாளையம டாக்டர் செல்வகுமார் கொலை வழக்கு ஆகியவற்றில் துபபு துலங்கியது.

5.2.3. மேலும், நிதிநிறுவன மோசடி வழக்குகள் மற்றும் முன்னாள் முதல்வர், சில முன்னாள் அமைச்சர்கள் மற்றும் சில மூத்த உயர் அதிகாரிகள், தொடர்பான வழக்குகள் ஆகியவற்றைத் துப்பு துலக்கும பணிகளும் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டன. முக்கியமான இந்த வழக்குகள் சம்பந்தப்பட்ட புலன் விசாரணையின்போது, நீதி விசாரணை முறையைக் கால

தாமதப்படுத்தும் பொருட்டு குற்றவாளி நபர்கள் ரிட் மனு தாக்கல் செய்தும், மறு முறையீட்டு மனு தாக்கல் செய்தும், டிஸ்சார்ஜ் மனு போன்றவற்றைத் தாக்கல் செய்தும் குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்குத் தடைகளை ஏற்படுத்தினர். அத்தகைய வழக்குகளில் 11 வழக்குகளில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டும், மற்ற 9 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டும், இதர வழக்குகளில் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் நிலையிலும் உள்ளது.

### 5.3. சிலை திருட்டுக்கள்

1998-99ஆம் ஆண்டில், சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 16 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 20 வெண்கலச் சிலைகளும், புராதன மதிப்பு உடைய இரண்டு கற்சிலைகளும் மீட்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு (1997-98) 13 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. உலகச் சந்தையில் இப்புராதனச் சிலைகளின் மதிப்பு அளவிட முடியாதவையாகும்.

## 6. காவல் துறைக்கான மோட்டார் வாகனங்களும், பணிமனையும்

6.1 மாநகரங்கள் அல்லாத இதர பகுதிகளில் உள்ள காவல் நிலையங்களின் எல்லைகள் மிகவும் பெரிதாக உள்ளதால், குறுகிய காலத்திற்குள் சட்டம்-ஒழுங்கு மற்றும் குற்றநிகழ்வுகள் காரணமாக எழும் பிரச்சினைகளை உடனடியாகச் சமாளித்துத் தீர்வு காண காவல் துறையினர் அதிவிரைவாகச் செயல்பட வேண்டிய நிலை எழுகிறது.

6.2. இதைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டில், ரூ. 8.40 கோடி மதிப்பீட்டில் பல்வகையான 391 புதிய வாகனங்களை வாங்க "காவல் துறை நவீனமயமாக்கல்" திட்டத்தின்கீழ் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

6.3. நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் வாகனங்கள் வாங்க ஒதுக்கப்பட்ட நிதியோடு மட்டுமின்றி, புதிய வாகனங்களை வாங்க அரசு, ரூ. 3.41 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.



### 6.4 தமிழகக் காவல் துறை மோட்டார் வாகனப் பணிமனை

இத்துறைக்கென ஆவடியிலும், திருச்சியிலும் இரண்டு பணிமனைகள் உள்ளன. இவ்விரண்டு பணிமனைகளில் நவீன வசதிகளைப் பெருக்குவதற்கெனக் காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் ரூ.12.20 இலட்சம் மதிப்பில் பழுது பார்க்கும் கருவிகள் வாங்கப்பட உள்ளன.

## 7. காவலர் நலத் திட்டங்கள்

### 7.1. மானிய விலையில் உணவுப் பொருள் வழங்கும் திட்டம்

7.1.1. மானிய விலையில் உணவுப் பொருள் வழங்கும் திட்டம் 1980-ம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டது. காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான காவல் துறையினர் இத்திட்டத்தின்கீழ் சலுகை பெறத் தகுதியுடைவர்கள். குடும்பமொன்றுக்கு குறைந்தபட்சமாக ஒரு அலகு முதல் அதிகபட்சமாக நான்கு அலகுகள் வரை அனுமதிக்கப்படுகிறது. அரிசி, கோதுமை, சர்க்கரை, ரவை, துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு, பாமாயில் ஆகிய பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன.

7.1.2. அரிசி, சர்க்கரை, கோதுமை, மற்றும் பாமாயிலுக்கு 50 சதவிகிதம் மானியம் அளிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. துவரம் பருப்பிற்கு ரூ. 4லிருந்து ரூ. 10-ஆகவும், உளுத்தம் பருப்பிற்கு ரூ. 3-லிருந்து ரூ. 10-ஆகவும், ரவை/மைதாவுக்கு ரூ. 1.50-லிருந்து ரூ. 3-ஆகவும் ஒவ்வொரு கிலோவிற்கும் மானியத் தொகை உயர்த்தப்பட்டது.

7.1.3. பொது விநியோக முறையின்கீழ் நிலவும் விலையில் காவல் துறையினருக்கு மண்ணெண்ணெய வழங்கப்படுவதற்காகத் தனி குடும்ப அட்டை (காவல் துறை அட்டை) வழங்கும் முறையை அரசு அறிமுகம் செய்துள்ளது.

7.1.4. மானிய விலையில் அளிக்கப்படும் அரிசியின் அளவு 12 கிலோவிலிருந்து 20 கிலோவாக உயர்த்தப்பட்டுள்ளது.

7.1.5 அரசு அளிக்கும் மானியம் ஒரு அலகிற்கு ரூ. 53.73 எனவும், நான்கு அலகுகளுக்கு ரூ. 160.15 எனவும் உள்ளது. ஒரு அலகிற்கு

ரூ. 90.93-ம் 4 அலகுகளுக்கு ரூ. 314.95-ம் ஒவ்வொருவரும் செலுத்த வேண்டும். 1999 ஜனவரி மாதம் வரை இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந்துள்ளவர்களின் எண்ணிக்கை 46,000 ஆகும்.

இத்திட்டத்திற்கான செலவினம் பற்றிய விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1996-97 | - | ரூ. 1.31 கோடி |
| 1997-98 | - | ரூ. 2.20 கோடி |
| 1998-99 (12/98 வரை) | - | ரூ. 3.37 கோடி |

### 7.2 தமிழ்நாடு காவலர் நல நிதி

7.2.1. காவல் துறையில் அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்களுக்கு நிதி மற்றும் இதர நிவாரணங்களை அளிப்பதற்காக 1957-ஆம் ஆண்டில் தமிழநாடு காவலர் நல நிதி உருவாக்கப்பட்டது

7.2.2. ஜூன் 1996 முதல் ஆண்டொன்றுக்கு ரூ.30 முதல் ரூ.100 வரையில் அரசிதழ் பதிவு பெறா அலுவலர்கள் மனமுவந்து அளித்த சந்தாத் தொகையும், காவல் துறையின் அரசிதழ் பதிவுபெற்ற உறுப்பினர்கள் அளித்த நன்கொடையையும் மற்றும் அரசு அளித்த ரூ. 25 இலட்சத்தையும் கொண்டு இந்நிதி உருவாக்கப்பட்டுள்ளது. பின்வரும் நோக்கங்களுக்காக இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

(அ) அலுவலர் இறந்தால் அவரது மனைவிக்கு அல்லது அவருடைய வாரிசுதாரர்களுக்கு ரூ. 4,000 நிவாரணம் அளித்தல்.

(ஆ) நீடித்து நோய்வாய்ப்பட்டிருத்தல், கடுமையாகக் காயம்பட்டிருத்தல் போன்ற அசாதாரண சந்தர்ப்பங்களில் நிதியுதவி அளித்தல்.

7.2.3. தமிழ்நாடு காவலர் மருத்துவ நல நிதித் திட்டத்தின்கீழ் வராத நோய்களுக்கு உரிய ஆய்வு செய்தபின், அதிகபட்சமாக ரூ. 5,000 அளவுக்குத் தனி மருத்துவ நிவாரணம் அளிக்கப்படுகிறது.

7.2.4. 1996-97 ஆம் ஆண்டு முதல் ரூ. 500 முதல் ரூ. 5.000 வரை (ஒரே தவணையில்) காவல் அலுவலர்களின் பிள்ளைகள் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் மேல்நிலை இரண்டாமாண்டு படிப்பைத் தொடர உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.



7.2.5. 1998-99ஆம ஆண்டில் காவல் துறையினரின் பிள்ளைகள் 4,572 பேர் பயன்பெறும் வகையில் ரூ. 71 இலட்சம் செலவிடப்பட்டது.

### 7.3. தமிழ்நாடு காவலர் மருத்துவ நலத் திட்டம்

காவல் துறையினர் அரசு மருத்துவமனைகளில் பெரிய நோய்களுக்கும் அறுவைச சிகிச்சைகளுக்கும் சிகிச்சை எடுத்துக்கொள்ள இயலாத நிலையில் உள்ளபோது. அவர்களின் நிதி நெருக்கடிகளை அரசு கவனத்தில் கொண்டு அவர்களின் சுமைகளைக் குறைக்கும் நோக்கோடு, தமிழ்நாடு காவலர் மருத்துவ நல நிதியை உருவாக்கியது. தனது பங்களிப்பாக அரசு ஆண்டுதோறும் இத்திட்டத்திற்கு ரூ.50 இலட்சத்தை அளிக்கிறது. இத்திட்டத்திற்குக் காவல் பணியாளர்கள் ஒவ்வொரு மாதமும் ரூ. 10 சந்தாவாக அளிக்கிறார்கள். இந்தியாவிற்குள் சிகிச்சை செய்துகொள்ள அதிகபட்சமாக ரூ. 1 இலட்சம் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இந்தியா தவிர பிற நாடுகளில் சிகிச்சை பெற ரூ. 1 இலட்சம் நிதி உதவி தவிர. அதிகபட்சமாக ரூ. 1 இலட்சம் அளவுக்கு ஆண்டுக்கு 10 சதவிகிதம் சாதாரண வட்டிக்குக் கடனுதவியும் அளிக்கப்படுகிறது. தனியார் மருத்துவமனைகளில் செய்யப்படும் இதயமாற்று அறுவை சிகிச்சை முதலியவற்றுக்கு மட்டுமே இந்நிதியுதவி அளிக்கப்படுகிறது. மிக அவசரமாகச் செய்யப்பட வேண்டிய அறுவை சிகிச்சைகளுக்கு, அந்த நபர் பெறத் தகுதியுடைய நிதியுதவியில் 75 சதவிகிதம் முன்பணமாக அளிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 1998ஆம் ஆண்டில் 99 நபர்களுக்கு ரூ. 43.6 இலட்சம் அளிக்கப்பட்டது.

### 7.4. காவல் துறை பணியாளர் மற்றும் அதிகாரிகளுக்கான குழுக் காப்பீட்டுத் திட்டம்

7.4.1. இரண்டாம் நிலைக் காவலர் முதல் காவல் துறைத் தலைமை இயக்குநா வரையிலான அனைத்துக் காவல் துறை பணியாளர்களும் குழுக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். தற்கொலை மற்றும் இயற்கைக் காரணங்கள் தவிர்த்து கடமை ஆற்றும்போது மரணமடையும் காவலரது வாரிசுதாரர் (அல்லது) நியமனதாரர் பின்குறிப்பிடப்படும் முறையில் காப்பீட்டுத் தொகையைப் பெறலாம்.

| பதவி | தொகை |
|---|---|
| காவலர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரை | ரூ. 1 இலட்சம் |
| காவல் கண்காணிப்பாளர் முதல் காவல் துறைத் தலைவர் வரை | ரூ. 5 இலட்சம் |
| காவல் துறைக் கூடுதல் இயக்குநர் | ரூ. 7.5 இலட்சம் |
| காவல் துறைத் தலைமை இயக்குநர் | ரூ. 10 இலட்சம் |

7.4.2. 1998-99ஆம் ஆண்டில் 40 பணியாளர் குடும்பங்களுக்கு ரூ. 40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 7.5. தமிழ்நாடு அதிவிரைவுப் படையில் பணியாற்றும் காவலர் மற்றும் அதிகாரிகளுக்கான குழுக் காப்பீட்டுத் திட்டம்

தமிழ்நாடு அதிவிரைவுப் படையில் பணிபுரியும் காவலர் முதல் அதிகாரிகள் வரை எவரேனும் பணியின்போது எதிர்பாரா வகையில் இறக்க நேரிட்டால், அவரது நியமனதாரர் அல்லது சட்டப்படியான வாரிசுதாரர் ரூ. 10 இலட்சம் காப்பீட்டுத் தொகை பெறத் தகுதி உடையவராவார். நிரந்தர ஊனமுற்றவர் ஊனத்திற்கு ஏற்றவாறு காப்பீட்டுத் தொகை பெறுவர். இத்திட்டத்திற்கென ரூ. 60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒருவருக்கு ரூ. 10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 7.6. கருணைத் தொகை

7.6.1. காவல்படையின் ஒழுக்கத்தை உயர்த்தவும், காவல் பணியாளர்களின் மனதில் துணிவையும் தன்னம்பிக்கையையும் உருவாக்கவும் அவர்கள் பணியின்போது இறக்கவோ, காயமடையவோ நேரிட்டால் பின்வரும் விகிதத்தில் கருணைத் தொகை அளிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.



| | | |
|---|---|---|
| (அ) | வீரமரணம் அடைவோர் | ரூ. 2 இலட்சம் |
| (ஆ) | கால், கண்பார்வை இழத்தல் போன்றவைகளால் நிரந்தரமாக முடமாக்கப்பட்டவர்களுக்கு | ரூ. 50 ஆயிரம் |
| (இ) | படுகாயமடைவோர் | ரூ. 10 ஆயிரம் |
| (ஈ) | சிறுகாயம் அடைவோர் | ரூ. 5 ஆயிரம் |

7.6.2. இறந்துபோன காவல் பணியாளர், இறக்கும் முன்வரை பெற்ற ஊதியம், அவர் சாதாரணமாகப் பணியிலிருந்து ஓய்வுபெறும் காலம் வரை அவரது சட்டப்படியான வாரிசுகளுக்கு குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும். அதற்குப் பின்னர் இயல்பான குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும்.

7.6.3 குற்றப்புலனாய்வுத் துறை தனிப்பிரிவுப் படையினர்க்குப் பின்வருமாறு கருணைத் தொகை அளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| (அ) | காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவியிலுள்ளோர் இறந்தால் | ரூ. 5 இலட்சம் |
| (ஆ) | காவலர் முதல் ஆய்வாளர் வரை | ரூ. 3 இலட்சம் |
| (இ) | கை, கால் மற்றும் பார்வை நிரந்தரமாக முடமாக்கப்படின் (அனைத்துப் பதவிகளும்) | ரூ. 2 இலட்சம் |
| (ஈ) | உடல் உறுப்புகள் உருக்குலைந்தால் (அனைத்துப் பதவிகளும்) | ரூ. 1 இலட்சம் |

7.6.4. மாநிலக் காவல் துறைக்கு உதவியாக வரும் மத்திய காவல்படையின் பணியாளர்கள் பணியின் போது இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு ரூ. 1 இலட்சம் கருணைத் தொகையாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

## 7.7. தொழிற்படிப்பு கல்லூரிகளில் இட ஒதுக்கீடு

பணிக்காலத்தில் வீரமரணமடைந்த காவல் துறைப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு மருத்துவம், பொறியியல் மற்றும் விவசாய படிப்புகளில் சேர தலா மூன்று இடங்களும், சட்டப்படிப்பில் இரு இடங்களும் அரசால் ஒதுக்கப்பட்டுள்ளன.

[1999 மே 7

### 7.8. பரிசுத் திட்டம்

ஒவ்வொரு மாவட்டம்/மாநகர்களிலும் பள்ளியிறுதி மற்றும் மேல்நிலைத் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் காவலர் முதல் காவல் துறை ஆய்வாளர் வரையிலான பணியாளர்களின் பிள்ளைகளுக்கு முறையே ரூ. 6,000/-, ரூ 4,000/-, ரூ. 2,000/- எனவும் மற்றும் ரூ. 7,000/-, ரூ. 5,000/-, ரூ. 3,000/- எனவும் பரிசுத் தொகை ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

### 7.9. தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு நினைவு படிப்பு உதவித் தொகை

தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு நினைவு படிப்பு உதவித் தொகை நிதி 1962-ல் அறிமுகப்படுத்தபபட்டது. அரசிதழ் பதிவுபெறாத காவல் துறை மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் தகுதியுள்ள பிள்ளைகள் கல்லூரி அளவில் உயர்கல்வி பெற, கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வுபெற்ற அல்லது மரணமடைந்த பணியாளர்களின் பிள்ளைகளுக்கும் அவர்கள் ஓய்வுபெற்ற அல்லது மரணமடைந்த நாளிலிருந்து 5 ஆண்டுகள் வரை இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில், 4,572 மாணவர்களுக்கு ரூ. 71 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 7.10. சிறப்புப் படிப்புதவித் தொகை நிதி

காவலர் முதல் ஆய்வாளர் பதவி வரையுள்ள காவல் துறை பணியாளர்களின் குழந்தைகளுக்குச் சிறப்புப் படிப்பு உதவித் தொகை வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அரசு அளித்த ரூ. 6 இலட்சத்துடன், சிறப்பு பாதுகாப்புப் படையில் உள்ளவர்கள் அளித்த ரூ. 4 இலட்சத்தையும் சேர்த்து மொத்தத் தொகையான ரூ. 10 இலட்சமும் தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிறுவனத்திடம் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து படிப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இந்தப் படிப்பு உதவித் தொகையைத் தொழில் படிப்பு மேற்கொள்ளும் காவல் துறை பணியாளர்களின் குழந்தைகள் பெறலாம். இந்தத் தனி கல்வி உதவித் தொகையானது, தலைசிறந்த ஒரு மாணவனுக்கு ரூ. 40,000/- எனவும், சிறந்த மாணவர்கள் ஐந்து பேருக்கு தலா ரூ. 20,000/- எனவும் வழங்கப்படுகிறது. 1998-99ஆம் ஆண்டில் ஆறு மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.



1999 மே 7]

### 7.11. தமிழ்நாடு காவலர் நலக் கூட்டுறவுச் சங்கங்கள்

காவலர் மற்றும் காவல் துறை அமைச்சுப் பணியாளர் குடும்பங்களின் வருவாயைப் பெருக்குவதற்கும், அவர்களுக்குப் பொழுதுபோக்கு, கல்வி மற்றும் மருத்துவ வசதிகளை அளிப்பதற்கும் நலத் திட்டங்களைத் தொடங்கி, வளர்த்து, ஒருங்கிணைப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். தையல், தீக்குச்சி தயாரித்தல், பால் உற்பத்தி போன்ற பணிகள் காவல் துறைப் பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

### 7.12. கருணை அடிப்படையில் பணியமர்த்துதல்

பணிக்காலத்தின்போது இறக்கும் அரசு ஊழியர்களின் சட்டப்படியான வாரிசுகள் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்படுகிறார்கள். மருத்துவ அடிப்படையில் தகுதியிழந்து ஓய்வுபெறும் 50 வயதிற்குட்பட்ட நபர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படுகிறது.

### 7.13. காவல் மருத்துவமனைகள்

1928-ல் சென்னை நகர காவல் மருத்துவமனை காவலர்களுக்கும், அவர்களின் குடும்பத்தாருக்கும் மருந்து அளிக்கும் நிலையமாகத்தான் தொடக்கத்தில் உருவாக்கப்பட்டது. இது பின்னர், 1963-ல் மருத்துவமனையாக மாற்றப்பட்டது. அம்மருத்துவமனையில் ஒரு சிவில் மருத்துவர், 5 உதவி மருத்துவர்கள், 7 செவிலியர்கள் மற்றும் 27 மருத்துவ உதவியாளர்கள் பணிபுரிகின்றனர். சுமார் 60,000 பேருடைய தேவைகளுக்காகச் சென்னை மாநகர காவல் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில், குடும்ப உறுப்பினர்களும், அமைச்சுப் பணியாளர்களும்கூட மருத்துவ உதவி பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனை அளிக்கும் சேவையின மூலம் ஆண்டுக்கு சுமார் ஒரு இலட்சம் புறநோயாளிகளும் 2,000 உள் நோயாளிகளும் பயன்பெறுகின்றனர். கோவை, மதுரை, திருச்சி, சேலம், ஆவடி, வேலூர், பரங்கிமலை ஆகிய இடங்களிலும் காவல் மருத்துவமனைகள் உள்ளன. இம்மருத்துவமனைகள் வாயிலாக 500 உள்நோயாளிகளும், 7,000 புறநோயாளிகளும் பயனடைந்து வருகின்றனர்.

7.14. கடந்த சில ஆண்டுகளாகக் காவலர் நலனுக்காக செலவிடப்பட்ட தொகை பின்வருமாறு:

**காவலர் நலனுக்காக செலவினச் சுருக்கம்**

1991 முதல் 1996 வரை

| ஆண்டு | தொடரும் செலவினம் | தொடராச் செலவினம் |
|---|---|---|
| 1991-92 | ரூ.0.84 கோடி | ரூ.0.05 கோடி |
| 1992-93 | ரூ.3.00 கோடி | ரூ.9.80 கோடி |
| 1993-94 | ரூ.0.46 கோடி | ரூ.15.53 கோடி |
| 1994-95 | ரூ.1.05 கோடி | ரூ.20.30 கோடி |
| 1995-96 | ரூ.0.23 கோடி | ரூ.14.28 கோடி |
| மொத்தம் | ரூ.5.58 கோடி | ரூ.59.96 கோடி |

1996 முதல் 1999 வரை

| ஆண்டு | தொடரும் செலவினம் | தொடராச் செலவினம் |
|---|---|---|
| 1996-97 | ரூ.6.81 கோடி | ரூ.45.19 கோடி |
| 1997-98 | ரூ.10.19 கோடி | ரூ.88.53 கோடி |
| 1998-99 | ரூ.30.40 கோடி | ரூ.89.83 கோடி |
| மொத்தம் | ரூ.47.40 கோடி | ரூ. 223.55 கோடி |



## 8. 1999-2000 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

ரூ.2.23 கோடி செலவில் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

| வரிசை (1) | திட்ட விவரம் (2) | 1999-2000-ல் செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 1. | புதிதாக ஏற்படுத்தப்பட்ட திருவள்ளூர், நாமக்கல், திருவாரூர் மாவட்டங்களில் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல். | 28.30 |
| 2. | சென்னை மாநகரில் உள்ள காவல் துறைக் கூடுதல் துணை ஆணையாளர் பதவிகளை துணை ஆணையாளர் பதவிகளாக நிலை உயர்த்துதல். | 0.30 |
| 3. | வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்ற 20 காவல் நிலையங்களுக்காக சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 50.00 |
| 4. | கோயம்புத்தூர் மாநகரில் உள்ள பி.1 பஜார் காவல் நிலையத்தை மூன்றாகப் பிரித்து, கோட்டைமேடு (உக்கடம்) வெரைட்டி ஹால் ஆகிய இடங்களில் புதிதாக இரண்டு காவல் நிலையங்கள் ஏற்படுத்துதல். | 87.48 |
| 5. | அண்ணா சதுக்கத்தில் தற்போது இருக்கும் காவல் நிலையத்தை நிலை உயர்த்தல். | 25.00 |
| 6. | சென்னை தடய அறிவியல் ஆய்வுக் கூடத்தில் உள்ள 3 அறிவியல் ஆய்வு உதவியாளர் நிலை-II பதவிகளை அறிவியல் ஆய்வு அலுவலர்களாக நிலை உயர்த்துதல். | 0.52 |
| 7. | ஆவண ஆய்விற்காக, வண்ணப்பட ஒப்பீட்டுக் கருவி 2000 ஒன்றை வாங்குதல். | 18.00 |
| 8. | தாழ் தட்பவெப்ப நிலையில் அழியத் தக்க பொருட்களைப் பதப்படுத்தும் 80 செ. திறன் கொண்ட சாதனம் ஒன்றை வாங்குதல். | 5.00 |
| 9. | பல்நோக்கு எலக்ட்ரோ போரெசிஸ் சாதனம் ஒன்று வாங்குதல் | 4.00 |
| 10. | வீடியோ மைக்ராஸ்கோப் வாங்குதல் | 5.00 |
| | மொத்தம் .. | 223.60 |

## 9. பணியாளர்கள் நியமனம் மற்றும் பயிற்சி

9.1. காவல், சிறை மற்றும் தீயணைப்புத் துறைகளில் பணியமர்த்தத் திறமையானவர்களைத் தேர்வு செய்யும் நோக்கத்துடன் 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் ஏற்படுத்தப்பட்டது. இத்தேர்வாணையம், காவல் துறைக்கு இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் ஆகியோர்களைத் தேர்வு செய்கின்றது.

9.2. தாலுகாவிற்கு ஒதுக்கப்பட்ட உதவி ஆய்வாளர்களின் பயிற்சிக் காலம் இரண்டரை ஆண்டுகளாகும். ஆயுதப் படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல்படையில் உள்ளோருக்குப் பயிற்சிக் காலம் ஒரு வருடம் ஆகும்.

## 9.3. உதவி ஆய்வாளர் தேர்வு

9.3.1. 1994-95ஆம் வருடம், நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட 1,100 உதவி ஆய்வாளர்கள், இரண்டு அணிகளாகப் பயிற்சி அளிக்கப்பட்டு, தாலுகா காவல், ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல் அணி ஆகியவற்றில் சேர்க்கப்பட்டனர்.

(1) இவ்வாறு நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட 476 உதவி ஆய்வாளர்கள், ஆறு மாத காலப் பயிற்சியை முடித்தபின், 20-9-1997 முதல் காவல் நிலையங்களில், நகரம் மற்றும் சரகங்களில் பணியமர்த்தப்பட்டனர்.

(2) இரண்டாவது அணியாக நேரடித் தேர்வு பெற்ற 551 உதவி ஆய்வாளர்கள், 20 சதவிகித ஒதுக்கீட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 258 துறையைச் சார்ந்தவர்கள் ஆகியோர் குறிப்பிட்ட பயிற்சி முடித்தவுடன் தாலுகா காவல், ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணியமர்த்தப்பட்டனர்.

9.3.2. ஆயுதப் படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் அணியைச் சேர்ந்த 313 உதவி ஆய்வாளர்கள், 20-9-1997 அன்று மாற்றம் செய்யப்பட்டு தாலுகா காவல் பிரிவில் பணியமர்த்தப்பட்டனர்.

9.3.3. 1998ஆம் ஆண்டில், நேரடித் தேர்வு மற்றும் துறை சார்ந்தவர்களைத் தேர்வு செய்வது ஆகியவற்றின் மூலமாக 1,000 உதவி ஆய்வாளர்களை (ஆண் மற்றும் பெண்) தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் தேர்வு செய்தது. தேர்வு



செய்யப்பட்டவர்களின் முதல் அணியின் பயிற்சி 16-4-1999 முதல் தொடங்கப்பட்டது.

## 9.4. காவலர் தேர்வு

9.4.1. (1) 1995-96ஆம் ஆண்டில், சுமார் 10,000 பேர் (ஆண் மற்றும் பெண்) இரண்டாம் நிலைக் காவலர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

(2) அவ்வாறு தேர்வு செய்யப்பட்டவர்களில் 5,849 ஆண்கள் மற்றும் 3,052 பெண்கள் இரண்டு அணிகளாக பணி அமர்த்தப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகளில் பணியமர்த்தப்பட்டனர். முதல் அணியானது 16-10-1997 முதற்கொண்டும், இரண்டாவது அணியானது 10-5-1998 முதற்கொண்டும் பணியமர்த்தப்பட்டது.

(3) இது தவிர, 1989-90 ஆம் ஆண்டுகளில் தேர்வு செய்யப்பட்ட 1,024 காவலர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். 874 பேர் மணிமுத்தாறு மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் பயிற்சி பெற்று, 10-5-1998 முதல் தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகளில் பணியமர்த்தப்பட்டனர்.

9.4.2. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் 3,779 ஆண் காவலர்களைத் தேர்வு செய்யும் பணியை முடித்துள்ளது. அவர்கள் விரைவில் பயிற்சிக்கு அனுப்பப்படவுள்ளனர்.

## 9.5. பயிற்சி

தமிழ்நாடு காவல் துறையினருக்கு பின்வரும் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(1) காவல் பயிற்சிக் கல்லூரி, சென்னை.

(2) தற்காலிகக் காவல் பயிற்சிக் கல்லூரி, வீராபுரம்.

(3) காவல் பயிற்சிப் பள்ளி, கோயம்புத்தூர்.

(4) காவல் பயிற்சிப் பள்ளி, வேலூர்.

### 9.5.2. பயிற்சி நிலையங்களில் பணிகள் குறித்த விவரங்கள்

9.5.2.1. சென்னையிலுள்ள காவல் பயிற்சிக் கல்லூரியானது தேர்ந்தாய்வு நிலையிலுள்ள இந்திய காவல் பணி அதிகாரிகளுக்கு துறை சார்ந்த பயிற்சியையும், நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சிகளையும் அளித்து வருகின்றது. வீராபுரத்திலுள்ள தற்காலிகக் காவல் பயிற்சிக் கல்லூரி நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளித்து வருகின்றது. வேலூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள காவல் பயிற்சிப் பள்ளிகளில் காவல் துறையினருக்குத் தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த காவல் பயிற்சிக் கல்லூரிகளிலும். பள்ளிகளிலும் இரண்டு நிலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. காவல் துறையில் பணியமர்த்தப்படும்போது அளிக்கப்படும் அடிப்படைப் பயிற்சி மற்றும் பணியிலுள்ளவர்களுக்கு மறு பயிற்சி அளித்தல், ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சிகள் அளிக்கப்படுவதுடன், காவல் துறை தலைமை இயக்குநர் முதல் காவலர் வரையிலான அதிகாரிகளுக்குச் சிறப்புப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. மேலும், அவர்கள் சிறப்பு வகையான பயிற்சிகளுக்காக உள்நாட்டிலும் வெளி நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றனர். பல்வேறு வகையான சிறப்பு வகைப் பயிற்சிகள் பல்வேறு பயிற்சி மையங்களில் ஏற்பாடு செய்யப்பட்டு அளிக்கப்படுகின்றன. உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் நடைபெறும் பல்வேறு வகையான கருத்தரங்குகள், மாநாடுகள் ஆகியவற்றிற்கும் காவல் துறை அதிகாரிகள் அவ்வப்போது அனுப்பப்படுகின்றனர். காவல் துறையைப் பொறுத்தவரையில், பயிற்சி என்பது மிக முக்கிய இடத்தை வகித்து வருகின்றது. இவ்வாறு அளிக்கப்பட்டு வரும் பயிற்சியானது, சிக்கலான பணிகளைக் காவல் துறையினர் எதிர்கொள்ள நேரிடும் சமயத்தில், அவர்கள் எவ்வித சவாலையும் சந்திப்பதற்கான தகுதிகளையும், மன உறுதியையும் அவர்களிடம் ஏற்படுத்துகிறது.

9.5.2.2. பயிற்சி நிலையங்களின் தேவையின் அடிப்படையிலும், அப்பயிற்சி நிலையங்கள் இருக்கைகளை ஒதுக்கீடு செய்யும் எண்ணிக்கையின் அடிப்படையிலும் அதிகாரிகள் பயிற்சிகளைப் பெற நியமனம் செய்யப்படுகிறார்கள். ஆண்டு முழுவதும், பயிற்சிகளைப் பெறுவதற்காக, காவலர்களும், காவல் துறை அதிகாரிகளும் அனுப்பி வைக்கப்படுகின்றனர். பயிற்சியின் முழுப் பயனையும் காவல் துறை





அதிகாரிகள் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

9.5.2.3. காவலர்கள் முதல், கூடுதல் கண்காணிப்பாளர்கள் வரை சென்னை, காவல் பயிற்சிக் கல்லூரியில் பதவி உயர்விற்கு முந்தைய பயிற்சி, பணி நியமன முன்பயிற்சி மற்றும் மறுசீராய்வுப் பயிற்சி ஆகியன அளிக்கப்படுகின்றன. பிரச்சினைகள் எழும்போது திறமையுடனும், சிறப்புடனும் பணியாற்றிட ஏதுவாக, காவலர்களுக்குப் பணிக்காலத்தின்போது இருவார காலப் பயிற்சிகளை அளிக்கும்படி காவல் துறைக் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

### 9.6. காவலர் பயிற்சிக் கழகம்:

காவல் துறை அதிகாரிகளுக்கு அதிக அளவில் பல்வேறு வகையான பயிற்சிகளை அளிக்கவும் காவல் துறை பயிற்சியின் தரத்தை மேம்படுத்தவும் காவலர் பயிற்சிக் கழகம் என்ற பயிற்சி நிலையத்தை உருவாக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. காவல் பயிற்சிக் கழகத்திற்காக வண்டலூர் அருகில் உள்ள ஊனமாஞ்சேரி கிராமத்தில், 132.92 ஏக்கர் நிலம், வருவாய்த் துறையால் 1-6-1998 அன்று ஒப்படைக்கப்பட்டது. அதற்கான கட்டுமானப் பணிக்கென, ரூபாய் 6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதிகபட்சமாக ஒவ்வொரு பயிற்சிக்கும் 400 பயிற்சியாளர்கள் வீதம், பல வகையான பயிற்சிகள், காவலர்கள் பயிறசிக் கழகம் செயல்படத் தொடங்கும்போது அளிக்கப்படும்.

## 10. விருதுகளும்-வெகுமதிகளும்

### 10.1.விரதீரச் செயல்களுக்கான தமிழக முதல்வர் பதக்கம்:

வீரதீரச் செயல்களைப் புரிந்தமைக்காக, 15-9-1998 அன்று, தமிழக முதல்வர் பதக்கம் காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் ஒருவருக்கும், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவருக்கும் இரண்டு ஆய்வாளர்களுக்கும், உதவி ஆய்வாளர் ஒருவருக்கும், இரண்டு தலைமைக் காவலர்களுக்கும் (இறந்த பின்னர் விருது ஒருவருக்கும்), மூன்று காவலர்களுக்கும் வழங்கப்பட்டன.

### 10.2. ஈடுபாட்டுடன் பணிபுரிந்தமைக்கான தமிழக முதல்வரின் காவல் பதக்கம்:

1998 ஆம் ஆண்டில், பணியின்பால் அதிக ஈடுபாட்டுடன் பணிபுரிந்தமைக்காக, தமிழக முதல்வர் பதக்கம், 64 காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு வழங்கப்பட்டன.

**10.3. 1998 ஆம் ஆண்டுக்கான சுதந்திர தின குடியரசுத் தலைவர் பதக்கம்:**

குடியரசுத் தலைவர் பதக்கம் இரண்டு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன.

**10.4. 1998 ஆம் ஆண்டின் மெச்சத்தக்கப்பணிக்கான காவல் துறை பதக்கம்:**

மெச்சத்தக்கப் பணிகளை ஆற்றியமைக்காக, ஐந்து இ.கா.ப. அதிகாரிகளுக்கும், மூன்று காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள், ஒரு தலைமைக் காவலர், ஒரு ஹவில்தார், ஓர் இரண்டாம் நிலைக் காவலர் ஆகியோருக்கும் 7-1-1999 அன்று காவல் துறை பதக்கங்கள் வழங்கப்பட்டன.

**10.5. ஊர்க்காவல் படையினருக்கான தமிழக முதல்வர் பதக்கம்:**

ஊர்க்காவல் படையைச் சேர்ந்த ஐந்து அலுவலர்களுக்கு 15-9-1998 அன்று, தமிழக முதல்வர் ஊர்க்காவல் படை பதக்கங்கள் வழங்கப்பட்டன.

**10.6. மெச்சத்தக்கப் பணிக்கான குடியரசுத் தலைவரின் பதக்கம்:**

மெச்சத்தக்கப பணிக்கான இந்தியக் குடியரசுத் தலைவரின் பதக்கங்கள் 26-1-1999 அன்று ஆறு காவல் துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன.

**10.7 மெச்சத்தக்கப் பணிக்கான காவல்துறை பதக்கம்:**

மெச்சத்தக்கப் பணிக்கான காவல் துறை பதக்கங்கள், இந்திய காவல் பணியைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளுக்கும் மற்றும் துணைக் காவல் கண்காணிப்பாளர் ஒருவர், காவல் ஆய்வாளர்கள் இருவர், காவல் உதவி ஆய்வாளர் ஒருவர், தலைமைக் காவலர் ஒருவர், முதல்நிலைக் காவலர் ஒருவர் ஆகியோருக்கும் 26-1-1999 அன்று வழங்கப்பட்டன.

**10.8. ஊர்க்காவல் படையினருக்கான குடியரசுத் தலைவரின் பதக்கம்:**

1999 ஆம் ஆண்டில், குடியரசு தினத்தன்று ஊர்க்காவல் படையினருக்கான இந்தியக் குடியரசுத் தலைவரின் பதக்கம், நான்கு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன.



**10.9. காவலர்களுக்கான தமிழக முதல்வரின் பதக்கம்:**

பத்தாண்டு காலம் மிகத் திறமையான முறையில், தண்டனை ஏதுமின்றி பணியாற்றிய தலைமைக் காவலர்களுக்கும், காவலர்களுக்கும் இப்பதக்கம் வழங்கப்படும். 1999 ஆம் ஆண்டு, பொங்கல் தினத்தன்று, 188 தலைமைக் காவலர்கள், 19 பெண் காவலர்கள், 1,292 முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைக் காவலர்கள், ஆக மொத்தம் 1,499 நபர்களுக்கு காவலர்களுக்கான தமிழ்நாடு முதல்வரின் பதக்கங்கள் வழங்கப்பட்டன. 1998 ஆம் ஆண்டில் இந்தப் பதக்கங்கள் ஆயிரம் பேர்களுக்கு வழங்கப்பட்டன.

## 11. வீட்டுவசதி மற்றும் கட்டடங்கள்

11.1.1. தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் 1956-ஆம் ஆண்டு கம்பெனி சட்டத்தின்கீழ் ஒரு குழுமமாகப் பதிவு செய்யப்பட்டதாகும். அதற்கு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் திரட்டப்பட்ட மூலதனம் ரூபாய் ஒரு கோடியாகும். 1981 முதல் 1989 வரை இக்கழகம் 4.05 கோடி ரூபாய் செலவில் 601 வாடகை வீடுகளையும், ரூபாய் 6.27 கோடி செலவில் வீட்டைச் சொந்தமாக்கிக் கொள்ளும் திட்டத்தின்கீழ் 1,592 வீடுகளையும் கட்டியுள்ளது. இக்கழகம் 31-03-1989 அன்று தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்துடன் இணைக்கப்பட்டது. பின்னர் 18-11-1991 அன்று மீண்டும் தொடங்கப்பட்டது.

11.1.2. போதிய வீட்டுவசதியின்மையால் காவல் துறையினர் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் மூலமாக, 1992ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 1000 காவலர் குடியிருப்புகளைக் கட்ட அரசு அனுமதியளித்தது. 1995ம் ஆண்டு முதல், ஒவ்வோர் ஆண்டும், கட்டப்படும் குடியிருப்புகளிலும் மின் இணைப்பு, மின் விசிறி, தனியாக மின்சார மீட்டர் இணைப்பு போன்ற வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

11.1.3. 1997ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் கட்டப்படும் காவலர் குடியிருப்புகளின் எண்ணிக்கை 1,500-லிருந்து 2,500 ஆக உயர்த்தப்பட்டது.

[1999 மே 7

*11.1.4.* 1998-99ஆம் ஆண்டில் 2,500 காவலர் குடியிருப்புக்களைக் கட்டுவதற்காக (சென்னையில் 1,000 மற்றும் மாவட்டங்களில் 1,500) அரசு ரூபாய் 83.16 கோடியை வழங்கியது. மொத்தத்தில், தற்போது 6,664 குடியிருப்புக்கள் கட்டப்பட்டு வருகின்றன.

*11.1.5.* தமிழ்நாட்டில் மொத்தமுள்ள காவல் பணியாளர்களுள் 28,824 பேர்களுக்கு மட்டுமே குடியிருப்புகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. தற்போது கட்டப்பட்டு வரும் 6,664 குடியிருப்புக்களும் கட்டப்பட்டு, காவலர்களுக்குக் கொடுக்கப்பட்டால், மொத்தம் 35,488 காவலர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்க முடியும். இது காவலர்களுக்கு வீட்டுவசதித் தேவையைப் பூர்த்தி செய்யும் தற்போதைய 32.6 சதவீதத்தை 40 சதவீதமாக உயர்த்துவதற்கு உதவி புரியும்.

**11.2 சொந்த வீடு பெறும் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம், ஹட்கோ, எச்.டி.எப்.சி. மற்றும் அதுபோன்ற இதர நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று, காவல் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வீட்டைச் சொந்தமாக்கிக் கொள்ளும் திட்டத்தின் கீழ் பல வீடுகளைக் கட்டி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் வீடு வாங்குவோர், அவர்களுக்கு வழங்கப்படும் வீட்டுக் கடன் முன்பணம் மூலமாகவும், மற்ற கடன்களும், சொந்த சேமிப்பு மூலமாகவும் பணம் கொடுத்து வீடு வாங்குகின்றனர்.

**11.3. சிறப்புத் திட்டங்கள்:**

*11.3.1.* 1998-99ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 7 இடங்களில் உள்ள காவலர் பயிற்சிப் பள்ளிகளில் ரூ. 8 கோடி செலவில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவடைந்த பின்னர், பயிற்சி பெறும் 1,250 காவலர்களுக்குக் கூடுதல் அடிப்படை வசதிகள் கிடைக்கும்.

**11.3.2. காவல் துறை இயக்குநர் அலுவலக வளாகத்தைப் புதுப்பிக்கும் பணி:**

சென்னை காமராசர் சாலையில் அமைந்துள்ள காவல் துறை இயக்குநர் அலுவலக பழைய வளாகம், இடிக்கப்படாமலேயே ரூபாய் 1.75 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டது.



1999 மே 7]

**11.3.3. கடலோரக் காவல் படை மேம்பாடு:**

கடலோரக் காவல் படைக்கு சென்னையில் தலைமை அலுவலகம் கட்டவும், மாவட்டங்களில் ஐந்து மண்டல அலுவலகங்களைக் கட்டவும், தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் உள்ள 60 சோதனைச் சாவடிகளை மேம்படுத்தவும், ரூபாய் 3.25 கோடி அனுமதியளிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

*11.3.4.* காவல் துறையைச் சேர்ந்த கட்டடங்கள்/குடியிருப்புகளைப் பழுது பார்க்கும் பணிகளுக்காக 1998-99 ஆம் ஆண்டில் ரூபாய் 7 கோடி ஒதுக்கப்பட்டது. தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் அப்பணிகளைச் செய்து வருகிறது.

**11.4. காவலர் குடியிருப்புகளில் மின் விசிறிகள் பொருத்துதல்:**

மின் விசிறிகள் இல்லாத 11,140 காவலர் குடியிருப்புகளில் மின் விசிறிகள் பொருத்துவதற்காகச் சென்ற ஆண்டில் ரூபாய் 1.67 கோடி அரசால் வழங்கப்பட்டு, இப்பணி முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

*11.5* தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் திட்டச் செலவினம் மற்றும் கட்டப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

## 12. தடய அறிவியல் துறை

*12.1.* 1849 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட தமிழ்நாடு தடய அறிவியல் துறை, ஆசியாவிலேயே மிகப் பழமையான ஒன்றாகும். இத்துறை, மாநில மற்றும் மத்திய அரசின் அனைத்து சட்ட அமலாக்கப் பிரிவுகளுக்கும் தேவை ஏற்படும்போது உதவிகளைப் புரிந்து வருகிறது. தனியாக இயங்கிய இத்துறை 1995 ஜூலைத் திங்கள் முதல் காவல் துறையின்கீழ் கொண்டு வரப்பட்டது.

*12.2.* இத்துறையின்கீழ் சென்னையில் முதன்மை ஆய்வகமும், 15 பிரிவுகளும், மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர், வேலூர், சேலம், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 9 இடங்களில் தடய அறிவியல் வட்டார ஆய்வகங்களும், களப் பணிக்காக மாவட்டங்களில் 32 நடமாடும் தடய அறிவியல்

ஆய்வகங்களும், சென்னை மாநகரில் குற்றம் நடந்த இடத்திற்கு உடனடியாகச் சென்று செயல்படும் வகையில் 24 மணி நேரமும் பணியாற்றும் நடமாடும் தடய அறிவியல் ஆய்வகம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. சென்னை பல்கலைக்கழகத்தோடு இணைந்து முதுகலை அறிவியல் பட்ட மேற்படிப்பு வழங்கும் அரசுத் துறை நிறுவனம் இது ஒன்றேயாகும். முதுகலை (அறிவியல்) மற்றும் முனைவர் பட்டம் பெற வழிகாட்டுதலையும் இத்துறை அளிக்கிறது. சென்னை பல்கலைக்கழகம் மற்றும் மாநில மருத்துவ நிலையங்களுக்கும் குற்றவியல், நச்சுவியல் தொடர்பான வகுப்புகளை நடத்துதல் மற்றும் நச்சுவியலில் அறிவியல் பட்ட மேற்படிப்பு, தடய அறிவியல் மருத்துவத்தில் பட்ட மேற்படிப்பு, குற்றவியல் பட்ட மேற்படிப்பு ஆகியவற்றிற்கு வகுப்புகளையும் நடத்தி வருகிறது. சென்னை பல்கலைக்கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவை முனைவர் பட்ட வகுப்புகளுக்குத் தடய அறிவியலில் ஆய்வு மையமாக இத்துறையை அங்கீகரித்துள்ளன.

*12.3.* இத்துறை பலவற்றில் முதலிடம் வகிக்கிறது. அவற்றுள் மரபணுச் சோதனை சமீபத்தில் ஒன்றாகும். அசைக்க முடியாத சான்றுகளை வழங்கி நியாயம் பெற இத்துறை ஒத்துழைக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. தவிர, விஷமருந்தியதால் சிகிச்சை பெறுபவர்களுக்குச் சரியான ஆலோசனை வழங்கி உதவி புரிகிறது.

*12.4.* 1997 ஆம் ஆண்டு இத்துறை 70,871 வழக்குகளில் 2,69,196 பொருட்களை ஆய்ந்துள்ளது. 1998 ஆம் ஆண்டு இத்துறை 58,760 வழக்குகளில் 2,55,390 பொருட்களை ஆய்ந்துள்ளது.

*12.5.* சென்னையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் தொடங்கி வைத்த 86-வது இந்திய அறிவியல் கழகத்தில் தடய அறிவியல் ஆய்வரங்கம் ஒன்று 1999 ஜனவரி 4 முதல் 7 வரை தனியே நடத்தப்பெற்றது, இங்கு குறிப்பிடத்தக்கது.



## 13. விளையாட்டுக்கள், போட்டி விளையாட்டுகள் மற்றும் பிற நிகழ்வுகள்

*13.1.* விளையாட்டுத் துறையிலும் தமிழ்நாடு காவல் துறை தொடர்ந்து திறமையை வெளிப்படுத்தி வருகிறது. இவ்வாண்டும் அவர்கள் தங்கள் தனித்திறமையையும். விளையாட்டின் அடிப்படை உணர்வினையும் வெளிக்கொணர்ந்துள்ளனர்.

*13.2* 1999ஆம் ஆண்டு மார்ச் திங்களில் 8-3-1999 முதல் 13-3-1999 வரையில் பூனாவில் நடைபெற்ற 48-வது அகில இந்தியக் கூடைப்பந்து, கைப்பந்து, கபடி ஆகிய போட்டிகளில் தமிழ்நாடு காவல் துறை அணியும் கலந்துகொண்டது. 1999 ஏப்ரல் திங்கள் 21-4-1999 முதல் 25-4-1999 வரை சண்டிகரில் நடைபெறவுள்ள அகில இந்திய பணித்திறன் போட்டிகளில் கலந்துகொள்ள தமிழ்நாடு காவல் துறை அணி தீவிரப் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளது.

*13.3.* 48-வது அகில இந்திய நீச்சல் மற்றும் நீள் ஓட்டப் போட்டியை 1999 ஆம் ஆண்டு சென்னையில் நடத்துவதென அகில இந்தியக் காவல் விளையாட்டுக் கட்டுப்பாட்டு வாரியம் முடிவெடுத்துள்ளது.

*13.4.* 30 ஆண்டுகளுக்குப் பின்னர் 1998ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7 முதல் 9 வரை 30-வது அகில இந்தியக் காவல் விஞ்ஞானக் கருத்தரங்கு சென்னையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கை நடத்துவதற்காகத் தமிழ்நாடு அரசு 4 இலட்சம் ரூபாயையும், புதுடில்லியில் உள்ள காவல் துறை ஆய்வு மற்றும் வளர்ச்சி நிறுவனம் 2 இலட்சம் ரூபாயையும் அளித்தன.

*13.5.* அகில இந்தியக் காவல் பயிற்சி நிறுவனத் தலைவர்களின் 24-வது கருத்தரங்கு சென்னையில் 1-12-1998 முதல் 3-12-1998 வரையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கின் செலவினங்களுக்கென தமிழ்நாடு அரசு 3.25 இலட்சம் ரூபாயையும், புதுடில்லியில் உள்ள காவல் துறை ஆய்வு மற்றும் வளர்ச்சி நிறுவனம் 1 இலட்சம் ரூபாயையும் அளித்தன.

## 14. முடிவுரை

*14.1* கொலைகாரர்களை விடக் கொடியவர்களை அகற்றுவது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்றபோதிலும் அதை, பயிர்களிடையேயிருக்கும் களைகளை எடுப்பதுபோல் கவனத்துடன் செய்யவேண்டியுள்ளது. பயிர்களைப்போலவே தோற்றம் அளிக்கும் களைகளைக் கண்டறிந்து, அவற்றை நீக்க வேண்டியுள்ளது. இதனை வள்ளுவப் பெருந்தகை பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> *"கொலையின் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ்*
> *களைகட் டதனொடு நேர்"*

குறள்-அதிகாரம் *55-10*

அதைப்போன்று காவல் துறையும் அத்தகையோரைக் கையாள்வதில் மிகவும் கவனததுடன் செயல்பட வேண்டியுள்ளது. பொதுமக்களையும், அவர்களிடையே உள்ள குற்றவாளிகளையும் வேறுபடுத்திக் கண்டறிய வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உள்ளது. குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டிய அதே நேரத்தில் அப்பாவி பொதுமக்களுக்குத் துன்பம் ஏதும் நேரிடாது பார்த்துக்கொள்ளவேண்டிய பொறுப்பும் காவல் துறைக்கு உள்ளது.

*14.2.* நாட்டின் முன்னேற்றத்திற்குச் சட்டம்-ஒழுங்கு நன்முறையில் பராமரிக்கப்படவேண்டியது அவசியமான ஒன்றாகும். சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும், குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளைத் தண்டிக்கவும் காவல் துறை தன்னுடைய முழுத் திறனையும் இரவு பகல் பாராது பயன்படுத்துகிறது. காவல் துறையினர் தங்கள் பணிகளை ஆற்றுகையில் கடும் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. சமுதாயத்தில் அதிகரித்துவரும் குற்ற நடவடிக்கைகள் மற்றும் சாதி சமய வெறுப்பு நடவடிக்கைகள் காவல் துறையினர் மேலும் விழிப்புடன் செயல்படவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளன. சமுதாயத்தில் அமைதி நிலவிடச் செய்யவேண்டிய தார்மீகக் கடமை காவல் துறைக்கு உண்டு.

*14.3.* மத அடிப்படைவாதிகளின் அபாயகரமான செயல்பாடுகளையும், அவற்றால் விளையும் தீமைகளையும் கண்டிப்பதில் அரசுக்கும், பிற அரசியல் கட்சிகளுக்கும் கருத்து வேறுபாடு இல்லை. சமூக, மத விரோதச் சக்திகளை வேரோடு



களைந்தெறிவதிலும், அவர்கள் செய்யும் கொடூரக் கொலைகளைத் தடுப்பதிலும் காவல் துறைக்கும், அரசுக்கும் அணு அளவுகூடத் தயக்கம் இல்லை. இந்தப் பணியில் காவல் துறையின் உளவுப் பிரிவும் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இப்பணியைச் சீரிய முறையில் ஆற்ற முழு அதிகாரத்தைக் காவல் துறைக்கு அரசு அளித்துள்ளது. வேண்டிய உதவிகளையும் செய்துள்ளது. இதன் விளைவாகச் சென்ற ஆண்டு சட்டம்-ஒழுங்கு சீரிய முறையில் பராமரிக்கப்பட்டது. இந்த ஆண்டும் அதேபோல் பராமரிக்கப்படும்.

*14.4.* குற்ற நிகழ்வுகளைத் தடுத்து தமிழக மக்களிடையே அமைதி நிலவச் செய்யும் முக்கியப் பணியில் ஈடுபட்டுள்ள காவல் துறையினருக்குத் தமிழக மக்கள் தங்கள் முழு ஒத்துழைப்பையும் நல்கிட வேண்டும் என்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

## இணைப்பு-III

(96 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 16

## தீயணைப்புப் பணிகள் குறித்த

## கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000

### I. தீயணைப்புப் பணி-ஒரு கண்ணோட்டம்:

'தீ' என்னும் வார்த்தை அச்ச உணர்வைப் புகுத்தினாலும், அது நவீன உலகில் மனித இனத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. தீயின்றி வாழ்க்கை அமைவது இயலாத ஒன்றாகும். இந்த அழிவு சக்தியைக் கவனமுடன் கையாண்டால் அது மனித இனத்திற்கு அளவிடற்கரிய பயனை அளிக்கும்.

தீயின் அழிவுகளிலிருந்து உயிர் மற்றும் உடைமைகளைக் காக்கும் பணியை மேற்கொள்வதோடுமட்டுமின்றி, புயல், வெள்ளம், நிலசரிவு போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் காலங்கள் மற்றும் கலகங்கள், கலவரங்கள், தீ வைப்புகள் மற்றும் வெடிகுண்டு வெடிப்பு போன்ற நேரங்களிலும் இத்துறை முக்கியப் பணியாற்றுகிறது. இன்றைய நவீன சமுதாயத்தில் தீயைப்போன்று, தீயணைப்புத் துறையும தவிர்க்க இயலாத ஒன்றாகும்.

### II. நோக்கங்கள்

தீயணைப்புத் துறையின் முக்கியப் பணி தீ விபத்து ஏற்படும்போது தீயை விரைந்து அணைத்து, மக்களுக்குச் சேவை செய்வதாகும். இது தவிர, சட்ட ரீதியான பணிகள், முறைப்படுத்துதல் மற்றும் ஆலோசனை நல்குதல் போன்ற பணிகளையும் இத்துறை ஆற்றுகிறது. இத்துறையின் பணி உயிர் மற்றும் உடைமைகளைக் காப்பதோடு நின்று விடுவதில்லை. ஏனெனில், தீத்தடுப்பிலும் இது பெரும் பணியாற்றுகிறது இத்துறை உயிர் மற்றும உடைமைகளைக் காப்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளதால், இது பெரும்பாலும் அனைத்துத் துறைகளுடனும் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. இத்துறையின் ஆலோசனை நல்கும் பணி, பிற துறைகளைச் சார்ந்தோருக்கு, தீத்தடுப்பு முறைகளைப் பயிற்றுவிப்பது, மற்றும் அவைகளைச் செயல்படுத்த உதவிபுரிவது ஆகும். பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிமுறைகளில் கண்டுள்ளவாறு தீத்தடுப்பு முறைகள் கையாளப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தும்

வகையில் கட்டடங்களை ஆய்வு செய்யும் சட்ட ரீதியான பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. இத்தகு சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின்கீழ் 1998 ஆம் ஆண்டில் தீயணைப்பு அலுவலர்களால் ஆய்வு செய்யப்பெற்ற கட்டடங்களின் எண்ணிக்கை விவரம் இணைப்பு-6-ல் காட்டப்பட்டுள்ளது.

## III. நிருவாக அமைப்பு:

தமிழ்நாடு தீயணைப்புத் துறையானது, தமிழக அரசின் உள் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. கூடுதல் காவல் துறை இயககுநர் பதவி தரத்தில் இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த அலுவலர் இத்துறையின் இயக்குநராகத் தற்போது இருந்து வருகிறார். இத்துறையில் நான்கு துணை இயக்குநர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு மண்டலத்திற்குப் பொறுப்புவகித்து வருகின்றனர். இந்நான்கு மண்டலங்களின் தலைமையகங்கள், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் மொத்தம் 28 தீயணைப்புக் கோட்டங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு கோட்டமும், ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் கட்டுப்பாட்டில் உள்ளது. கோயம்புத்தூர்-நீலகிரி கோட்டம், இராமநாதபுரம்-சிவகங்கை கோட்டம் ஆகியவற்றின் கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் தவிர, இதர கோட்டத் தீயணைப்பு அலுவலர்களின் அதிகார வரம்பு ஒரு வருவாய் மாவட்ட அளவில் மட்டுமே உள்ளது. ஒவ்வொரு கோட்டத்திலும் 4 முதல் 16 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. 13 கோட்டங்களில் நடமாடும் பழுதுபார்க்கும் குழுக்களும், 12 கோட்டங்களில் தீத்தடுப்புக் குழுக்களும் அமைந்துள்ளன. சென்னையில் ஒரு மாநிலப் பட்டறையும், மாநிலப் பயிற்சிப் பள்ளியும இயங்குகின்றன. அவை, ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பில் உள்ளன. நிருவாக அமைப்பை விளக்கும் வரைபடம் இணைப்பு 1-ல் சேர்க்கப்பட்டுள்ளது.

## IV. ஒருங்கிணைக்கப்பட்ட செயல்பாடு அணுகுமுறைகள்:

இத்துறையின் அடிப்படை அமைப்பு, தீயணைப்பு நிலையமாகும். மாநிலத்தில் தற்பொழுது 277 தீயணைப்பு நிலையங்கள் இணைப்பு-4-ல் குறிப்பிட்டுள்ளவாறு செயல்பட்டு வருகின்றன. தீயழைப்புகளுக்கு உடனே செவி சாய்ப்பது, தீத்தடுப்பு நடவடிக்கைகள் வெற்றிபெற உறுதியளிக்கும் என்பதால், அதிகமான தீயணைப்பு நிலையங்கள்



திறப்பதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் 47 தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பெற்றதன் மூலம் அரசின் இந்த உணர்வு வெளிப்படுகிறது. தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்பொழுது, உயிர் மற்றும் உடைமைகளின் இழப்புகள் குறைந்திட வாய்ப்புள்ளது. தீயணைப்பு நிலையங்கள் திறக்க தற்பொழுது கடைப்பிடிக்கப்பெற்றுவரும் அளவுகோல்கள் பின்வருமாறு:

(1) ஓரிடத்தில் தீயணைப்பு நிலையம அமைக்கப்பட வேண்டுமானால் பொதுவாக அந்த இடத்திலிருந்து 25 கிலோ மீட்டருக்குள் வேறெந்த தீயணைப்பு நிலையமும் இருக்கக்கூடாது.

(2) தீ நிகழ்விடத்தை அடையும் நேரம், அதாவது தீ விபத்துச் செய்தி பெறப்பட்டு, தீயணைப்பு வண்டி, தீ விபத்திடத்தை அடையும் நேரம் 10 நிமிடங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(3) மக்கள் தொகை அவ்விடத்தில் 50,000 இருக்க வேண்டும்.

(4) கடந்த ஐந்தாண்டுகளில், ஆண்டொன்றுக்குக் குறைந்தது ஒரு பெரும் தீ விபத்தாவது நிகழ்ந்திருக்க வேண்டும். அதில் சேதமான உடைமைகளின் மதிப்பு ரூ. 50,000-க்கு அதிகமாக இருந்திருக்க வேண்டும் அல்லது மனித உயிரிழப்பு ஏதேனும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

## V. அமைப்பில் உள்ள அடிப்படை வசதிகள்:

### (அ) மனித ஆற்றல்

இத்துறையின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 6,720 ஆகும். பணியாளர்களின் எண்ணிக்கை பற்றிய தனித்தனி விவரங்கள் இணைப்பு 2 மற்றும் 3-ல் அளிக்கப்பட்டுள்ளன. துணை இயக்குநர், கோட்டத் தீயணைப்பு அலுவலர், தானியங்கிப் பொறியாளர் (மாநிலப் பட்டறை) நிலையத் தீயணைப்பு அலுவலர், இளநிலை உதவியாளர்-தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பதவிகளுக்கான நேரடி நியமனம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தாலும், தீயணைப்போர் பதவிக்கான நேரடி நியமனம் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தாலும் செய்யப்படுகின்றன.

### (ஆ) இயந்திர ஆற்றல்

பெருநகர்களின் விரிவாக்கம், வளர்ச்சி காரணமாக எதிர்பார்க்கப்படும் பேராபத்து சமபவங்களைச் சமாளிப்பதற்காக, நவீன சாதனங்களை வாங்குவதில் இத்துறை சாதனை படைத்துள்ளது. பொது ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெற்ற கடன் மூலம் 42 மீட்டர் மற்றும் 37 மீட்டர் உயரம் செல்லக்கூடிய ஹைட்ராலிக் பிளாட்பாரம் மற்றும சுழல்மேசை ஏணி ஊர்திகள் இரண்டு, பின்லாந்து நாட்டில் பிராண்டோ ஸ்கைலிப்ட்ஸ் நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்டு, சென்னையில் 23-07-98 முதல் பயன்பாட்டில் வைக்கப்பட்டுள்ளது. இத்துறையில், நீர்தாங்கி ஊர்திகள் 317, நோயாளர் ஊர்திகள் 78, கரிமவாயுக் கலவை, நுரை பீச்சும் 11 சிறு ஊர்திகள், அவசர கால மீட்பு ஊர்திகள் 4, ஹைட்ராலிக் ப்ளாட்பார்ம் 1 (இங்கிலாந்து நாட்டு சைமன் ஸ்நார்க்கல்) சுழல்மேசை ஏணி 1 (இசுசு-மோரிட்டா, ஜப்பான் தயாரிப்பு), நீர்விடுகுழாய் ஊர்தி 1 மற்றும் தண்ணீர் லாரிகள் 37 ஆகியவை தற்போது உள்ளன. இவை தவிர, அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ளதும், எளிதில் தூக்கிச் செல்லக்கூடியதுமான 228 பம்புகளும், நீர்தாங்கி ஊர்திகளுடன் எடுத்துச் செல்லத்தக்க 93 மிதவைப் பம்புகளும் துணை சாதனங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைத் தவிர, விபத்துக் காலங்களில் துறையின் தேவைகளை நிறைவு செய்ய கம்பியில்லாத் தந்தி பொருத்தப்பட்ட மோட்டார் வண்டிகள், ஜீப்புகள், பேருந்துகள், சிறுபேருந்துகள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற 55 துணை ஊர்திகளும் இயங்கி வருகின்றன.

திறமையான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்காக அதிக கொள்ளளவு கொண்ட தண்ணீர் லாரிகள் மற்றும் ஒரே நேரத்தில் அதிக அளவில் நீர் வெளியேற்றும் திறனுள்ளதும், எளிதில் தூக்கிச் செல்லக்கூடியதுமான பம்புகளுடன் இணைக்கப்பட்ட சுருங்கும் நீர்த் தொட்டிகள், காற்றடைக்கப்பட்ட மிதவைப் படகுகள், ஆழமற்ற நீரிலும்கூட பயன்படுத்தத்தக்க வகையில் குறைந்த எடையுள்ள இயந்திர விசைப்படகுகள் போன்ற நவீன சாதனங்களும பயன்பாட்டில் உள்ளன. இதனுடன் சேர்ந்து உபயோகிக்கத்தக்க தரமான உயிர்காப்பு மிதவைகள், தற்காப்பு மிதவை, மேலங்கி மற்றும் டெரிலின் கயிறுகளும் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. நவீன நச்சு வாயு கண்டுபிடிப்பான்கள், பல்வகை நச்சு வாயு கண்டுபிடிப்பான்கள், காற்று சுவாசக் கருவிகள் ஆகியவை, குறிப்பாக தீ விபத்தின் விளைவாக ஏற்படும் புகை





மண்டலங்களிலும், எளிதில் தீப்பற்றக்கூடிய எரிவாயு, சிலிண்டர்கள் சேமிப்புக் கிடங்குகளிலும் சிக்குண்டவர்களை மீட்க ஏதுவாக மீட்புப் பணிபுரிய பயன்படுத்தப்படுகின்றன. மற்றும் இரசாயன தீத்தடுப்பு உடைகள், கையில் ஏந்தும் தலைக் கவசமாக அணிந்து பயன்படுத்தக்கூடிய வெப்பதத்துவ பொருள் கண்டுபிடிப்பான் (Hand held helmet type Thermal Imaging Camera), மின்ரம்பங்கள், குவிஒளி விளக்குகள் (Focus Lamps), சிறப்பு மீட்புக் கருவிகள், இடிபாடுகளுக்கிடையே சிக்கியுள்ள மனிதர்களைக் கண்டுபிடிக்கும் கருவிகள், மின் உற்பத்தி இயந்திரம் உள்ள புகை போக்கிக் கருவிகள் ஆகியவைகளும பயன்பாட்டில் உள்ளன.

### VI. தகவல் தொடர்பு

விரைவான செய்தித் தொடர்பு தீயினால் ஏற்படும் இழப்பைக் குறைத்திடச் செய்யும். இதற்கு விபத்து குறித்த துரிதமான தகவல் தொடர்பும், ஊர்திகள் பணியாளர்களுடன் தீ நிகழ்விடத்தை விரைந்து சென்றடைவதும் அவசியமாகிறது. எனவே, விரைவுத் தகவல் தொடர்பிற்காக, ஒவ்வொரு தீயணைப்பு நிலையமும் அவசர தொலைபேசி இணைப்பு வசதியுடன் செயல்படுகிறது. அதிலும் குறிப்பாக, பெரும்பான்மையான தீயணைப்பு நிலையங்களுக்கு அவசர தொலைபேசி அழைப்பு எண் '101' வழங்கப்பட்டுள்ளது. மேலும், தீயணைப்புத் துறைக்கு கம்பியில்லாத் தந்தி தகவல் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தியுள்ளது. இதன்கீழ், சென்னை மாநகரில் வாக்கி-டாக்கி கருவிகளுடன் 74 கம்பியில்லாத் தந்தி கருவிகளும், மாவட்டங்களில் 183 கம்பியில்லாத் தந்தி கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன. தீ விபத்து இடத்திற்குச் சென்றடையும் நேரத்தைக் குறைக்க ஏதுவாக தனியாக ஒரு தகவல் தொடர்பு மையம் ஏற்படுத்தப்பட்டு, 1-8-1998 முதல் இயங்கி வருகிறது.

மாநிலத்தில் ஏனைய தீயணைப்பு நிலையங்களில் மீவுயர் அலைவரிசையுடன்கூடிய கருவிகள் பொருத்தப்படும் திட்டமும் உள்ளது. தீ வைத்தல் மற்றும் விபத்து ஏற்பட்ட இடத்தில் தீயணைப்புப் பணி மற்றும் மீட்புப் பணி சாதனை பற்றி ஆய்வு செய்வதற்காக நிழற்படப் பிரிவுகள் சென்னை மாநகரில் இரண்டு ஏற்படுத்தப்பட்டு, 1-7-1998 முதல் செயல்பட்டு வருகின்றன.

**VII. பயிற்சி வசதிகள்:**

சென்னையிலுள்ள மாநிலப் பயிற்சிப் பள்ளியை, ரூ. 4.00 கோடி செலவில் நாகபுரி தேசிய தீயணைப்புக் கல்லூரிக்கு இணையாக மேம்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. பயிற்றுவிப்பதற்கான புத்தகங்கள் மற்றும் சாதனங்கள் வாங்கப்பட்டுள்ள நிலையில், கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அனைத்துப் பதவித்தரங்களையும் சேர்ந்த தீயணைப்புத் துறைப் பணியாளர்களுக்கு முறையாகப் பயிற்சி அளிப்பதற்கு உரிய நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது.

**VIII. ஆற்றிய பணிகள்:**

**(அ) தீத்தடுப்பு நடவடிக்கைகள்**

தமிழ்நாடு தீயணைப்புத் துறையின் முதன்மையான பணி தீயைத் தடுப்பதாகும். இந்நோக்கத்தை எய்துவதற்காக, இம்மாநிலத்தில் 12 இடங்களில் தீத்தடுப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் வசிப்பவர்களுக்குத் தீ விபத்து ஏற்படாமல் தடுப்பது பற்றி எடுத்துரைப்பதே இப்பிரிவுகளின் முக்கியப் பணியாகும்.

கோடைக் காலத்தில் தீ விபத்து ஏற்படக்கூடிய இடங்களில் புறத் தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்துவதன் மூலம், மாநகரில் குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. இப்புறத் தீயணைப்பு நிலையங்களுக்கு பற்கோல், கூரைக்கொக்கி, எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய பம்புகள், நகரும் அல்லது சுருங்கும் நீர்த் தொட்டிகள் போன்ற எளிமையான தீத்தடுப்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது இருக்கும் பணியாளர்களின் உதவியுடன் இப்புறத் தீயணைப்பு நிலையங்கள் இரவு, பகலாக ஆண்டு முழுவதும் பணியாற்றுகின்றன. கம்பியில்லாத் தந்தி அமைப்புகள் இப்பகுதிகளைத் தொடர்ந்து விழிப்புடன் கண்காணிகக உதவுகின்றன.

பள்ளிகள், மகளிர் நிறுவனங்கள், கிராமங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் விரிவான தீத்தடுப்புப் பிரச்சாரங்கள் நடத்தப்படுகின்றன. இதுதவிர, பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின்கீழ், குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படுகிறது.



**(ஆ) மீட்பு அழைப்புகள்:**

பல சோதனையான சூழ்நிலைகளில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நேரத்தில் உதவி அளிப்பதில் இத்துறை தனக்கென சிறந்த பெயரைத் தேடிக் கொண்டுள்ளது. 1998 ஆம் ஆண்டில் 3593 மீட்பு அழைப்புகள் வரப்பெற்றன. இம்மீட்பு அழைப்புகள் பெரும்பாலும், சாலை/இரயில் விபத்துகளில் சிக்குண்டு உயிருக்குப் போராடுவோரை மீட்கவும், தண்ணீர் வற்றிய ஆழமான கிணறுகளில் விழுந்து விட்டவர்களை மீட்கவும், நச்சு வாயுவைச் சுவாசிததால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கவும், புயல்/வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கவும், கட்டட இடிபாடுகளில் சிக்குண்டவர்களை மீட்கவும், பூச்சிகள் மற்றும் நச்சு வண்டுகளின் தாக்குதலிலிருந்து பொது மக்களை மீட்டுக் காக்கவும், நீரில் மூழ்கிய வளர்ப்புப் பிராணிகளை உயிருடன் மீட்கவும், பூட்டிய வீட்டினுள் அகப்பட்டுக் கொண்ட சிறார்களை மீட்கவும், தானியங்கித் தூக்கிகளில் சிக்குண்டவர்கள், நிலச்சரிவுகளில் அகப்பட்டவர்கள், கிணறு தோண்டும்போது மண் சரிந்து அகப்பட்டுக் கொண்டவர்கள் முதலியோரை மீட்கவும், தீயணைப்புத் துறையின் சேவையை உடனடியாகக் கோரும் மீட்பு அழைப்புகளாகும். நவீன மீட்புக் கருவிகளையும், சாதனங்களையும், மேம்பட்ட தொழில்நுட்பத் திறமையையும் பயன்படுத்தி, தீயணைப்புத் துறைப் பணியாளர்கள், மொத்தம் 4,633 உயிர்களைக் காப்பாற்றியுள்ளனர். கடந்த ஆண்டில் இவ்வாறு காப்பற்றப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4505 ஆகும். கடந்த ஆண்டில் பெய்த வரலாறு காணாத பெரும் மழையின் விளைவாக, இம்மாநிலத்தின் பெரும் பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கின. இத்துறைப் பணியாளர்கள், தக்க தருணத்தில் விரைந்து நீரை வெளியேற்றி, மூழ்கிய மக்களை மீட்டு, புரிந்த நற்பணி அனைத்துத் தரப்பு மக்களின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது.

**(இ) தீயணைப்பு அழைப்புகள்:**

இத்துறை, கடந்த ஆண்டில் 15,146 தீயணைப்பு அழைப்புகளை ஏற்றுச் செயல்பட்டது. இக்கால அளவில், மாநிலம் முழுவதும் தீயினால் ஏற்பட்ட பொருள் இழப்பு அல்லது சேதத்தின் மதிப்பு சுமார் ரூ. 21.77 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. தீயின் அழிவினின்று மீட்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ஏறத்தாழ 175.34 கோடி ரூபாய் ஆகும். 1997 ஆம் ஆண்டிலும், 1998 ஆம் ஆண்டிலும் வரப்பெற்ற

தீயணைப்பு அழைப்புகளின் விவரங்கள் இணைப்பு 5-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 1998ஆம் ஆண்டில் நிகழ்ந்த தீ விபத்துகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்விலிருந்து கீழ்க்காணும் விவரங்கள் தெரிய வருகின்றன.

1. வீடுகளில் ஏற்பட்ட தீ விபத்துகள் 40.24 சதவீதம் ஆகும். இவற்றில் பெரும்பகுதி குடிசைப் பகுதிகளில், குறிப்பாக கோடை காலத்தில ஏற்பட்டவையாகும்.

2. தொழிற்சாலைகளில் ஏற்பட்ட தீ விபத்துகள் சுமார் 4.45 சதவீதம் ஆகும்.

3. இதர தீ விபத்துகள் 55.31 சதவீதம் ஆகும்.

**(ஈ) கட்டண அழைப்புகள்:**

இம்மாநிலத்தில் செயல்படும் மொத்தம் 277 தீயணைப்பு நிலையங்களில், 78 தீயணைப்பு நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் நோய்வாய்ப்பட்டவர்களையும், காயமடைந்தவர்களையும் அவசர சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப் பயன்பட்டு வருகின்றன. இப்பணி நியாயமான வாடகையில் பொதுமக்களுக்குக் கிடைக்கிறது. 1998 ஆம் ஆண்டில் தீயணைப்பு நிலைய நோயாளர் ஊர்திகள் 1,518 அழைப்புகளை ஏற்றுச் செயல்பட்டன. அவற்றுக்கு ரூ. 1,58,058/- வாடகைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

**(உ) பொது நலனைக் கருதி ஆயத்த நிலைத் தீயணைப்பு ஊர்தி நிறுத்தப்பணி:**

மிக முக்கிய பிரமுகர்களின் வருகையின்போதும், முக்கிய கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களின்போதும், மொத்தத்தில் 749 பாதுகாப்பு ஏற்பாடுகளும், ஆயத்த நிலை தீயணைப்பு ஊர்தி நிறுத்தப் பணிகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

**(ஊ) தனியாருக்கு ஆயத்த நிலைத் தீயணைப்பு ஊர்தி நிறுத்தப்பணி:**

தனியார்களின் கோரிக்கைகளின் அடிப்படையில், கட்டணம் வசூலித்து, அவர்களது கோயில், குடும்ப விழாக்கள், திரைப்பட படப்பிடிப்பு ஆகியவற்றுக்கு மொத்தம் 669 முறை ஆயத்த நிலை தீயணைப்பு ஊர்தி நிறுத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ. 18,78,813/- வசூலிக்கப்பட்டது.



**IX. துறையின் செயல் நோக்கத்துடன் பணியாளர்களின் செயல்திறனை ஒருங்கிணைத்தல்:**

இத்துறையின் நோக்கங்களை அடைய ஏதுவாக, இத்துறைப் பணியாளர்களை மேலும் திறம்படப் பணிபுரிய ஊக்குவிப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊக்கத் தொகைகள் அளிக்கப்படுவதுடன் நலத் திட்டங்களின்கீழ் உதவித் தொகைகளும் அளிக்கப்படுகின்றன:

**ஊக்கத் தொகைகள்**

**(அ) விருதுகளும், வெகுமதிகளும்**

தீயணைப்புத் துறையினர் போற்றத்தக்க வகையில், கடமை உணர்வுடனும், அஞ்சா நெஞ்சத்துடனும் ஆற்றிய பணியினைப் பாராட்டும் வகையில், மாநில அரசு ஏற்படுத்திய பின்வரும் விருதுகள், தமிழ்நாடு தீயணைப்புத் துறை அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டன:

**(1) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்)**

| பதவித் தரம் | 1998-ல் வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கோட்டத் தீயணைப்பு அலுவலர் | 1 |
| உதவிக் கோட்ட தீயணைப்பு அலுவலர் | 1 |
| நிலையத் தீயணைப்பு அலுவலர் | 1 |
| முன்னணித் தீயணைப்போர் | 2 |
| எந்திரக் கம்மியர் ஓட்டுநர் | 1 |
| தீயணைப்போர் ஓட்டுநர்கள் | 2 |
| தீயணைப்போர் | 1 |

இப்பதக்கம் பெற்றவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப ரூ. 2,000/- முதல் ரூ. 5,000/- வரை ஒட்டுமொத்த மானியம் பெறத் தகுதியுடையவராவார்கள்.

**2. தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பதக்கம் (பொங்கல்-1999):**

| பதவித் தரம் | 1998-ல் வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை |
|---|---|
| முன்னணித் தீயணைப்போர் | 21 |
| எந்திரக் கம்மியர் ஓட்டுநர் | 4 |
| தீயணைப்போர் ஓட்டுநர்கள் | 34 |
| தீயணைப்போர் | 21 |

இப்பதக்கம் பெறும் தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவியில் உள்ளோர் ஒவ்வொருவருக்கும் மாதாந்திர ரொக்கப்படியாக ரூ. 40/-ம், முன்னணித் தீயணைப்போர்/எந்திரக் கம்மியர் ஓட்டுநர், தீயணைப்போர் ஓட்டுநர்/தீயணைப்போர், எந்திரக் கம்மியர் ஆகிய ஒவ்வொருவருக்கும் ரூ. 50/-ம் வழங்கப்படுகிறது.

**3. மாநில விருதுகள் தவிர, தீயணைப்புப் பணியாளர்களுக்கு மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட விருதுகளும் வழங்கப்படுகின்றன.**

(அ) 1998ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று வழங்கப்பட்ட பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பதக்கம்:

| | |
|---|---|
| நிலையத் தீயணைப்பு அலுவலர் | 1 |
| முன்னணித் தீயணைப்போர் | 2 |
| எந்திரக் கம்மியர் ஓட்டுநர் | 1 |
| தீயணைப்போர் ஓட்டுநர்கள் | 1 |
| தீயணைப்போர் | 1 |

(ஆ) 1999 ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று வழங்கப்பட்ட பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பதக்கம்:

| | |
|---|---|
| 1. கோட்டத் தீயணைப்பு அலுவலர் | 1 |
| 2. முன்னணித் தீயணைப்போர் | 1 |
| 3. எந்திரக் கம்மியர் ஓட்டுநர் | 1 |
| 4. தீயணைப்போர் ஓட்டுநர் | 1 |





**(ஆ) நலத் திட்டங்கள்:**

**(1) தீயணைப்புத் துறை நல நிதி**

தீயணைப்புத் துறையில் துயருக்கு ஆளான நிலையிலுள்ள பணியாளர்களுக்கு நிதி உதவி செய்வதற்கென 1962ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத் துறை நல நிதி ஏற்படுத்தப்பட்டது. இந்நிதி அவர்களது நலனையும் மேம்படுத்துகிறது. இதன் உறுப்பினர்களுக்குப் பின்வரும் தேவைகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது:--

(அ) காசநோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் அவதியுறும தீயணைப்புப் பணியாளர்களுக்கும் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் சத்துணவு வழங்க.

(ஆ) அவர்களின் குழந்தைகளது உயர் கல்விச் செலவிற்கு.

(இ) மரணமுற்ற உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க.

(ஈ) உறுப்பினர்களோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால், அவர்களது ஈமச் சடங்கு செலவிற்கு.

இத்திட்டத்தில் 5,238 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். அரசு, இத்துறைக்கு ஒவ்வோர் ஆண்டும் ரூ. 1,50,000/- மானியமாக அளிக்கிறது. இதனைத் தவிர, உறுப்பினர்களிடமிருந்து சந்தாத் தொகையாக ரூ. 94,610 வசூலிக்கப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிவாரணத் தொகை ரூ. 1,06,194 ஆகும்.

**2. குடும்ப நல நிதித் திட்டம்:**

பணியிலிருக்கும்போது உயிர் துறக்கும் பணியாளர் குடும்பத்தினருக்கு குடும்ப நல நிதித் திட்டத்தின்கீழ் அரசு அளிக்கும் ரூ. 1,00,000 தவிர, உள்(காவல்-17) துறையின் 16-12-1998-ஆம் நாளிட்ட 1969 ஆம் எண் அரசாணையில் தீயணைப்புப் பணியாளர்களுக்குப் பின்வரும் நிவாரணம் வழங்க அரசு ஒப்பளித்துள்ளது:--

[1999 மே 7

(அ) பணியிலிருக்கும்போது உயிர்துறக்கும் தீயணைப்புப் பணியாளர்களின் குடும்பத்திற்கு .. ரூ. 2,00,000

(ஆ) பணியிலிருக்கும்போது நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளவர்களுக்கு .. ரூ. 50,000

(இ) பணியிலிருக்கும்போது கடுமையாகக் காயமடைந்தவர்களுக்கு .. ரூ. 10,000

(ஈ) பணியிலிருக்கும்போது சிறு காயமடைந்தவர்களுக்கு.. ரூ. 5,000

**3. தொகுதிக் காப்புறுதித் திட்டம்:**

பணியிலிருக்கும்போது உயிர்துறக்கும் தீயணைப்புத் துறை பணியாளரின் குடும்பத்திற்கு நிவாரணம் அளிப்பதற்காக, தீயணைப்புத் துறை இயக்குநர் முதல் தீயணைபோர் வரையிலான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் (அமைச்சுப் பணியாளர்கள் நீங்கலாக) அனைவருக்கும், தொகுதிக் காப்புறுதித் திட்டம் ஒன்று அறிமுகப்படுததப்பட்டுள்ளது. . உயிர்துறக்கும் பணியாளரின் குடும்பத்திற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ. 1,00,000 அளவிற்கு நிவாரணம் அளிக்கப்படுகிறது.

**4. உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ், உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவித் தரம் வரையிலான பணியாளர்களுக்கு அரிசி, கோதுமை, ரவை, மைதா, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. இதற்காக ஆண்டொன்றுக்குச் சராசரியாக ரூ. 32,15,000 அரசு மானியமாகச் செலவிடுகிறது.

**5. குடியிருப்புகள் கட்டுதல்:**

தீயணைப்புப் பணியாளர்களின் செயல்திறனைத் தொடர்ந்து பாதுகாத்து வருவதற்காகவும், தேவை ஏற்படும்போது அவர்களை விரைவாகப் பணிக்கு அழைக்கவும், அவர்களுக்குத் தீயணைப்பு நிலையங்களின் அருகிலேயே குடியிருப்புகள் அளிப்பது இன்றியமையாததாகும். தற்போது, அரக்கோணம், உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி, அசோக் நகர், வண்ணாரப்பேட்டை,



1999 மே 7]

நந்தனம், பெரம்பலூர், நாகப்பட்டினம், அண்ணா நகர் (மேற்கு), மயிலாப்பூர், தாம்பரம், தருமபுரி, மதுரை மற்றும் மணலி ஆகிய இடங்களில் குடியிருப்புகள் உள்ளன. மேலும் உள்(காவல் 17) துறையின், 29-9-1998ஆம் நாளிட்ட 1361ஆம் எண் அரசாணையில், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் முதல் கட்டமாக 100 குடியிருப்புகள் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு 100 குடியிருப்புகள் கட்ட. கீழே குறிப்பிட்டுள்ள 6 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:--

| | | |
|---|---|---|
| 1. | நுங்கம்பாக்கம் | 14 |
| 2. | விழுப்புரம் | 17 |
| 3. | திருவல்லிக்கேணி | 17 |
| 4. | பெரியகுளம் | 17 |
| 5. | கோயம்புத்தூர்-தெற்கு | 18 |
| 6. | தேனாம்பேட்டை | 17 |

இதற்கான நிருவாக அனுமதி உள்(காவல்-17) துறையின் 1-2-1999-ஆம் நாளிட்ட 113ஆம் எண் அரசாணையில் வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டுமானப் பணி தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்படட்டுள்ளது.

**X. இவ்வரசு பொறுப்பேற்ற பின் வழங்கியுள்ள வசதிகளும், பயன்களும்:**

பொதுமக்களின் நலன்கருதி பணியின் தரத்தை மேம்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்த இவ்வரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், இத்துறையின் பணித் தரத்தை மேம்படுத்த கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

1. மிகக் குறைந்த கால அளவிற்குள் ஒருர்தி கொண்ட 47 புதிய தீயணைப்பு நிலையங்கள் மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளன.

2. குறுகிய காலத்திற்குள் கீழ்க்காணும் மாவட்டங்களில் ஆறு புதிய கோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன:

(i) கரூர் மாவட்டம்

(ii) பெரம்பலூர் மாவட்டம்

(iii) திருவள்ளூர் மாவட்டம்

(iv) திருவாரூர் மாவட்டம்

(v) தேனி மாவட்டம்

(vi) நாமக்கல் மாவட்டம்

3. 1,070 தீயணைப்புப் பணியாளர்கள் பணியில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

4. மறைமலை நகரில் உள்ள தீயணைப்பு நிலையம் ரூ. 46.00 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

5. ரூ. 4.60 கோடி செலவில் புதிதாக 18 நீர்தாங்கி வண்டிகளும், நுரை பீச்சும் சிறு ஊர்தி ஒன்றும் வாங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

6. 1997-98 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்த புதிய தீயணைப்பு நிலையங்களுக்காக ரூ. 6.4 கோடி செலவில் 26 நீர்தாங்கி வண்டிகளை வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

7. பல மாடிகள் கொண்ட உயரமான கட்டடங்களில் தீயை அணைக்கவும், அவ்வாறு ஏற்படும் தீ விபத்தின்போது கட்டடத்தின் உள்ளே சிக்கிக் கொண்டவர்களை மீட்கவும், இரண்டு அதி நவீன ஹைட்ராலிக் பிளாட்பார்ம் மற்றும் சுழல் மேஜை ஏணி வண்டிகளை 4.76 கோடி ரூபாயில் வாங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

8. திருவண்ணாமலை தீயணைப்பு நிலையத்திற்கு ரூ. 27.12 இலட்சம் செலவில் நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

9. சென்னையில் தற்போதுள்ள பயிற்சிப் பள்ளி, மத்திய உதவி மானியத் திட்டத்தின்கீழ் ரூ. 4.00 கோடி செலவில், மண்டலப் பயிற்சி மையமாக நிலை உயர்த்தப்பட்டு, தாம்பரத்திற்கு மாற்றப்படவுள்ளது. 1996-97-ல் இத்திட்டத்திற்காக, ரூ. 80.00 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1997-98-ல் இரண்டாம் கட்டமாக ரூ. 1.00 கோடி மற்றும் 1998-99-க்கு ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



10. முன்பு அரசு அலுவலகங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள தீயணைப்புச் சாதனங்கள் தனியார் நிறுவனங்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வந்தன. இவ்வகையில் ஒரு தீயணைப்புச் சாதனத்திற்கு ஆகும் பராமரிப்புச் செலவு ரூ. 850/- வரை இருந்தது. தீயணைப்புச் சாதனங்களை உரியவாறு பராமரிக்க, அரசு அலுவலகங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள் அனைத்திலுமுள்ள தீயணைப்புச் சாதனங்களைப் பராமரிக்கும் பணியினை சாதனம் ஒன்றுக்கான செலவு ரூ. 300/- என்ற வீதத்தில், தீயணைப்புத் துறைப் பணியாளர்களைக் கொண்டே மாநிலம் முழுவதும் செய்திட இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வகையில் கிடைக்கும் வருவாயில் 90 சதவீதம் அரசின் கணக்கில் செலுத்தப்படும், மீதமுள்ள 10 சதவீதம் இப்பணியில் ஈடுபடும் தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்கப்படும். இது தீயணைப்புத் துறையின் செயல்திறனை மேம்படுத்தவும் மற்றும் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும் மேற்கொள்ளப்பட்ட ஒரு புதிய முயற்சியாகும்.

11. விபத்து நிகழும் இடத்திற்கு விரைந்து செல்லுவதற்கு ஏதுவாக, மாநில அளவில் 60 உயர் மின்னலை தகவல் தொடர்புக் கருவிகளை ரூ. 20.52 இலட்சம் செலவில் வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

12. சென்னை மாநகரில் இயங்கிவரும் தீத்தடுப்புக் குழுக்கள் இரண்டிற்கு ரூ. 5.0 இலட்சம் செலவில் இரு புகைப்படப் பிரிவுகளை உருவாக்க, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. (காண்க-அரசாணை எண் 690, உள் (காவல்-17) துறை, நாள் 4-6-1998)

13. திருச்சிராப்பள்ளி, வேலூர், தருமபுரி, காஞ்சிபுரம், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல் ஆகிய ஆறு கோட்டங்களில் தீத் தடுப்புக் குழுக்களைப் புதிதாக ஏற்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. (காண்க-அரசாணை எண் 686, உள் (காவல் 17) துறை, நாள் 4-6-1998)

14. வில்லிவாக்கம் தீயணைப்பு நிலையத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் மேனிலை நீர்த் தொட்டியுடன்கூடிய ஆழ்குழாய்க் கிணறு ரூ. 2.93 இலட்சம் செலவில் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. (காண்க-அரசாணை எண் 688, உள் (காவல் 17) துறை, நாள் 4-6-1998)

15. தண்டையார்பேட்டை தீயணைப்பு நிலையத்திற்கு ஆழ்குழாய்க் கிணறு ரூ. 1.71 இலட்சம் செலவில் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. (காண்க-அரசாணை எண் 687, உள் (காவல் 17) துறை, நாள் 4-6-1998)

16. வீட்டுவசதி நிதிக் கழகத்திடமிருந்து கடன் பெற்று, தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 100 குடியிருப்புகள் வீதம், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தினால் கட்டி வழங்க அரசு கொள்கை முடிவு மேற்கொண்டு, முதற்கட்டமாக 1998-99-ல் மொத்தம் ரூ. 3.30 கோடி செலவில் 6 இடங்களில் 100 குடியிருப்புகள் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்துள்ளது.

17. வ.உ.சி. நகர், கள்ளக்குறிச்சி, வேலூர், திருச்சி மற்றும் சிதம்பரம் ஆகிய 5 தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம் ரூ. 150.17 இலட்சம் செலவில் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது (காண்க-அரசாணை எண் 1028, உள் (காவல் 17) துறை, நாள் 31-7-1998)

## XI. 1999-2000 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட புதிய திட்டங்கள்

1. இராயபுரம், கொருக்குப்பேட்டை பகுதியில ரூ. 35.00 இலட்சம் செலவினத்தில் ஒரு புதிய தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துதல்.

2. மைலாப்பூர், திருவான்மியூரில் ரூ. 35.00 இலட்சம் செலவினத்தில் ஒரு புதிய தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துதல்.

எந்தவொரு கோணத்தில் நோக்கினாலும், இத்துறை ஆற்றிவரும் பணி குறிப்பிடத்தகுந்த ஒன்றாம். 25 கி.மீ சுற்றளவிற்குள் ஒரு தீயணைப்பு நிலையம் என்னும் அளவுகோலுடன் தற்பொழுதுள்ள 277 தீயணைப்பு நிலையங்களுக்கும் சிறந்த தளவாடங்கள், கருவிகள் வழங்கச் செய்து அவற்றை நவீனமயமாக்குவதில் அரசு தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது. அரசின் இத்தகு செயல்பாடு, இத்துறை ஆற்றிவரும் பணியின் தரத்தினை மேலும் உயர்த்த வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

## இணைப்பு-1

## நிர்வாக அமைப்பு

### தமிழ்நாடு தீயணைப்புத் துறை இயக்குநர்

**துணை இயக்குநர், வட மண்டலம், சென்னை**
- கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்
- உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்
- நிலையத் தீயணைப்பு அலுவலர்கள்

**துணை இயக்குநர், மத்திய மண்டலம், திருச்சி**
- கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்
- உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்
- நிலையத் தீயணைப்பு அலுவலர்கள்

**துணை இயக்குநர், தென்மண்டலம், மதுரை**
- கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்
- உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்
- நிலையத் தீயணைப்பு அலுவலர்கள்

**துணை இயக்குநர், மேற்கு மண்டலம், கோயம்புத்தூர்**
- கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்
- உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்
- நிலையத் தீயணைப்பு அலுவலர்கள்

**இயக்குநர் அலுவலகம்**
1. துணை இயக்குநர் (நிருவாகம்)
2. நேர்முக உதவியாளர் (நிருவாகம்)
3. நேர்முக உதவியாளர் (பண்டகசாலை)
4. பணியாளர் அமைப்புப் பிரிவு
5. கணக்குப் பிரிவு
6. பொதுப் பிரிவு
7. நுணிக்கைப் பிரிவு
8. பண்டகசாலைப் பிரிவு
9. தீக்கட்டுப்பாட்டறை
10. கம்பியில்லாத் தந்திப் பிரிவு

| | தீநி | நபகு | தீதகு | புபி |
|---|---|---|---|---|
| 1. வடசென்னை | 13 | - | 1 | 1 |
| 2. தென்சென்னை | 10 | 1 | 1 | 1 |
| 3. காஞ்சிபுரம் | 9 | - | 1 | - |
| 4. திருவள்ளூர் | 13 | | - | - |
| 5. மா.ப.ப. | - | 1 | - | - |
| 6. வடமண்டலம் | - | 4 | - | - |
| மொத்தம் | 45 | 6 | 3 | 2 |

| | தீநி | நபகு | தீதகு |
|---|---|---|---|
| 1. திருச்சிராப்பள்ளி | 8 | - | 1 |
| 2. புதுக்கோட்டை | 11 | 1 | 1 |
| 3. தஞ்சாவூர் | 9 | - | - |
| 4. நாகப்பட்டினம் | 9 | - | - |
| 5. கடலூர் | 14 | 1 | - |
| 6. விழுப்புரம் | 11 | 1 | - |
| 7. கரூர் | 4 | - | - |
| 8. பெரம்பலூர் | 6 | - | - |
| 9. திருவாரூர் | 10 | - | - |
| மொத்தம் | 82 | 3 | 2 |

| | தீநி | நபகு | தீதகு |
|---|---|---|---|
| 1. மதுரை | 9 | - | - |
| 2. திருநெல்வேலி | 13 | - | - |
| 3. கன்னியாகுமரி | 7 | 1 | - |
| 4. தூத்துக்குடி | 9 | : | |
| 5. விருதுநகர் | 8 | - | 1 |
| 6. இராமநாதபுரம் | 16 | - | - |
| 7. தேனி | 8 | - | - |
| மொத்தம் | 70 | 2 | 1 |

| | தீநி | நபகு | தீதகு |
|---|---|---|---|
| 1. கோயம்புத்தூர் | 13 | 1 | 1 |
| 2. ஈரோடு | 10 | - | 1 |
| 3. சேலம் | 8 | - | 1 |
| 4. தருமபுரி | 10 | - | 1 |
| 5. திண்டுக்கல் | 8 | 1 | 1 |
| 6. வேலூர் | 15 | - | 1 |
| 7. திருவண்ணாமலை | 12 | - | - |
| 8. நாமக்கல் | 4 | - | - |
| மொத்தம் | 80 | 2 | 6 |

| | |
|---|---|
| மாநிலத்தின் மொத்த தீயணைப்பு நிலையங்கள் | 277 |
| மற்ற அலுவலகம்: மாநிலப் பயிற்சிப் பள்ளி | 1 |
| மாநில பட்டறை | 1 |
| இசைக் கருவிக் குழு | 1 |

குறிப்பு

தீநி - தீயணைப்பு நிலையம்

நபகு - நடமாடும் பழுது பார்க்கும் குழு

தீதகு - தீத்தடுப்புக் குழு

புபி - புகைப்படப் பிரிவு

1999 மே 7]

## இணைப்பு-2.

## நிருவாகப் பதவிகளின் விவரங்கள்

| தொடர் எண் | பதவியின் பெயர் | மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தியணைப்புத் துறை இயக்குநர் (இ.கா.ப) | 1 |
| 2. | தியணைபபுத் துறை துணை இயக்குநர் | 4 |
| 3. | கோட்டத் தியணைப்பு அலுவலர் | 29 |
| 4. | உதவிப் பொறியாளர் (தானியங்கி) | 1 |
| 5. | உதவிக் கோட்டத் தியணைப்பு அலுவலர் | 42 |
| 6. | நிலையத் தியணைப்பு அலுவலர் | 306 |
| 7. | நிலைய அலுவலர் (போக்குவரத்து) | 13 |
| 8. | உதவி நிலையத் தியணைப்பு அலுவலர் | 16 |
| 9. | முன்னணித் தியணைப்போர் | 727 |
| 10. | எந்திரக் கம்மியர் ஓட்டுநர் | 246 |
| 11. | தியணைப்போர் ஓட்டுநர் மற்றும் தியணைப்போர் எந்திரக் கம்மியர் | 1,037 |
| 12. | தியணைப்போர் மற்றும் அதற்குச் சமமான பதவிகள் | 3,987 |
| | **தகவல் தொடர்புக் குழு :** | |
| 13. | தகவல் தொடர்பு அலுவலர் | 1 |
| 14. | வான்தந்தி அலுவலர் | 1 |
| 15. | வான்தொழில்நுட்ப அலுவலர் | 1 |
| 16. | ரேடியோ இயக்குபவர் | 1 |
| 17. | மின்கலன் பொருத்துநர் | 1 |
| 18. | லஸ்கர் | 1 |
| | **மொத்தம் ..** | **6,414** |

## இணைப்பு-3

## அமைச்சுப் பணியாளர்களின் விவரங்கள்

| தொடர் எண் | பதவியின் பெயர் | மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துணை இயக்குநர் (நிருவாகம்) | 1 |
| 2. | தீயணைப்புத் துறை இயக்குநரது நேர்முக உதவியாளர் (நிருவாகம்) | 2 |
| 3. | கண்காணிப்பாளர் | 32 |
| 4. | உதவியாளர் | 90 |
| 5. | இளநிலை உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர்-தட்டச்சர் | 67 |
| 6. | சுருக்கெழுத்துத் தட்டச்சர் | 5 |
| 7. | தட்டச்சர் | 27 |
| 8. | பதிவுரு உதவியாளர் மற்றும் பதிவுரு எழுத்தர் | 31 |
| 9. | அலுவலக உதவியாளர் | 51 |
| | மொத்தம் .. | 306 |



## இணைப்பு-4.

## இம்மாநிலத்தில் இயங்கிவரும் தீயணைப்பு நிலையங்களின் பட்டியல்

| கோட்டத்தின் பெயர் (1) | தீயணைப்பு நிலையம் (2) |
|---|---|
| **1. வடமண்டலம், சென்னை** | |
| வடசென்னை | 1 எஸ்பிளனேடு |
| | 2. வண்ணாரப்பேட்டை |
| | 3. இராயபுரம் |
| | 4. தண்டையார்பேட்டை |
| | 5. செம்பியம் |
| | 6. வியாசர்பாடி |
| | 7. வ.உ.சி. நகர் |
| | 8. வேப்பேரி |
| | 9. கீழ்ப்பாக்கம் |
| | 10. எண்ணூர் |
| | 11. மணலி |
| | 12. தலைமைச்செயலகம் |
| | 13. அத்திப்பட்டு |
| தென்சென்னை | 1. எழும்பூர் |
| | 2. திருவல்லிக்கேணி |
| | 3. மைலாப்பூர் |
| | 4. தேனாம்பேட்டை |
| | 5. சைதாப்பேட்டை |
| | 6. கிண்டி |
| | 7. அசோக் நகர் |
| | 8. கோயம்பேடு |

தென்சென்னை—தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| | 9. | ஜெ.ஜெ. நகர் |
| | 10. | ராஜ்பவன் |
| காஞ்சிபுரம் | 1. | காஞ்சிபுரம் |
| | 2. | திருப்பெரும்புதூர் |
| | 3. | மதுராந்தகம் |
| | 4. | செங்கல்பட்டு |
| | 5. | மறைமலை நகர் |
| | 6. | உத்திரமேரூர் |
| | 7. | தாம்பரம் |
| | 8. | அச்சிறுபபாக்கம் |
| | 9. | திருக்கழுக்குன்றம் |
| திருவள்ளூர் | 1. | அம்பத்தூர் |
| | 2. | பொன்னேரி |
| | 3. | வில்லிவாக்கம் |
| | 4. | திருத்தணி |
| | 5. | திருவள்ளூர் |
| | 6. | கும்மிடிப்பூண்டி |
| | 7. | கும்மிடிப்பூண்டி சிப்காட் |
| | 8. | ஆவடி |
| | 9. | செங்குன்றம் |
| | 10. | பள்ளிப்பட்டு நகர் |
| | 11. | பூவிருந்தவல்லி |
| | 12. | பேரம்பாக்கம் |
| | 13. | திரூர் |

வடமண்டலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்கள் மொத்தம்–45



## 2. மத்திய மண்டலம், திருச்சிராப்பள்ளி

| | | |
|---|---|---|
| திருச்சிராப்பள்ளி | 1. | திருச்சிராப்பள்ளி |
| | 2. | திருவரங்கம் |
| | 3. | மணப்பாறை |
| | 4. | புள்ளம்பாடி |
| | 5. | நாவல்பட்டு |
| | 6. | லால்குடி |
| | 7. | துவரங்குறிச்சி |
| | 8. | உப்பிலியாபுரம் |
| கரூர் | 1. | கரூர் |
| | 2. | புகளூர் |
| | 3. | அரவக்குறிச்சி |
| | 4. | முசிறி |
| பெரம்பலூர் | 1. | பெரம்பலூர் |
| | 2. | துறையூர் |
| | 3. | அரியலூர் |
| | 4. | ஜெயங்கொண்டசோழபுரம் |
| | 5. | வேப்பூர் |
| | 6. | செந்துறை |
| கடலூர் | 1. | கடலூர் |
| | 2. | சிதம்பரம் |
| | 3. | பண்ருட்டி |
| | 4. | நெல்லிக்குப்பம் |
| | 5. | விருத்தாசலம் |
| | 6. | காட்டுமன்னார் கோயில் |
| | 7. | குறிஞ்சிப்பாடி |

கடலூர்—தொடர்ச்சி

8. திட்டக்குடி
9. கடலூர் சிப்காட்
10. வேப்பூர்
11. சேத்தியாதோப்பு
12. திருமுட்டம்
13. பரங்கிப்பேட்டை
14. மங்கலம்பேட்டை

விழுப்புரம்

1. விழுப்புரம்
2. கள்ளக்குறிச்சி
3. திண்டிவனம்
4 செஞ்சி
5. திருக்கோவிலூர்
6. சங்கராபுரம்
7. மரக்காணம்
8. உளுந்தூர்பேட்டை
9. திருவெண்ணெய் நல்லூர்
10. மேல்மலையனூர்
11. வானூர்

புதுக்கோட்டை

1. புதுக்கோட்டை
2. புதுக்கோட்டை சிப்காட்
3. அறந்தாங்கி
4. பொன்னமராவதி
5. ஆலங்குடி
6. திருமயம்
7. இலுப்பூர்



புதுக்கோட்டை—தொடர்ச்சி

8. கந்தர்வக்கோட்டை
9. கீரனூர்
10. ஜெகதாப்பட்டினம்
11. ஆவுடையார்கோவில்

தஞ்சாவூர்

1. தஞ்சாவூர்
2. கும்பகோணம்
3. பட்டுக்கோட்டை
4. ஒரத்தநாடு
5. திருக்காட்டுப்பள்ளி
6. பாபநாசம்
7. திருவிடைமருதூர்
8. பேராவூரணி
9. திருவையாறு

நாகப்பட்டினம்

1. நாகப்பட்டினம்
2. மயிலாடுதுறை
3. சீர்காழி
4. தரங்கம்பாடி
5. குத்தாலம்
6. வேதாரண்யம்
7. கீவளூர்
8. வேளாங்கண்ணி
9. பூம்புகார்

திருவாரூர்

1. மன்னார்குடி
2. நீடாமங்கலம்
3. திருத்துறைப்பூண்டி
4. திருவாரூர்

<u>திருவாரூர்</u>—தொடர்ச்சி

5. நன்னிலம்
6. குடவாசல்
7. கோட்டூர்
8. முத்துப்பேட்டை காயல்
9. கூத்தாநல்லூர்
10. வலங்கைமான்

மத்திய மண்டலத்திலுள்ள தியணைப்பு நிலையங்கள் மொத்தம்-82

### 3. தென்மண்டலம், மதுரை

<u>மதுரை</u>

1. மதுரை
2. தல்லாகுளம்
3. உசிலம்பட்டி
4. மேலூர்
5. திருமங்கலம்
6. சோழவந்தான்
7. கொட்டாம்பட்டி
8. அனுப்பானடி
9. கள்ளிக்குடி

<u>தேனி</u>

1. தேனி-அல்லிநகரம்
2. பெரியகுளம்
3. ஆண்டிப்பட்டி
4. கடமலைக்குண்டு
5. மயிலாடும்பாறை
6. உத்தமபாளையம்
7. கம்பம்
8. போடிநாயக்கனூர்



<u>இராமநாதபுரம்-சிவகங்கை</u>

1. இராமநாதபுரம்
2. பரமக்குடி
3. காரைக்குடி
4. தேவகோட்டை
5. சிவகங்கை
6. இராமேஸ்வரம்
7. திருவாடனை
8. முதுகுளத்தூர்
9. ஏர்வாடி
10. மண்டபம்
11. சிங்கம்புணரி
12. திருப்பத்தூர்
13. மானாமதுரை
14. ராசசிங்கமங்கலம்
15. கமுதி
16. சாயல்குடி

<u>விருதுநகர்</u>

1. விருதுநகர்
2. சிவகாசி
3. ராஜபாளையம்
4. அருப்புக்கோட்டை
5. திருவில்லிபுத்தூர்
6. சாத்தூர்
7. திருச்சுழி
8. வத்திராயிருப்பு

<u>திருநெல்வேலி</u>

1. பாளையங்கோட்டை
2. திருநெல்வேலி பேட்டை
3. தென்காசி

[1999 மே 7

**திருநெல்வேலி—தொடர்ச்சி**

4. கடையநல்லூர்
5. நாங்குநேரி
6. அம்பாசமுத்திரம்
7. சங்கரன்கோவில்
8. வாசுதேவநல்லூர்
9. வள்ளியூர்
10. செங்கோட்டை
11. சுரண்டை
12. சேரன்மகாதேவி
13. திசையன்விளை

**கன்னியாகுமரி**

1. நாகர்கோயில்
2. கன்னியாகுமரி
3. குழித்துறை
4. தக்கலை
5. குலசேகரம்
6. குளச்சல்
7. கொல்லங்கோடு

**தூத்துக்குடி**

1. தூத்துக்குடி
2. தூத்துக்குடி அனல்மின் நிலையம்
3. கோவில்பட்டி
4. திருச்செந்தூர்
5. திருவைகுண்டம்
6. சாத்தான்குளம்
7. விளாத்திகுளம்
8. கழுகுமலை
9. தூத்துக்குடி சிப்காட்

தென்மண்டலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்கள் மொத்தம்--70



1999 மே 7]

## 4. மேற்கு மண்டலம், கோயம்புத்தூர்

**கோயம்புத்தூர்-நீலகிரி**

1. கோயம்புத்தூர் தெற்கு
2. கோயம்புத்தூர் வடக்கு
3. பொள்ளாச்சி
4. திருப்பூர்
5. உடுமலைப்பேட்டை
6. மேட்டுப்பாளையம்
7. குன்னூர்
8. உதகமண்டலம்
9. கூடலூர்
10. வால்பாறை
11. பல்லடம்
12. கணபதி
13. திருப்பூர் (தெற்கு)

**ஈரோடு**

1. ஈரோடு
2. கோபிச்செட்டிபாளையம்
3. தாராபுரம்
4. காங்கேயம்
5. சத்தியமங்கலம்
6. பவானி
7. கொடுமுடி
8. வெள்ளக்கோயில்
9. பெருந்துறை
10. அந்தியூர்

[1999 மே 7

| | | |
|---|---|---|
| வேலூர் | 1. | வேலூர் |
| | 2. | அரக்கோணம் |
| | 3. | குடியாத்தம் |
| | 4. | இராணிப்பேட்டை |
| | 5. | திருப்பத்தூர் |
| | 6. | ஆம்பூர் |
| | 7. | வாணியம்பாடி |
| | 8. | இராணிப்பேட்டை சிப்காட் |
| | 9. | சோளிங்கர் |
| | 10. | நாட்ராம்பள்ளி |
| | 11. | ஆற்காடு |
| | 12. | பேரணாம்பட்டு |
| | 13. | காட்பாடி |
| | 14. | ஒடுக்கத்தூர் |
| | 15. | ஆலங்காயம் |
| திருவண்ணாமலை | 1. | திருவண்ணாமலை |
| | 2. | ஆரணி |
| | 3. | வந்தவாசி |
| | 4. | செங்கம் |
| | 5. | போளூர் |
| | 6. | செய்யாறு |
| | 7. | தண்டராம்பட்டு |
| | 8. | ஜவ்வாதுமலை |
| | 9. | பெரணமல்லூர் |
| | 10. | வேட்டவலம் |
| | 11. | பெண்ணாத்தூர் |
| | 12. | சேத்துப்பட்டு |



1999 மே 7]

| | | |
|---|---|---|
| சேலம் | 1. | சேலம் |
| | 2. | மேட்டூர் |
| | 3. | ஆத்தூர் |
| | 4. | மேட்டூர் அனல்மின் நிலையம் |
| | 5. | சங்ககிரி |
| | 6. | ஏற்காடு |
| | 7. | ஓமலூர் |
| | 8. | எடப்பாடி |
| நாமக்கல் | 1. | நாமக்கல் |
| | 2. | கொல்லிமலை |
| | 3. | ராசிபுரம் |
| | 4. | திருச்செங்கோடு |
| தருமபுரி | 1. | தருமபுரி |
| | 2. | கிருஷ்ணகிரி |
| | 3. | ஓசூர்-சிப்காட் |
| | 4. | பெண்ணாகரம் |
| | 5. | பாலக்கோடு |
| | 6. | அரூர் |
| | 7. | ஊத்தங்கரை |
| | 8. | தேன்கனிக்கோட்டை |
| | 9. | பர்கூர் |
| | 10. | போச்சம்பள்ளி |
| திண்டுக்கல் | 1. | திண்டுக்கல் |
| | 2. | பழனி |
| | 3. | நத்தம் |
| | 4. | வத்தலக்குண்டு |

திண்டுக்கல்—தொடர்ச்சி

5. ஒட்டன்சத்திரம்
6. வேடசந்தூர்
7. கொடைக்கானல்
8. நிலக்கோட்டை

மேற்கு மண்டலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்கள் மொத்தம்-80

சுருக்கம்

| | | |
|---|---|---|
| வடமண்டலம் | - | 45 |
| மத்திய மண்டலம் | - | 82 |
| தென் மண்டலம் | - | 70 |
| மேற்கு மண்டலம் | - | 80 |
| மொத்தம் | - | 277 |





இணைப்பு-5

தீ விபத்துகள் மற்றும் அதனால் ஏற்பட்ட விளைவுகள் பற்றிய ஆண்டுவாரியான விவரங்கள்

| ஆண்டு | தீ விபத்துகளின் எண்ணிக்கை | இழப்பு | | காப்பாற்றப்பட்டவை | |
|---|---|---|---|---|---|
| | | சொத்துக்களின் மதிப்பு ரூபாய் | இறந்தவர்களின் எண்ணிக்கை | சொத்துக்களின் மதிப்பு ரூபாய் | காப்பாற்றப்பட்ட மனித உயிர்கள் |
| 1997 | 13,678 | 73,28,69,095/- | 187 | 181.19,03,188/- | 120 |
| 1998 | 15,14[illegible] | 21,77,60,685/- | 90 | 175,34,13,826/ | 155 |

## இணைப்பு-6

### பல்வேறு சட்டம் மற்றும் விதிகளின்கீழ் 1998 ஆம் ஆண்டில் (1998-டிசம்பர் வரையில் தீயணைப்புத் துறை அலுவலர்கள் ஆய்வு செய்த கட்டடங்களின் எண்ணிக்கை)

| தொடர் எண் (1) | சட்டத்தின்/ விதியின் பெயர் (2) | கட்டடங்களின் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டம் மற்றும் விதிகள் | 1738 |
| 2. | பொது மக்கள் கூடுமிடங்களுக்கான சட்டம் | 493 |
| 3. | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் சென்னை மாநகராட்சி சட்டம் | 254 |
| 4.. | தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் | 113 |
| 5. | தொழிற்சாலைகள் சட்டம் | 1365 |
| 6. | ஆய்வு செய்யப்பட்ட அரசுக் கட்டடங்கள் | 3424 |
| 7. | படைக்கலச் சட்டம் மற்றும் வெடி மருந்துப் பொருட்கள் சட்டம் முதலியன | 1531 |
| 8. | ஆய்வு செய்யப்பட்ட தனியார் கட்டடங்கள் | 222 |
| 9. | பல்வேறு நிறுவனங்களிலும் கிராமங்களிலும் தீத் தடுப்பு நடவடிக்கை பற்றிய பிரச்சாரம் | 63 |

—0—

221966